தானியேல் - முன்னுரை

காலமும் இடமும்

தானியேலின் புஸ்தகம் கி.மு. 606 அல்லது கி.மு 616 ஆறாம் வருஷத்திலிருந்து கி.மு. 536 ஆம் வருஷம் வரையிலும் பாபிலோனிலிருந்தும், சூசானிலிருந்தும் எழுதப்பட்டது.

ஆசிரியர்

தானியேல். சிறையிருப்பிலிருக்கும் யூதாவின் அதிபதி (தானி 1:3-6). சொப்பனங்களையும், தரிசனங்களையும் வியாக்கியானம் பண்ணியவர். (தானி 1:17; தானி 2:12-49; தானி 4:8-27; தானி 5:10-31) பல ராஜாக்களுக்குப் பிரதான அதிகாரியாக இருந்தவர். (தானி 2:46-49; தானி 5:29; தானி 6:1-3) தேவனுடைய தீர்க்கதரிசி. (தானி 7:28; தானி 8:1; தானி 9:21-23; தானி 10:1-12; தானி 12:4-13).

மையக்கருத்து

தானியேலின் காலத்திலிருந்த புறஜாதி தேசங்களிலிருந்து ஆயிரம்வருஷ அரசாட்சி, பூமியில் தேவனுடைய நித்திய ராஜ்யம் ஆகிய காலம் வரையிலுமுள்ள காலங்களைக் குறித்த தீர்க்கதரிசனங்கள். (தானி 2:38-45; தானி 7:17-27; தானி 8:20-25; தானி 9:24-27; தானி 11:40-12:13).

நேபுகாத்நேச்சார் (தானி 2:1-4:37), பெல்ஷாத்சார் (தானி 5:1-31; தானி 7:1; தானி 8:1), மேதியனாகிய தரியு (தானி 6:1-28; தானி 9:1), பெர்சியனாகிய கோரேசு (தானி 10:1-11:1) ஆகியோரின் காலங்களின்கீழ் இருந்த பாபிலோனின் வரலாற்றையும், மேதிய-பெர்சிய தேசத்தின் வரலாற்றையும் தானியேல் எழுதியிருக்கிறார்.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 12

வசனங்கள் - 357

கேள்விகள் - 16

புதிய தீர்க்கதரிசனங்கள் - 17

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 218

கட்டளைகள் - 7

வாக்குத்தத்தங்கள் - 4

பொருடளக்கம்

I. தானியேலின் வரலாறு

1. காலம் - முதலாவது வெளியேற்றம் (1:1-2)
2. தானியேலும் அவனுடைய நண்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் (1:3-6)
3. அவர்களுடைய பெயர்கள் மாற்றப்பட்டன (1:7)
4. தானியேலின் தீர்மானம் (1:8-11)
5. பத்து நாள் சோதனை (1:12-14)
6. விளைவு - அவர்களுடைய பராமரிப்பு (1:15-16)
7. தேவனுடைய ஆசீர்வாதங்கள் (1:17)
8. மற்றவர்களை விட இவர்களுடைய மேன்மை (1:18-21)

II. நேபுகாத்நேச்சாரின் சொப்பனம்

1. கல்தேயர்களை வரவழைத்தார்கள் (2:1-3)
2. நேபுகாத்நேச்சாரின் கோரிக்கை (2:4-9)
3. சாஸ்திரிகளின் இயலாமை (2:10-11)
4. நேபுகாத்நேச்சாரின் கோபம் (2:12-13)
5. ஞானத்திற்காக ஜெபம் (2:14-18)
6. தானியேலுக்கு சொப்பனம் வெளிப் படுத்தப்படுகிறது (2:19-23)

தானியேல் - முன்னுரை

7. தானியேலை அழைத்து வருகிறார்கள் *(2:24-26)*

8. சொப்பனத்தில் காணப்பட்ட பொருள்களும் ஆட்களும் - தேவனைப் பற்றிய சாட்சி *(2:27-30)*

9. பெரிய சிலை - ஐந்து பாகங்கள் *(2:31-35)*

10. வியாக்கியானம்

(1) பசும்பொன்னாலான தலை - இஸ்ரவேலை துன்புறுத்தும் மூன்றாவது உலகப் பேரரசு - பாபிலோன் *(2:36-38)*

(2) வெள்ளியாலான மார்பும் புயங்களும் - நான்காம் உலகப் பேரரசு - மேதிய பெர்சியா *(2:39)*

(3) வெண் கலத்தாலான வயிறும் தொடையும் - ஐந்தாம் உலகப் பேரரசு - கிரேக்கு

(4) இரும்பாலான கால்கள் - ஆறாம் உலகப் பேரரசு - ரோம் *(2:40)*

(5) இரும்பும் களி மண்ணினாலுமான பாதங்கள் - ஏழாம் உலகப் பேரரசு - பிந்தைய ரோம் *(2:41-43)*

(6) கல் - ஒன்பதாவதும் கடைசியானதுமான உலகப் பேரரசு - பூ உலகில் மேசியா ஆளுகை செய்யும் பரலோக இராஜ்ஜியம் *(2:44-45)*

11. தேவன் உயர்த்தப்படுகிறார் - தானியேலுக்குப் பதவி உயர்வு *(2:46-49)*

III. தானியேலின் சகோதரருக்கு ஏற்பட்ட சோதனை - எரிகிற அக்கினிச்சூளை

1. இராஜா சிலையைப் பண்ணுவித்து நிறுத்தினான் *(3:1)*

2. சிலையின் பிரதிஷ்டை *(3:2-3)*

3. எல்லோரும் வழிபட வேண்டுமென்ற கட்டளை *(3:4-7)*

4. மூன்று யூதர்கள்மீது குற்றச்சாட்டு *(3:8-12)*

5. சிலையை வழிபடவேண்டுமென்று கட்டளை *(3:13-15)*

6. மூன்று யூதர்களும் மறுத்துவிடுகிறார்கள் *(3:16-18)*

7. எரிகிற அக்கினிச்சூளையினால் அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை *(3:19-23)*

8. இராஜா பிரமித்தான் *(3:24-25)*

9. இராஜா சம்மதிக்கிறான் *(3:26-28)*

10. நேபுகாத்நேச்சாரின் ஆணை *(3:29-30)*

IV. நேபுகாத்நேச்சார் அரசபதவியிலிருந்து தள்ளப்படுவான்

1. இராஜாவின் அறிவிப்பு *(4:1-3)*

2. சொப்பனம் *(4:4-5)*

3. வியாக்கியானம் தேவைப்படுகிறது *(4:6-7)*

4. சொப்பனத்தைக் கூறுகிறான் *(4:8-18)*

5. சொப்பனத்திற்கு வியாக்கியானம் *(4:19-26)*

6. இராஜாவுக்கு ஆலோசனை *(4:27)*

7. இராஜா ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை *(4:28-30)*

8. சொப்பனம் நிறைவேறுகிறது *(4:31-33)*

9. இராஜா தேவனைத் துதிக்கிறான் *(4:34-37)*

V. பாபிலோனின் வீழ்ச்சி

1. பெல்ஷாத்சாரின் பெரிய விருந்து *(5:1-4)*

2. சுவரின்மீது எழுத்து *(5:5)*

3. பெல்ஷாத்சாருக்கு ஏற்பட்ட விளைவு *(5:6)*

தானியேல் - முன்னுரை

4. ஞானிகளும் அவர்களுடைய இயலாமையும் (5:7-9)

5. இராணியின் ஆலோசனை (5:10-12)

6. ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு தானியேல் அழைக்கப்படுகிறான் (5:13-16)

7. பெல்ஷாத்சாரைக் கடிந்து கொள்கிறான் (5:17-25)

8. எழுத்தின் வியாக்கியானம் (5:26-29)

9. எழுத்து நிறைவேறுகிறது (5:30-31)

VI. தானியேலுக்குச் சோதனைகள் - சிங்கங்களின் கெபி

1. மேதிய பெர்சிய தேசத்தில் தானியேலின் உயர்ந்த ஸ்தானம் (6:1-3)

2. பொறாமைகளும் பிரச்சனைகளும் (6:4-5)

3. ஆணையைப் பெற்றுக் கொண்டார்கள் (6:6-9)

4. தானியேலின் உறுதியான சுபாவம் (6:10)

5. தானியேலின்மீது குற்றச்சாட்டு (6:11-13)

6. இராஜாவின் முயற்சிகள் (6:14-15)

7. சிங்கங்களின் கெபியிலே தானியேலைப் போட்டார்கள் (6:16-17)

8. தேவன் தானியேலை மீட்டார் (6:18-22)

9. தானியேலின் விரோதிகள் அழிக்கப் பட்டார்கள் (6:23-24)

10. தரியுவின் ஆணை - ஏழு காரணங்கள் (6:25-28)

VII. தானியேலின் முதலாவது தரிசனம் - நான்கு மிருகங்கள்

1. தரிசனம்

(1) நான்கு காற்றுக்களும் நான்கு மிருகங்களும் (7:1-3)

(2) முதலாவது மிருகம் - சிங்கம் - இஸ்ரவேலை துன்புறுத்தும் மூன்றாவது உலகப் பேரரசு - பாபிலோன் (7:4)

(3) இரண்டாவது மிருகம் - கரடி - நான்காவது உலகப் பேரரசு - மேதியரும் பெர்சியரும் (7:5)

(4) மூன்றாவது மிருகம் - சிவிங்கி - ஐந்தாவது உலகப் பேரரசு - கிரேக்கம் (7:6)

(5) நான்காவது மிருகம் - பெயர் இல்லை - ஆறாவது உலகப் பேரரசு - ரோம் (7:7)

(6) பத்து கொம்புகளும் சின்னக் கொம்பும் - பிந்தைய ரோமும் பிந்தைய கிரேக்கமும் (7:8)

(7) நியாயத்தீர்ப்பு

(அ) நியாயாதிபதி (7:9)

(ஆ) நியாயத்தீர்ப்பு (7:10)

(இ) சின்னக் கொம்பு அழிக்கப்பட்டது (7:11)

(ஈ) மற்ற மிருகங்களுடைய ஆளுகை (7:12)

(8) மேசியாவின் இரண்டாம் வருகை (7:13-14)

2. வியாக்கியானம்

(1) தூதனின் வியாக்கியானம் (7:15-16)

(2) நான்கு மிருகங்கள் - நான்கு இராஜாக்கள் அல்லது இராஜ்யங்கள் (7:17)

(3) ஒன்பதாவதும் கடைசியானதுமான உலகப்பேரரசு (7:18)

(4) தானியேலின் விசாரிப்பு (7:19-20)

(5) தானியேலின் தரிசனம் - சின்னக்கொம்பு பரிசுத்தவான் களோடு யுத்தம் பண்ணிற்று (7:21-22)

(6) நான்காவது மிருகம் (7:23)

(7) பத்து கொம்புகள் (7:24)

(8) அவர்களுக்குப் பின்பு வேறொருவன் எழும்புவான்

(9) பரிசுத்தவான்களுக்கு எதிரான யுத்தம் - அவனுடைய காலமும் ஆளுகையின் நீளமும் (7:25)

(10) சின்னக்கொம்பு அல்லது அந்திக் கிறிஸ்துவின் ஆளுகையின் முடிவில் தேசங்கள் மீது நியாயத் தீர்ப்பு உலக இராஜ்யங்களும், மேசியாவின் நித்திய இராஜ்யத்தின் நிறுவனங்களும் (7:26-28)

VIII. தானியேலின் இரண்டாம் தரிசனம் - ஆட்டுக்கடாவும் வெள்ளாட்டுக் கடாவும்

1. தரிசனம்

(1) காலம் (8:1-2)

(2) ஆட்டுக்கடா - மேதிய பெர்சியா (8:3-4)

(3) வெள்ளாட்டுக் கடா - கிரேக்கு (8:5)

(4) யுத்தம் - மேதிய பெர்சியா, கிரேக்கு (8:6-7)

(5) நான்கு கொம்புகள் (8:8)

(6) சின்னக்கொம்பு - அந்திக் கிறிஸ்து (8:9-14)

2. வியாக்கியானம்

(1) வியாக்கியானம் செய்யும் தேவதூதர்கள் (8:15-16)

(2) நிறைவேறும் காலம் (8:17-19)

(3) ஆட்டுக்கடா - மேதிய பெர்சியா (8:20)

(4) வெள்ளாட்டுக்கடா - கிரேக்கு (8:21)

(5) நான்கு கொம்புகள் - கிரேக்கு, துருக்கி, சீரியா, எகிப்து (8:22)

(6) சின்னக்கொம்பு (8:23)

(7) அவனுடைய வல்லமையும் பரிசுத்தவான்களோடு யுத்தமும் (8:24)

(8) அவனுடைய பெருமை (8:25)

(9) மேசியாவோடு அவனுடைய யுத்தம்

(10) தரிசனத்தின் காலம் (8:26-27)

IX. தானியேலின் மூன்றாம் தரிசனம் - எழுபது வருஷங்களின் வாரங்கள்

1. காலமும் சூழ்நிலையும் (9:1-2)

2. தானியேலின் ஜெபமும் தனக்காகவும் இஸ்ரவேலுக்காகவும் செய்த பாவ அறிக்கையும் - இஸ்ரவேலின் பன்னிரெண்டு பாவங்கள் (9:3-19)

3. வியாக்கியானம் செய்த தேவதூதன் (9:20-23)

4. ஆறு காரியங்கள் நிறைவேறுவதற்கு இஸ்ரவேல்மீதும் எருசலேம்மீதும் வருஷங்களின் எழுபது வாரங்கள் (9:24)

5. ஏழு வாரங்களின் முதலாவது காலத்தின் ஆரம்பம் - சிறையிருப்பிற்குப் பின்பு எருசலேம் கட்டப்படுகிறது - இதன் பின்பு அறுபத்திரண்டு வாரங்களின் இரண்டாம் காலம் துவங்குகிறது - எருசலேம் மறுபடியும் கட்டப்படுவதிலிருந்து மேசியா சிலுவையில் அறையப்படும் காலம் வரையிலும் - 483 வருஷங்கள் கொண்ட காலம் (9:25-26)

தானியேல் - முன்னுரை

6. ஒரு வாரத்தின் மூன்றாவது காலம் - இக்காலத்தில் அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலோடு உடன்படிக்கையை ஏற்படுத்தி அதை முறித்துப் போடுகிறான் - மேசியாவின் இரண்டாம் வருகையோடு இக்காலம் முடிவு பெறுகிறது (9:27)

X. தானியேலின் நான்காம் தரிசனம் - கடைசி நாட்களில் அந்திக்கிறிஸ்துவிற்குக் கீழ் இஸ்ரேல்

1. காலம், இடம், சூழ்நிலை (10:1-4)
2. மேசியாவின் தரிசனம் (10:5-6)
3. இதன் விளைவு (10:7-11)
4. தேவதூதனின் வியாக்கியானம் (10:12)
5. பெர்சியாவில், சாத்தானின் தூதர்கள் காபிரியேலைப் பிடித்து வைத்தார்கள் (10:13)
6. தரிசனத்திலுள்ள நபர்களும் பொருட்களும் (10:14)
7. தானியேல்மீது ஏற்பட்ட விளைவு (10:15-19)
8. கிரேக்கு தேசத்தின் அதிபதி (10:20)
9. மிகாவேலும் காபிரியேலும் (10:21)
10. தரியுவின் காலத்திலிருந்து வருங்கால அந்திக்கிறிஸ்து வரையிலும் வரலாறு

(1) காபிரியேல் மிகாவேலுக்கு உதவி புரிந்ததற்கு ஐந்து வருஷங்களுக்கு முன்பு - பெர்சியாவின் அதிபதி வருவதற்காக பாபிலோன்மீது இருந்த சாத்தானின் அதிகாரங்களை அகற்றிப் போட்டான் (11:1)

(2) மகா அலெக்ஸாண்டரின் ஆட்சிக்கு முன்பாக பெர்சியாவில் ஆட்சி புரிந்த நான்கு இராஜாக்கள் (11:2)

(3) பராக்கிரமமுள்ள இராஜா (11:3)

(4) கிரேக்கு தேசம் நான்கு இராஜ்ஜியங்களாக உடைந்து போயிற்று (11:4)

(5) தென்றிசை இராஜா

வடதிசை இராஜா (11:5)

(6) ஒருவரோடொருவர் சம்பந்தம் (11:6)

(7) வேர்களின் கிளை (11:7-9)

(8) அவனுடைய குமாரர்கள் யுத்தம் செய்ய எத்தனிப்பார்கள் (11:10-12)

(9) சில வருஷங்கள் சென்றபின்பு மறுபடியும் யுத்தம் (11:13-16)

(10) செம்மை மார்க்கத்தார் (11:17)

(11) தீவுகளுக்கு நேராக முகத்தை திருப்புவான் (11:18-19)

(12) தண்டல்காரனைத் திரியப் பண்ணுகிற ஒருவன் எழும்புவான் (11:20)

(13) அவமதிக்கப் பட்டவன் ஒருவன் எழும்புவான்

(அ) இவன் இச்சகம் பேசி இராஜ்யத்தைக் கட்டிக் கொள்கிறான் (11:21)

(ஆ) வஞ்சகமாய் காரியங்களை நடப்பித்து பலப்படுகிறான் (11:22-24)

(இ) தென்றிசை இராஜாவுக்கு விரோதமாக போர் செய்ய எழும்புவான் (11:25-27)

(ஈ) பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாயிருப்பான் (11:28)

(உ) பின் நடபடியும் முன் நடபடியும் (11:29-31)

(ஊ) உடன்படிக்கைக்கு துரோகிகள் (11:32-34)

தானியேல் - முன்னுரை

11. அறிவாளிகள் விழுவார்கள்

(1) தரிசனத்தின் காலம் (11:35)

(2) வடக்கு இராஜாவின் சுபாவம் (11:36-39)

(3) கடைசி காலத்தில் சீரியாவிற்கும் (வடக்கு) எகிப்திற்கும் (தெற்கு) இடையில் யுத்தம் - அந்திக் கிறிஸ்து (சீரியா, வடக்கு) எகிப்தின்மீது (தெற்கு) வெற்றி கொள்வான் - தானியேலின் எழுபதாவது வாரத்தின் நடுப்பாகம் வரையிலும் பல தேசங்களை வெற்றி கொள்வான் - அப்போது எட்டாவது அல்லது பிந்தைய கிரேக்க சாம்ராஜ்ஜியம் உருவாகும் (11:40-43)

(4) பிந்தைய ரோம சாம்ராஜ்ஜியத்தின் பத்து இராஜ்ஜியங்களை வெற்றி பெற்று அடிமைப்படுத்திய பின்பு வடக்கிலும் கிழக்கிலும் புதிய துயரங்கள் உண்டாகும் - மூன்றரை வருஷங்களின் இறுதியில் அந்திக்கிறிஸ்து வெற்றி பெறுவான் - இஸ்ரவேலர்களை அழிப்பதற்கு அவர்களைப் பாலஸ்தீன தேசத்திற்கு அழைத்து வருவான் - அவர்களோடு தன் உடன்படிக்கையை முறித்துக் கொண்ட பின்பு இதுவே அந்திக் கிறிஸ்துவின் நோக்கமாகும் - சிங்காரமான பரிசுத்த பர்வதத்தண்டையிலே தன் அரமனையாகிய கூடாரங்களைப் போடுவான் (11:44)

(5) எருசலேமிலுள்ள யூதர்களின் தேவாலயத்தில் தன் சிங்காசனத்தை வைப்பான் (11:45)

(6) எழுபது வாரத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் மகா உபத்திரவம் - 1,44,000 பேர்கள் விடுவிக்கப் படுவார்கள் (12:1)

12. உயிர்த்தெழுதல்கள் (12:2)

13. ஞானவான்களுக்கு வெகுமதிகள் (12:3)

14. முடிவுகாலமட்டும் முத்திரை போடப்பட்ட புஸ்தகம் (12:4)

15. தூதனின் கேள்வி (12:5-6)

16. பதிலுரை - மூன்றரை வருஷங்கள் உபத்திரவம் (12:7)

17. தானியேலின் கேள்வி (12:8)

18. பதிலுரை - மூன்றரை வருஷங்களுக்குப் பின்பு இரண்டு காலங்கள் (12:9-13)

தானியேல் – தொகுப்புரை

1 அதிகாரம்

I. தானியேலின் வரலாறு

1. காலம் - முதலாவது வெளியேற்றம் - (2நாளா 36:5-8; எரே 25; 52:28-30)

தானி 1:1 யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து, அதை முற்றிக்கை போட்டான்.

தானி 1:2 அப்பொழுது ஆண்டவர் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமையும் தேவனுடைய ஆலயத்தின் பாத்திரங்களில் சிலவற்றையும் அவன் கையில் ஒப்புக் கொடுத்தார்; அவன் அந்தப் பாத்திரங்களைச் சிநேயார் தேசத்திலுள்ள தன் தேவனுடைய கோவிலுக்குக் கொண்டு போய், அவைகளைத் தன் தேவனுடைய பண்டசாலைக்குள் வைத்தான்.

"யோயாக்கீம்" - எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்நேகோ யோயாக்கீமின் சகோதரனாகிய யோவாகாசின் ஸ்தானத்தில் அவனை ராஜாவாக்கினான். (2இராஜா 23:34-36; 2நாளா 36:1-4) யோயாக்கீம் எகிப்து தேசத்திற்கு மூன்று வருஷங்களாகப் பகுதிப்பணம் கட்டினான். யோயாக்கீமின் நான்காம் வருஷம் என்பது நேபுகாத்நேச்சாருடைய ஆட்சிக் காலத்தின் முதலாம் வருஷமாகும். (எரே 25:1-3) இந்த வருஷத்தில் நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்தை ஐப்பிராத்து நதியிலுள்ள கர்கேமிஸ் என்னும் இடத்தில் தோற்கடித்தான். இதனால் யூதாவும், சீரியாவும், மேலும் பல தேசங்களும் பாபிலோனின் வசமாயிற்று. (எரே 46:1-2) பாபிலோனுக்குச் சென்ற எழுபது வருஷ சிறையிருப்பு இந்த வருஷத்திலிருந்து ஆரம்பமாயிற்று. (எரே 25:1-11) இக்காலத்தில் தானியேலும் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டான்.

யோயாக்கீம் பாபிலோனுக்குக்கீழ் மூன்று வருஷம் யூதாவை ஆட்சி புரிந்தான். அதன் பின்பு, பாபிலோனுக்கு எதிராகக் கலகம் பண்ணினான். (2இராஜா 24:1-7). இக்காலத்தில் நேபுகாத்நேச்சார் மற்ற தேசங்களோடு யுத்தம் பண்ணிக் கொண்டிருந்த படியினால் அவன் மூன்று அல்லது நான்கு வருஷங்களாக யூதாவிற்கு விரோதமாக யுத்தம் பண்ணவரவில்லை. அதன் பின்பு, யோயாக்கீமின் 11 ஆவது வருஷ ராஜ்யபாரத்தின்போது பாபிலோன் யூதாவைக் கைப்பற்றிற்று. (2இராஜா 23:36-24:7) யோயாக்கீமினுடைய ஸ்தானத்தில் யோயாக்கீன் ஆட்சியில் அமர்த்தப்பட்டான். ஆனால் அவன் யூதாவை மூன்று மாதங்கள் மட்டுமே ஆட்சி புரிந்தான். நேபுகாத்நேச்சார் யோயாக்கீனைப் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் சென்றான். யோயாக்கீனுக்குப் பதிலாக நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை யூதாவின்மீது ராஜாவாக நியமித்தான்.

சிதேக்கியா யூதா தேசத்தைப் பாபிலோனுக்குக் கீழ் 11 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். அதன் பின்பு, சிதேக்கியா பாபிலோனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணினான். பாபிலோன் யூதாவிற்கு விரோதமாக இதனால் யுத்தம் பண்ணிற்று. எருசலேமையும், யூதா தேசத்தையும் பாபிலோனியர் முழுவதுமாக அழித்துப் போட்டார்கள். யூதர்களைப் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் சென்றார்கள். (2நாளா. 36:11-21)

"நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து" - நேபுகாத்நேச்சார் ராஜாவாக ஆவதற்கு முன்பாகவே அவனுடைய தந்தையின் சேனையோடு எருசலேமிற்கு விரோதமாக வந்தான். இது யோயாக்கீமின் மூன்றாம் வருஷத்து ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது. யோயாக்கீமின் நாலாம் வருஷத்து ஆட்சிக் காலம் வரையிலும் யூதாவின்மீது யுத்தம் நடைபெறவில்லை. பாபிலோனியர் இக்காலத்தில் எகிப்து தேசத்தின்மீது யுத்தம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இந்தக் காலத்தில் நேபுகாத்நேச்சார் பாபிலோனின் ராஜாவானான். (எரே 46:1-3; 2இராஜா 24:1; 2நாளா. 36:6-7). யூதாவின்மீது நேபுகாத்நேச்சார் யுத்தம் பண்ண வந்ததைப் பற்றி தானியேல் தீர்க்கதரிசி எழுதும்போது அவன் பாபிலோனின் ராஜாவாக இருந்தான்.

தானியேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

நேபுகாத்நேச்சாருடைய தந்தையின் பெயர் நெபோபொலோசர். நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றிக்கையிட்ட சமயத்தில் அவனுடைய தந்தையாகிய நெபோபொலோசர் மரித்துப்போனார். இதனால் நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்கு உடனடியாக திரும்பி விட்டார். பாபிலோன்மீது யுத்தம் பண்ணும் பொறுப்புகளையும், யூதர்களைப் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்து வரும் பொறுப்புகளையும் நேபுகாத்நேச்சார் தன் தளபதிகளிடம் ஒப்படைத்துவிட்டு, அவர் பாபிலோனுக்குத் திரும்பி வந்துவிட்டார். இந்த சமயத்தில், தானியேலும், அவனோடு ஏராளமான யூதரும் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்து வரப்பட்டார்கள். (தானி 1:1-2; 2இராஜா 24:1-16).

"ஆண்டவர் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமை......அவன் கையில் ஒப்புக் கொடுத்தார்" - (ஏசா 39:6-7; எரே 25; எசே 21:26-27)

"தேவனுடைய ஆலயத்தின் பாத்திரங்களில் சிலவற்றையும்" - தேவாலயத்தின் மீதமுள்ள பாத்திரங்கள் பிற்காலத்தில் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (2இராஜா 24:13; 2நாளா. 36:10).

"சிநேயார் தேசத்திலுள்ள தன் தேவனுடைய கோவில்" - இது பேல் தெய்வத்தின் கோவிலாகும். பேல் பாபிலோனியரின் பிரதான தெய்வம். (ஆதி 10:10; ஆதி 11:2; ஆதி 14:1,9)

2. தானியேலும் அவனுடைய நண்பர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள் - (ஏசா 39:7)

தானி 1:3 அப்பொழுது இஸ்ரவேல் புத்திரருக்குள்ளேராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரைக் கொண்டுவரவும்,

தானி 1:4 அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக் கொடுக்கவும் ராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குக் கற்பித்தான்.

தானி 1:5 ராஜா, தான் உண்ணும் போஜனத்திலேயும் தான் குடிக்கும் திராட்சரசத்திலேயும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்றுவருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்கள் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டளையிட்டான்.

தானி 1:6 அவர்களுக்குள், யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள்.

"ராஜகுலத்தார்கள்" - தானியேலும், அவனுடைய நண்பர்களும் ஏசா 39:1-8 ஆகிய வசனங்களை நிறைவேற்றுவதற்குத் தெரிந் தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். (தானி 1:3-6).

தன் அரண்மனையில் சேவிப்பதற்கு ராஜா நியமித்த விதிகள்

1. இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜ குலத்தார்களாகவும் துரைமக்களாகவும் இருக்க வேண்டும். (தானி 1:3)
2. வாலிபர்களாக இருக்க வேண்டும்.
3. யாதொரு மாசும் இல்லாதவர்களாக இருக்க வேண்டும்.
4. அழகானவர்களாக இருக்க வேண்டும்.
5. சகல ஞானத்திலும் தேறினவர்களாக இருக்க வேண்டும்.
6. அறிவில் சிறந்தவர்களாக இருக்க வேண்டும்.
7. கல்வியில் நிபுணராக இருக்க வேண்டும்.
8. ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

தானியேல் – தொகுப்புரை

1 அதிகாரம்

"ராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குக் கற்பித்தான்" - நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்குத் திரும்பி வந்துவிட்டான். நெபோபொலோசரின் மரணத்திற்குப்பின்பு நேபுகாத்நேச்சார் ராஜாவாக்கப் பட்டிருக்கிறான். இந்தச் சமயத்தில் இந்தச் சம்பவம் நடைபெறுகிறது.

"கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும்" - கல்தேயர்கள் பாபிலோனின் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள். பாபிலோனியரை விட சற்று வித்தியாசமானவர்கள். (தானி 2:2,4,5,10; தானி 3:8; தானி 4:7; தானி 5:7,11; எசே 23:23) கல்தேயர் என்னும் பெயர் பாபிலோன் தேசத்தாருக்குப் பொதுவாக வழங்கப்படுகிறது. (தானி 5:30; ஆதி 11:28-31; ஆதி 15:7; 2இராஜா 24:2; 2இராஜா 25:4-26; யோபு 1:17; ஆப 1:6).

திராட்சரசம் (wine) - יַיִן - yah'-yin - 3196

ஆ.பெ.சொ. - திராட்சரசம், மது, வெறி, குடி, மதுபானம், ரசம் (to ferment). every sort of wine (ஆதி 9:21; ஆதி 14:18; 1சாமு 25:36-37; ஏசா 28:1; எரே 23:9).

"மூன்றுவருஷம்" - ராஜாவின் அரமனையில் வேலைபார்ப்பதற்கு மூன்று வருஷம் பயிற்சி பெற்றுக் கொள்ள வேண்டும்.

"தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா" - ராஜாவின் அரமனையில் சேவிக்க திறமையுள்ளவர்களான சில வாலிபர்கள் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களில் யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் நான்கு யூதர்களும் இருந்தார்கள். இவர்கள் யூதாவிலிருந்து பாபிலோனுக்குச் சிறைப்பிடித்து வரப்பட்டவர்கள். (தானி 1:6; 2இராஜா 24:1-16)

1. தானியேல் - இந்தப் பெயருக்கு "தேவன் நியாயாதிபதியாக இருக்கிறார்" **"God is judge,"** என்று பொருள். தானியேல் என்னும் பெயர் பெல்தேஷாத்சார் **(Belteshazzar)** என்று மாற்றப்படுகிறது. இந்தப் பெயருக்கு "பேல் அவன் ஜீவனைப் பாதுகாப்பாராக அல்லது பேலின் பிரபு" **"preserve thou (O Bel) his life," "prince of Bel"** என்று பொருள். பேல் பாபிலோனின் பிரதான தெய்வமாகும். (தானி 6-7; ஏசா 46:1; எரே 50:2; எரே 51:44). தானியேலின் பெயர் மாற்றப்பட்டிருப்பதாக 6 வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (தானி 1:7; தானி 2:26; தானி 4:8-9,18-19; தானி 5:12; தானி 10:1). ஒருவேளை தானியேலுக்கு இந்தப் பாபிலோனிய பெயர் பிடிக்காமல் போயிருந்திருக்கலாம். தானியேலின் புஸ்தகத்தில் தன் பெயரைத் தானியேல் என்று 75 தடவை குறிப்பிட்டிருக்கிறார். வேதாகமத்தின் பல புஸ்தகங்களில் தானியேலின் பெயர் 5 முறை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (எசே 14:14,20; எசே 28:3; மத் 24:15; மாற்கு 13:14).

2. அனனியா **(Hananiah)** - இந்தப் பெயருக்கு "ஆண்டவருடைய ஈவு" **"gift of the Lord,"** என்று பொருள். இவனுடைய பெயர் சாத்ராக் **(Shadrach)** என்று மாற்றப்பட்டிருக்கிறது. இந்தப் பெயருக்கு "அகுவின் கட்டளை" **"command of Aku,"** என்று பொருள். அகு பாபிலோனியரின் சந்திர தெய்வமாகும்.

3. மீஷாவேல் **(Mishael)** - இந்தப் பெயருக்குத் "தேவனைப் போன்றிருக்கிறவன்" **"who is what God is,"** என்று பொருள். இவனுடைய பெயர் மேஷாக் **(Meshach)** என்று மாற்றப் பட்டிருக்கிறது. இந்தப் பெயருக்கு "அகுவைப்போன்றிருக்கிறவன்" **"who is as Aku"** என்று பொருள். (தானி 1:6-7)

1 அதிகாரம்

4. அசரியா (Azariah) - இந்தப்பெயருக்கு "கர்த்தர் இவனுக்கு உதவிபுரிகிறார்" "whom Jehovah helps," என்று பொருள். இவனுடைய பெயர் ஆபேத் நேகோ (Abed-nego) என்று மாற்றப் பட்டிருக்கிறது. இந்தப் பெயருக்கு "நேகோவின் ஊழியக்காரர்" "servant of Nego," என்று பொருள். நேபோ பாபிலோனியரின் அறிவு, ஞானம், இலக்கியம் ஆகியவற்றின் தெய்வமாகும். (தானி 1:6-7; ஏசா 46:1)

3. அவர்களுடைய பெயர்கள் மாற்றப் பட்டன

தானி 1:7 பிரதானிகளின் தலைவன், தானியேலுக்கு பெல்தெஷாத்சார் என்றும், அனனியாவுக்கு சாத்ராக் என்றும், மீஷாவேலுக்கு மேஷாக் என்றும், அசரியாவுக்கு ஆபேத்நேகோ என்றும் மறுபெயரிட்டான்.

"மறுபெயரிட்டான்" - சிறைப்பிடித்து வரப்பட்ட அடிமைகளுக்குப் பாபிலோனியர் தங்களுடைய தேசத்துப் பெயரைச் சூட்டுவது வழக்கம். அவர்கள் தங்களுடைய அடிமைகளாக இருக்கிறார்கள் என்பதைத் தங்கள் தேசத்துப் பெயர்களின் மூலமாகப் பாபிலோனியர் தெரியப்படுத்துகிறார்கள். (ஆதி 41:45; 2இராஜா23:34; 2இராஜா 24:17).

4. தானியேலின் தீர்மானம்

தானி 1:8 தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான்.

தானி 1:9 தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார்.

தானி 1:10 பிரதானிகளின் தலைவன் தானியேலை நோக்கி: உங்களுக்குப் போஜனத்தையும் பானத்தையும் குறித்திருக்கிற ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு நான் பயப்படுகிறேன்; அவர் உங்களோடொத்த வாலிபரின் முகங்களைப்பார்க்கிலும் உங்கள் முகங்கள் வாடிப்போனவைகளாகக் காணவேண்டியதென்ன? அதினால் ராஜா என்னைச் சிரச்சேதம் பண்ணுவாரோ என்றான்.

தானி 1:11 அப்பொழுது பிரதானிகளின் தலைவனாலே, தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள்மேல் விசாரிப்புக்காரனாக வைக்கப்பட்ட மேல்ஷார் என்பவனை தானியேல் நோக்கி:

"தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு" - தானியேல் தன்னுடைய மற்ற மூன்று நண்பர்களுக்காகப் பேசுகிறார். (தானி 1:8,11-17).

"தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி" - ராஜாவின் போஜனத்தில் பரிமாறப்படும் பதார்த்தங்களில் சில மோசேயின் பிரமாணத்தின்படி ஒதுக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. தானியேல் மோசேயின் பிரமாணத்தை மீறி தன்னைத் தீட்டுப்படுத்த விரும்பவில்லை. ஒருவேளை மிருகத்தின் மாம்சங்கள் முறைப்படி கொல்லப் படாமல் இருந்திருக்கலாம். (லேவி 3:17; லேவி 7:26; லேவி 17:10-14; லேவி 19:26) ஒருவேளை போஜனங்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதாகவும் இருந்திருக்கலாம். (யாத் 34:15; 1கொரி 10:20).

தானியேலிடமும் யோசேப்பிடமும் காணப்படும் ஒற்றுமைகள்

1. இருவரும் சிறைப்பிடிக்க பட்டிருந்தார்கள். (ஆதி 37)

2. தங்களைச் சிறைப்பிடித்தவர்களின் கண்களில் இவர்களுக்குத் தயவு கிடைக்கிறது. (ஆதி 39:21=தானி 1:9)

தானியேல் – தொகுப்புரை

1 அதிகாரம்

3. இருவரும் சொப்பனங்களை வியாக்கியானம் பண்ணினார்கள். (தானி 1:17 = ஆதி 37:5-11; ஆதி 41:1-45)

4. இருவரையும் அவர்களுடைய ராஜாக்கள் உயர்த்தினார்கள். (தானி 2:46-49; தானி 5:29; தானி 6:26=ஆதி 41)

5. இருவரும் தங்களைத் தீட்டுப்படுத்தாதபடி பரிசுத்தமாக ஜீவித்தார்கள். (தானி 1:8 = ஆதி 39:12)

5. பத்து நாள் சோதனை

தானி 1:12 பத்துநாள்வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும்; எங்களுக்குப் புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து,

தானி 1:13 எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும்; பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான்.

தானி 1:14 அவன் இந்தக் காரியத்திலே அவர்களுக்குச் செவிகொடுத்து, பத்துநாளளவும் அவர்களைச் சோதித்துப் பார்த்தான்.

"உமது அடியாரைச் சோதித்துப்பாரும்" - தானியேல் கர்த்தரிடத்தில் விசுவாசமாக இருக்கிறான். பத்து நாட்களில் தங்களைச் சோதித்துப் பார்க்கலாம் என்று அறிவிக்கிறான். கர்த்தருடைய அனுக்கிரகம் இருந்தால் மட்டுமே பத்துநாள் உணவு பழக்கத்தில் அவர்களுடைய சரீரத்தில் வித்தியாசம் உண்டாகும். (தானி 1:15).

பருப்பு (pulse) - זֵרֹעִים - zay-ro'-ah , zay-raw-ohn' - 2235 ஆண்பால்பெயர்ச்சொல் (பன்மை) - பருப்பு (seed; that which is sown, wheat, barley, rye, peas, beans, lentiles) (தானி 1:12,16; 2சாமு 17:28). இதனால் யூதர்கள் சைவ உணவை மட்டுமே புசிப்பார்கள் என்பது பொருளல்ல. மோசேயின் பிரமாணத்தின்படி அங்கிகரிக்கப்படாத மாம்சங்களை யூதர்கள் புசிக்கமாட்டார்கள். (தானி 1:8).

6. விளைவு - அவர்களுடைய பராமரிப்பு

தானி 1:15 பத்துநாள் சென்றபின்பு, ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப்பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது.

தானி 1:16 ஆகையால் மேல்ஷார் அவர்கள் புசிக்கக் கட்டளையான போஜனத்தையும், அவர்கள் குடிக்கக் கட்டளையான திராட்சரசத்தையும் நீக்கிவைத்து, அவர்களுக்குப் பருப்பு முதலானவைகளைக் கொடுத்தான்.

7. தேவனுடைய ஆசீர்வாதங்கள் - (வசனம் 20)

தானி 1:17 இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்.

"தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்" - நான்கு எபிரெய வாலிபர்களோடும் கர்த்தர் அவர்கள் கூடவேயிருந்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். போஜன விஷயத்தில் அவர்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருந்ததினால் கர்த்தர் அவர்களைச் சரீரப் பிரகாரமாகவும் ஆசீர்வதித்து அவர்களுக்கு சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார். (தானி 1:8-16).

தானியேல் – தொகுப்புரை

1 அதிகாரம்

"தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்." - சொப்பனங்களை வியாக்கியானம் பண்ணுவது அந்நிய பாஷைகளுக்கு அர்த்தம் கூறுவதைப் போன்றது. (1கொரி 12:10,30; 1கொரி 14:26-28). பரிசுத்த ஆவியின் வரத்தினால் மாத்திரமே சொப்பனத்திற்கு அர்த்தம் கூறமுடியும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை அபிஷேகித்து, இதுபோன்ற வரங்களைக் கொடுக்கிறார். (1கொரி 12:4-11). தானியேல் தேவனுடைய நாமமகிமைக்காக இந்த வரத்தைப் பலமுறை பயன்படுத்தியிருக்கிறார். (தானி 2; தானி4; தானி 5; தானி 7; தானி 8; தானி 9; தானி 10-12)

தானியேல் புஸ்தகத்தில் "தரிசனம்" என்னும் பொருளைத் தரும் எபிரேய வார்த்தைகள்

1. தரிசனம் (visions) - חָזוֹן - khaw-zone' - 2377

   ஆ.பெ.சொ. - தரிசனம், தீர்க்கதரிசனம் (mental sight; dream; revelation; oracle) (தானி 1:17; தானி 8:1,2,13,15, 17,26; தானி 9:21,24; தானி 10:14; தானி 11:14). (தானி 9:24; 1சாமு 3:1; எரே 14:14; எரே 23:16), a dream (ஏசா 29:7), a writing (ஏசா 1:1; நாகூம் 1:1; ஆப 2:2-3), or a mental picture while one is awake (தானி 8:1,2, 13-17,26; தானி 9:21-24; எண் 24:4,16)

2. தரிசனம் (vision) - חֵזֵו - khay'-zev - 2376

   ஆ.பெ.சொ. - தரிசனம், தோற்றம் sight; vision (தானி 2:19,28; தானி 4:5,9, 10,13; தானி 7:1,2,7,13,15)

3. தரிசனம் (vision) - מַרְאָה - mar-aw' - 4759

   பெண்பால் பெயர்ச்சொல் - தரிசனம் (vision as seeing something in a mirror) appearance (தானி 10:7,8,16; ஆதி 46:2; எண் 12:6; 1சாமு 3:15; எசே 1:1; எசே 8:3; எசே 40:2; எசே 43:3)

4. அறியத்தக்க (appearance) - מַרְאֶה - mar-eh' - 4758

   ஆண்பால் பெயர்ச்சொல் - பார்வை, சௌந்தரியம், அழகு, புஷ்டி, மாதிரி, தரிசனம், முகம், லட்சணம், காட்சி பார்த்தல், தோற்றம், காணுதல், சாயல், ரூபம், ரூபவதி, காண்பித்தல். (sight) appearance (தானி 8:16,26,27; தானி 9:23; தானி 10:1; எசே 8:4; எசே 11:24; எசே 43:3)

8. மற்றவர்களை விட இவர்களுடைய மேன்மை

தானி 1:18 அவர்கள் ராஜாவினிடத்தில் கொண்டுவருகிறதற்குக் குறித்த நாட்கள் நிறைவேறின போது பிரதானிகளின் தலைவன் அவர்களை நேபுகாத்நேச்சாருக்கு முன்பாகக் கொண்டுவந்து விட்டான்.

தானி 1:19 ராஜா அவர்களோடே பேசினான்; அவர்கள் எல்லாருக்குள்ளும் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களைப்போல வேறொருவரும் காணப்படவில்லை; ஆகையால் இவர்கள் ராஜசமுகத்தில் நின்றார்கள்.

தானி 1:20 ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.

தானியேல் – தொகுப்புரை

1 அதிகாரம்

தானி 1:21 கோரேஸ் ராஜ்யபாரம் பண்ணும் முதலாம் வருஷமட்டும் தானியேல் அங்கே இருந்தான்.

தானியேல் புஸ்தகத்தில் "சொப்பனம்" என்னும் பொருளைத் தரும் எபிரெய வார்த்தைகள்

1. சொப்பனங்கள் (dreams) - חֲלֹם - **khal-ome' - 2472**

   ஆ.பெ.சொ.- சொப்பனம், சொப்பனக்காரர் (தானி 2:1-3)

2. சொப்பனம் (dream) - חֵלֶם - **khay'-lem - 2493**

   ஆ.பெ.சொ. - சொப்பனம் (தானி 2:4-9, 26-28,36,45; தானி 4:5-9,18-19; தானி 5:12; தானி 7:1)

3. חָלַם - **khaw-lam' - 2492**

   வினைச்சொல் - வலுவாக வளர்தல், ஆரோக்கியமடைதல் (தானி 2:1,3)

"குறித்த நாட்கள் நிறைவேறினபோது" - மூன்று வருஷங்கள் நிறைவேறிற்று.

"ராஜா அவர்களோடே பேசினான்" - ராஜா அவர்களிடத்தில் கேள்விகளைக் கேட்டு, சோதித்தான். (தானி 1:20).

"அவர்கள் எல்லாருக்குள்ளும்" - பாபிலோன் தேசத்திற்கு பல தேசங்களிலிருந்து அடிமைகள் பிடித்து வரப்பட்டிருக்கிறார்கள்.

"பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்" - இது எபிரெயருடைய வழக்குச் சொல். இதற்குப் பலமடங்கு விசேஷித்த திறமையுள்ளவன் என்று பொருள்.

"கோரேஸ் ராஜ்யபாரம்பண்ணும் முதலாம் வருஷமட்டும்" - பாபிலோன் தேசத்தில் யூதா தேசத்தார் எழுபது வருஷங்களாகச் சிறையிருப்பில் இருக்கிறார்கள். தானியேல் இந்த எழுபது வருஷங்களிலும், அரமனையில் விசாரிப்புக்காரனாக இருக்கிறான். கோரோஸ் ராஜ்யபாரம்பண்ணும் முதலாம் வருஷமட்டும் தானியேல் பாபிலோனில் தங்கியிருக்கிறான். (தானி 9:2) இக்காலத்தில் தானியேல் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தை எழுதியிருக்க வேண்டும். தானியேல் இதற்குப் பின்பு உயிரோடு இருந்தாரா என்று தெரியவில்லை.

2 அதிகாரம்

II. நேபுகாத்நேச்சாரின் சொப்பனம்

1. கல்தேயர்களை வரவழைத்தார்கள்

தானி 2:1 நேபுகாத்நேச்சார் ராஜ்யபாரம் பண்ணும் இரண்டாம் வருஷத்திலே, நேபுகாத்நேச்சார் சொப்பனங்களைக் கண்டான்; அதினால், அவனுடைய ஆவி கலங்கி, அவனுடைய நித்திரை கலைந்தது.

தானி 2:2 அப்பொழுது ராஜா தன் சொப்பனங்களைத் தனக்குத் தெரிவிக்கும் பொருட்டு சாஸ்திரிகளையும் ஜோசியரையும் சூனியக்காரரையும் கல்தேயரையும் அழைக்கச் சொன்னான்; அவர்கள் வந்து, ராஜசமுகத்தில் நின்றார்கள்.

தானி 2:3 ராஜா அவர்களை நோக்கி: ஒரு சொப்பனம் கண்டேன்; அந்தச் சொப்பனத்தை அறியவேண்டுமென்று என் ஆவி கலங்கியிருக்கிறது என்றான்.

"நேபுகாத்நேச்சார் ராஜ்யபாரம்பண்ணும் இரண்டாம் வருஷத்திலே" - தானியேல் பாபிலோனுக்கு அடிமையாக வந்து இரண்டு வருஷங்களாயிற்று. ராஜாவின் அரமனையில் சேவிப்பதற்கு மூன்று வருஷங்கள் பயிற்சி எடுக்க வேண்டும். அதற்கு முன்பாகவே தானியேல் இங்கு பயன்படுத்தப்படுகிறான். (தானி 1:5=தானி 2:1; எரே 25:1). யோயாக்கீம் தேவனை மறுதலித்து, எரேமியாவின் புஸ்தகச் சுருளை எரித்து, ஒரு வருஷத்திற்குப் பின்பு இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. (எரே 36).

"ஒரு சொப்பனம் கண்டேன்" - தானி 2 ஆவது அதிகாரத்தல் நேபுகாத்நேச்சார் சொப்பனமாகக் கண்ட ஒரு பெரிய சிலையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இந்தச் சொப்பனத்திற்கு அர்த்தம் கூறும்போது இந்த உலகத்தில் வருங்காலத்தில் நடைபெறப்போகும் சம்பவங்கள் தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. தானியேலின் காலத்திலிருந்து தேவன் இந்தப் பூமியை ஆளுகை செய்யும் நித்திய காலம் வரையிலும் இந்த சொப்பனத்தின் அர்த்தத்தில் கூறப்பட்டிருக்கிறது. (தானி 2:28, 44-45).

தானி 2 ஆவது அதிகாரத்திலுள்ள உட்பிரிவுகள்

1. சொப்பனம் வெளிப்படுத்தப்படுவதற்கு முன்பு வரையிலும் நடைபெற்ற சம்பவங்கள். (தானி 2:1-18)
2. சொப்பனம் வெளிப்படுத்தப்படுகிறது. (தானி 2:19-35)
3. சொப்பனத்திற்கு அர்த்தம் கூறப்படுகிறது. (தானி 2:36-45)
4. சொப்பனத்தின் விளைவுகள் (தானி 2:46-49)

"அந்தச் சொப்பனத்தை அறிய வேண்டுமென்று என் ஆவி கலங்கியிருக்கிறது" - ராஜா தன்னுடைய சாஸ்திரிகளிடமும், ஜோசியரிடமும், சூனியக்காரரிடமும் இதை மட்டுமே வெளிப்படுத்துகிறான். (தானி 2:1-3). ஆனால் தான் கண்ட சொப்பனத்தை ராஜா யாருக்கும் அறிக்கவில்லை. கர்த்தர் தானியேலுக்கு ராஜாவின் சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் வெளிப்படுத்துகிறார். கர்த்தர் வல்லமையாய் கிரியை செய்யும்போது, கல்தேயருடைய தேசத்திலுள்ள ஜோசியராலும், சாஸ்திரிகளாலும், சூனியக்காரராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

2. நேபுகாத்நேச்சாரின் கோரிக்கை

தானி 2:4 அப்பொழுது கல்தேயர் ராஜாவை நோக்கி: ராஜாவே, நீர் என்றும் வாழ்க; சொப்பனத்தை உமது அடியாருக்குச் சொல்லும், அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்று சீரிய பாஷையிலே சொன்னார்கள்.

தானி 2:5 ராஜா கல்தேயருக்குப் பிரதியுத்தரமாக: என்னிடத்திலிருந்து பிறக்கிற தீர்மானம் என்னவென்றால், நீங்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்கு அறிவியாமற் போனால் துண்டித்துப் போடப்படுவீர்கள்; உங்கள் வீடுகள் எருக்களங்களாக்கப்படும்.

தானியேல் – தொகுப்புரை

2 அதிகாரம்

தானி 2:6 சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் தெரிவித்தீர்களேயாகில், என்னிடத்தில் வெகுமதிகளையும் பரிசுகளையும் மிகுந்த கனத்தையும் பெறுவீர்கள்; ஆகையால் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்குத் தெரிவியுங்கள் என்றான்.

தானி 2:7 அவர்கள் மறுபடியும் பிரதியுத்தரமாக: ராஜா அடியாருக்குச் சொப்பனத்தைச் சொல்வாராக; அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்றார்கள்.

தானி 2:8 அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: என்னிடத்திலிருந்து தீர்மானம் பிறந்த படியினாலே நீங்கள் காலதாமசம் பண்ணப் பார்க்கிறீர்களென்று நிச்சயமாக எனக்குத் தெரியவருகிறது.

தானி 2:9 காலம் மாறுமென்று நீங்கள் எனக்கு முன்பாக பொய்யும் புரட்டுமான விசேஷத்தைச் சொல்லும்படி எத்தனம் பண்ணி இருக்கிறீர்கள்; நீங்கள் சொப்பனத்தை எனக்குத் தெரிவிக்காமற் போனால், உங்களெல்லாருக்கும் இந்த ஒரே தீர்ப்பு பிறந்திருக்கிறது; ஆகையால் சொப்பனத்தை எனக்குச் சொல்லுங்கள்; அப்பொழுது அதின் அர்த்தத்தையும் உங்களால் காண்பிக்கக் கூடுமென்று அறிந்து கொள்ளுவேன் என்றான்.

"கல்தேயர் ராஜாவை நோக்கி" - கல்தேயர் என்பவர்கள் பாபிலோன் தேசத்தில் விசேஷித்த கல்விகளைக் கற்ற ஞானவான்கள். மற்றவர்களுடைய சார்பாகக் கல்தேயரே ராஜாவினிடத்தில் பேசுவார்கள்.

சீரிய பாஷை (Syriack) - אֲרָמִית - ar-aw-meeth' - 762

பெயர்ச்சொல் - அராமியர், சீரியர், சீரிய பாஷை - இது அரமாயிக் பாஷையைக் குறிக்கும். இது அராம் அல்லது சீரியருடைய பாஷையாகும். தானி 7 ஆம் அதிகாரம் வரையிலும் சீரிய பாஷையே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. வேதாகமத்தில் மேலும் பல வேதவசனப் பகுதிகளில் சீரிய பாஷையாகிய அரமாயிக் பாஷை பயன்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன: (எஸ்றா 4:8-6:18; எஸ்றா 7:12-26; எரே 10:11)

"துண்டித்துப் போடப்படுவீர்கள்" - ராஜாவின் கட்டளை மிகவும் கடுமையாக உள்ளது. அக்காலத்து ராஜாக்கள் தங்களுக்கு சர்வ அதிகாரமும் இருப்பதாக நினைத்தார்கள். தேவன் தம்முடைய நாம மகிமையை வெளிப்படுத்துவதற்கு நேபுகாத்நேச்சாரையும் இங்கு பயன்படுத்துகிறார். (தானி 2:10-28).

"காலதாமசம்பண்ணப் பார்க்கிறீர்கள்" - ராஜா சொப்பனத்தை மறந்து விட்டார் என்றும், சற்று காலஅவகாசம் இருந்தால் அவர் நினைவுகூருவார் என்றும் கல்தேயரின் சாஸ்திரிகள் நினைக்கிறார்கள். சொப்பனம் தங்களுக்கு அறிவிக்கப்பட்டால் அதன் வியாக்கியானத்தைக் கூறிவிடலாம் என்று ஜோசியர்கள் நினைக்கிறார்கள். (தானி 2:8-9).

3. சாஸ்திரிகளின் இயலாமை

தானி 2:10 கல்தேயர் ராஜசமுகத்தில் பிரதியுத்தரமாக: ராஜா கேட்கும் காரியத்தை அறிவிக்கத்தக்க மனுஷன் பூமியில் ஒருவனும் இல்லை; ஆகையால் மகத்துவமும் வல்லமையுமான எந்த ராஜாவும் இப்படிப்பட்ட காரியத்தை ஒரு சாஸ்திரியினிடத்திலாவது ஜோசியனிடத்திலாவது கல்தேயனிடத்திலாவது கேட்டதில்லை.

தானி 2:11 ராஜா கேட்கிற காரியம் மிகவும் அருமையானது; மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம் பண்ணாத தேவர்களேயொழிய ராஜசமுகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை என்றார்கள்.

2 அதிகாரம்

"ராஜா கேட்கும் காரியத்தை அறிவிக்கத்தக்க மனுஷன் பூமியில் ஒருவனும் இல்லை" - கல்தேயர் உண்மையைக் கூறுகிறார்கள். தானியேல் இந்தச் சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் தேவனிடத்திலிருந்தே பெற்றுக் கொள்கிறான் என்பதற்குக் கல்தேயருடைய வார்த்தையும் ஆதாரமாக உள்ளது. (தானி 2:16-28).

"எந்த ராஜாவும் இப்படிப்பட்ட காரியத்தை....... கேட்டதில்லை" - ராஜாவின் சொப்பனத்தை யாராலும் கூறமுடியாது. கூறாவிட்டால் மரண தண்டனை கொடுக்கப்போவதாக ராஜா அறிவித்து விடுகிறான். இதற்கு முன்பு எந்த ராஜாவும் இப்படி சட்டம் போட்டதில்லையென்று கல்தேயர் கூறுகிறார்கள். தானியேல் சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் கூறியபோது அவன் கர்த்தருடைய அனுக்கிரகத்தினால் அதைக் கூறியதாக அங்கிகரிக்கிறார்கள். (தானி 4:8-9,18; தானி 5:11).

"மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம் பண்ணாத தேவர்கள்" -கல்தேயரைப் பொறுத்தளவில் சில தெய்வங்கள் மனுஷரோடே வாசம்பண்ணும் என்றும், சில தெய்வங்கள் மனுஷரோடே வாசம் பண்ணாது என்று நினைக்கிறார்கள். இங்கு கல்தேயர் முதன் முறையாக "எலோஹிம்" - אֱלֹהִים - el-o-heem' - 430 என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதற்காக இந்த வார்த்தை பன்மையில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (ஆதி 3:5). கர்த்தர் தம்முடைய தேவதத்துவத்தில் பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியானவராகவும் இருக்கிறார். (ஆதி 3:22, யாத் 22:28; 1சாமு 4:8; தானி 2:11; தானி 4:8-9,18; தானி 5:11,14; மத் 3:16-17; மத் 28:19; 2கொரி 13:14; எபே 4:1-7; 1யோவான் 5:7)

4. நேபுகாத்நேச்சாரின் கோபம்

தானி 2:12 இதினிமித்தம் ராஜா மகா கோபமும் உக்கிரமுங்கொண்டு, பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் கொலைசெய்யும்படி கட்டளையிட்டான்.

தானி 2:13 ஞானிகளைக் கொலைசெய்ய வேண்டுமென்கிற கட்டளை வெளிப்பட்டபோது, தானியேலையும் அவன் தோழரையும் கொலைசெய்யத் தேடினார்கள்.

"எல்லா ஞானிகளையும் கொலைசெய்யும்படி" - ஞானிகள் தங்களுக்குப் பலவிதமான வல்லமைகள் இருப்பதாகக் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களால் ராஜாவின் சொப்பனத்தைக் கூறமுடியவில்லை. இதனால் ஞானிகள்மீது ராஜாவிற்குக் கோபம் உண்டாயிற்று. அவர்கள் எல்லோரையும் கொலை செய்துவிடும்படி ராஜா கட்டளையிடுகிறான். இந்த ஞானிகளின் வரிசையில் தானியேலும் அவனுடைய நண்பர்களும் வருகிறார்கள். (தானி 2:12-13). ராஜாவின் கட்டளை பிரகாரம், தானியேலும், அவனுடைய நண்பர்களும் கொலைசெய்யப்படுவார்கள். (தானி 2:13).

5. ஞானத்திற்காக ஜெபம்

தானி 2:14 பாபிலோனின் ஞானிகளைக் கொலைசெய்யப் புறப்பட்ட ராஜாவினுடைய தலையாரிகளுக்கு அதிபதியாகிய ஆரியோகோடே தானியேல் யோசனையும் புத்தியுமாய்ப் பேசி:

தானி 2:15 இந்தக் கட்டளை ராஜாவினால் இத்தனை அவசரமாய்ப் பிறந்ததற்குக் காரணம் என்ன என்று ராஜாவின் சேர்வைக்காரனாகிய ஆரியோகினிடத்தில் கேட்டான்; அப்பொழுது ஆரியோகு தானியேலுக்குக் காரியத்தை அறிவித்தான்.

2 அதிகாரம்

தானி 2:16 தானியேல் ராஜாவினிடத்தில் போய், சொப்பனத்தின் அர்த்தத்தை ராஜாவுக்குக் காண்பிக்கும்படித் தனக்குத் தவணை கொடுக்க விண்ணப்பம் பண்ணினான்.

தானி 2:17 பின்பு தானியேல் தன் வீட்டுக்குப் போய், தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடேகூட அழியாதபடிக்கு இந்த மறைபொருளைக் குறித்துப் பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேட்கிறதற்காக,

தானி 2:18 அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் தன்னுடைய தோழருக்கு இந்தக் காரியத்தை அறிவித்தான்.

"ஆரியோக்" **(Arioch)** - இது பழங்காலத்து பாபிலோனியப் பெயர். அசீரியாவின் ராஜாவிற்கு இந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. (ஆதி 14:1,9). இந்தப் பெயர் தானியேலின் புஸ்தகத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (தானி 2:4-15,24-25)

"தானியேல் யோசனையும் புத்தியுமாய்ப் பேசி" - தானியேலின் ஞானம் கர்த்தருடைய கிருபையினால் இங்கு மறுபடியும் வெளிப்படுத்தப் படுகிறது. கர்த்தருடைய ஞானம் தனக்கு கிடைக்க வேண்டுமென்று தானியேல் ஜெபித்தான். அப்போது இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது (தானி 2:19). எத்தனை முறை தானியேலுக்கு மறைபொருள் வெளிப் படுத்தப்பட்டது என்று தெரியவில்லை. பாபிலோன் தேசத்தில் ஞானிகளைக் கொலைசெய்யும் காரியம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. (தானி 2:14). அந்தச் சூழ்நிலையில் அவர்கள் தன்னைக் கொன்றுபோடாதவாறு தானியேல் ராஜாவினுடைய தலையாரி களுக்கு அதிபதியாகிய ஆரியோகோடே யோசனையும், புத்தியுமாகவும் பேசுகிறான் (தானி 2:16).

"தவணை கொடுக்க விண்ணப்பம் பண்ணினான்" - தானியேல் ராஜாவை நேரடியாகச் சந்தித்துப் பேசுகிறான். கர்த்தர் தனக்கு ராஜாவின் சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் வெளிப்படுத்துவார் என்று தானியேல் கர்த்தரை விசுவாசிக்கிறான். பரலோகத்தின் தேவனிடம் விண்ணப்பம் பண்ணினால், அவர் தனக்குப் பதில் கொடுப்பார் என்று தானியேல் விசுவாசிக்கிறான்.

"தானும் தன் தோழரும்" - ஞானிகளைக் கொலைபண்ணும் ராஜாவின் உத்தரவு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது. ராஜாவிடம் தான் பேசியதைத் தானியேல் தன்னுடைய மூன்று எபிரெய நண்பர்களோடு அறிவிக்கிறான். அவர்கள் நால்வரும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய உயிருக்கு ஆபத்து வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கர்த்தர் தங்களைக் கைவிடமாட்டார் என்று அவர்கள் கர்த்தரிடத்தில் உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். (தானி 2:18).

6. தானியேலுக்கு சொப்பனம் வெளிப்படுத்தப்படுகிறது

தானி 2:19 பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது; அப்பொழுது தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்திரித்தான்.

தானி 2:20 பின்பு தானியேல் சொன்னது: தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக; ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது.

தானி 2:21 அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்.

தானி 2:22 அவரே ஆழமும் மறை பொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளில் இருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்.

தானியேல் – தொகுப்புரை

2 அதிகாரம்

தானி 2:23 என் பிதாக்களின் தேவனே, நீர் எனக்கு ஞானமும் வல்லமையும் கொடுத்து, நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக்கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்த படியினால், உம்மைத் துதித்துப் புகழுகிறேன் என்றான்.

“இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப் பட்டது” - தானியேலும், மூன்று எபிரெய வாலிபரும் ஜெபம் பண்ணிய பின்பு, கர்த்தர் அன்று இரவில் ராஜாவின் சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் வெளிப்படுத்துகிறார். தானியேல் பரலோகத்தின் தேவனை அவருடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் ஸ்தோத்திரிக்கிறான். (தானி 2:19-26).

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணம்

1. ஞானம் அவருக்கே உரியது. (தானி 2:20).
2. வல்லமை அவருக்கே உரியது. (தானி 2:20).
3. அவர் காலங்களை மாற்றுகிறவர். (தானி 2:21).
4. அவர் சமயங்களை மாற்றுகிறவர். (தானி 2:21).
5. ராஜாக்களைத் தள்ளி விடுகிறவர். (தானி 2:21).
6. ராஜாக்களை ஏற்படுத்துகிறவர் (தானி 2:21).
7. ஞானிகளுக்கு ஞானத்தைக் கொடுக்கிறவர். (தானி 2:21).
8. அறிவாளிகளுக்கு அறிவைக் கொடுக்கிறவர். (தானி 2:21).
9. அவர் ஆழமானதை வெளிப்படுத்துகிறவர். (தானி 2:22).
10. அவர் மறைபொருளுமானதை வெளிப் படுத்துகிறவர் (தானி 2:22).
11. இருளில் இருக்கிறதை அவர் அறிவார்.
12. வெளிச்சம் அவரிடத்தில் தங்கும். (தானி 2:22; 1தீமோ 6:16).
13. அவர் தானியேலுக்கு ஞானத்தைக் கொடுத்திருக்கிறீர். (தானி 2:23).
14. அவர் தானியேலுக்கு வல்லமையைக் கொடுத்திருக்கிறீர். (தானி 2:23).
15. ராஜாவின் காரியத்தை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார். (தானி 2:23).

7. தானியேலை அழைத்து வருகிறார்கள்

தானி 2:24 பின்பு தானியேல் பாபிலோனின் ஞானிகளை அழிக்க ராஜா கட்டளையிட்ட ஆரியோகினிடத்தில் போய்: பாபிலோனின் ஞானிகளை அழிக்காதேயும், என்னை ராஜாவின் முன்பாக அழைத்துக் கொண்டுபோம்; ராஜாவுக்கு அர்த்தத்தைத் தெரிவிப்பேன் என்று சொன்னான்.

தானி 2:25 அப்பொழுது ஆரியோகு தானியேலை ராஜாவின் முன்பாகத் தீவிரமாய் அழைத்துக்கொண்டுபோய்: சிறைப்பட்டுவந்த யூதேயா தேசத்தாரில் ஒரு புருஷனைக் கண்டுபிடித்தேன்; அவன் ராஜாவுக்கு அர்த்தத்தைத் தெரிவிப்பான் என்றான்.

தானி 2:26 ராஜா பெல்தெஷாத்சாரென்னும் நாமமுள்ள தானியேலை நோக்கி: நான் கண்ட சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் நீ எனக்கு அறிவிக்கக்கூடுமா என்று கேட்டான்.

“தானியேல்.....ஆரியோகினிடத்தில் போய்” - ஆரியோகு ராஜாவின் சேர்வைக்காரன். ஞானிகளைக் கொல்லும் உத்தரவு இவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தானியேல் ஆரியோகினிடத்தில் பேசி, பாபிலோன் தேசத்திலுள்ள எல்லா ஞானிகளுடைய ஜீவனையும் காப்பாற்றுகிறான்.

2 அதிகாரம்

ராஜாவிற்கு அவருடைய சொப்பனத்தின் அர்த்தத்தைத் தெரிவிப்பதாகத் தானியேல் கூறுகிறான். ஆரியோகு தானியேலை நம்புகிறான். ஆகையினால் ஆரியோகு தானியேலை ராஜாவின் முன்பாகத் தீவிரமாய் அழைத்துக் கொண்டுபோகிறான்.

"சிறைப்பட்டுவந்த யூதேயா தேசத்தாரில் ஒரு புருஷனைக் கண்டுபிடித்தேன்" - மனுஷருக்கு ஏற்படும் பிரச்சனைகளைக் காலாகாலமாக யூதர்களே தீர்த்து வைத்திருக்கிறார்கள். ஆபிரகாம் (ஆதி 14) யோசேப்பு (ஆதி 37-50), மொர்தெகாய் (எஸ் 1-10), யோனா (யோனா 1-4), தானியேல் (தானி 2-12), இயேசு கிறிஸ்து (யோவான் 3:16) ஆகியோரோடு மேலும் பல யூதர்கள் மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காகப் பாடுபட்டிருக்கிறார்கள்.

8. சொப்பனத்தில் காணப்பட்ட பொருள்களும் ஆட்களும் - தேவனைப் பற்றிய சாட்சி

தானி 2:27 தானியேல் ராஜசமுகத்தில் பிரதியுத்தரமாக: ராஜா கேட்கிற மறைபொருளை ராஜாவுக்குத் தெரிவிக்க ஞானிகளாலும், ஜோசியராலும், சாஸ்திரிகளாலும், குறிசொல்லுகிறவர்களாலும் கூடாது.

தானி 2:28 மறைபொருள்களை வெளிப்படுத்துகிறபரலோகத்திருக்கிற தேவன் கடைசிநாட்களில் சம்பவிப்பதை ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்குத் தெரிவித்திருக்கிறார்; உம்முடைய சொப்பனமும் உமது படுக்கையின்மேல் உம்முடைய தலையில் உண்டான தரிசனங்களும் என்னவென்றால்:

தானி 2:29 ராஜாவே, உம்முடைய படுக்கையின் மேல் நீர் படுத்திருக்கையில், இனிமேல் சம்பவிக்கப்போகிறதென்ன என்கிற நினைவுகள் உமக்குள் எழும்பிற்று; அப்பொழுது மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவர் சம்பவிக்கப் போகிறதை உமக்குத் தெரிவித்தார்.

தானி 2:30 உயிரோடிருக்கிற எல்லாரைப்பார்க்கிலும் எனக்கு அதிக ஞானம் உண்டென்பதினாலே அல்ல; அர்த்தம் ராஜாவுக்குத் தெரியவரவும், உம்முடைய இருதயத்தின் நினைவுகளை நீர் அறியவும், இந்த மறைபொருள் எனக்கு வெளியாக்கப்பட்டது.

"தானியேல் ராஜசமுகத்தில் பிரதியுத்தரமாக" - தானியேல் ராஜாவிடம் பேசும்போது, முதலாவதாகக் கர்த்தருடைய மகிமையைக் குறித்துக் கூறி, அவரைத் துதிக்கிறான். (தானி 2:27-28).

"கடைசி நாட்களில் சம்பவிப்பதை" - நேபுகாத்நேச்சாரின் மரணத்திற்குப் பின்பு சம்பவிக்கப்போகும் காரியங்களையும், அதன் பின்பு நித்திய காலம் வரையிலும் சம்பவிக்கப் போகும் காரியங்களையும் அறிவிப்பதே ராஜாவினுடைய சொப்பனத்தின் பிரதான நோக்கமாகும். (தானி 2:28-45). நேபுகாத்நேச்சாரின் நினைவுகளைத் தானியேல் வெளிப்படுத்துகிறான்.

"எனக்கு அதிக ஞானம் உண்டென்பதினாலே அல்ல" - சொப்பனத்திற்கு அர்த்தம் கூறுவதினால் தனக்கு எந்தப் பெருமையும் தானியேல் ஏற்படுத்திக் கொள்ள வில்லை. மற்ற ஞானிகளைவிட தான் பெரிய ஞானியென்றும் தானியேல் பெருமைப்பட வில்லை. நேபுகாத்நேச்சார் தானியேலையும், அவனுடைய மூன்று எபிரெய நண்பர்களையும் பார்த்தபோது, மற்றவர்களைவிட இவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான். (தானி 1:20) ஆனால் தானியேல் தன்னுடைய சாமர்த்தியத்திற்காகப் பெருமைப்படவில்லை.

தானியேலுக்கு மறைபொருள் வெளியாக்கப்பட்டதற்குக் காரணம்

1. தானியேலுடைய ஜீவனையும், அவனுடைய நண்பர்களின் ஜீவனையும் பாதுகாப்பதற்காக. (தானி 2:18,30).

2. பாபிலோனிலுள்ள ஞானிகளைவிட கர்த்தர் பெரியவர் என்பதை மேன்மைப் படுத்துவதற்காக (தானி 2:27-28).

2 அதிகாரம்

3. கர்த்தரை நம்புகிறவர்களின் விண்ணப்பங்களுக்கு அவர் பதில் கொடுப்பார் என்பதை அறிவிப்பதற்காக. (தானி 2:18-23).

4. எல்லா தேசங்களின் மீதும் கர்த்தருடைய சர்வ ஆளுகை உள்ளது என்பதை வெளிப்படுத்துவதற்காக. (தானி2:19-23, 39-45).

5. மனுஷருடைய காரியங்களைக் கர்த்தரே வழிநடத்துகிறார் என்னும் சத்தியத்தை அறிவிப்பதற்காக. (தானி 2:19-23).

6. கர்த்தர் சர்வ ஞானமும், சர்வ அறிவும் உள்ளவர் என்பதை நிரூபிப்பதற்காக. (தானி 2:21-23; ரோமர் 11:33).

7. கர்த்தரே தீர்க்கதரிசனங்களின் காரணகர்த்தா என்பதைத் தெளிவு படுத்துவதற்காக. (தானி 2:23-45).

8. கர்த்தர் மாத்திரமே மெய்யான தேவன் என்பதை நிரூபிப்பதற்காக. (தானி2:20-30).

9. இஸ்ரவேலின் தேவனே மெய்யான தேவன் என்று சாட்சி பகருவதற்காக. (தானி 2:23).

10. தேவனுடைய வெளிப்பாட்டைப் பெறுகிறவர் தேவனுடைய பிள்ளையாகவோ, அல்லது தேவனுடைய பிள்ளை அல்லாமலோ இருக்கலாம் என்னும் சத்தியத்தை வெளிப்படுத்துவதற்காக. (தானி 2:29-30,45).

11. மனுஷருடைய நினைவுகளை வெளிப்படுத்துவதற்காக. (தானி 2:30).

12. தானியேலின் நாளிலிருந்து நித்திய காலம் வரையிலும் உள்ள காலத்தில் தேவனுடைய திட்டத்தை அறிவிப்பதற்காக. (தானி 2:29-45).

9. பெரிய சிலை - ஐந்து பாகங்கள் - *(7:1-14)*

தானி 2:31 ராஜாவே, நீர் பெரிய சிலையைக் கண்டீர்; அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது; அது உமக்கு எதிரே நின்றது; அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது.

தானி 2:32 அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும்,

தானி 2:33 அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது.

தானி 2:34 நீர் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களின் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்டது.

தானி 2:35 அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடைகாலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போலாயிற்று; அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டு போயிற்று; சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று.

தீர்க்கதரிசன எண் - 1

"ராஜாவே, நீர் பெரிய சிலையைக் கண்டீர்....." (தானி 2:31-35) தானி 2:31-33 ஆவது வசனத்தின் முன்பகுதி ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. தானி 2:33 ஆவது வசனத்தின் பின்பகுதி-35 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

2 அதிகாரம்

நேபுகாத்நேச்சாரின் சொப்பனம்

1. பெரிய சிலை
2. அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது.
3. அது ராஜாவுக்கு எதிரே நின்றது;
4. அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது.
5. அந்தச் சிலையின் தலை பசும்பொன்னாக இருந்தது. (தானி 2:32)
6. அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியாக இருந்தது.
7. அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமாக இருந்தது.
8. அதின் கால்கள் இரும்பாக இருந்தது. (தானி 2:32).
9. அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாக இருந்தது.
10. கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்து, அந்தச் சிலையின் பாதங்களின் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்டது. (தானி 2:34).
11. அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடை காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப் போலாயிற்று (தானி 2:35). இந்த வாக்கியத்தில் "அவைகள்" என்பது கடைசி நாட்களில் வெளி 13,17 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் மிருகத்தோடு சேர்ந்து கொண்ட எல்லோரையும் குறிக்கும்.
12. சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று. (தானி 2:35)

10. வியாக்கியானம்

(1) பசும் பொன்னாலான தலை- இஸ்ரவேலை துன்புறுத்தும் மூன்றாவது உலகப் பேரரசு - பாபிலோன் - *(7:4; ஏசா 13:1)*

தானி 2:36 சொப்பனம் இதுதான்; அதின் அர்த்தத்தையும் ராஜசமுகத்தில் தெரிவிப்போம்.

தானி 2:37 ராஜாவே, நீர் ராஜாதி ராஜாவாயிருக்கிறீர்; பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார்.

தானி 2:38 சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்தத் தலை நீரே.

"பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார்" - இந்த வாக்கியம் தானி 2:21 ஆவது வசனத்தை உறுதிபண்ணுகிறது. கர்த்தர் ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர். கர்த்தர் இன்னும் சர்வ ஆளுகையுடையவர். மனுஷர் மத்தியிலே தமக்குச் சித்தமானதைச் செய்யக் கூடியவர். தேவனுடைய வல்லமையல்லாமல் இந்த உலகில் வேறு வல்லமை எதுவுமில்லை. (ரோமர் 13:1-8). சிருஷ்டிக்கப்பட்ட யாவருக்கும் கர்த்தர் வல்லமையைத் தருகிறார். ஆனால் அந்த வல்லமையைச் சிருஷ்டிகள் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதற்குக் கர்த்தர் பொறுப்பானவர் அல்ல. கர்த்தர் சாத்தானுக்கும் வல்லமையைக் கொடுத்திருக்கிறார். அந்த அதிகாரத்தைச் சாத்தான் தவறாகப் பயன்படுத்தியதினால் கர்த்தர் அவனை நியாயம் விசாரிப்பார். (மத் 25:41).

2 அதிகாரம்

கர்த்தர் ராஜ்யங்களை எழுப்புகிறார். அதை விழச்செய்கிறார். கர்த்தருக்கு விரோதமாக யாரும் கிரியை செய்து ஜெயம் பெறமுடியாது. சில சமயங்களில் கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகப் புறஜாதி ராஜாக்களுக்கும் ராஜ்யபாரத்தைத் தருகிறார். கர்த்தர் பார்வோனை எழுப்பினார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் பார்வோன் அவருக்கு எதிர்த்துநின்றான். இதனால் கர்த்தருடைய வல்லமை ஜனங்களுக்குத் தெரிய வந்தது. (யாத் 4-15; ரோமர் 9:17-24).

கர்த்தர் அசீரியரை எழுப்பினார். எப்பிராயீமின் பத்துக் கோத்திரத்தாரைத் தண்டிப்பதற்குக் கர்த்தர் அசீரியரைப் பயன்படுத்தினார். (2இராஜா17). கர்த்தர் நேபுகாத்நேச்சாரை எழுப்பி, யூதாவை அதன் பாவங்களுக்காகத் தண்டித்தார். (2இராஜா 24; எரே 25).

கர்த்தர் இவ்வாறு காலாகாலமாகத் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றி வருகிறார். கர்த்தருடைய சித்தம் தடையில்லாமல் நிறைவேறும். கர்த்தருடைய சித்தம் மனுஷருடைய பாவத்தினால் நிறைவேறுவதில் கால தாமதமாயிற்று. புதிய பூமியில் கர்த்தருடைய சித்தம் பரிபூரணமாக நிறைவேறும். (அப் 3:21; எபே 1:10; எபே 3:10-11; 2பேதுரு 3:13; வெளி 21-22)

சாத்தானும், அவனுடைய பிரதிநிதிகளும் கர்த்தருடைய நோக்கங்கள் பூமியில் நிறைவேறுவதைத் தடைபண்ணுகிறார்கள். (1நாளா 21:1; யோபு 1:6; யோபு 2:1; சங் 109:6; தானி 10:12-21) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, சாத்தான் முழுவதுமாகத் தோற்கடிக்கப்படுவான். பூமியில் தேவனுடைய ராஜ்யம் நித்திய காலமாக ஸ்தாபிக்கப்படும். (வெளி 11; வெளி 12; வெளி 16; வெளி 19; வெளி 20).

"உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார்" - தானி 2,7 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் ராஜ்யங்கள். பூமியிலுள்ள எல்லா தேசங்களையும் ஆளுகை செய்யும்படி செய்தார். (தானி 2:38-39;தானி 7:23)

தீர்க்கதரிசன எண் - 2

"பொன்னான அந்தத் தலை நீரே......" (தானி 2:38-45) தானி 2:38 ஆவது வசனத்தின் பின்பகுதியிலிருந்து 40 ஆவது வசனம் வரையிலும் நிறைவேறிற்று. தானி 2:41-45 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

சிலையின் வியாக்கியானம்

நேபுகாத்நேச்சார் ஒரு பெரிய சிலையைத் தன் சொப்பனத்தில் கண்டான். அந்தச் சிலையில் ஐந்து விதமான உலோகங்கள் உள்ளன. இவை ஐந்து ராஜ்யங்களுக்கு அடையாளமாகும். அவையாவன:

1. பாபிலோன்
2. மேதிய-பெர்சிய தேசம்
3. கிரேக்குதேசம்
4. ரோமப்பேரரசு
5. பிந்திய ரோமப்பேரரசு

இவை கடைசி நாட்களிலுள்ள பத்து ராஜ்யங்களைக் குறிக்கும். (தானி 2:44-45; தானி 7:23-24; வெளி 17:12-17).

ஐந்து உலோகங்களின் வியாக்கியானம்

1. சிலையின் தலை பசும்பொன் (தானி 2:32,35,38). இது நேபுகாத்நேச்சாரின் பாபிலோன் தேசத்தைக் குறிக்கிறது. (தானி 2:37-38; எரே 15:4; எரே 24:9; எரே 25:1-12; எரே 29:18). இங்கு கூறப்பட்டிருக்கும் ஐந்து ராஜ்யங்களும் ஒன்றன்பின் ஒன்றாக வருகிறது. தேவனுடைய திட்டம் நிறைவேறும் பிரகாரமாக இவை ஒவ்வொன்றும் தேசங்களை ஆளுகை செய்கிறது. இஸ்ரவேல் தேசத்தைத் தண்டிப்பதற்காகக் கர்த்தர் இந்தப் புறஜாதி தேசங்களைப் பயன்படுத்துகிறார். நேபுகாத்நேச்சாரின் முதலாம் வருஷத்தில் பாபிலோன் தேசம் இஸ்ரவேலைக் கைப்பற்றியது. இது கி.மு. 606 ஆம் வருஷத்தில் நடைபெற்றது. இதற்குப் பின்பு 70 வருஷங்களாக பாபிலோன் தேசம் தன் அதிகாரத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கிறது. (தானி 9:2; எரே 25).

2 அதிகாரம்

நேபுகாத்நேச்சார் 43 வருஷங்களாகப் பாபிலோன் தேசத்தை ஆட்சி புரிந்தான். இவனுக்குப் பின்பு ஏவில்மொரோதாக் என்பவன் பாபிலோனின் ஆட்சி பொறுப்புக்கு வந்தான். (2இராஜா 25:27; எரே 52:31) இவனுக்குப் பின்பு, நேபோநிதசும் Nabonidus, பெல்ஷாத்சாரும் இணைந்து பாபிலோனை ஆட்சி புரிந்தார்கள். இவர்களுக்குப்பின்பு பாபிலோன் பேரரசு அழிந்துபோயிற்று. (தானி 5). பாபிலோன் பேரரசு இஸ்ரவேல் தேசத்தை 60 வருஷங்களாக ஒடுக்கி, ஆளுகை செய்தது. கி.மு. 606 ஆம் வருஷத்திலிருந்து கி.மு. 546 ஆம் வருஷம் வரையிலும் பாபிலோனியர் இஸ்ரவேலை ஆளுகை செய்தார்கள். (எரே 25).

2. அந்தச் சிலையின்மார்பும் அதின் புயங்களும் வெள்ளி. (தானி 2:32,35,39). சிலையின் இந்தப் பகுதி மேதிய-பெர்சிய தேசத்தைக் குறிக்கிறது. யூதர்களின் 70 வருஷ சிறையிருப்புக்குப் பின்பு மேதிய-பெர்சிய தேசத்தார் பாபிலோனை ஆளுகை செய்கிறார்கள். புறஜாதியாரின் காலத்தில் மேதிய-பெர்சிய தேசத்தார் இஸ்ரவேலை ஒடுக்கும் இரண்டாவது தேசமாகக் கூறப்பட்டிருக்கிறார்கள். (தானி 2:39; தானி 5:1-31; தானி 8:20; தானி 9:1; தானி 10:1; தானி 11:1-3; 2நாளா 36:22; எஸ்றா 1:1-3).

இந்தச் சிலைக்கு இரண்டு புயங்கள் உள்ளன. இது மேதிய தேசம், பெர்சிய தேசம் ஆகிய இரண்டு தேசங்களைக் குறிக்கும். இவர்களுடைய தேசம் பாபிலோன் பேரரசை விட தாழ்மையானது. பாபிலோனியர் பொன்னைப் போல் மேன்மையானவர்கள். இவர்கள் வெள்ளியாக இருக்கிறார்கள். வல்லமையிலும், அதிகாரத்திலும் மேதிய-பெர்சிய தேசத்தார் பாபிலோன் தேசத்தாரைவிட எந்தவிதத்திலும் குறைந்தவர்கள் அல்ல. ஆனால் ஐசுவரியத்திலும், ஆடம்பரத்திலும், மகிமையிலும், அரசாங்க அமைப்பு முறையிலும் இவர்கள் பாபிலோனை விட குறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். (ஏசா 13:19). பாபிலோனின் ராஜா சர்வாதிகாரியாக இருந்தான். (தானி 5:19) ஆனால் மேதிய-பெர்சிய தேசத்தில் ராஜாவைவிட அந்தத் தேசத்தின் சட்டம் முக்கியமானதாயிற்று. ராஜாவால்கூட நிறைவேற்றப்பட்ட சட்டத்தை மாற்ற முடியாது. (தானி 6:1,14).

இதுபோலவே மூன்றாவது, நான்காவது ராஜ்யங்கள் இந்தத் தேசத்தைவிட ஐசுவரியத்திலும், மகிமையிலும் குறைந்து காணப்படுகின்றன. பாபிலோன் இஸ்ரவேல் தேசத்தாரை அடிமைப் படுத்திற்று. (எரே 25) மேதிய-பெர்சிய தேசத்தார் இஸ்ரவேல் தேசத்தாரை விடுவித்தார்கள். (ஏசா 44:28; ஏசா 45:1-5; எஸ்றா 1:1-4; எஸ்றா 6:1-14) மகா அலெக்ஸாண்டர் கிரேக்கு பேரரசை கி.மு. 334 ஆம் வருஷம் ஸ்தாபித்தார். அதுவரையிலும் மேதிய-பெர்சிய தேசத்தார் ஆட்சி பொறுப்பில் இருந்தார்கள். அதன் பின்பு கிரேக்கர்கள் அவர்களிடமிருந்து ஆட்சி பொறுப்பைப் பறித்துக் கொண்டார்கள்.

3. சிலையின் வயிறும் அதின் தொடையும் வெண்கலம். (தானி 2:32,35,39). பெரிய சிலையின் இந்தப் பகுதி மூன்றாவது ராஜ்யமாகிய கிரேக்கு ராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. மகா அலெக்ஸாண்டர் கிரேக்கு ராஜ்யத்தை ஸ்தாபித்தார். புறஜாதியாரின் காலங்களில் கிரேக்கர்கள் இஸ்ரவேல் தேசத்தாரை ஆளுகை செய்தார்கள். (தானி 2:39; தானி 8:20-21; தானி 11:1-34).

கிரேக்கு தேசம் மற்ற தேசங்களைவிட நிலப்பரப்பில் விஸ்தீரணமாக இருந்தது. அலெக்ஸாண்டர் கிரேக்கு தேசம், மக்கதோனியா தேசம் ஆகிய தேசங்களை ஸ்தாபித்து, மேதிய-பெர்சிய தேசத்தையும் பிடித்துக் கொண்டான். அலெக்ஸாண்டரின் ஆளுகை இந்திய தேசம் வரையிலும் பரவியிருந்தது. அலெக்ஸாண்டரின் மரணத்திற்குப் பின்பு கிரேக்குப் பேரரசு அழியத் தொடங்கிற்று. கிரேக்கு சாம்ராஜ்யம் நான்கு பிரிவுகளாகப் பிரிந்தது. (தானி 8)

2 அதிகாரம்

4. சிலையின் கால்கள் இரும்பு. (தானி 2:33-35,40). மகா சிலையின் இந்தப் பகுதி முந்திய ரோமப்பேரரசைக் குறிக்கிறது. இவர்கள் கிரேக்கு சாம்ராஜ்யத்திற்குப் பின்பு வருகிறார்கள். இஸ்ரவேலை ஒடுக்கும் நான்காவது ராஜ்யமாக இவர்கள் விவரிக்கப் பட்டிருக்கிறார்கள். (தானி 2:40; தானி7:23-24; தானி 9:26; லூக்கா 2:1; லூக்கா 20:20-24; யோவான் 11:48; மத் 24:1-2; அப் 16:21; அப் 22:25-29).

மற்ற மூன்று ராஜ்யங்களும் பொன், வெள்ளி, வெண்கலம் போன்றவை. இரும்பு இந்த உலோகங்களைவிட வலிமையானது. இது நான்காவதாகக் கூறப்பட்டிருக்கிற போதிலும், மற்ற தேசங்களைவிட முந்திய ரோமப்பேரரசு வலிமையில் எந்த வகையிலும் குறைந்ததல்ல. புறஜாதியாரின் காலத்தில் இவர்கள் இஸ்ரவேலை ஒடுக்கினார்கள். மேசியாவின் வருகைக்கு முன்பாக மேலும் இரண்டு ராஜ்யங்கள் இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்ய வேண்டும். இந்தச் சிலைக்கு இரண்டு கால்கள் உள்ளன. முந்திய ரோமப்பேரரசில் காணப்பட்ட கிழக்கு தேசமும், மேற்கு தேசமும் அவ்விரண்டு கால்களாகும்.

5. சிலையின் பாதங்கள் பாதி இரும்பும் பாதிகளிமண்ணும்.(தானி 2:33-35,44). சிலையின் இந்தப் பகுதி வருங்காலத்தில் ஸ்தாபிக்கப்படப் போகும் பிந்தைய ரோமப்பேரரசைக் குறிப்பிடுகிறது. புறஜாதியாரின் காலத்தில் இஸ்ரவேலை ஒடுக்கும் ஐந்தாவது ராஜ்யமாக இவர்கள் கூறப்பட்டிருக்கிறார்கள்.(தானி2:31-43; தானி 7:23-25; வெளி 17:12-17).

இந்தப் பகுதி சிலையின் கடைசிப் பகுதியாகும். பரலோகத்திலிருந்து வரும் கல் இந்தச்சிலையை அழிக்கும். பிந்திய ரோமப்பேரரசு பிளவுண்ட ராஜ்யங்களாக இருக்கும். ஓரளவு பெலமுள்ளதாகவும், ஓரளவு பெலவீனமுள்ளதாகவும் இருக்கும். இதன் பாதங்கள் பாதி இரும்பும், பாதிக் களிமண்ணுமாக இருக்கிறது. களிமண் என்பது மக்களாட்சியையும், இரும்பு என்பது மன்னர் ஆட்சியையும் குறிப்பிடுகிறது. இரும்பும், களிமண்ணும் ஒன்றுசேராது. அது போலவே மக்களாட்சியும், மன்னராட்சியும் ஒன்றுசேராது.

இரும்பும், களி மண்ணும் இருக்குமிடத்தில் இரும்பின் பலனே மேலோங்கி நிற்கும். அதுபோலவே பிந்திய ரோமப்பேரரசில் மக்களாட்சி அகற்றப்பட்டு, மன்னராட்சி மறுபடியும் மேலோங்கி நிற்கும். பிந்திய ரோமப்பேரரசில் பத்து ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்படும். பத்துராஜாக்கள் அதை ஆளுகை செய்வார்கள். (தானி 2:44-45; தானி 7:7-8, 23-24).

இந்தப் பத்து ராஜ்யங்களும் பாதங்களிலுள்ள பத்து விரல்களாகும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக கடைசி நாட்களில் இந்தப் பத்து ராஜ்யங்களும் பூமியில் ஆளுகை செய்வார்கள். இயேசு கிறிஸ்து அப்போது அவர்களை அழிப்பார். (வெளி 17:8-17; வெளி 19:11-21).

எழுபதாவது வாரத்தின் முதல் மூன்றரை வருஷங்களில் பத்து ராஜாக்கள் இந்த ராஜ்யங்களை ஆளுகை செய்வார்கள். அதன் பின்பு கடைசி மூன்றரை வருஷங்களில் அந்திக்கிறிஸ்து தேசங்களை ஆளுகை செய்வான்.(தானி 2:44, 45; தானி 7:7-14; தானி 7:17-25; வெளி 13:1-18; வெளி 17:8-17; 2தெச 2:1-12). இந்தப் பத்து ராஜ்யங்கள் பிந்திய ரோமப் பேரரசாகக் கூறப்பட்டிருக்கிறது. (தானி 7, வெளி 17:12-17)

2 அதிகாரம்

சிலையை உடைத்த கல்

இந்தக் கல் பரலோக ராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்து பரலோக ராஜ்யத்தின் அதிபதியாக இருக்கிறார். தம்முடைய இரண்டாம் வருகையின்போது இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலுள்ள ராஜ்யங்களை அழிப்பார். (தானி 2:34-35,44,45; தானி 7:13-27; மத் 24:29-31; மத் 25:31-46; சக 14:1-21; 2தெச 1:7-11; 2தெச 2:4-8; யூதா 1:14; வெளி 11:15; வெளி 19:11-20:7). கிறிஸ்து தாமே “கல்” "stone" எனவும் அழைக்கப்படுகிறார். (சங் 118:22; மத் 21:44; எபே 2:19-22; 1பேதுரு 2:6-8) “கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல்” என்னும் வாக்கியம் மனுஷருடைய துணையில்லாமல் முழுவதுமாகவே தேவனுடைய கிரியையாக இது நடைபெறும் என்பதைக் குறிக்கிறது. (தானி 2:45; தானி 8:25; யோபு 34:20; புல 4:6).

பாபிலோன் தேசம் இஸ்ரவேலை ஒடுக்குவதற்கு முன்பாகவே, எகிப்தியரும், அசீரியரும் அவர்களை ஒடுக்கினார்கள். ஆகையினால் பாபிலோனியரை இஸ்ரவேலை ஒடுக்கும் மூன்றாவது தேசமாகக் குறிப்பிடலாம். அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யம் இந்த வரிசையில் எட்டாவது ராஜ்யமாக இருக்கும். (வெளி 17:8-11)

(2) வெள்ளியாலான மார்பும் புயங்களும் - நான்காம் உலகப் பேரரசு - மேதிய பெர்சியா - (5:25-31; 7:5; 8:20; 11:1-2; ஏசா 13:17; 21:2; 45:1; எரே 51:11)

(3) வெண்கலத்தாலான வயிறும் தொடையும் - ஐந்தாம் உலகப் பேரரசு - கிரேக்கு - (7:6; 8:21; 11:1-4; யோவே 3:6; சக 9:13; வெளி 13:1-2; 17:3,16-17)

தானி 2:39 உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும்; பின்பு பூமியெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும்.

(4) இரும்பாலான கால்கள் - ஆறாம் உலகப் பேரரசு - ரோம்

தானி 2:40 நாலாவது ராஜ்யம் இரும்பைப் போல உரமாயிருக்கும்; இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கிச் சின்னபின்னமாக்குகிறதோ, அப்படியே இது நொறுக்கிப்போடுகிற இரும்பைபோல அவைகளையெல்லாம் நொறுக்கித் தகர்த்துப்போடும்.

(5) இரும்பும் களிமண்ணினாலுமான பாதங்கள் - ஏழாம் உலகப் பேரரசு - பிந்தைய ரோம் - (7:7,17-25; 9:26; லூக் 2:1; யோவா 11:48)

தானி 2:41 பாதங்களும் கால்விரல்களும் பாதிகுயவனின் களிமண்ணும் பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே, அந்த ராஜ்யம் பிரிக்கப்படும்; ஆகிலும் களிமண்ணோடே இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும்.

தானி 2:42 கால்விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது என்னவென்றால், அந்த ராஜ்யம் ஒருபங்கும் உரமும் ஒரு பங்கு நெரிசலுமாயிருக்கும்.

தானி 2:43 நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்ததாகக் கண்டீரே, அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங்கலப்பார்கள்; ஆகிலும் இதோ, களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்கள்.

2 அதிகாரம்

"பாதங்களும் கால்விரல்களும் பாதி குயவனின் களிமண்ணும் பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பிந்திய ரோமப் பேரரசு இருக்கும் விதத்தைப் பாதங்களும், கால்விரல்களும் காண்பிக்கின்றன. பாதங்கள் இரண்டு கால்களுக்கு ஒப்பானவை. அவை ரோமப்பேரரசின் கிழக்குப் பிரிவையும், மேற்குப் பிரிவையும் குறிக்கும். இது தானியேலின் நான்காவது ராஜ்யமும், வெளி 17:9-11 ஆகிய வசனங்களின் ஆறாவது ராஜ்யமுமாகும். கால்விரல்கள் என்பது ரோமப்பேரரசு பத்து ராஜ்யங்களாகப் பிரிவதைக் குறிக்கிறது. பத்து வெவ்வேறு ராஜாக்கள் வெவ்வேறு தலைநகரங்களிலிருந்து இந்தப் பத்து ராஜ்யங்களையும் ஆளுகை செய்வார்கள். இந்தத்தேசம் ஒரு பங்கு உரமும், ஒரு பங்கு நெரிச்சலுமாக இருக்கும். (தானி 2:41-42). இதன் ஒரு பங்கு களிமண்ணாக இருப்பதினால் ராஜ்யம் பலவீனமாக இருக்கும். ஆகையினால் அது எளிதில் உடைந்துபோகும். ஒரு பங்கு இரும்பாக இருப்பதினால் அது உரமாக இருக்கிறது. அது மற்ற பங்கை நொறுக்கி, தகர்த்துப் போடுகிறது. (தானி 2:40).

களிமண் (clay) - טִין - teen - 2917

ஆ.பெ.சொ. - களிமண் mud - களிமண் பெலமானதல்ல. இது மக்களாட்சியைக் குறிப்பிடுகிறது. மன்னராட்சியைவிட மக்களாட்சி அதிகாரத்தில் பலவீனமானது. மன்னராட்சி இரும்பைக் குறிப்பிடுகிறது. (வெளி 2:27; வெளி 12:5; வெளி 19:15).

சேறு (miry) - טִיט - teet - 2916

ஆ.பெ.சொ. - சேறு, உளை (mire) (2சாமு 22:43; யோபு 41:30; சங் 69:14; எரே 38:6; மீகா 7:10; சக 9:3; சக 10:5).

"பாதி இரும்பும் பாதி களிமண்ணும்" - பிந்திய ரோமப்பேரரசின் பத்து ராஜ்யங்களில் சில இரும்பைப்போல உறுதியாக இருக்கும். சில களிமண்ணைப்போல பலவீனமாக இருக்கும். களிமண்ணும், இரும்பும் ஒன்றுசேராது. அதுபோலவே இவர்களுடைய உறுதியும், பலவீனமும் நிலைத்திருக்காது. (தானி 2:42-43).

பாதி (part) - מִן - min - 4481

எச்சம் - இருந்து, ஆல், போது, பின், பாதி உடைய, படியே, இல், ஆக, கு, ஐ, விட்டு, ஆகிலும், பங்கு, ஆகையால், அதினால், முன்பாக, படியினால், முதல்பார்க்கிலும், நிமித்தம்

நெரிச்சல் (broken) - תְּבַר - teb-ar' - 8406

வினைச்சொல் - நெரிசல், உடைந்த (fragile; easily broken)

"அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங் கலப்பார்கள்" - பத்து கால்விரல்கள் பத்து ராஜாக்களைக் குறிக்கும். இவர்கள் தங்களுடைய தேசத்து மனுஷரோடே கலந்திருப்பார்கள். தங்களுக்கு விருப்பமானபடி ஆளுகை செய்வார்கள். இதில் களிமண்ணைப் போல் இருக்கிறவர்கள் உடைந்துபோவார்கள். இரும்பைப் போலிருக்கிறவர்கள் நீடித்திருப்பார்கள். இவர்களிலிருந்துபேரரசர்கள்தோன்றுவார்கள். இவர்கள் தனிமனிதர்களைப் போல சர்வாதிகளாக இருப்பார்கள். இவர்களில் மூன்றுபேர் தோல்வியுற்றபின்பு, தங்களுடைய அதிகாரத்தை மிருகத்திற்குக் கொடுப்பார்கள். (தானி 7:23-24; வெளி 17:12-17).

(6) கல் - ஒன்பதாவதும் கடைசியானதுமான உலகப் பேரரசு - பூவுலகில் மேசியா ஆளுகை செய்யும் பரலோக இராஜ்ஜியம்

தானி 2:44 அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.

தானியேல் - தொகுப்புரை

2 அதிகாரம்

தானி 2:45 இனிமேல் சம்பவிக்கப் போகிறதை மகா தேவன் ராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார்; சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்றான்.

“அந்த ராஜாக்களின் நாட்களிலே” - சிலையின் பத்து கால்விரல்கள் பத்து ராஜாக்களைக் குறிப்பிடுகிறது. (தானி 2:41-45) இவர்கள் மிருகத்தின் பத்து கொம்புகளாகவும் குறிப்பிடப்படுகிறார்கள். (தானி 7:7-8,23-24; வெளி 13; வெளி 17:12-17) பரலோகத்தின் தேவன் பூமியில் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். அது ஒருபோதும் அழிக்கப் படுவதில்லை. கர்த்தருடைய ராஜ்யம் பத்து ராஜ்யங்களைப் பற்றி நித்திய காலமாக நிலைத்து நிற்கும். (தானி 2:44; சக 14; வெளி 19:11-21; வெளி 20:1-10).

தானி 2:41, தானி 2:44 ஆகிய வசனங்களில் ஒரு ராஜ்யம் ஏழாவதாகவும், ஒரு ராஜ்யம் ஒன்பதாவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. தானி 2 ஆம் அதிகாரத்தில் எட்டாம் ராஜ்யத்தைப் பற்றிக் கூறப்படவில்லை. தானி 7:23-24; வெளி 17:9-11 ஆகிய வசனங்களில் எட்டாவது ராஜ்யத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. பத்துக் கால்விரல்களுக்கு இடையிலே வேறொரு சின்னக் கால்விரல் எழும்பியதை தானியேல் தரிசிக்கவில்லை. இந்த சின்னக் கால்விரலுக்கு முன்பாக மூன்று கால்விரல்கள் பிடுங்கப்பட்டதைத் தானியேல் தரிசிக்கவில்லை.

ஆயினும் தானி 7:7-8,19-24 ஆகிய வசனங்களில் தானியேல் சின்னக் கொம்பைப் பற்றிக்குறிப்பிடுகிறார். தானியேல் மிருகத்தின் பத்துக் கொம்புகளைக் கவனித்தபோது, அவைகளுக்கு இடையில் வேறொரு சின்னக்கொம்பு எழும்பிற்று. அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது. சின்னக்கொம்பு மூன்று கொம்புகளை ஜெயித்த பின்பு, மற்றக் கொம்புகள் எந்த யுத்தமும் பண்ணாமல் சின்னக்கொம்புக்குப் பணிந்தன. வெளி 17:9-17 ஆகிய வசனங்களில் இதே கருத்துக் கூறப்பட்டிருக்கிறது.

பத்து ராஜாக்கள் தங்களுடைய அதிகாரத்தை மிருகத்திற்குக் கொடுப்பார்கள். மிருகத்தின் ராஜ்யம் எட்டாவது ராஜ்யமாக இருக்கும். பத்து ராஜ்யங்களில் ஏழாவது ராஜ்யம் தனியாக இருக்கும். எட்டாவது ராஜ்யம் பத்து ராஜ்யங்களிலிருந்து முளைக்கும். ஆனால் இவை தனித்தனியாக இராது. மூன்றரை வருஷங்களுக்கு அதாவது 42 மாதங்களுக்கு அவை மிருகத்தின்கீழிருக்கும். (வெளி 13:1-8; வெளி 17:9-17).

“ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து” - இந்தக் கல் பரலோகத்தின் தேவனுடைய ராஜ்யத்திற்கு அடையாளம். தம்முடைய இரண்டாம் வருகையின்போது இயேசு கிறிஸ்து இந்த ராஜ்யத்திற்கு ராஜாவாக இருப்பார். (தானி 7:9-14,18,27; ஏசா 9:6-7; சக 14; லூக்கா 1:31-33; வெளி 11:15; வெளி 19:11-21; வெளி 20:1-10).

“இனிமேல் சம்பவிக்கப்போகிறதை” - நேபுகாத்நேச்சாரின் காலத்திலிருந்து கர்த்தர் பூமியை நித்தியமாக ஆளுகை செய்யும் காலம் வரையிலும் உள்ள சம்பவம். (தானி 2:38-45; ஏசா 66:22-24; 1கொரி 15:24-28; வெளி 21-22).

11. தேவன் உயர்த்தப்படுகிறார் - தானியேலுக்குப் பதவி உயர்வு

தானி 2:46 அப்பொழுது ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முகங்குப்புற விழுந்து, தானியேலை வணங்கி, அவனுக்குக் காணிக்கை செலுத்தவும் தூபங்காட்டவும் கட்டளையிட்டான்.

தானி 2:47 ராஜா தானியேலை நோக்கி: நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தின படியால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்கு தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார் என்றான்.

தானி 2:48 பின்பு ராஜா தானியேலைப் பெரியவனாக்கி, அவனுக்கு அநேகம் சிறந்த வெகுமதிகளைக் கொடுத்து, அவனை பாபிலோன் மாகாணம் முழுதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான்.

தானியேல் – தொகுப்புரை

2 அதிகாரம்

தானி 2:49 தானியேல் ராஜாவை வேண்டிக்கொண்டதின்பேரில் அவன் சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் பாபிலோன் மாகாணத்துக் காரியங்களை விசாரிக்கும் படி வைத்தான்; தானியேலோவென்றால் ராஜாவின் கொலுமண்டபத்தில் இருந்தான்.

சொப்பனத்தினால் உண்டான விளைவு

1. ராஜாவின்மீது முக்கியமான விளைவுகளை உண்டாக்கிற்று. (தானி 2:46).
2. தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாயிற்று. (தானி 2:47).
3. தானியேல் முக்கியமான மனிதனானான். (தானி 2:48).
4. தானியேலுக்கு பல வெகுமதிகள் கிடைத்தது. (தானி 2:48).
5. பாபிலோன் மாகாணம் முழுதுக்கும் தானியேல் அதிபதியாக நியமிக்கப் பட்டான். (தானி 2:48).
6. சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாக நியமிக்கப்பட்டான். (தானி 2:48).
7. தானியேலின் மூன்று நண்பர்களும் உயர்த்தப்பட்டார்கள். (தானி 2:49).

“தானியேலை வணங்கி” - தானியேல் இந்த வணக்கத்தை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. (வெளி 19:10; வெளி 22:8-9).

பிரதான அதிகாரி **(governor) - סְגַן - seg-an' - 5460**

ஆ.பெ.சொ. - அதிகாரி, பிரதானி **(prefect; noble)** (தானி 3:2,3,27; தானி 6:7)

3 அதிகாரம்

III. தானியேலின் சகோதரருக்கு ஏற்பட்ட சோதனை - எரிகிற அக்கினிச்சூளை

1. இராஜா சிலையைப் பண்ணுவித்து நிறுத்தினான்

தானி 3:1 ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறுபதுமுழ உயரமும் ஆறு முழ அகலமுமான ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து, பாபிலோன் மாகாணத்திலிருக்கிற தூரா என்னும் சமபூமியிலே நிறுத்தினான்.

"அறுபதுமுழ உயரமும் ஆறு முழ அகலமுமான ஒரு பொற் சிலை" - இந்தச் சிலையின் உயரம் 90 அடி. அகலம் 9 அடி.

"தூரா" (Dura) - இந்த இடம் எங்குள்ளது என்று தெரியவில்லை. இது பாபிலோனுக்குள் இருக்க வேண்டும்.

2. சிலையின் பிரதிஷ்டை

தானி 3:2 பின்பு ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தேசாதிபதிகளையும், அதிகாரிகளையும், தலைவரையும், நியாயாதி பதிகளையும், பொக்கிஷக் காரரையும், நீதிசாஸ்திரிகளையும், விசாரிப்புக்காரரையும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரையும் நேபுகாத்நேச்சார் ராஜா நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேரும்படி அழைத்தனுப்பினான்.

தானி 3:3 அப்பொழுது தேசாதிபதிகளும், அதிகாரிகளும், தலைவரும், நியாயாதிபதிகளும், பொக்கிஷக்காரரும், நீதி சாஸ்திரிகளும், விசாரிப்புக்காரரும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரும், ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேர்ந்து, நேபுகாத்நேச்சார் நிறுத்தின சிலைக்கு எதிராக நின்றார்கள்.

சிலையின் பிரதிஷ்டைக்கு வந்தவர்கள்

1. தேசாதிபதிகள் (தானி 3:2-3,27; தானி 6:1-7)
2. அதிகாரிகள் (தானி 2:48; தானி 3:2-3,27; தானி 6:7)
3. தலைவர் (தானி 3:2-3,27;தானி 6:7, 1இராஜா 20:24; எரே 51:23,28,57; எசே 23:6,12,23)
4. நியாயாதிபதிகள் (தானி 3:2)
5. பொக்கிஷக்காரர் (தானி 3:2-3)
6. நீதிசாஸ்திரிகள் (தானி 3:2-3)
7. விசாரிப்புக்காரர் (தானி 3:2-3)
8. நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் (தானி 3:2-3)

3. எல்லோரும் வழிபட வேண்டுமென்ற கட்டளை

தானி 3:4 கட்டியக்காரன் உரத்த சத்தமாய்: சகல ஜனங்களும், ஜாதிகளும், பாஷைக் காரருமானவர்களே, உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது என்னவென்றால்:

தானி 3:5 எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்பூரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும்போது, நீங்கள் தாழ விழுந்து, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளக் கடவீர்கள்.

தானி 3:6 எவனாகிலும் தாழ விழுந்து, அதைப் பணிந்துகொள்ளாமற்போனால், அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவான் என்றான்.

3 அதிகாரம்

தானி 3:7 ஆதலால் சகல ஜனங்களும், எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை சுரமண்டலம் முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தைக் கேட்டவுடனே, சகல ஜனத்தாரும் ஜாதியாரும் பாஷைக்காரரும் தாழ விழுந்து, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொண்டார்கள்.

"கட்டியக்காரன் உரத்த சத்தமாய்" - ராஜாவின் ஆணைகளையும், ராஜா வருவதையும், போவதையும் அறிவிப்பதற்காகக் கட்டியக்காரர்கள் நியமிக்கப்பட்டார்கள். (மல் 3:1; ஏசா 40:3). விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்போது இவர்கள் போட்டிகளின் விவரங்களையும், அதற்குரிய சட்ட திட்டங்களையும் அறிவிப்பார்கள்.

"எரிகிற அக்கினிச்சூளை" - யூதருடைய பாரம்பரிய வரலாற்றின் பிரகாரம் விக்கிரகாராதனைக்காரர்கள் ஆபிரகாமை எரிகிற அக்கினிச்சூளையின் நடுவில் போட்டு, கொன்றுபோட்டார்கள். ஆபிரகாம் அவர்களுடைய விக்கிரகங்களை ஆராதிக்க மறுத்ததற்காக அக்கினிச்சூளையில் எறியப்பட்டார்.

4. மூன்று யூதர்கள்மீது குற்றச்சாட்டு

தானி 3:8 அச்சமயத்தில் கல்தேயரில் சிலர் ராஜசமுகத்தில் வந்து, யூதர்பேரில் குற்றஞ்சாற்றி,

தானி 3:9 ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை நோக்கி: ராஜாவே, நீர் என்றும் வாழ்க.

தானி 3:10 எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தையும் கேட்கிற எந்த மனுஷனும் தாழவிழுந்து, பொற்சிலையைப் பணிந்து கொள்ளவேண்டுமென்றும்,

தானி 3:11 எவனாகிலும் தாழ விழுந்து பணிந்து கொள்ளாமற்போனால், அவன் எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்பட வேண்டுமென்றும், ராஜாவாகிய நீர் கட்டளையிட்டீரே.

தானி 3:12 பாபிலோன் மாகாணத்தின் காரியங்களை விசாரிக்கும்படி நீர் ஏற்படுத்தின சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் யூதரான மனுஷர் இருக்கிறார்களே; அவர்கள் ராஜாவாகிய உம்மை மதிக்கவில்லை; அவர்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும், நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளாமலும் இருக்கிறார்கள் என்றார்கள்.

"யூதர்பேரில் குற்றஞ்சாற்றி" - சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோரின் பேரில் குற்றஞ்சாட்டப்படுகிறது. (தானி 3:12). தானியேலையும், மற்ற யூதர்களையும் பற்றி இங்கு ஒன்றும் குறிப்பிடவில்லை. இதற்கான காரணம் தெரியவில்லை. ஒருவேளை இந்தச் சிலையின் பிரதிஷ்டையின்போது அவர்கள் தூராவில் இல்லாமல் வேறு ஏதாவது இடத்தில் இருந்திருக்க வேண்டும்.

யூதருக்கு எதிராகக்கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள்

1. அவர்கள் ராஜாவாகிய உம்மை மதிக்கவில்லை.
2. அவர்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்யவில்லை.
3. அவர்கள் நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளவில்லை.

5. சிலையை வழிபடவேண்டுமென்று கட்டளை

தானி 3:13 அப்பொழுது நேபுகாத்நேச்சார் உக்கிர கோபங்கொண்டு சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் அழைத்துக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான்; அவர்கள் அந்தப் புருஷரை ராஜாவின் சமுகத்தில் கொண்டு வந்து விட்டபோது,

3 அதிகாரம்

தானி 3:14 நேபுகாத்நேச்சார் அவர்களை நோக்கி: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களே, நீங்கள் என் தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளாமலும் இருந்தது மெய்தானா?

தானி 3:15 இப்போதும் எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தையும் நீங்கள் கேட்கும்போது, தாழ விழுந்து, நான் பண்ணிவைத்த சிலையைப் பணிந்துகொள்ள ஆயத்தமாயிருந்தால் நல்லது; பணிந்து கொள்ளாதிருந்தீர்களேயாகில், அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்; உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார் என்றான்.

"நேபுகாத்நேச்சார் உக்கிர கோபங்கொண்டு" - நேபுகாத்நேச்சாரும், யோனாவும் (யோனா 4:1-9) அவசரக்காரர்களாகவும், கோபக் காரர்களாகவும் இருந்தார்கள். வேதாகமத்தில் இவ்விரண்டு பழக்கங்களும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. (பிர 7:9; தீத்து 1:7; நீதி 14:17; நீதி 22:24; நீதி 29:22; மத் 5:22; எபே 4:26).

"நான் பண்ணிவைத்த சிலையைப் பணிந்துகொள்ள ஆயத்தமாயிருந்தால் நல்லது" - நேபுகாத்நேச்சார் இம்மூன்று வாலிபரையும் உடனடியாக அக்கினிச்சூளையின் நடுவில் போடுவதற்குப் பதிலாகத் தன்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய அவர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறான். அவர்களிடம் உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார் என்று ஆணவமாகப் பேசுகிறான். ராஜா கேட்ட கேள்வி தேவனுக்கும், யூதர் அனைவருக்கும் ஓர் அறைகூவலாகக் கேட்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலின் தேவன் அவர்களை எரியும் அக்கினிச்சூளையிலிருந்து தப்புவிக்க வல்லவராக இருக்கிறார் என்பதை தேவன்தாமே நிரூபிக்க வேண்டும்.

6. மூன்று யூதர்களும் மறுத்து விடுகிறார்கள்

தானி 3:16 சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி: நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை.

தானி 3:17 நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.

தானி 3:18 விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக் கடவது என்றார்கள்.

"இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை" - மூன்று எபிரெய வாலிபரும் மிகவும் கவனமாக ராஜாவிற்கு உத்தரவு கூறுகிறார்கள். அதே வேளையில் தங்களுடைய தேவன் ராஜாவின் கையிலிருந்து தங்களை நீங்கலாக்கி, விடுவிப்பார் என்பதிலும் விசுவாசத்தோடு இருக்கிறார்கள். கர்த்தர் தங்களைத் தப்புவித்தாலும், தப்புவிக்காதே போனாலும் ராஜா நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். (தானி 3:16-18).

தீர்க்கதரிசன எண் - 3

"நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்;" (தானி 3:17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

3 அதிகாரம்

7. எரிகிற அக்கினிச்சூளையினால் அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை

தானி 3:19 அப்பொழுது நேபுகாத்நேச்சாருக்குக் கடுங்கோபமூண்டு: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுக்கு விரோதமாய் அவனுடைய முகம் வேறுபட்டது; சூளையைச் சாதாரணமாய்ச் சூடாக்குவதைப்பார்க்கிலும் ஏழுமடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி உத்தரவு கொடுத்து,

தானி 3:20 சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை எரிகிற அக்கினிச்சூளையிலே போடுவதற்கு அவர்களைக் கட்டும்படி, தன் இராணுவத்தில் பலசாலிகளாகிய புருஷருக்குக் கட்டளையிட்டான்.

தானி 3:21 அப்பொழுது அவர்கள் தங்கள் சால்வைகளோடும் நிசார்களோடும் பாகைகளோடும் மற்ற வஸ்திரங்களோடும் கட்டப்பட்டு, எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்பட்டார்கள்.

தானி 3:22 ராஜாவின் கட்டளை கடுமையாயிருந்தபடியினாலும், சூளை மிகவும் சூடாக்கப்பட்டிருந்தபடியினாலும், அக்கினி ஜுவாலையானது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைத் தூக்கிக் கொண்டுபோன புருஷரைக் கொன்று போட்டது.

தானி 3:23 சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் அந்த மூன்று புருஷரும் கட்டுண்டவர்களாய் எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே விழுந்தார்கள்.

“நேபுகாத்நேச்சாருக்குக் கடுங் கோபமூண்டது” - ராஜாவுக்குக் கோபம் வந்தவுடன், அவனுடைய முகம் வேறுபட்டது. சூளையைச் சாதாரணமாய்ச் சூடாக்குவதைப் பார்க்கிலும் ஏழுமடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி உத்தரவு கொடுத்தான். இதனால் கர்த்தருடைய நாமம் மேலும்மேலும் மகிமைப்படுகிறது. (தானி 3:19,25-28). சூளை மிகவும் சூடாக்கப்பட்டது. அக்கினி ஜுவாலையானது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைத் தூக்கிக் கொண்டுபோன புருஷரைக் கொன்று போட்டது. (தானி 3:22).

நிசார் (hosen) - פַּטִּישׁ - pat-teesh’ - 6361

ஆ.பெ.சொ. - நிசார் (fine outer garment) சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் சால்வைகளும், நிசார்களும், பாகைகளும், மற்ற வஸ்திரங்களும் அக்கினியில் சேதப்படவில்லை. (தானி 3:27).

8. இராஜா பிரமித்தான்

தானி 3:24 அப்பொழுது ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பிரமித்து, தீவிரமாய் எழுந்திருந்து, தன் மந்திரிமார்களை நோக்கி: மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர்களாக அக்கினியிலே போடுவித்தோம் என்றான்; அவர்கள் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: ஆம், ராஜாவே என்றார்கள்.

தானி 3:25 அதற்கு அவன்: இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான்.

“தேவபுத்திரன்” (the Son of God) - மூல எபிரெய பாஷையில் இந்த வார்த்தைக்கு முன்பு தனிஒருமை சுட்டுக்குறிப்பு (definite article) பயன்படுத்தப்படவில்லை. ஆகையினால் இதை “ஒரு தேவபுத்திரன்” "a son of God, என்றே பொருள்கூற வேண்டுமென்று சிலர் கருத்துக் கூறுகிறார்கள். இவன் ஒரு தேவதூதன் என்பது இவர்களுடைய வியாக்கியானம். நேபுகாத்நேச்சாருக்கு தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடு கிடைத்திருக்காது. (மத் 1:18-23; லூக்கா 1:35; எபி 1:5-7) நேபுகாத்நேச்சார் தானி 3:28 ஆவது வசனத்தில் அக்கினிச்சூளையில் மூன்று எபிரெய வாலிபரோடு இருந்த நபரைப் பற்றிக் குறிப்பிடும்போது “அவர் தமது தூதனை அனுப்பி தம்முடைய தாசரை விடுவித்தார்” என்று கூறுகிறார்.

3 அதிகாரம்

9. இராஜா சம்மதிக்கிறான்

தானி 3:26 அப்பொழுது நேபுகாத்நேச்சார் எரிகிற அக்கினிச் சூளையின் வாசலண்டைக்கு வந்து, உன்னதமான தேவனுடைய தாசராகிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களே, நீங்கள் வெளியே வாருங்கள் என்றான்; அப்பொழுது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அக்கினியின் நடுவிலிருந்து வெளியே வந்தார்கள்.

தானி 3:27 தேசாதிபதிகளும், அதிகாரிகளும், தலைவரும், ராஜாவின் மந்திரிகளும் கூடிவந்து, அந்தப் புருஷருடைய சரீரங்களின் மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும், அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததைக் கண்டார்கள்.

தானி 3:28 அப்பொழுது நேபுகாத்நேச்சார் வசனித்து: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக் கொடுத்ததினால், அவர்தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார்.

"உன்னதமான தேவனுடைய தாசர்" - மூன்று எபிரெய வாலிபரும் மெய்யான ஜீவனுள்ள தேவனை ஆராதிப்பதாகக் கூறினார்கள். (தானி 3:17) இப்போது நேபுகாத்நேச்சாரும் அவர்களுடைய தேவனை உன்னதமான தேவன் என்றும், இந்த மூன்று எபிரெய வாலிபரையும் அவருடைய தாசன் என்றும் அங்கிகரிக்கிறான்.

அற்புதங்கள்

1. அந்தப் புருஷருடைய சரீரங்களின் மேல் அக்கினி பெலஞ்செய்யவில்லை.
2. அவர்களுடைய தலைமயிர் கருகவில்லை.
3. அவர்களுடைய சால்வைகள் சேதப்படவில்லை.
4. அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசவில்லை.

"சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம்" - நேபுகாத்நேச்சார் இறுதியில் கர்த்தருடைய மகத்துவத்தை அங்கிகரிக்கிறான். கர்த்தருடைய வல்லமை வெளிப்பட்ட போதெல்லாம் அவன் தேவனை அங்கிகரித்தான். (தானி 2:47; தானி 3:28; தானி 4:34).

"அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார்" - நேபுகாத்நேச்சார் பல தெய்வங்களை வழிபடுகிறவன். இவனுடைய வாயிலிருந்து கர்த்தரைப் பற்றிய செய்தி வெளிவருகிறது.

நேபுகாத்நேச்சார் அறிக்கை செய்த வாக்கியங்கள்

1. தேவன் தமது தூதனை அனுப்பினார்.
2. தம்முடைய தாசரை விடுவித்தார்.
3. ராஜாவின் கட்டளையைத் தள்ளிவிட்டார்.
4. மூன்று எபிரெய வாலிபரும் கர்த்தரை நம்பி தங்கள் சரீரங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.
5. இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை. (தானி 3:29).

தானியேல் - தொகுப்புரை

3 அதிகாரம்

10. நேபுகாத்நேச்சாரின் ஆணை

தானி 3:29 ஆதலால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப்போடப் டுவான்; அவன் வீடு எருக்களமாக்கப் படும் என்று என்னாலே தீர்மானிக்கப் படுகிறது; இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான்.

தானி 3:30 பின்பு ராஜா சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ என்பவர்களைப் பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான்.

“துண்டித்துப் போடப்படுவான்” - பாபிலோனிலும், மேதிய-பெர்சிய தேசத்திலும் சரீரத்தைத் துண்டித்துப் போட்டு மரண தண்டனை கொடுப்பது வழக்கம். (தானி2:5; தானி 3:29; எஸ்றா 6:11).

“பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான்” - தானியேலின் நண்பர்களான மூன்று எபிரெய வாலிபரும் இரண்டாம் முறையாகப் பாபிலோன் தேசத்தில் உயர்த்தப்படுகிறார்கள். (தானி 2:49; தானி 3:30).

தானியேல் - தொகுப்புரை

4 அதிகாரம்

IV. நேபுகாத்நேச்சார் அரச பதவியிலிருந்து தள்ளப்படுவான்

1. இராஜாவின் அறிவிப்பு

தானி 4:1 ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பூமி எங்கும் குடியிருக்கிற சகல ஜனத்தாருக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதுகிறது என்னவென்றால்: உங்களுக்குச் சமாதானம் பெருகக் கடவது.

தானி 4:2 உன்னதமான தேவன் என்னிடத்தில் செய்த அடையாளங்களையும் அற்புதங்களையும் பிரசித்தப் படுத்துவது எனக்கு நன்மையாய்க் கண்டது.

தானி 4:3 அவருடைய அடையாளங்கள் எவ்வளவு மகத்துவமும், அவருடைய அற்புதங்கள் எவ்வளவு வல்லமையுமாயிருக்கிறது; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; அவருடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக நிற்கும்.

"பூமி எங்கும் குடியிருக்கிற சகல ஜனத்தாருக்கும்" - நேபுகாத்நேச்சாரின் ஆளுகைக்குட்பட்ட பாபிலோன் தேசத்தில் குடியிருக்கிற சகல ஜனத்தாருக்கும் என்று பொருள்.

"எனக்கு நன்மையாய்க் கண்டது" - நேபுகாத்நேச்சார் இரண்டாம் முறையாகக் கர்த்தரை உயர்த்தி அறிக்கை செய்கிறான். (தானி 3:29-30; தானி 4:1-3; தானி 2:47).

நேபுகாத்நேச்சார் கூறும் வேதாகம உபதேசங்கள்

1. கர்த்தருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம் (தானி 4:3; தானி2:44-45; தானி 7:13-14, 18,27; ஏசா 9:6-7; சக 14; லூக்கா 1:31-33; வெளி 11:15; வெளி 22:4-5)
2. கர்த்தருடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக நிற்கும். (தானி 4:3; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; ஆதி 8:22; ஆதி 9:12; ஏசா 9:6-7; ஏசா 59:21; சக 14; லூக்கா 1:31-33; வெளி 5:10; வெளி 11:15; வெளி 22:4-5)

2. சொப்பனம்

தானி 4:4 நேபுகாத்நேச்சாராகிய நான் என் வீட்டிலே சவுக்கியமுள்ளவனாயிருந்து என் அரமனையிலே வாழ்ந்து கொண்டிருந்தேன்.

தானி 4:5 நான் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; அது எனக்குத் திகிலை உண்டாக்கிற்று; என் படுக்கையின் மேல் எனக்குள் உண்டான நினைவுகளும், என் தலையில் தோன்றின தரிசனங்களும் என்னைக் கலங்கப்பண்ணிற்று.

"நான் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்" - இது தீர்க்கதரிசன செய்தியை அறிவிக்கும் இரண்டாம் சொப்பனமாகும். இரண்டு முறையும் ராஜா திகிலடைந்தான். தன்னுடைய தேசத்தின் ஞானிகள் இதன் வியாக்கியானத்தைக் கூறவேண்டுமென்று ராஜா கட்டளையிட்டான். (தானி 2:2-16; தானி 4:5-7). இரண்டு முறையும் தானியேலைத் தவிர வேறு யாராலும் ராஜாவின் சொப்பனத்திற்கு வியாக்கியானம் கூறமுடியவில்லை.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் சொப்பனங்கள்

1. அபிமெலேக்கு - சாராளைப் பற்றி (ஆதி 20:3)
2. யாக்கோபு - ஏணியைப் பற்றி (ஆதி 28:12)
3. யாக்கோபு - கலப்பு நிறமும், புள்ளியுமுள்ள ஆடுகள் (ஆதி 31:10-13)
4. யாக்கோபு - எகிப்தைப் பற்றி (ஆதி46:2)
5. லாபான் - யாக்கோபைப் பற்றி (ஆதி 31:24)

தானியேல் – தொகுப்புரை

4 அதிகாரம்

6. யோசேப்பு - தன் சகோதரரைப் பற்றி (ஆதி 37:5)

7. யோசேப்பு - தன் சகோதரரைப் பற்றி (ஆதி 37:9)

8. பானபாத்திரக்காரனின் தலைவன் - தன்னைப் பற்றி (ஆதி 40:9)

9. சுயம்பாகிகளின் தலைவன் - தன்னைப் பற்றி (ஆதி 40:16)

10. பார்வோன் - பஞ்சத்தைப் பற்றி (ஆதி 41:1-4)

11. பார்வோன் - பஞ்சத்தைப் பற்றி (ஆதி 41:5-8)

12. மீதியானியன் - கிதியோனைப் பற்றி (நியா 7:13)

13. சாலொமோன் - ஞானத்தைப் பற்றி (1இராஜா 3:3-15)

14. எலிப்பாஸ் - ஒரு ஆவியைப் பற்றி (யோபு 4:12-21)

15. யோபு - பயங்கரத்தைப் பற்றி (யோபு 7:14)

16. நேபுகாத்நேச்சார் - ராஜ்யங்களைப் பற்றி (தானி 2)

17. நேபுகாத்நேச்சார் - தன்னைப் பற்றி (தானி 4)

18. தானியேல் - ராஜ்யங்களைப் பற்றி (தானி 7)

19. தானியேல் - ராஜ்யங்களைப் பற்றி (தானி 8)

20. தானியேல் - தேவனைப் பற்றி (தானி 10:5-9)

21. கள்ளத்தீர்க்கதரிசிகள் - பொய்களைப் பற்றி (எரே 23:27-32; எரே 29:8)

22. குறிசொல்லுகிறவர்கள் - வீணான காரியங்களைப் பற்றி (சக 10:2)

23. யோசேப்பு - மரியாளைப் பற்றி (மத் 1:20)

24. யோசேப்பு - எகிப்திற்குப் போவதைப் பற்றி (மத் 2:13)

25. யோசேப்பு - வீட்டுக்குத் திரும்பி வருவதைப் பற்றி (மத் 2:19)

26. யோசேப்பு - ஏரோதுவைப் பற்றி (மத் 2:22)

27. சாஸ்திரிகள் - எச்சரிப்பைப் பற்றி (மத் 2:12)

28. பிலாத்துவின் மனைவி - இயேசுவைப் பற்றி (மத் 27:19)

29. கொர்நேலியு - தேவதூதனைப் பற்றி (அப் 10:3-6)

30. பேதுரு - விலங்குகளைப் பற்றி (அப் 10:10-16)

31. பவுல் - ஒரு மனுஷரைப் பற்றி (அப் 16:9)

32. பவுல் - ரோமாபுரிக்குப் போவதைப் பற்றி (அப்23:11)

33. பவுல் - பாதுகாப்பைப் பற்றி (அப் 28:23-24)

34. யோவான் - கிறிஸ்துவைப் பற்றி (வெளி 1:12-18)

3. வியாக்கியானம் தேவைப்படுகிறது

தானி 4:6 ஆகையால் சொப்பனத்தின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கிறதற்காகப் பாபிலோன் ஞானிகளையெல்லாம் என்னிடத்தில் கொண்டுவரும்படி கட்டளையிட்டேன்.

தானி 4:7 அப்பொழுது சாஸ்திரிகளும், ஜோசியரும், கல்தேயரும், குறிசொல்லுகிறவர்களும் என்னிடத்திலே வந்தார்கள்; சொப்பனத்தை நான் அவர்களுக்குச் சொன்னேன்; ஆனாலும் அதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கமாட்டாமற் போனார்கள்.

4 அதிகாரம்

"அதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்க மாட்டாமற்போனார்கள்" - நேபுகாத்நேச்சார் முதல் முறையாகச் சொப்பனம் கண்டபோது, அவனுடைய சாஸ்திரிகள், ராஜா தன் சொப்பனத்தை அறிவித்தால் அதன் அர்த்தத்தைக் கூறுவதாகக் கூறினார்கள். இப்போது நேபுகாத்நேச்சார் சொப்பனத்தை அறிவித்த பின்பும், அதன் அர்த்தத்தை அவனுடைய சாஸ்திரிகளால் அறிவிக்க முடியவில்லை.

4. சொப்பனத்தைக் கூறுகிறான்

தானி 4:8 கடைசியிலே என் தேவனுடைய நாமத்தின்படியே பெல்தெஷாத்சார் என்னும் பெயரிடப்பட்டு, பரிசுத்த தேவர்களின் ஆவியையுடைய தானியேல் என்னிடத்தில் கொண்டுவரப் பட்டான்; அவனிடத்தில் நான் சொப்பனத்தை விவரித்துச் சொன்னதாவது.

தானி 4:9 சாஸ்திரிகளின் அதிபதியாகிய பெல்தெஷாத்சாரே பரிசுத்த தேவர்களுடைய ஆவி உனக்குள் இருக்கிறதென்றும், எந்த மறை பொருளையும் அறிவது உனக்கு அரிதல்லவென்றும் நான் அறிவேன்; நான் கண்ட என் சொப்பனத்தின் தரிசனங்களையும் அதின் அர்த்தத்தையும் சொல்லு.

தானி 4:10 நான் படுத்திருந்தபோது என் தலையில் தோன்றின தரிசனங்கள் என்னவென்றால்; இதோ, தேசத்தின் மத்தியிலே மிகவும் உயரமான ஒரு விருட்சத்தைக் கண்டேன்.

தானி 4:11 அந்த விருட்சம் வளர்ந்து பலத்து, தேசத்தின் எல்லைபரியந்தமும் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வானபரியந்தம் எட்டினது.

தானி 4:12 அதின் இலைகள் நேர்த்தியும், அதின்கனி மிகுதியுமாயிருந்தது; எல்லா ஜீவனுக்கும் அதில் ஆகாரம் உண்டாயிருந்தது; அதின் கீழே வெளியின் மிருகங்கள் நிழலுக்கு ஒதுங்கினது; அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்துச் சகல பிராணிகளும் அதினால் போஷிக்கப் பட்டது.

தானி 4:13 நான் படுத்திருக்கையில் என் தலையில் தோன்றின தரிசனங்களைக் காணும்போது, காவலாளனாகிய பரிசுத்தவான் ஒருவன் வானத்திலிருந்து இறங்கக் கண்டேன்.

தானி 4:14 அவன் உரத்த சத்தமிட்டு: இந்த விருட்சத்தை வெட்டி, இதின் கொப்புகளைத் தறித்துப்போடுங்கள்; இதின் இலைகளை உதிர்த்து, இதின் கனிகளைச் சிதறடியுங்கள்; இதின் கீழுள்ள மிருகங்களும் இதின் கொப்புகளிலுள்ள பட்சிகளும் போய்விடட்டும்.

தானி 4:15 ஆனாலும் இதின் வேர்களாகிய அடிமரம் பூமியில் இருக்கட்டும்; இரும்பும் வெண்கலமுமான விலங்கு இடப்பட்டு, வெளியின் பசும்புல்லிலே தங்கி, ஆகாயத்துப் பனியிலே நனைவதாக; மிருகங்களோடே பூமியின் பூண்டிலே அவனுக்குப் பங்கு இருக்கக்கடவது.

தானி 4:16 அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறும்படி, மிருக இருதயம் அவனுக்குக் கொடுக்கப்படக் கடவது; இப்படியிருக்கிற அவன் மேல் ஏழு காலங்கள் கடந்துபோகவேண்டும்.

தானி 4:17 உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று நரஜீவன்கள் அறியும்படிக்குக் காவலாளரின் தீர்ப்பினால் இந்தக் காரியமும் பரிசுத்தவான்களின் மொழியினால் இந்த விசாரணையும் தீர்மானிக்கப்பட்டது என்றான்.

4 அதிகாரம்

தானி 4:18 நேபுகாத்நேச்சார் என்னும் ராஜாவாகிய நான் கண்ட சொப்பனம் இதுவே; இப்போது பெல்தெஷாத்சாரே, நீ இதின் அர்த்தத்தைச் சொல்லு; என் ராஜ்யத்திலுள்ள ஞானிகள் எல்லாராலும் இதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கக்கூடாமற் போயிற்று; நீயோ இதைத் தெரிவிக்கத்தக்கவன்; பரிசுத்த தேவர்களுடைய ஆவி உனக்குள் இருக்கிறதே என்றான்.

"கடைசியிலே.......தானியேல் என்னிடத்தில் கொண்டுவரப்பட்டான்" - சாஸ்திரிகள், ஜோசியர்கள், ஆகியோரால் ராஜாவின் சொப்பனத்திற்கு அர்த்தம் கூறமுடியவில்லை. தானியேலோ ராஜாவின் சொப்பனத்திற்குச் சரியான அர்த்தத்தை ஒரு நாழிகையில் கூறினான். (தானி 4:6,19).

"பரிசுத்த தேவர்களின் ஆவியையுடைய தானியேல்" - பரிசுத்த ஆவியானவர் தானியேலினிடத்தில் இருக்கிறார். புறஜாதி ராஜா இந்தச் சத்தியத்தைக் கூறுகிறார். (தானி 4:8,9,18; தானி 5:11,14).

"தேவர்கள்" - இதற்கு ராஜா பயன்படுத்திய அரமாயிக் வார்த்தை "எலாஹீன்" - אֱלָהּ - el-aw' - 426 என்பதாகும். இது எபிரெய வார்த்தையான எலோஹிம் - אֱלֹהִים - el-o-heem' - 430 என்னும் வார்த்தைக்கு இணையானது.

"சாஸ்திரிகளின் அதிபதி" - தானியேல் தன்னுடைய நாட்களில் இருந்த எல்லா சாஸ்திரிகளுக்கும் அதிபதியாகக் கருதப்பட்டான். ஆயினும் இவன் சாஸ்திரிகளில் ஒருவனல்ல. தானியேலினிடத்தில் அறிவை உணர்த்தும் வசனமும், ஞானத்தை உணர்த்தும் வரமும் வியாக்கியானம் பண்ணும் வரமும் இருந்தது. (தானி 2)

தீர்க்கதரிசன எண் - 4

"நான் படுத்திருந்தபோது என் தலையில் தோன்றின தரிசனங்கள் என்னவென்றால்......" (தானி 4:10-16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

விருட்சத்தைப் பற்றிய தரிசனம்

1. தேசத்தின் மத்தியில் ஒரு விருட்சத்தைக் கண்டேன்.
2. அது மிகவும் உயரமாக இருந்தது. (தானி 4:10).
3. அது வளர்ந்தது. (தானி 4:11)
4. அது பலத்தது.
5. அதின் உயரம் வானபரியந்தம் எட்டினது.
6. தேசத்தின் எல்லைபரியந்தமும் காணப்பட்டது.
7. அதின் இலைகள் நேர்த்தியாக இருந்தது. (தானி 4:12)
8. அதின்கனி மிகுதியுமாயிருந்தது.
9. எல்லா ஜீவனுக்கும் அதில் ஆகாரம் உண்டாயிருந்தது.
10. அதின் கீழே வெளியின் மிருகங்கள் நிழலுக்கு ஒதுங்கினது.
11. அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்தது சகல பிராணிகளும் அதினால் போஷிக்கப்பட்டது.
12. காவலாளனாகிய பரிசுத்தவான் ஒருவன் வானத்திலிருந்து இறங்கினான். (தானி 4:13)

பரிசுத்தவான்கள் உரத்த சத்தமிட்டுக் கூறிய வார்த்தைகள் (தானி 4:14)

1. இந்த விருட்சத்தை வெட்டுங்கள்.
2. இதின் கொப்புகளைத் தறித்துப் போடுங்கள்.
3. இதின் இலைகளை உதிர்த்து போடுங்கள்.
4. இதின் கனிகளைச் சிதறடியுங்கள்.
5. இதின் கீழுள்ள மிருகங்களும் இதின் கொப்புகளிலுள்ள பட்சிகளும் போய் விடட்டும்.

4 அதிகாரம்

6. இதின் வேர்களாகிய அடிமரம் பூமியில் இருக்கட்டும்.

7. இது ஆகாயத்துப் பனியிலே நனைவதாக.

8. மிருகங்களோடே பூமியின் பூண்டிலே அவனுக்குப் பங்கு இருக்கக்கடவது.

9. அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறக்கடவது. (தானி 4:16).

10. அவன்மேல் ஏழு காலங்கள் கடந்து போகவேண்டும்.

11. காவலாளரின் தீர்ப்பினால் இந்தக் காரியம் தீர்மானிக்கப்பட்டது. (தானி 4:17)

12. பரிசுத்தவான்களின் மொழியினால் இந்த விசாரணை தீர்மானிக்கப்பட்டது

13. உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்கிறார் என்பதை நரஜீவன்கள் அறியக்கடவது.

14. தேவன் தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுக்கிறார்.

15. மனுஷரில் தாழ்ந்தவனையும் தேவன் அதின்மேல் அதிகாரியாக்குகிறார்.

"காவலாளனாகிய பரிசுத்தவான் ஒருவன் வானத்திலிருந்து இறங்கக்கண்டேன்" - வானத்திலிருந்து ஒரு பரிசுத்த தூதன் உன்னதமானவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக இறங்கிவருகிறான். இவன் காவலாளனாகிய பரிசுத்தவான் (தானி 4:13,17) இந்தக் காவலாளர்கள் மனுஷருடைய காரியங்களை மேற்பார்வையிடுகிறார்கள். பூமியில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு இவர்கள் மனுஷரை ஆயத்தப்படுத்துகிறார்கள். (தானி 4:17; தானி 10:10-21; தானி 11:1; தானி 12:1; மத் 18:10; எபி 1:14).

"விருட்சம்" - பெரிய மனுஷர்கள் விருட்சங்களுக்கு ஒப்பிட்டுக் கூறப் பட்டிருக்கிறார்கள். (சங் 1:3; சங் 37:35; எசே 17:5-6; எசே 31:3; எரே 22:15; மத் 7:17-19).

"மனுஷரில் தாழ்ந்தவன்" - இந்த வாக்கியம் ஒரு வேளை ராஜாவின் சத்துருக்களைக் குறிக்கலாம். (தானி 4:19)

5. சொப்பனத்திற்கு வியாக்கியானம்

தானி 4:19 அப்பொழுது பெல்தெஷாத்சாரென்னும் பெயருள்ள தானியேல் ஒரு நாழிகை மட்டும் திகைத்துச் சிந்தித்துக் கலங்கினான். ராஜா அவனை நோக்கி: பெல்தெஷாத்சாரே, சொப்பனமும் அதின் அர்த்தமும் உன்னைக் கலங்கப்பண்ண வேண்டியதில்லை என்றான்; அப்பொழுது பெல்தெஷாத்சார் பிரதியுத்தரமாக: என் ஆண்டவனே, அந்தச் சொப்பனம் உம்முடைய பகைவரிடத்திலும், அதின் அர்த்தம் உம்முடைய சத்துருக்களிடத்திலும் பலிக்கக்கடவது.

தானி 4:20 நீர் கண்ட விருட்சம் வளர்ந்து பலத்து, தேசத்தின் எல்லைபரியந்தும் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வானபரியந்தம் எட்டினது.

தானி 4:21 அதின் இலைகள் நேர்த்தியும், அதின் கனி மிகுதியுமாயிருந்தது; எல்லா ஜீவனுக்கும் அதில் ஆகாரம் உண்டாயிருந்தது; அதின் கீழே வெளியின் மிருகங்கள் தங்கினது, அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்து.

தானி 4:22 அது பெரியவரும் பலத்தவருமாயிருக்கிற ராஜாவாகிய நீர்தாமே; உமது மகத்துவம் பெருகி வானபரியந்தமும், உமது கர்த்தத்துவம் பூமியின் எல்லைபரியந்தமும் எட்டியிருக்கிறது.

தானியேல் - தொகுப்புரை

4 அதிகாரம்

தானி 4:23 இந்த விருட்சத்தை வெட்டி, இதை அழித்துப்போடுங்கள்; ஆனாலும் இதின்வேர்களாகிய அடிமரம் தரையில் இருக்கட்டுமென்றும், இரும்பும் வெண்கலமுமான விலங்கு இடப்பட்டு, வெளியின் பசும்புல்லிலே தங்கி, ஆகாயத்துப் பனியிலே நனைவதாக; ஏழு காலங்கள் அவன்மேல் கடந்துபோகு மட்டும் மிருகங்களோடே அவனுடைய பங்கு இருக்கக் கடவதென்றும், வானத்திலிருந்து இறங்கிச் சொன்ன பரிசுத்த காவலாளனை ராஜாவாகிய நீர் கண்டிரே.

தானி 4:24 ராஜாவே, அதின் அர்த்தமும் ராஜாவாகிய என் ஆண்டவன் பேரில் வந்த உன்னதமானவருடைய தீர்மானமும் என்னவென்றால்: மனுஷரினின்று நீர் தள்ளிவிடப்படுவீர்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பீர்; மாடுகளைப் போலப் புல்லைமேய்ந்து, ஆகாயத்துப் பனியிலே நனைவீர்.

தானி 4:25 உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் என்பதை நீர் அறிந்து கொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உம்முடைய பேரில் கடந்து போகவேண்டும்.

தானி 4:26 ஆனாலும் விருட்சத்தின் வேர்களாகிய அடிமரம் தரையில் இருக்கட்டும் என்று சொல்லப்பட்டது என்னவென்றால்: நீர் பரம அதிகாரத்தை அறிந்தபின், ராஜ்யம் உமக்கு நிலைநிற்கும்.

"ஒரு நாழிகை மட்டும் திகைத்து" - தானியேல் ஒரு நாழிகை மட்டும் திகைத்தான். கலங்கினான். தரிசனத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் தானியேல் கலங்கவில்லை. ராஜாவிற்காகவும் தேசத்திற்காகவும் தன்னுடைய சொந்த ஜனங்களின் நன்மையை நினைத்தும் தானியேல் திகைத்தான். கலங்கினான்.

தீர்க்கதரிசன எண் - 5

"நீர் கண்ட விருட்சம் வளர்ந்து பலத்து......." (தானி 4:20-23) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

விருட்சத்தைப் பற்றிய தரிசனத்தின் வியாக்கியானம்

1. நேபுகாத்நேச்சார் - விருட்சம் (தானி 4:20-22; தானி 2:38)

2. காவலாளன் - இவன் பரிசுத்தவான். வானத்திலிருந்து இறங்கிவந்தான். இவன் உன்னதமானவரின் ஆணையை அறிவிக்கிறான். (தானி 4:23-24).

3. ஆணை (தானி 4:25) "மனுஷரினின்று நீர் தள்ளிவிடப்படுவீர்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பீர்; மாடுகளைப்போலப் புல்லைமேய்ந்து, ஆகாயத்துப் பனியிலே நனைவீர். உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் என்பதை நீர் அறிந்து கொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உம்முடையபேரில் கடந்து போகவேண்டும்."

4. தரையில் இருக்கும் விருட்சத்தின் வேர்களாகிய அடிமரம். இராஜா பரம அதிகாரத்தை அறிந்த பின்பு இராஜியம் அவருக்கு திரும்பக்கொடுக்கப்படும். (தானி 4:26)

"ஏழு காலங்கள்" - ஏழு காலங்கள் என்பது ஏழு வருஷங்களைக் குறிக்கும். லேவி 26:18 ஆவது வசனத்தில் இது தண்டனையின் உக்கிரத்தைக் குறிப்பிடுகிறது. 2 இராஜா 5:10 ஆவது வசனத்தில் ஏழுதரம் என்பது யோர்தான் நதியில் ஏழுதரம் முங்குவதைக் குறிக்கும். ஒரு சிலர் ஏழு காலங்கள் என்பதற்கு 2,520 வருஷங்கள் என்று வியாக்கியானம் பண்ணுகிறார்கள்.

4 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 6

"மனுஷரினின்று நீர் தள்ளி விடப்படுவீர்......" - (தானி 4:25-26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நேபுகாத் நேச்சாரை யார் தள்ளி விடுவார்கள் என்று குறிப்பிடப்படவில்லை. அவருடைய சத்துருக்கள் அவரைத் தள்ளமாட்டார்கள். நேபுகாத்நேச்சார் சத்துருக்களின் கையில் சிக்கியிருந்தால் அவருடைய சத்துருக்கள் அவரைக் கொன்று போடுவார்கள். நேபுகாத் நேச்சார் தன்னுடைய சிம்மாசனத்திலிருந்து தள்ளிவிடப்படுவது அவருடைய சத்துருக்களுக்கு நல்ல செய்தியாக இருக்கும். இனிமேல் இராஜாவால் மற்ற தேசங்கள் மீது யுத்தம் பண்ண முடியாது. ஆயினும் நேபுகாத் நேச்சாரின் நண்பர்கள் அவருக்கு உதவி செய்திருப்பார்கள். அவர் மிருகங்கள் மத்தியில் தங்கியிருந்த காலங்களில் அவர்கள் இராஜாவை பாதுகாத்திருந்திருப்பார்கள். நேபுகாத் நேச்சாருக்குப் பதிலாக புதிய இராஜா யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அவருடைய இராஜ்யம் பாதுகாப்பாக இருக்கிறது. அவர் குணமடைந்து திரும்பி வருவதற்காக அவருடைய தேசத்தார் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இராஜா நோய்வாய்ப் பட்டிருக்கும் போது அவருடைய குமாரன் இளவரசனாகப் பொறுப்பேற்றுக் கொண்டான். தன் தந்தைக்காக அவன் இராஜ்யத்தை பாதுகாத்தான். இதனால் தானி 4:26ஆவது வசனம் நிறைவேறிற்று.

6. இராஜாவுக்கு ஆலோசனை

தானி 4:27 ஆகையால் ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக்கொண்டு நீதியைச் செய்து உமது பாவங்களையும், சிறுமையானவர்களுக்கு இறங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்; அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம் என்றான்.

தானியேல் நேபுகாத்நேச்சாருக்குக் கூறும் ஆலோசனை

1. நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக்கொள்ளும்.
2. நீதியைச் செய்து உமது பாவங்களை அகற்றிவிடும்.
3. சிறுமையானவர்களுக்கு இறங்கி உமது அக்கிரமங்களை அகற்றிவிடும்.

7. இராஜா ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை

தானி 4:28 இதெல்லாம் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின்மேல் வந்தது.

தானி 4:29 பன்னிரண்டு மாதம் சென்ற பின்பு, ராஜா பாபிலோன் ராஜ்யத்தின் அரமனைமேல் உலாவிக்கொண்டிருக்கும் போது;

தானி 4:30 இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான்.

"இதெல்லாம் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின்மேல் வந்தது" - வரலாற்றுச் சம்பவமாக இந்த வாக்கியம் இங்கு கூறப்பட்டிருக்கிறது. (தானி 4:24-27).

"பன்னிரண்டு மாதம் சென்ற பின்பு" - கர்த்தர் நேபுகாத் நேச்சாரின் மீதும் கிருபையோடிருக்கிறார். பன்னிரண்டு மாதங்களாக கர்த்தர் இராஜாவைக் கவனித்துச் சோதித்துப்பார்க்கிறார். (தானி 4:27)

"நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா" - பாபிலோன் மிகப்பெரிய பட்டணம். சதுர வடிவில் இந்தப் பட்டணம் அமைந்துள்ளது. ஒவ்வொரு பக்கமும் 14 மைல் நீளமுள்ளது. ஐபிராத்து நதியின் இரு கரைகளிலும் பாபிலோன் நகரம் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு கிழக்கு மாகாணம், மேற்கு மாகாணம் என்று பெயர். இவ்விரண்டு மாகாணங்களையும் 3,240 அடி நீளமுள்ள பாலம் இணைக்கிறது.

4 அதிகாரம்

இந்த ஆற்றுக்கு அடியில் சுரங்க வழிகள் இருந்ததாகக் கூறுகிறார்கள். பாபிலோனின் தொங்கு தோட்டம் உலக அதிசயங்களில் ஒன்றாகும். இங்கு பேலுக்கு ஒரு கோவிலும், மேலும் பல பெரிய கட்டிடங்களும் இருந்தன. இதனால் பாபிலோன் நகரம் உலகத்திலுள்ள மிகச் சிறந்த நகரங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

"என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று" - பாபிலோன் பெரிய பட்டணம். இதற்காக நேபுகாத்நேச்சார் தேவனுக்கு மகிமை செலுத்த வேண்டும். ஆனால் அவனோ தன்னையே உயர்த்தி தனக்கு மகிமையை தேடிக்கொண்டான். இந்தப் பெருமை நேபுகாத்நேச்சாரின் அழிவுக்குக் காரணமாயிற்று. கர்த்தரே நேபுகாத்நேச்சாரைத் தேர்ந்தெடுத்து அவனுக்கு இந்தப் பெரிய இராஜ்யத்தைக் கொடுத்திருக்கிறார் (தானி 2:19,38). கர்த்தர் நேபுகாத்நேச்சாரை 12 மாதங்களுக்கு முன்பாகவே எச்சரித்தார் (தானி 4:17,26-27).

8. சொப்பனம் நிறைவேறுகிறது

தானி 4:31 இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும்போதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரே,ராஜ்யபாரம் உன்னை விட்டு நீங்கிற்று.

தானி 4:32 மனுஷரினின்று தள்ளப் படுவாய்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய்; மாடுகளைப்போல் புல்லை மேய்வாய்; இப்படியே உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறாரென்பதை நீ அறிந்து கொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உன்மேல் கடந்துபோகும் என்று உனக்குச் சொல்லப்படுகிறது என்று விளம்பினது.

தானி 4:33 அந்நேரமே இந்த வார்த்தை நேபுகாத்நேச்சாரிடத்தில் நிறைவேறிற்று; அவன் மனுஷரினின்று தள்ளப்பட்டு, மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான்; அவனுடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப்போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப் போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது.

தீர்க்கதரிசன எண் - 7

"இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும்போதே......" (தானி 4:31-32) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. ராஜா தன்னைத்தானே உயர்த்தினான். இதனால் அவனுடைய புத்தி தடுமாறிற்று. ஏழு வருஷங்களாக ராஜா பித்தம் பிடித்தவனைப் போல இருந்தான்.

"உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து" - கர்த்தரே உன்னதமானவர் என்பதையும் வானத்திற்கும் பூமிக்கும் அவரே சர்வ அதிகாரம் படைத்த ஆளுநர் என்பதையும் எல்லா ஜனங்களும் தெரிந்து கொள்ள வேண்டும். (1கொரி 15:24-28; எபே 1:10; பிலி 2:8-11; வெளி 11:15; வெளி 22:4-5). இந்தச் சத்தியம் இங்கு ஐந்து தடவை வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. (தானி 2:21-22; தானி 4:3,25,32,34-35).

"அந்நேரமே" - நேபுகாத்நேச்சார் தன்னுடைய கிரியையையும் தன்னுடைய இராஜ்யத்தையும் எந்த நேரத்தில் உயர்த்தினானோ அந்த நேரத்தில் கர்த்தருடைய வார்த்தை அவனிடத்தில் நிறைவேறிற்று. (தானி 4:28-30,33).

"அவன் மனுஷரினின்று தள்ளப்பட்டு, மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான்" - நேபுகாத்நேச்சாருக்கு பித்தம் பிடித்திருக்கிறது. கிரேக்க மொழியில் இந்த வியாதிக்கு "லிகன்த்ரோபி" **(Lycanthropy)** என்றுபெயர். இதில் இரண்டு வார்த்தைகள் அடங்கியுள்ளன. ஒன்று ஓநாயையும், மற்றொன்று மனுஷனையும் குறிக்கும். நேபுகாத்நேச்சார் ஓநாயின் குணமுடைய மனுஷனாக இருக்கிறான்.

4 அதிகாரம்

ஓநாய் (wolf) - λύκος - lykos - 3074

ஆண்பால் பெயர்ச்சொல் - ஓநாய்

மனுஷன் (man) - ἄνθρωπος - anthroopos - 444

ஆண்பால் பெயர்ச்சொல் - மனுஷன், பொதுவாக மானிடர் எவரும், யாராவது ஒருவர், போதிய வயது நிரம்பியவர்

9. இராஜா தேவனைத் துதிக்கிறான்

தானி 4:34 அந்த நாட்கள் சென்றபின்பு, நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன்; என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது; அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும்ஜீவித்திருக்கிறவரை புகழ்ந்து மகிமைப்படுத்தினேன்; அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும்.

தானி 4:35 பூமியின் குடிகள் எல்லாம் ஒன்று மில்லையென்று எண்ணப் படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின் படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன்.

தானி 4:36 அவ்வேளையிலே என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது; என் ராஜ்யபாரத்தின் மேன்மைக்காக என் மகிமையும் என் முகக்களையும் எனக்குத் திரும்பி வந்தது; என் மந்திரிமாரும் என் பிரபுக்களும் என்னைத் தேடிவந்தார்கள்; என் ராஜ்யத்திலே நான் ஸ்திரப் படுத்தப்பட்டேன்; அதிக மகத்துவமும் எனக்குக் கிடைத்தது.

தானி 4:37 ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன்; அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்.

"அந்த நாட்கள் சென்றபின்பு" - நேபுகாத்நேச்சார் ஏழுவருஷங்களாக பித்தம் பிடித்தவனாக இருக்கிறான். ஏழு வருஷங்களுக்குப் பின்பு அவனுடைய புத்தி அவனுக்குத் திரும்பி வந்தது. அப்போது அவன் கர்த்தருடைய இரக்கத்திற்காக அவரைத் துதிக்கிறான்.

"பூமியின் குடிகள் எல்லாம் ஒன்று மில்லையென்று எண்ணப்படுகிறார்கள்" - இந்த வாக்கியம் மெய்யான சத்தியமாகும். (ஏசா 40:12-29; ஏசா 66:1-2; ரோமர் 11:33).

"வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்" - பரலோகத்திலும் சமுதாய அமைப்பு உள்ளது என்பதை இந்த வாக்கியம் உறுதிபண்ணுகிறது. (யோபு 1:6; யோபு 2:1; கொலோ 1:15-18; வெளி 12:12).

நேபுகாத்நேச்சார் திரும்பவும் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள்

1. அவன் புத்தி (understanding) அவனுக்குத் திரும்பிவந்தது (தானி 4:34).
2. அவன் புத்தி (reason) அவனுக்குத் திரும்பிவந்தது (தானி 4:36).
3. அவன் ராஜ்யபாரத்தின் மேன்மை திரும்பி வந்தது.
4. அவன் மகிமையும் அவன் முகக்களையும் அவனுக்குத் திரும்பி வந்தது
5. அவன் மந்திரிமாரும் அவன் பிரபுக்களும் அவனைத் தேடிவந்தார்கள்.
6. தன் ராஜ்யத்திலே அவன் ஸ்திரப்படுத்தப்பட்டான். (தானி 4:36).

தானியேல் – தொகுப்புரை

4 அதிகாரம்

7. அதிக மகத்துவமும் அவனுக்குக் கிடைத்தது.

நேபுகாத்நேச்சார் கற்றுக் கொண்ட காரியங்கள்

1. கர்த்தர் பரலோகத்தின் ராஜாவாக இருக்கிறார்.
2. அவரைப் புகழவேண்டும்.
3. அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமானவை.
4. அவருடைய வழிகள் நியாயமானவைகள்
5. அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் (தானி 4:37).
6. தேவனே தேவர்களுக்குத் தேவனாயிருக்கிறார். (தானி 2:47).
7. அவரே மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாய் இருக்கிறார். (தானி 2:47).
8. அவரையே நம்பியிருக்கிறவர்களுக்கு அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவிக்கிறார். (தானி 3:28).
9. மனுஷனுடைய வார்த்தையைத் தேவனால் மாற்றமுடியும். (தானி 3:28).
10. தேவனுடைய மெய்யான தாசர்கள் மற்றத் தேவர்களை ஆராதிக்க மாட்டார்கள். (தானி 3:16-18,28).
11. இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை (தானி 3:29).
12. மெய்யான தேவனைப்போல வேறு எந்த தெய்வங்களாலும் அற்புதங்களைச் செய்ய முடியாது. (தானி 3:25-29; தானி 4:3).
13. அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம் (தானி 4:3,34).
14. அவருடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக நிற்கும். (தானி4:3).
15. தேவனுடைய ஆவியானவர் மனுஷரில் வாசம்பண்ணுகிறார். (தானி 4:8,9,18).
16. பூமியில் தேவனே பிரதானமானவர். (தானி 4:17,34).
17. உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுக்கிறார். (தானி 4:17,32).
18. பூமியிலுள்ள ஞானிகளால் மனுஷருடைய பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க முடியாது. (தானி 2:2-13; தானி 4:4-8).
19. பாவத்திற்குத் தண்டனை உண்டு. (தானி 4:27-33).
20. பெருமை வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கும். (தானி 4:28-37).

5 அதிகாரம்

V. பாபிலோனின் வீழ்ச்சி - (எபி 11:33)

1. பெல்ஷாத்சாரின் பெரிய விருந்து

தானி 5:1 பெல்ஷாத்சார் என்னும் ராஜா தன் பிரபுக்களில் ஆயிரம் பேருக்கு ஒரு பெரிய விருந்து செய்து, அந்த ஆயிரம் பேருக்கு முன்பாகத் திராட்சரசம் குடித்தான்.

தானி 5:2 பெல்ஷாத்சார் திராட்ச ரசத்தை ருசித்துக் கொண்டிருக்கையில், அவன் தன் தகப்பனாகிய நேபுகாத்நேச்சார் எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டுவந்த பொன் வெள்ளி பாத்திரங்களில், ராஜாவாகிய தானும் தன் பிரபுக்களும் தன் மனைவிகளும் தன் வைப்பாட்டிகளும் குடிக்கிறதற்காக அவைகளைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான்.

தானி 5:3 அப்பொழுது எருசலேமிலுள்ள தேவனுடைய வீடாகிய ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்ட பொற்பாத்திரங்களைக் கொண்டு வந்தார்கள்; அவைகளில் ராஜாவும் அவனுடைய பிரபுக்களும் அவனுடைய மனைவிகளும் அவனுடைய வைப்பாட்டிகளும் குடித்தார்கள்.

தானி 5:4 அவர்கள் திராட்சரசம் குடித்து, பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தார்கள்.

"பெல்ஷாத்சார்" (Belshazzar) - பெல்ஷாத்சார் நேபுகாத்நேச்சாரின் குமாரன். நபோனிதசின் மகன். யுத்தத்தில் தன்னுடைய தகப்பன் கோரேசோடு யுத்தம்பண்ணப் போகையில், தன் தந்தையோடு சேர்ந்து இவனும் இராஜ்யபாரத்தில் பிரதி ராஜாவாகப் பொறுப்பேற்றிருந்தான். இந்த அதிகாரம் தானி 7-8 ஆகிய அதிகாரங்களுக்கு வரலாற்றுப் பிரகாரமாக பின்னால் வருகிறது.

தானி 7வது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் தரிசனம் பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷத்திலும் 8வது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் தரிசனம் பெல்ஷாத்சாரின் மூன்றாம் வருஷத்திலும் காணப்பட்ட தரிசனங்கள் ஆகும். தானி 7:1-12:13 ஆகிய தீர்க்கதரிசன வசனப் பகுதிகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக தானியேல் இந்த அதிகாரத்தை இந்த இடத்தில் அமைத்திருக்கின்றார்.

"ஒரு பெரிய விருந்து" - பெல்ஷாத்சார் தன்னுடைய பிரபுக்களுக்கு கொடுத்த விருந்தைப் பற்றியும் விருந்து செய்த பெரிய மண்டபத்தைப் பற்றியும் தற்போது அகழ்வாராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள். அந்த மண்டபத்தின் நீளம் 172 அடி, அகலம் 60 அடி ஆகும். அதன் சுவர்களில் அழகான சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

பிரபுக்கள் (lords) - רַבְרְבָנִין - rab-reb-awn' - 7261

ஆ.பெ.சொ. - பிரபு (great ones) (தானி 4:36; தானி 5:1,9,10,23; தானி 6:17).

"தன் தகப்பனாகிய நேபுகாத்நேச்சார்" - நேபுகாத்நேச்சார் பெல்ஷாத்சாரின் தகப்பன் என்று இங்கு கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இவர் பெல்ஷாத்சாரின் தாத்தா ஆவார். அரமாயிக் பாஷையில் தாத்தாவைக் குறிப்பதற்கு எந்த வார்த்தையும் இல்லை. தகப்பன் என்னும் வார்த்தை பொதுவாக முன்னோர்களைக் குறிக்கும். (1இராஜா 15:11-13; 2இராஜா14:3; 2நாளா 34:1-2; ரோமர் 9:10). எரேமியா இந்த பிரச்சனையைத் தெளிவாகத் தீர்த்து வைக்கிறார். "அவனுடைய தேசத்துக்குக் காலம் வருகிறவரையில் சகல ஜாதிகளும் அவனையும் (நேபுகாத்நேச்சார்) அவனுடைய புத்திர (நேபோநிதஸ்) பௌத்திரரையும் (பெல்ஷாத்சார்) சேவிப்பார்கள்" (எரே 27:7).

"பொன் வெள்ளி பாத்திரங்கள்" - (தானி 1:2; 2இராஜா 25:15; எரே 52:19)

"எருசலேமிலுள்ள தேவனுடைய வீடாகிய ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்ட பொற் பாத்திரங்கள்" - குடித்து வெறித்திருப்பது கர்த்தருடைய பார்வையில் பாவமான காரியம். அதிலும் தேவனுடைய ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்ட பொற்பாத்திரங்களில் மதுவை ஊற்றிப் பருகுவது மிகப் பெரிய பாவமாகும்.

5 அதிகாரம்

(தானி 5:23). கர்த்தருடைய ஆலயத்தில் பிரதிஷ்டைப் பண்ணப்பட்ட பரிசுத்த பணிமுட்டுகள் கர்த்தருடைய ஆராதனைக்கு மாத்திரமே பயன்படுத்தபட வேண்டும். இது கர்த்தருடைய பிரமாணம். இங்கு கர்த்தருடைய பிரமாணம் மீறப்பட்டதினால் கர்த்தர் தம்முடைய ஆக்கினைத் தீர்ப்பை விருந்து மண்டபத்தின் சுவற்றில் எழுதினார் (தானி 5:5).

2. சுவரின்மீது எழுத்து

தானி 5:5 அந்நேரத்திலே மனுஷ கைவிரல்கள் தோன்றி, விளக்குக்கு எதிராக ராஜ அரமனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று; எழுதின அந்தக் கையுறுப்பை ராஜா கண்டான்.

"அந்நேரத்திலே" - பெல்ஷாத்சாரும் பிரபுக்களும் தேவனுடைய ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்ட பொற்பாத்திரங்களைத் தீட்டுப் படுத்துகிறார்கள். விக்கிரகங்களைப் புகழ்ந்து பேசுகிறார்கள். (தானி 5:2-4). அந்நேரத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள் மீது வருகிறது. அந்நேரத்தில் எழுபது வருஷ சிறையிருப்பு முடிவு பெறுகிறது. கர்த்தர் தம்முடைய தெரிந்தெடுக்கப்பட்ட ஜனத்தை விடுவிக்கிறார். அவர்கள் மறுபடியும் ஒரு தேசமாக கூட்டிச் சேர்க்கப்படுவதற்கு இப்போதே கிரியை செய்ய ஆரம்பித்துவிடுகிறார். (தானி 9:24-27; எரே 25).

"எழுதின அந்தக் கையுறுப்பை ராஜா கண்டான்" - மண்டபத்தில் கூடியிருந்த ஜனங்களெல்லாம் சுவற்றில் எழுதிய கர்த்தருடைய கையுறுப்பைக் கண்டார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு அந்த எழுத்துக்கள் பிரத்தியட்சமாக தெரிந்தது. (தானி 5:7-9,16,24-25).

3. பெல்ஷாத்சாருக்கு ஏற்பட்ட விளைவு

தானி 5:6 அப்பொழுது ராஜாவின் முகம் வேறுபட்டது; அவனுடைய நினைவுகள் அவனைக் கலங்கப்பண்ணினது; அவனுடைய இடுப்பின் கட்டுகள் தளர்ந்தது, அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது.

ராஜாவிற்கு உண்டான பயம்

1. ராஜாவின் முகம் வேறுபட்டது.
2. அவனுடைய நினைவுகள் அவனைக் கலங்கப் பண்ணினது.
3. அவனுடைய இடுப்பின் கட்டுகள் தளர்ந்தது.
4. அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது.
5. ராஜா உரத்த சத்தமிட்டுப் பேசுகிறான். (தானி 5:6-7; யோபு 4:12-21)

4. ஞானிகளும் அவர்களுடைய இயலாமையும்

தானி 5:7 ராஜா உரத்த சத்தமிட்டு; ஜோசியரையும் கல்தேயரையும் குறிசொல்லுகிறவர்களையும் உள்ளே அழைத்துவரும்படி சொன்னான். ராஜா பாபிலோன் ஞானிகளை நோக்கி: இந்த எழுத்தை வாசித்து, இதின் அர்த்தத்தை எனக்கு வெளிப்படுத்துகிறவன் எவனோ, அவன் இரத்தாம்பரமும் கழுத்திலே பொற்சரப்பணியும் தரிக்கப்பட்டு, ராஜ்யத்திலே மூன்றாம் அதிபதியாய் இருப்பான் என்று சொன்னான்.

தானி 5:8 அப்பொழுது ராஜாவின் ஞானிகளெல்லாரும் வந்து சேர்ந்தார்கள்; ஆனாலும் அவர்கள் அந்த எழுத்தை வாசிக்கவும், அதின் அர்த்தத்தை ராஜாவுக்குத் தெரிவிக்கவும் கூடாதிருந்தது.

5 அதிகாரம்

தானி 5:9 அப்பொழுது ராஜாவாகிய பெல்ஷாத்சார் மிகவும் கலங்கினான்; அவனுடைய முகம் வேறுபட்டது; அவனுடைய பிரபுக்கள் திகைத்தார்கள்.

"ஜோசியரையும் கல்தேயரையும் குறி சொல்லுகிறவர்களையும் உள்ளே அழைத்து வரும்படி சொன்னான்" - பெல்ஷாத்சாரின் தாத்தாவாகிய நேபுகாத்நேச்சாரைப்போலவே இவனும் இப்படிப்பட்ட பிரச்சனையான வேளைகளில் ஜோசியரையும் குறி சொல்லுகிறவர்களையும் அழைத்து வருமாறு கூறுகிறான். (தானி 2:2-19; தானி 4:6-9).

ராஜா அறிவித்த வெகுமதிகள்

1. அவனுக்கு இரத்தாம்பரம் தரிக்கப்படும்.
2. கழுத்திலே பொற்சரப்பணி தரிக்கப்படும்.
3. ராஜ்யத்திலே மூன்றாம் அதிபதியாய் இருப்பான்.

"இந்த எழுத்தை வாசித்து" - கர்த்தர் சுவற்றில் எழுதிய வார்த்தைகளை அவர்களால் வாசிக்க முடியவில்லை. அது அவர்களுக்கு தெரிந்த பாஷையில் எழுதப்படவில்லை. இது பரலோகத்தின் பாஷையாக இருக்கவேண்டும். இது பாபிலோன் தேசத்தாருக்கு புரியாத பாஷையாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரினால் நிறைந்து பாஷைகளை வியாக்கியானம் பண்ணுகிறவரால் மாத்திரமே இந்த எழுத்தை வாசித்து அதன் அர்த்தத்தைக் கூற முடியும். (1கொரி. 12:10-11,30; 1கொரி. 13:1; 1கொரி. 14:5,12-14,26-28).

தானியேலுக்கும் இந்த பாஷை தெரியாது. ஆயினும் பரிசுத்த ஆவியானவருடைய அனுக்கிரகத்தினால் தானியேல் அந்த வார்த்தைகளை வாசித்து அதற்கு அர்த்தத்தையும் கூறுகிறான். இதற்கு முன்பு நடைபெற்ற சம்பவங்களைப் போலவே இங்கும் கர்த்தரே வியாக்கியானம் கூறுகிறார். (தானி 2:19,22-23,28-30,47; தானி 4:8-9,19).

இரத்தாம்பரம் (purple) - אַרְגְּוָן - arg-ev-awn' - 711

ஆ.பெ.சொ. - இரத்தாம்பர நிறம் (தானி 5:7,29).

"கழுத்திலே பொற்சரப்பணி" - கழுத்திற்குப் பொற்சரப்பணியை செய்யும் பழக்கம் தூபால் காயீன் காலத்திலிருந்தே ஆரம்பமாயிற்று. (ஆதி 4:22). கழுத்தில் பொற்சரப்பணியை அணிவது அரசியல் அந்தஸ்தை குறிக்கும் அடையாளமாகும். (தானி 5:7,15,29; ஆதி 41:42).

"ராஜ்யத்திலே மூன்றாம் அதிபதி" - இராஜ்யத்தில் மூன்றாம் அதிபதி என்பது அவர்களோடு சேர்ந்து ஆளுகை செய்யும் அதிகாரத்தைக் குறிக்கும். நெபோனிதஸ் இராஜ்யத்தில் முதலாம் அதிபதியாகவும் பெல்ஷாத்சார் தன் தகப்பனுக்கு இணையாக இரண்டாம் அதிபதியாகவும் ஆளுகை செய்கிறார்கள். தானியேலுக்கு அவர்களோடு சேர்ந்து மூன்றாம் அதிபதியாக தேசத்தை ஆளுகை செய்யும் அதிகாரம் கொடுப்பதாகப் பெல்ஷாத்சார் வாக்குபண்ணுகிறான். ஆனால் பெல்ஷாத்சாரால் தானியேலுக்கு அந்த அதிகாரத்தை கொடுக்கமுடியவில்லை. ஏனெனில் அன்று ராத்திரியிலே பெல்ஷாத்சார் கொலை பண்ணப்பட்டான். பாபிலோனியப் பேரரசு அத்துடன் விழுந்தது. (தானி 5:29-31).

"அதின் அர்த்தத்தை ராஜாவுக்குத் தெரிவிக்கவும் கூடாதிருந்தது" - வழக்கம் போலவே ராஜாவின் ஞானிகளாலும் ஜோசியக்காரராலும் அந்த எழுத்தை வாசிக்கவோ அதன் அர்த்தத்தைச் சொல்லவோ முடியவில்லை. (தானி 5:8-9; தானி 2:2-19; தானி 4:7-9).

எழுத்தினால் ஏற்பட்ட விளைவுகள்

1. ராஜாவாகிய பெல்ஷாத்சார் மிகவும் கலங்கினான் (தானி 5:6,9).
2. அவனுடைய முகம் வேறுபட்டது (தானி 5:6,9).
3. அவனுடைய பிரபுக்கள் திகைத்தார்கள். (தானி 5:9).

5 அதிகாரம்

5. இராணியின் ஆலோசனை

தானி 5:10 ராஜாவும் அவனுடைய பிரபுக்களும் சொன்னவைகளை ராஜாத்தி கேள்விப்பட்டு விருந்துசாலைக்குள் பிரவேசித்தாள். அப்பொழுது ராஜாத்தி: ராஜாவே, நீர் என்றும் வாழ்க; உமது நினைவுகள் உம்மைக் கலங்கப் பண்ணவும், உமது முகம் வேறுபடவும் வேண்டியதில்லை.

தானி 5:11 உம்முடைய ராஜ்யத்திலே ஒரு புருஷன் இருக்கிறான், அவனுக்குள் பரிசுத்த தேவர்களுடைய ஆவி இருக்கிறது; உம்முடைய பிதாவின் நாட்களில் வெளிச்சமும் விவேகமும் தேவர்களின் ஞானத்துக்கு ஒத்த ஞானமும் அவனிடத்தில் காணப்பட்டது; ஆகையால் உம்முடைய பிதாவாகிய நேபுகாத் நேச்சாரென்னும் ராஜாவானவர் அவனைச் சாஸ்திரிகளுக்கும் ஜோசியருக்கும் கல்தேயருக்கும் குறி சொல்லுகிறவர்களுக்கும் அதிபதியாக வைத்தார்.

தானி 5:12 ராஜாவினால் பெல்தெஷாத் சாரென்னும் பெயரிடப்பட்ட அந்த தானியேலுக்குள் சொப்பனங்களை வியார்த்தி பண்ணுகிறதும், புதை பொருள்களை வெளிப்படுத்துகிறதும், கருகலான வைகளைத் தெளிவிக்கிறதுமான அறிவும் புத்தியும் விசேஷித்த ஆவியும் உண்டென்று காணப்பட்டது; இப்போதும் தானியேல் அழைக்கப்படட்டும், அவன் அர்த்தத்தை வெளிப்படுத்துவான் என்றாள்.

"ராஜாத்தி கேள்விப்பட்டு விருந்து சாலைக்குள் பிரவேசித்தாள்" - விருந்து சாலையில் மதுபானம் பண்ணியதினால் உண்டான களிப்பெல்லாம் நின்று போயிற்று. அங்கு மரண அமைதி உண்டாயிற்று. அப்போது ராஜாத்தி அங்கு வந்து தானியேலைப்பற்றி ராஜாவுக்கு அறிவிக்கிறாள். (தானி 5:10-12).

"உம்முடைய ராஜ்யத்திலே ஒரு புருஷன் இருக்கிறான்" - எந்த ராஜ்ஜியத்திலும் தானியேலைப் போல ஒரு நல்ல மனுஷன் இருப்பது அந்த தேசத்திற்கே நல்லது. சபையிலும் தானியேலைப் போல நல்ல மனுஷர்கள் இருக்க வேண்டும். ஆதித்திருச்சபையில் நல்லவர்கள் ஏராளமாக இருந்தார்கள். (1கொரி. 1:7; 1கொரி. 12:4-11).

"அவனுக்குள் பரிசுத்த தேவர்களுடைய ஆவி இருக்கிறது" - தானியேலிடம் பரிசுத்த ஆவியானவர் இருந்ததை ராஜாத்தியும் (தானி 5:10-12), நேபுகாத்நேச்சாரும் (தானி 4:8-9,18) மற்றவர்களும் (தானி 5:14-16) அங்கீகரித்தார்கள்.

"உம்முடைய பிதாவின் நாட்களில்" - (தானி 5:2)

"குறிசொல்லுகிறவர்களுக்கும் அதிபதியாக வைத்தார்." - நேபுகாத்நேச்சார் தானியேலை அவர்களுக்கு அதிகாரியாக வைத்தார். (தானி 2:48)

தானியேலைப் பற்றிய சாட்சி

1. அவனுக்குள் பரிசுத்த தேவர்களுடைய ஆவி இருக்கிறது (தானி 5:11)
2. தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருக்கிறது. (தானி 5:12).
3. அவனிடம் அறிவு இருக்கிறது.
4. அவனிடம் புத்தி இருக்கிறது.
5. சொப்பனங்களை வியார்த்திபண்ணுகிற தாலந்து அவனிடம் இருக்கிறது.
6. புதை பொருள்களை வெளிப்படுத்துகிற தாலந்து அவனிடம் இருக்கிறது.
7. கருகலானவைகளைத் தெளிவிக்கிற தாலந்து அவனிடம் இருக்கிறது.

"தானியேல் அழைக்கப்படட்டும், அவன் அர்த்தத்தை வெளிப்படுத்துவான்" - ராஜாத்திக்கு தானியேலின்மீது முழுமையான நம்பிக்கையிருக்கிறது. ஏனெனில் இதுவரையிலும் தானியேல் சொன்னது எதுவும் பொய்யாகவில்லை. (தானி 2:19-49; தானி 4:8-30).

தானியேல் - தொகுப்புரை

5 அதிகாரம்

6. ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டு தானியேல் அழைக்கப்படுகிறான்

தானி 5:13 அப்பொழுது தானியேல் ராஜாவின் முன் உள்ளே அழைத்துவந்து விடப்பட்டான்; ராஜா தானியேலைப் பார்த்து: நீ என் பிதாவாகிய ராஜா யூதாவிலிருந்து சிறைபிடித்துவந்த யூதரில் ஒருவனாகிய தானியேல் அல்லவா?

தானி 5:14 உனக்குள்ளே தேவர்களின் ஆவி உண்டென்றும், வெளிச்சமும் புத்தியும் விசேஷித்த ஞானமும் உன்னிடத்தில் காணப்பட்டதென்றும் உன்னைக் குறித்துக் கேள்விப்பட்டேன்.

தானி 5:15 இப்போதும் இந்த எழுத்தை வாசிக்கிறதற்கும், இதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கிறதற்கும் சாஸ்திரிகளும் ஜோசியரும் எனக்கு முன்பாக அழைத்துக்கொண்டு வரப் பட்டார்கள்; ஆனாலும் இந்த வசனத்தின் அர்த்தத்தை வெளிப்படுத்த அவர்களால் கூடாமற் போயிற்று.

தானி 5:16 பொருளை வெளிப்படுத்தவும்,கருகலானவைகளை தெளிவிக்கவும் உன்னாலே கூடுமென்று உன்னைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்போதும் நீ இந்த எழுத்தை வாசிக்கவும், இதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கவும் உன்னாலே கூடுமானால், நீ இரத்தாம்பரமும் கழுத்திலே பொற்சரப் பணியும் தரிக்கப்பட்டு, ராஜ்யத்திலே மூன்றாம் அதிபதியாய் இருப்பாய் என்றான்.

"உன்னைக்குறித்துக் கேள்விப்பட்டேன்" - இது மெய்யான செய்தியாகும். (தானி 5:14-16)

மனுஷரால் கூடாத காரியங்கள்

1. மனுஷருடைய ஆஸ்தி மிகுந்திருந்த படியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமல் போயிற்று. (ஆதி 13:6).
2. யோசேப்போடு பட்சமாய், அவன் சகோதரரால் பேசமுடியாமற்போயிற்று. (ஆதி 37:4).
3. மந்திரவாதிகளால் பேன்களைப் பிறப்பிக்கக் கூடாமற்போயிற்று. (யாத் 8:18).
4. மந்திரவாதிகளால் மோசேக்கு முன்பாக நிற்கக்கூடாமற்போயிற்று. (யாத் 9).
5. மாராவிலே தண்ணீரைக் குடிக்கக் கூடாதிருந்தது. (யாத் 15:23)
6. இஸ்ரவேலரால் அவர்களுடைய சத்துருக்களுக்கு முன்பாகநிற்க முடியாமற் போயிற்று. (யோசு 7:12; நியா 2:14).
7. இஸ்ரவேலரால் அவர்களுடைய சத்துருக்களைத் துரத்தமுடியாமற் போயிற்று. (யோசு 15:63; யோசு 17:12)
8. தாவீதின் மனுஷரில் சிலரால் தாவீதோடு யுத்தம் பண்ண கூடப் போக முடியாமற் போயிற்று. (1சாமு 30:21).
9. இஸ்ரவேலுக்கு முன்பாக எதிர்த்து நிற்க கூடாமற்போயிற்று. (2நாளா. 14:13).
10. இஸ்ரவேலரைத் தேவாலயத்தின் வேலையைச் செய்யாதபடி நிறுத்தக் கூடாமற் போயிற்று. (எஸ்றா 5:5).
11. இரத்தமாக மாறிய ஜலத்தைக் குடிக்கக்கூடாமற் போயிற்று. (சங் 78:44).
12. பாயை விரிக்கக்கூடாமற்போயிற்று. (ஏசா 33:23).
13. எழுத்தை வாசிக்க முடியாமற்போயிற்று. (தானி 5:8).
14. வியாக்கியானத்தை அறிவிக்க முடியாமற்போயிற்று. (தானி 5:15).

5 அதிகாரம்

15. கப்பலைக் கரைக்குக் கொண்டுவர முடியாமற்போயிற்று. (யோனா 1:13).

16. வியாதியைக் குணப்படுத்த முடியாமற் போயிற்று. (மத் 17:16; மாற்கு 9:18; லூக்கா 9:40).

17. அவருக்கு மறுபடியும் பதில் கூறமுடியாமற்போயிற்று.(லூக்கா 14:6).

18. அவருடைய பேச்சிலே குற்றம் கண்டுபிடிக்க முடியாமற்போயிற்று. (லூக்கா 20:26).

19. அவர்களால் விசுவாசிக்கமாட்டாமற் போயிற்று. (யோவான் 12:39).

20. அவிசுவாசத்தினாலே இளைப்பாறுதலில் பிரவேசிக்கக் கூடாமற்போனார்கள். (எபி 3:19).

21. தேவனுடைய வார்த்தையைச் சகிக்க மாட்டாதிருந்தார்கள். (எபி 12:20).

"ராஜ்யத்திலே மூன்றாம் அதிபதியாய் இருப்பாய்" - (தானி 5:7)

7. பெல்ஷாத்சாரைக் கடிந்து கொள்கிறான்

தானி 5:17 அப்பொழுது தானியேல் ராஜசமுகத்தில் பிரதியுத்தரமாக: உம்முடைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும்; உம்முடைய பரிசுகளை வேறொருவனுக்குக் கொடும்; இந்த எழுத்தை நான் ராஜாவுக்கு வாசித்து, இதின் அர்த்தத்தை தெரிவிப்பேன்.

தானி 5:18 ராஜாவே, உன்னதமான தேவன் உம்முடைய பிதாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு ராஜ்யத்தையும் மகத்துவத்தையும் கனத்தையும் மகிமையையும் கொடுத்தார்.

தானி 5:19 அவருக்குக் கொடுக்கப்பட்ட மகத்துவத்தினாலே சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவருக்கு முன்பாக நடுங்கிப் பயந்திருந்தார்கள்; அவர் தமக்குச் சித்தமானவனைக் கொன்றுபோடுவார், தமக்குச் சித்தமானவனை உயிரோடே வைப்பார்; தமக்குச் சித்தமானவனை உயர்த்துவார், தமக்குச் சித்தமானவனைத் தாழ்த்துவார்.

தானி 5:20 அவருடைய இருதயம் மேட்டிமையாகி, அவருடைய ஆவி கர்வத்தினாலே கடினப்பட்டபோது, அவர் தமது சிங்காசனத்திலிருந்து தள்ளப் பட்டார்; அவருடைய மகிமை அவரை விட்டு அகன்றுபோயிற்று.

தானி 5:21 அவர் மனுஷரினின்று தள்ளப்பட்டார்; அவருடைய இருதயம் மிருகங்களுடைய இருதயம் போலாயிற்று; காட்டுக்கழுதைகளோடே சஞ்சரித்தார்; உன்னதமான தேவன் மனுஷரின் ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமானவனை அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று அவர் உணர்ந்து கொள்ளுமட்டும் மாடுகளைப் போல் புல்லை மேய்ந்தார்; அவருடைய சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது.

தானி 5:22 அவருடைய குமாரனாகிய பெல்ஷாத்சார் என்னும் நீரோவென்றால், இதையெல்லாம் அறிந்திருந்தும், உமது இருதயத்தைத் தாழ்த்தாமல்,

தானி 5:23 பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக உம்மை உயர்த்தினீர்; அவருடைய ஆலயத்தின் பாத்திரங்களை உமக்கு முன்பாகக் கொண்டு வந்தார்கள்; நீரும், உம்முடைய பிரபுக்களும், உம்முடைய மனைவிகளும், உம்முடைய வைப்பாட்டிகளும் அவைகளில் திராட்சரசம் குடித்தீர்கள்; இதுவுமன்றி, தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும், உமது வழிகளுக்கு எல்லாம் அதிகாரியுமாகிய தேவனை நீர் மகிமைப்படுத்தாமல் காணாமலும் கேளாமலும் உணராமலும் இருக்கிற வெள்ளியும் பொன்னும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தீர்.

5 அதிகாரம்

தானி 5:24 அப்பொழுது அந்தக் கையுறுப்பு அவரால் அனுப்பப்பட்டு, இந்த எழுத்து எழுதப்பட்டது.

தானி 5:25 எழுதப்பட்ட எழுத்து என்னவென்றால்: மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் என்பதே.

"உம்முடைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும்" - தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு பொருளாதாரப் பிரதி பலன் எதையும் எதிர்பார்க்கமாட்டான்.

"தேவன் உம்முடைய பிதாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு ராஜ்யத்தையும் மகத்துவத்தையும் கனத்தையும் மகிமையையும் கொடுத்தார்" - (தானி 2:37-38; தானி 4:17, 25-26,32-36; தானி 5:21)

"தமக்குச் சித்தமானவனை உயர்த்துவார், தமக்குச் சித்தமானவனைத் தாழ்த்துவார்" - பொன்னாலாகிய தலையானது இது போன்ற ராஜ்யத்திற்கு உதாரணமாக உள்ளது. இது மன்னர் ஆட்சியைக் குறிக்கும். (தானி 2:38).

"அவருடைய இருதயம் மேட்டிமையாகி" - அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை (யோபு 33:14-29; நீதி 16:18).

"அவர் தமது சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டார்" - (தானி 4:19-37)

"மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தார்" - நேபுகாத்நேச்சார் மனநோயாளியாக இருந்த போது பாபிலோன் தேசத்தார் அவரைப் பராமரித்து கவனித்துக் கொண்டார்கள். அவர் மிருகங்கள் மத்தியில் வாழ்ந்த போதிலும் தேசத்தார் ஒரு மனிதனைக் கவனிப்பது போலவே அவரை பராமரித்தார்கள். நேபுகாத்நேச்சார் மறுபடியும் புத்தி தெளிந்தார்.

"அவருடைய குமாரன்" - அவனுடைய பௌத்திரன் (தானி 5:1)

"பெல்ஷாத்சார்" (Belshazzar) - தானியேல் பெல்ஷாத்சாருக்கு கர்த்தருடைய செய்தியை அறிவிக்கிறான். அவனுடைய அழிவுக்கு சரியான காரணம் கூறுகிறான். நேபுகாத்நேச்சாரைப் போல இவனும் மனமேட்டிமையாகவும் பெருமையாகவும் இருந்து கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான். (தானி 4:25-36 = தானி 5:22-30).

பெல்ஷாத்சாரின் பாவம்

1. தன் இருதயத்தைத் தாழ்த்தவில்லை.
2. தன் தாத்தாவோடு தேவன் நடப்பித்த கிரியைகளையெல்லாம் அறிந்திருந்தும், பெல்ஷாத்சார் அதின் மூலமாகப் பயன் பெறவில்லை. (தானி 5:22)
3. ஆண்டவருக்கு விரோதமாகத் தன்னை உயர்த்தினான். (தானி 5:23)
4. தேவனுடைய ஆலயத்தின் பாத்திரங்களைத் தீட்டுப்படுத்தினான். (தானி 5:23)
5. விக்கிரகங்களாகிய தேவர்களைப் புகழ்ந்தான். (தானி 5:23)
6. எல்லோருக்கும் ஜீவனைத்தரும் மெய் தேவனை மகிமைப்படுத்தவில்லை. (தானி 5:23)

"தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவர்" - (யோபு 34:14-15; சங் 104:29; சங் 146:4; ஏசா 42:5; அப் 17:25-29)

"உமது வழிகளுக்கு எல்லாம் அதிகாரி" - (யோபு 31:4;சங் 139:3; நீதி 20:24; எரே 10:23; எபி 4:13)

"காணாமலும் கேளாமலும் உணராமலும் இருக்கிற" - (சங் 115:4-8; சங் 135:15-17; ஏசா 37:19; ஏசா 46:6-7; ஆப 2:18-19; 1கொரி. 8:4).

5 அதிகாரம்

“அந்தக் கையுறுப்பு அவரால் அனுப்பப்பட்டு” - சுவற்றில் எழுதிய கர்த்தருடைய கையுறுப்பு உடனடியாக மறைந்து போகாமல் சிறுது நேரம் எல்லோருக்கும் பிரத்தியட்சமாகத் தெரிகிறது. பாபிலோன் தேசத்திலுள்ள ஜோசியருக்கு எழுத்தின் அர்த்தமும் புரியவில்லை, அதன் மறைபொருளும் புரியவில்லை. தானியேல் அங்கு வரும் வரையிலும் அதைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியவில்லை. (தானி 5:13-24).

தீர்க்கதரிசன எண் - 8

“எழுதப்பட்ட எழுத்து என்னவென்றால்: மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் என்பதே......” (தானி 5:25-28) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

“எழுத்து” - தானியேல் எழுத்தை வியாக்கியானம் பண்ணும்வரையிலும் அந்த எழுத்தும் அதன் அர்த்தமும் யாருக்கும் புரியவில்லை. தானியேலும் தன்னுடைய சொந்த திறமையினால் அதன் அர்த்தத்தைக் கூற வில்லை. பரிசுத்த ஆவியானவருடைய வரத்தினாலேயே தானியேல் அந்த எழுத்தை வாசித்து அதன் அர்த்தத்தைக் கூறுகிறார்.

“மெனே, மெனே” (MENE, MENE) - இதற்கு “எண்ணப்பட்டது "numbered" என்று பொருள். தேவன் அவனுடைய ராஜ்யத்தை எண்ணியிருக்கிறார். அதற்கு இப்போது முடிவு உண்டாக்கிவிட்டார். இதை வலியுறுத்திக் கூறுவதற்காக மெனே என்னும் வார்த்தை இரண்டுமுறை கூறப்பட்டிருக்கிறது. (தானி 5:25-26).

“தெக்கேல்” (TEKEL) - இந்த வார்த்தை “நிறுக்கப்பட்டது” ‘ஐங்ண்ஞ்ட்ங்க்’ என்றுபொருள். அவன் தராசிலே நிறுக்கப்பட்டான். ஆனால் குறையக் காணப்பட்டிருக்கிறான்.

(தானி 5:25,27).

“உப்பார்சின்” (UPHARSIN) - இந்த வார்த்தைக்குப் “பிரிக்கப்படுதல்” "division" என்று பொருள். அவனுடைய ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்படும். (தானி 5:25,28).

8. எழுத்தின் வியாக்கியானம்

தானி 5:26 இந்த வசனத்தின் அர்த்தமாவது: மெனே என்பதற்கு, தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார் என்றும்,

தானி 5:27 தெக்கேல் என்பதற்கு, நீ தாராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய் என்றும்,

தானி 5:28 பெரேஸ் என்பதற்கு, உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்றும் அர்த்தமாம் என்றான்.

தானி 5:29 அப்பொழுது பெல்ஷாத்சார் தானியேலுக்கு இரத்தாம்பரத்தையும், அவனுடைய கழுத்தில் பொற்சரப் பணியையும் தரிப்பிக்கவும், ராஜ்யத்திலே அவன் மூன்றாம் அதிகாரியாயிருப்பவன் என்று அவனைக்குறித்துப் பறைமுறையிடவும் கட்டளையிட்டான்.

“பெல்ஷாத்சார்” - பெல்ஷாத்சார் சொன்ன பிரகாரமாகவே தானியேலுக்கு வெகுமதிகளைக் கொடுக்கிறான். ஆனால் பாபிலோன் தேசத்தின் மூன்றாவது அதிபதியாக தானியேலால் ஆளுகை செய்ய முடியவில்லை. ஏனெனில் அன்று இரவே மேதிய பெர்சியா தேசத்தார் பாபிலோன் தேசத்தைக் கைப்பற்றினார்கள். (தானி 5:30). இஸ்ரவேல் தேசத்தாரை எழுபது வருஷங்களாக சிறைப்பிடித்து வைத்திருந்த பாபிலோனியரின் ஆட்சி அன்றுடன் முடிவுற்றது. (எரே 25; தானி 9:2).

“இரத்தாம்பரம்” - (தானி 5:7).

“கழுத்தில் பொற்சரப்பணியையும்” - இதை அணிவது அரசியலில் உயர்ந்த பதவியைக் குறிக்கும் அடையாளமாகும். (தானி 5:7).

5 அதிகாரம்

"ராஜ்யத்திலே அவன் மூன்றாம் அதிகாரி" - (தானி 5:1)

9. எழுத்து நிறைவேறுகிறது

தானி 5:30 அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான்.

தானி 5:31 மேதியனாகிய தரியு தன் அறுபத்திரண்டாம் வயதில் ராஜ்யத்தைக் கட்டிக் கொண்டான்.

"அன்று இராத்திரியிலே" - மதுபானத்தோடு விருந்து நடந்த அன்று இரவு. அதே இரவில் சுவரில் எழுத்து எழுதப்படுகிறது. (தானி 5:1,30).

"பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான்" - கல்தேயருடைய வரலாற்றை எழுதிய கேனேபோன் லங்ய்ர்ல்ட்ர்ய் என்னும் வரலாற்று ஆசிரியரின் குறிப்பின் பிரகாரம் பெல்ஷாத்சாரை அவனுடைய இரண்டு பிரபுக்கள் கொன்று போட்டார்கள். அவர்களுடைய பெயர் காதாதாஸ் (**Gadatas**), கோப்ரியாஸ் (**Gobrias**) என்பதாகும். பெல்ஷாத்சார் இவ்விருவருக்கும் ஏதோ தீங்கு செய்திருக்கிறான். அதற்காக அவனைப் பழிவாங்கும் முயற்சியில் இவர்கள் இருவரும் கோரேசோடு சேர்ந்துகொண்டு, பெல்ஷாத்சாரைக் கொன்றுபோட்டார்கள்.

"மேதியனாகிய தரியு" - (தானி 5:31; தானி 6:1-27; தானி 9:1). மேதியனாகிய தரியு என்னும் பெயரில் யாருமே இல்லை என்று ஒருசிலர் கூறுகிறார்கள். தரியு என்னும் பெயருக்கு பாதுகாவலர் என்று பொருள். சஷ்டாவிற்கும் மேலும் பலருக்கும் தரியு என்னும் பட்டம் வழங்கப்பட்டிருப்பதாக ஒருசிலர் கருத்து சொல்லுகிறார்கள். வரலாற்றில் மேதியனாகிய தரியு என்னும் பெயர் எங்கும் காணப்படவில்லை. இவன் ஒருவேளை அஸ்திகேஜசாக (**Astyages**) இருக்கலாம். முதலாம் தரியு, இரண்டாம் தரியு, மூன்றாம் தரியு ஆகியோருக்கு முன்பு இவன் பாபிலோன் தேசத்தை ஆட்சி புரிந்தான். தானியேல் புஸ்தகத்தை தவிர மேதியனாகிய தரியு என்னும் பெயர் வேறு எந்தப் புஸ்தகத்திலும் காணப்படவில்லை. யோசபஸ் என்னும் திருச்சபை வரலாற்றின் ஆசிரியர் இவனைப் பற்றி கூறும் போது இவன் அஸ்தகேஜசின் குமாரன் என்றும் கோரேசின் உறவினன் என்றும் குறிப்பிடுகிறார். இவன் தானியேலை மேதிய தேசத்திற்கு அழைத்துச் சென்று தன்னுடைய மாநிலம் முழுவதற்கும் அவனை பிரதான அதிகாரியாக நியமித்தான். தன்னுடைய தேசத்தில் அவனுக்கு எல்லாப் பொறுப்புகளையும் கொடுத்தான். பாபிலோனியருக்கும் மேதியருக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தைப் பற்றி தானியேல் எதுவும் கூறவில்லை. மற்ற தீர்க்கதரிசிகள் இந்த யுத்தத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். (ஏசா 13, ஏசா 14, ஏசா 45, ஏசா 46, ஏசா 47; எரே 1, எரே 51). இந்த யுத்தத்தில் மேதியரும், பெர்சியரும் ஒன்று சேர்ந்திருந்தார்கள். மேதியர் தரியுவின் கீழும், பெர்சியர் கோரேசின் கீழும் இருந்தார்கள். பாபிலோன் தேசத்தை இவர்கள் கைப்பற்றிய போது இவ்விரண்டு பிரபுக்களும் இருந்தார்கள் என்பது பொதுவான கருத்தாகும்.

6 அதிகாரம்

VI. தானியேலுக்குச் சோதனைகள் - சிங்கங்களின் கெபி

1. மேதிய பெர்சிய தேசத்தில் தானியேலின் உயர்ந்த ஸ்தானம்

தானி 6:1 ராஜ்யம் முழுவதையும் ஆளும்படிக்குத் தன் ராஜ்யத்தின்மேல் நூற்றிருபது தேசாதிபதிகளையும்,

தானி 6:2 ராஜாவுக்கு நஷ்டம் வராதபடிக்கு அந்த தேசாதிபதிக்கு கணக்கு ஒப்புவிக்கிறதற்காக அவர்களுக்கு மேலாக மூன்று பிரதானிகளையும் ஏற்படுத்துவது தரியுவுக்கு நலமென்று கண்டது; இவர்களில் தானியேல் ஒருவனாயிருந்தான்.

தானி 6:3 இப்படியிருக்கையில் தானியேல் பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்ட வனாயிருந்தான்; தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்.

"தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால்" - தானியேல் மற்ற பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாக இருந்தான். தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தது. ஆகையினால் அவன் மேன்மை அடைந்தான். இதனால் மற்றவர்கள் அவன் மேல் பொறாமைப் பட்டார்கள். (தானி 6:4-5).

2. பொறாமைகளும் பிரச்சனைகளும்

தானி 6:4 அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானியேலைக் குற்றப் படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள்; ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது; அவன் உண்மையுள்ள வனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை.

தானி 6:5 அப்பொழுது அந்த மனுஷர்: நாம் இந்த தானியேலை அவனுடைய தேவனைப்பற்றிய வேதவிஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடிக்கக் கூடாது என்றார்கள்.

"ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது" - சத்துருக்களால் தானியேலிடத்தில் எந்தக் குற்றத்தையும் காணமுடியவில்லை. தானியேல் ஒரு குற்றமும் செய்யாமல் பரிபூரணமானவனாக இருந்தான். ஆகையினால் தானியேலின் மார்க்க காரியங்களில் அவனைக் குறித்து குற்றப்படுத்த முயற்சி பண்ணினார்கள். இதிலும் அவன் மீது எந்த வித குற்றமும் சுமத்த முடியவில்லை. சூழ்ச்சி செய்து தானியேலுக்கு கெட்டப் பெயர் வாங்கிக் கொடுக்க அவர்கள் முயற்சி பண்ணினார்கள். தானியேல் சட்டத்தை மதிக்க வில்லையென்றும், அவன் தன்னைத்தான் உயர்த்துகிறான் என்றும் ராஜாவினிடத்தில் தானியேலைக் குறித்து குற்றம் சுமத்தினார்கள். (தானி 6:6-9).

3. ஆணையைப் பெற்றுக் கொண்டார்கள்

தானி 6:6 பின்பு அந்தப் பிரதானிகளும் தேசாதிபதிகளும் கூட்டங்கூடி ராஜாவினிடத்தில் போய், அவனை நோக்கி: தரியு ராஜாவே, நீர் என்றும் வாழ்க.

தானி 6:7 எவனாகிலும் முப்பது நாள்வரையில் ராஜாவாகிய உம்மைத் தவிர எந்த தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி, யாதொரு காரியத்தைக் குறித்து விண்ணப்பம் பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட, ராஜா கட்டளை பிறப்பித்து, உறுதியான தாக்கீது செய்யவேண்டு மென்று ராஜ்யத்தினுடைய எல்லாப் பிரதானிகளும், தேசாதிபதிகளும், பிரபுக்களும், மந்திரிமார்களும், தலைவர்களும் ஆலோசனைபண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

தானியேல் - தொகுப்புரை

6 அதிகாரம்

தானி 6:8 ஆதலால் இப்போதும் ராஜாவே, மேதியருக்கும் பெர்சியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படியே, அந்தத் தாக்கீது மாற்றப்படாதபடி நீர் அதைக் கட்டளையிட்டு, அதற்குக் கையெழுத்து வைக்கவேண்டும் என்றார்கள்.

தானி 6:9 அப்படியே ராஜாவாகிய தரியு அந்தக் கட்டளைப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைத்தான்.

"எவனாகிலும் முப்பது நாள்வரையில்" - தானியேல் தினமும் மூன்று முறை ஜெபம் பண்ணுவான் என்பது அவர்களுக்குத் தெரியும். முப்பது நாட்களுக்கு அவனுடைய ஜெபத்தை தடை பண்ணுவதற்குச் சத்துருக்கள் ராஜாவினிடத்திலிருந்து ஆணையைப் பெற்றார்கள் ஆனால் தானியேலோ ராஜாவின் ஆணையைப் பற்றி தெரிந்திருந்தும் தினமும் மூன்று முறை தொடர்ந்து ஜெபித்தான். இதனால் அவன் ராஜாவின் கட்டளையை மீறினான். (தானி 6:10)

4. தானியேலின் உறுதியான சுபாவம்

தானி 6:10 தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்.

"அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்ட தென்று அறிந்தபோதிலும்" - தானியேல் விசுவாசத்துடனும் தைரியத்துடனும் இருந்தான். இந்த சோதனையில் கர்த்தரும் அவருடைய மார்க்கமும் சம்மந்தப்பட்டிருக்கிறது. ராஜா அந்தப் பத்திரத்துக்கு கையெழுத்து வைத்துவிட்டார் என்பது தானியேலுக்குத் தெரியும். ஆயினும் முன்பு போலவே தானியேல் கர்த்தரை நோக்கி தினமும் மூன்று வேளை ஜெபம் பண்ணுகிறான். (தானி 6:5,10).

"தான் முன் செய்துவந்தபடியே" - தேசத்தில் போடப்பட்ட எந்த சட்டமும் தானியேலின் ஜெபத்தை தடை பண்ணவில்லை. இது வரையிலும் சுமார் 80 அல்லது 90 வருஷங்களாக தானியேல் கர்த்தருக்கு முன்பாக தொடர்ந்து ஜெபித்து வந்திருக்கிறான். இத்தனை வருஷம் தனக்கு ஜீவனைக் கொடுத்தவர் கர்த்தர் என்பதை தானியேல் அங்கீகரித்து ஜெபித்துக் கொண்டிருக்கிறார். கர்த்தருடைய வெளிப்பாட்டிற்காக தானியேல் நன்றி கூறுகிறார் (தானி 2:28). இக்கட்டான வேளைகளில் கர்த்தர் தானியேலின் விண்ணப்பத்திற்கு பதில் கொடுத்திருக்கிறார். (தானி 4:8-9; தானி 5:13).

"தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" - விக்கிரகாரதனைக்காரர்கள் சூரியனை நோக்கி நமஸ்காரம் பண்ணுவார்கள் ஆனால் தானியேலோ எருசலேமை நோக்கி ஜெபம் பண்ணினான். எருசலேமில் கர்த்தருடைய தேவாலயம் இருக்கிறது. கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அங்கு உலாவுகிறது. யூதர்கள் எருசலேமை விட்டு வெளியூருக்குச் செல்லும் போது, அந்தந்த ஊர்களிலிருந்து எருசலேமை நோக்கி ஜெபம்பண்ணுவது வழக்கம். (1இராஜா 8:44,48; 2நாளா. 6:34; சங் 5:7; சங் 28:2; சங் 138:2; யோனா 2:4). மாலைப்பொழுதில் தானியேல் கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணுவது வழக்கம். அது தேவாலயத்தில் அந்திப்பலி செலுத்தும் வேளையாகும். (தானி 9:21). தானியேல் காலை வேளையிலும் ஜெபிப்பது வழக்கம். அது தேவாலயத்தில் காலைப்பலி செலுத்தும் வேளையாகும். இவ்விரண்டிற்கும் நடுவில் தானியேல் மதியமும் ஜெபித்தார். தாவீது காலையிலும் மதியமும் இரவிலும் ஜெபிப்பதாக கூறுகிறார். (சங் 55:17) குறிப்பிட்ட வேளைகளில் ஜெபிப்பதைப் பற்றி அப் 2:15; அப் 3:1; அப் 10:9 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளது.

6 அதிகாரம்

5. தானியேலின்மீது குற்றச்சாட்டு

தானி 6:11 அப்பொழுது அந்த மனுஷர் கூட்டங்கூடி, தானியேல் தன் தேவனுக்கு முன்பாக ஜெபம்பண்ணி விண்ணப்பம் செய்கிறதைக் கண்டார்கள்.

தானி 6:12 பின்பு அவர்கள் ராஜாவுக்கு முன்பாக வந்து, ராஜாவின் தாக்கீதைக் குறித்து: எந்த மனுஷனாகிலும் முப்பது நாள்வரையில் ராஜாவாகிய உம்மைத் தவிர எந்த தேவனையானாலும் மனுஷனை யானாலும் நோக்கி யாதொரு காரியத்தைக்குறித்து விண்ணப்பம் பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்படவேண்டும் என்று நீர் கட்டளைப்பத்திரத்தில் கையெழுத்து வைத்தீர் அல்லவா என்றார்கள். அதற்கு ராஜா: அந்தக் காரியம் மேதியருக்கும் பெர்சியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படி உறுதியாக்கப்பட்டதே என்றான்.

தானி 6:13 அப்பொழுது அவர்கள் ராஜாவை நோக்கி: சிறைபிடிக்கப்பட்ட யூதேயா தேசத்தின் புத்திரரில் தானியேல் என்பவன் உம்மையும் நீர் கையெழுத்து வைத்துக்கொடுத்த கட்டளையையும் மதியாமல், தினம் மூன்று வேளையும் தான் பண்ணும் விண்ணப்பத்தைப் பண்ணுகிறான் என்றார்கள்.

"விண்ணப்பம்செய்கிறதைக் கண்டார்கள்" - தானியேலின் சத்துருக்கள் இதைத்தான் எதிர்பார்த்தார்கள். தானியேல் தன்னுடைய தேவனுக்கும் ஜெபவேளைக்கும் உண்மையுள்ளவனாக இருக்கிறான். ராஜாவின் கட்டளையை மீறி தானியேல் ஜெபம் பண்ணும் காரியத்தை தரியுவிற்கு அறிவிக்கிறார்கள். ராஜாவோ தானியேலுக்கு தண்டனை கொடுக்கவேண்டுமே என்று மனம் வருந்துகிறான். தானியேலை தண்டிக்க ராஜாவிற்கு மனமில்லை (தானி 6:11-22).

"மேதியருக்கும் பெர்சியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணம்" - மேதிய பெர்சிய தேசத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டால் அதில் ராஜா முத்திரையிடுவார். அதன் பின்பு அந்த சட்டத்தை யாராலும் மாற்ற முடியாது. ராஜாவாலும் மாற்றமுடியாது (தானி 6:15). அகாஸ்வேருவின் காலத்தில் அவன் யூதர்களை அழிப்பதற்கு ஆணையிட்டான் (எஸ் 3:13). அந்த ஆணையை எஸ்தரின் விண்ணப்பத்தை ஏற்று அகாஸ்வேரு ராஜாவினாலும் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியவில்லை (எஸ் 8:5). ஏற்கெனவே வெளியிடப்பட்ட ஆணையை நிவர்த்தி பண்ணுவதற்காக அகாஸ்வேரு மற்றொரு புதிய ஆணையை பிறப்பித்தான் (எஸ் 8:11). மேதிய பெர்சிய தேசத்தில் பிரமாணம் எப்போதும் மாறாததாக இருக்கும்.

6. இராஜாவின் முயற்சிகள்

தானி 6:14 ராஜா இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தன்னில் மிகவும் சஞ்சலப் பட்டு, தானியேலைக் காப்பாற்றும்படிக்கு அவன்பேரில் தன் மனதை வைத்து, அவனைத் தப்புவிக்கிறதற்காகச் சூரியன் அஸ்தமிக்கு மட்டும் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தான்.

தானி 6:15 அப்பொழுது அந்த மனுஷர் ராஜாவினிடத்தில் கூட்டமாய் வந்து: ராஜா கட்டளையிட்ட எந்தத் தாக்கீதும் கட்டளையும் மாற்றப்படக்கூடாதென்பது மேதியருக்கும் பெர்சியருக்கும் பிரமாணமாயிருக்கிறதென்று அறிவீராக என்றார்கள்.

"தன்னில் மிகவும் சஞ்சலப்பட்டு, தானியேலைக் காப்பாற்றும்படிக்கு அவன்பேரில் தன் மனதை வைத்து" - தன்னுடைய சட்டம் மீறப்பட்ட பொழுது தரியு தானியேலுக்காக மிகவும் சஞ்சலப்படுகிறான். ஆனால் நேபுகாத்நேச்சாரோ தன்னுடைய சட்டம் மீறப்பட்டதற்காக மிகுந்த கோபமடைந்தான் (தானி 3:13,19). இப்படிப்பட்ட சட்டத்தை இயற்றுமாறு தான் வஞ்சிக்கப்பட்டிருப்பதாக நினைத்து தரியு மனம் வருந்துகிறான். தானியேலை விடுவிக்க முயற்சி பண்ணுகிறான். ஆனால் தானியேலின் சத்துருக்களோ ராஜாவைச் செயல்படவிடாமல் தடுத்து விடுகிறார்கள். தான் இயற்றிய சட்டத்தை ராஜாவால் மீற முடியவில்லை (தானி 6:14-15).

6 அதிகாரம்

7. சிங்கங்களின் கெபியிலே தானியேலைப் போட்டார்கள்

தானி 6:16 அப்பொழுது ராஜா கட்டளையிட, அவர்கள் தானியேலைக் கொண்டுவந்து, அவனைச் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். ராஜா தானியேலை நோக்கி: நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்றான்.

தானி 6:17 ஒரு கல் கெபியினுடைய வாசலின்மேல் கொண்டுவந்து வைக்கப்பட்டது; தானியேலைப்பற்றிய தீர்மானம் மாற்றப்படாதபடிக்கு ராஜா தன் மோதிரத்தினாலும் தன் பிரபுக்களின் மோதிரத்தினாலும் அதின்மேல் முத்திரைபோட்டான்.

தீர்க்கதரிசன எண் - 9

“நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார்” (தானி 6:16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

தானியேல் தன் வாழ்நாள் முழுவதும் கர்த்தரையே சேவித்து வந்திருக்கிறார். கர்த்தரோடு அவருக்கு இதுவரையிலும் பல அனுபவங்கள் ஏற்பட்டிருக்கிறது. ராஜாவுக்கும் கர்த்தருடைய வல்லமையிலும் தானியேலின் விசுவாசத்திலும் நம்பிக்கை இருக்கிறது. சிங்கங்களிடமிருந்து கர்த்தர் தானியேலை காப்பாற்றுவார் என்று தரியு ராஜா நம்புகிறார். தானியேல் மூன்றாம் அதிகாரத்தில் மூன்று எபிரெய வாலிபர்கள் எரிகிற அக்கினிச் சூளையில் எரியப்பட்டதைப் பற்றிக் கூறப் பட்டுள்ளது. அவர்கள் கர்த்தரையே நம்பினார்கள். அதுபோலவே இப்போது தானியேல் சிங்கங்களின் கெபியில் போடப்பட்டிருக்கிறார். எரிகிற அக்கினிச் சூளையைப் போல சிங்கங்களும் ஜீவனை அழித்துப் போடக்கூடியவை. கர்த்தர் சிங்கங்களை விடவும், அக்கினிச் சூளையை விடவும் பெரியவர். தம்மை நம்புகிறவர்களை தப்புவிக்க கர்த்தர் வல்லவராக இருக்கிறார் (தானி 3:27; தானி 6:22).

“ஒரு கல் கெபியினுடைய வாசலின்மேல் கொண்டுவந்து வைக்கப்பட்டது” - தானியேலை சிங்கங்களின் கெபியில் போட்டபின்பு கெபியினுடைய வாசலின்மேல் ஒரு கல்லை வைத்து மூடினார்கள். தானியேல் இனிமேல் தப்பித்தால் கர்த்தருடைய அற்புத கிரியையின் படிதான் தப்பிக்க முடியும். தானியேல் எந்த தந்திரமும் செய்து சிங்கங்களின் கெபியிலிருந்து தப்பிக்க முடியாது. ஏனெனில் மூடப்பட்ட கல்மீது முத்திரையும் போடப் பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவைக் கல்லறையில் அடக்கம் பண்ணியபின்பு அதை ஒரு கல்லால் மூடி அந்த கல்லில் முத்திரை பதித்தார்கள். அவர்கள் போட்ட முத்திரை இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை உறுதி பண்ணிற்று (மத் 27:63-66; மத் 28:12-15).

8. தேவன் தானியேலை மீட்டார்

தானி 6:18 பின்பு ராஜா தன் அரமனைக்குப் போய், இராமுழுதும் போஜனம்பண்ணாமலும், கீதவாத்தியம் முதலானவைகளைத் தனக்கு முன்பாக வரவொட்டாமலும் இருந்தான்; அவனுக்கு நித்திரையும் வராமற்போயிற்று.

தானி 6:19 காலமே கிழக்கு வெளுக்கும் போது ராஜா எழுந்திருந்து, சிங்கங்களின் கெபிக்குத் தீவிரமாய்ப் போனான்.

தானி 6:20 ராஜா கெபியின் கிட்டவந்த போது, துயரசத்தமாய்த் தானியேலைக் கூப்பிட்டு: தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று தானியேலைக் கேட்டான்.

தானி 6:21 அப்பொழுது தானியேல்: ராஜாவே நீ என்றும் வாழ்க.

தானி 6:22 சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்; அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை என்றான்.

6 அதிகாரம்

"அவனுக்கு நித்திரையும் வராமற்போயிற்று" - தரியு ராஜா தானியேலின் மீது மிகுந்த அன்புடன் இருக்கிறார். ஆகையினால் தானியேலுக்கு துன்பம் வந்த போது ராஜாவுக்கு நித்திரை வரவில்லை (தானி 6:19,23-27).

9. தானியேலின் விரோதிகள் அழிக்கப் பட்டார்கள்

தானி 6:23 அப்பொழுது ராஜா தன்னில் மிகவும் சந்தோஷப்பட்டு, தானியேலைக் கெபியிலிருந்து தூக்கிவிடச் சொன்னான்; அப்படியே தானியேல் கெபியிலிருந்து தூக்கிவிடப்பட்டான்; அவன் தன் தேவன்பேரில் விசுவாசித்திருந்தபடியால், அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை.

தானி 6:24 தானியேலின்மேல் குற்றஞ்சாற்றின மனுஷரையோ வென்றால், ராஜா கொண்டுவரச் சொன்னான்; அவர்களையும் அவர்கள் குமாரரையும் அவர்கள் மனைவிகளையும் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள்; அவர்கள் கெபியின் அடியிலே சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள்மேல் பாய்ந்து, அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப் போட்டது.

"தானியேலைக் கெபியிலிருந்து தூக்கிவிடச் சொன்னான்" - கர்த்தர் தானியேலை சிங்கங்களின் வாயிலிருந்து தப்புவித்தார். இதனால் ராஜா மிகவும் சந்தோஷப்படுகிறான். ராஜா தன் ஆணையை மாற்றவில்லை. தானியேலை சிங்கங்கள் கொன்று போடக்கூடாது என்று ராஜா விரும்பினான். இப்பொழுது தானியேல் சிங்கங்களின் கெபியில் உயிருடன் இருக்கிறான். அவனை கெபியிலிருந்து தூக்கிவிடச் சொன்னான். ராஜா தானியேலை விடுவித்து அவனுடைய சத்துருக்களை சிங்கங்களின் கெபியில் தூக்கிப் போட்டு விடுமாறு ஆணையிட்டான்.

"அவன் தன் தேவன்பேரில் விசுவாசித்திருந்த படியால்" - இந்த சம்பவம் எபி 11:33 ஆவது வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப் போட்டது." - சிங்கங்கள் பசியுடன் உள்ளன. தானியேலின் சத்துருக்கள் கெபியின் அடியிலே சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள் மேல் பாய்ந்து அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப்போட்டது. ஆனால் அதே சிங்கங்கள் தானியேலை ஒன்றும் செய்யவில்லை. இரவு முழுவதும் தானியேலும் சிங்கங்களும் ஒரே கெபியில் இருந்திருக்கிறார்கள். கர்த்தர் சிங்கங்களின் வாயைக் கட்டிவிட்டார். தானியேல் கர்த்தரை விசுவாசித்தான். கர்த்தர் அவனை ஆபத்திலிருந்து பாதுகாத்தார் (எபி 11:33).

10. தரியுவின் ஆணை - ஏழு காரணங்கள்

தானி 6:25 பின்பு ராஜாவாகிய தரியு தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதினது என்னவென்றால்: உங்களுக்குச் சமாதானம் பெருகக்கடவது.

தானி 6:26 என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்பட வேண்டுமென்று என்னாலே தீர்மானம்பண்ணப்படுகிறது; அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும்நிலைத்திருக்கிறவர்; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவு பரியந்தமும் நிற்கும்.

தானி 6:27 தானியேலைச் சிங்கங்களின் கைக்குத் தப்புவித்த அவரே தப்புவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவருமாயிருக்கிறார் என்று எழுதினான்.

தானியேல் - முன்னுரை

6 அதிகாரம்

தானி 6:28 தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபாரகாலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது.

தரியு ராஜாவின் ஆணை

1. என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டும். (தானி 6:26).
2. அவர் ஜீவனுள்ள தேவன்.
3. அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்.
4. அவருடைய ராஜ்யம் அழியாதது. (தானி 6:26; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; வெளி. 11:15; வெளி. 22:4-5).
5. ஆபத்திலிருந்து அவரே தப்புக்கிறவர். (தானி 6:27).
6. வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங் களையும் செய்கிறவர்.
7. அவரே தானியேலைச் சிங்கங்களின் கைக்குத் தப்புவித்தவர். (தானி 6:27; எபி 11:33).

"தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும்" - பாபிலோனிலும், மேதிய பெர்சிய தேசத்திலும் தானியேல் உயர்த்தப்பட்ட சம்பவம் இரண்டாம் முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. (எபி 6:28; எபி 1:21).

"தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது" - இரண்டு இராஜ்ய பாரங்களைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது ஆகையினால் கோரேசு ஒரு தனி நபர் என்பதும், தரியு ஒரு தனி நபர் என்பதும் (தானி 5:31; தானி 6:1; தானி 9:1), அர்த்தசஷ்டாவும் தரியுவும் ஒரே நபரல்ல என்பதும் (நெகே 2:1), அகாஸ்வேருவும் தரியுவும் ஒரே நபரல்ல என்பதும் தெரிய வருகிறது. (எஸ் 1).

தானியேல் - முன்னுரை

7 அதிகாரம்

VII. தானியேலின் முதலாவது தரிசனம் - நான்கு மிருகங்கள் - *(2:31-35)*

1. தரிசனம் - *(7:1-14)*

(1) நான்கு காற்றுக்களும் நான்கு மிருகங்களு -(வசனம் 17; 2:31-35)

தானி 7:1 பாபிலோன் ராஜாவாகிய பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷத்திலே தானியேல் ஒரு சொப்பனத்தையும் தன் படுக்கையின் மேல் தன் தலையில் தோன்றின தரிசனங்களையும் கண்டான். பின்பு அவன் அந்தச் சொப்பனத்தை எழுதி, காரியங்களின் தொகையை விவரித்தான்.

தானி 7:2 தானியேல் சொன்னது: இராத்திரி காலத்தில் எனக்கு உண்டான தரிசனத்திலே நான் கண்டது என்ன வென்றால்: இதோ, வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது.

தானி 7:3 அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின.

"தானியேல் ஒரு சொப்பனத்தையும் தன் படுக்கையின்மேல் தன் தலையில் தோன்றின தரிசனங்களையும் கண்டான்" - பெல்ஷாத்சாரின் ராஜ்யபாரத்தின் காலத்தில் தானியேல் இரண்டு தரிசனங்களைக் கண்டார் (தானி 7,8). நேபுகாத்நேச்சார் இரண்டு சொப்பனங்களைக் கண்டான் (தானி 2,4). தானியேல் 6வது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளுக்கு மூன்று வருஷங்களுக்கு முன்பாக தானியேல் இந்த தரிசனத்தை கண்டான் (தானி 6:1= தானி 8:1) இந்த அதிகாரம் அரமாயிக்கு பாஷையில் எழுதப் பட்டிருக்கிறது.

இத்துடன் அரமாயிக்கு பாஷையில் எழுதப்பட்ட தானியேலின் பகுதி நிறைவு பெறுகிறது (தானி 2:4-7:28). தானியேலின் புஸ்தகம் எபிரெய பாஷையிலும் அரமாயிக் பாஷையிலும் எழுதப் பட்டிருப்பதினால் இதன் ஒரு பகுதி இஸ்ரவேல் தேசத்தாருக்கும் மற்றொரு பகுதி புறஜாதிதேசத்தாருக்கும் எழுதப்பட்டிருப்பதாக ஒரு சிலர் கூறுகிறார்கள். ஆனால் இந்தக் கருத்துக்கு வேதாகமத்தில் ஆதாரம் எதுவுமில்லை. தானியேலின் தரிசனங்கள் அனைத்துமே கடைசி நாட்களில் புறஜாதியாருக்கும் யூதருக்கும் நேரிடப்போகும் சம்பவங்களாகும் (தானி 2).

தீர்க்கதரிசன எண் - 10

"இராத்திரி காலத்தில் எனக்கு உண்டான தரிசனத்திலே நான் கண்டது என்ன வென்றால்:......" (தானி 7:2-14) தானி 7:2-7,12 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. தானி 7:8-11,13-14 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

"நாலு" - தானியேலின் தரிசனத்தில் பல அடையாளங்களும் வருகின்றன. இவற்றின் வியாக்கியானம் தானி 7:17-27 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. இந்த தரிசனத்தில் கூறப்பட்டிருக்கும் இராஜ்ஜியங்களும் தானி 2வது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் இராஜ்ஜியங்களும் ஒரே இராஜ்ஜியங்களாகும். இந்த தரிசனத்தில் கூடுதலாக ஒருசில விபரங்கள் சேர்க்கப் பட்டுள்ளது. தானி 2வது அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார் புறஜாதி ராஜாவாக வருணிக்கப்பட்டிருக்கிறான். இவனுடைய காலத்திலிருந்து இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலம் வரையிலும் தானி 2வது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஒரு பெரிய சிலையாக இந்த சம்பவங்களெல்லாம் வர்ணிக்கப் பட்டுள்ளது. இது மனுஷருடைய பார்வையில் காணப்படும் விளக்கமாகும். தானி 7வது அதிகாரத்தில் இதே இராஜ்ஜியங்களைப் பற்றியே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இது தேவனுடைய பார்வையில் காணப்படுகிற விளக்கமாகும். இந்த தரிசனத்தில் தானியேல் பெரிய மிருகங்களைக் காண்கிறார் (தானி 7:17).

7 அதிகாரம்

"காற்றுகள்" - காற்றுகள் என்பது யுத்தம், கலகம், தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் ஆகியவற்றுக்கு அடையாளமாகும். (தானி 7:1-3; தானி 8:7-13=எரே 25:32-33; வெளி 7:1-3).

"பெரிய சமுத்திரம்" - பெரிய சமுத்திரம் என்பது ஜனங்களுக்கு அடையாளமாகும். (தானி 7:17; வெளி 13:1; வெளி 17:1,15).

"மிருகங்கள்" - மிருகங்கள் என்பது இராஜ்ஜியங்களுக்கும் (தானி 7:17,23-24; தானி 8:20-23; வெளி 17:8-11) அவற்றின் ராஜாக்களுக்கும் (வெளி 11:7; வெளி 13:18; வெளி 17:8) அடையாளமாகும்.

(2) முதலாவது மிருகம் - சிங்கம் - இஸ்ரவேலை துன்புறுத்தும் மூன்றாவது உலகப் பேரரசு - பாபிலோன் - (2:36)

> தானி 7:4 முந்தினது சிங்கத்தைப்போல இருந்தது; அதற்குக் கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது; நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது; அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு, மனுஷனைப் போல இரண்டு காலின்மேல் நிமிர்ந்து நிற்கும்படி செய்யப்பட்டது; மனுஷ இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது.

"சிங்கம்" - சிங்கம் - சிங்கம் என்பது பாபிலோனைக் குறிக்காது என்று ஒரு சிலர் கூறுகிறார்கள். தானியேல் நாலு பெரிய மிருகங்களை சமுத்திரத்திலிருந்து எழும்புவதாக காண்கிறார். ஆகையினால் இவை தானியேலுக்குப் பின்பு வரும் வருங்கால இராஜ்ஜியங்களைக் குறிக்கும் என்பது இவர்களுடைய விவாதம். ஆனால் தானி 2வது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் பெரிய சிலை நேபுகாத்நேச்சார் பாபிலோனை ஆளுகை செய்யும்போது இருந்த பாபிலோனைக் குறிக்கிறது. தானியேல் நேபுகாத்நேச்சாரைப் பார்த்து "பொன்னான அந்த தலை நீரே" என்று கூறுகிறார் (தானி 2:38-39).

பாபிலோன் இராஜ்ஜியம் ஏற்கெனவே எழும்பிய பின்பு அது பொன்னான தலைக்கு ஒப்பிடப்படுகிறது. அதுபோலவே பாபிலோன் இராஜ்ஜியம் எழும்பிய பின்பு, இங்கு அது சிங்கத்தைப் போலிருந்த மிருகத்துக்கு ஒப்பிடப்படுகிறது. பாபிலோனின் ராஜா ஒரு சிங்கத்திற்கு ஒப்பிடப்படுகிறார். (ஏசா 5:29; எரே 4:7; எரே 50:17,44-46). அந்த சிங்கத்தின் இறகுகள் பாபிலோன் தேசத்தைக் குறிக்கும். ஏனெனில் பாபிலோன் கழுகுக்கு ஒப்புமையாக கூறப்படுகிறது. (எரே 48:40; எசே 17; ஆப 1:6-8) இதன் சிறகுகள் நேபுகாத்நேச்சார் விரைவாக சத்துருக்கள் மீது யுத்தம் பண்ணுவதைக் குறிக்கும். இன்னும் ஒரு சில வருஷங்களில் நேபுகாத்நேச்சார் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தான். அந்த சிறகுகள் பிடுங்கப் பட்டிருக்கும். அந்த மிருகம் மனுஷனைப்போல இரண்டு காலின்மேல் நிமிர்ந்து நிற்கும். மனுஷ இருதயம் அதற்கு கொடுக்கப்படும். நேபுகாத்நேச்சார் தேசங்களை ஜெயித்து தன்னுடைய ஆளுகைக்குள் கொண்டு வருவது நின்று போகும் என்பதை இது காண்பிக்கின்றது. அவன் புத்தி தடுமாறிப் போவான். மறுபடியும் புத்தி தெளிந்து மனுஷனைப்போலாவான். (தானி 4:33, 36)

தானியேலின் தரிசன விவரம்

1. வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது. (தானி 7:2).
2. வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின. (தானி 7:3).
3. முந்தினது சிங்கத்தைப்போல இருந்தது (தானி 7:4).
4. இரண்டாவது மிருகம் கரடிக்கு ஒப்பாயிருக்கிறது. (தானி 7:5).
5. மூன்றாவது சிவிங்கியைப் போலிருக்கிறது. (தானி 7:6).
6. நாலாம் மிருகம் கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருக்கிறது. (தானி 7:7).
7. அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது.

7 அதிகாரம்

8. அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப் பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது.

9. அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது.

10. அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று (தானி 7:8).

11. அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது.

12. அந்தக் கொம்பிலே மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது.

13. சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார் (தானி 7:9).

14. அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல இருந்தது.

15. அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப் போல துப்புரவாகவும் இருந்தது.

16. அவருடைய சிங்காசனம் அக்கினி ஜுவாலையாயிருந்தது.

17. அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்பாயிருந்தது.

18. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது (தானி 7:10).

19. ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்.

20. நியாயசங்கம் உட்கார்ந்தது.

21. புஸ்தகங்கள் திறக்கப்பட்டது.

22. சின்னக் கொம்பு பெருமையான பேச்சுகளைப் பேசினது. (தானி 7:11)

23. அந்த மிருகம் கொலைசெய்யப்பட்டது.

24. அதின் உடல் அழிக்கப்பட்டு, எரிகிற அக்கினிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

25. மற்ற மிருகங்களுடைய ஆளுகை அவைகளை விட்டு நீக்கப்பட்டது. (தானி 7:12).

26. அவைகளுக்குக் காலமும் சமயமும் ஆகுமட்டும் அவைகள் உயிரோடே இருக்கும்படி கட்டளையிடப்பட்டது.

27. மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார் (தானி 7:13).

28. அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்தார்.

29. அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்.

30. மனுஷகுமாரருக்குக் கர்த்தத்துவம் கொடுக்கப்பட்டது. (தானி 7:14).

31. அவருக்கு மகிமை கொடுக்கப்பட்டது.

32. அவருக்கு ராஜரிகம் கொடுக்கப்பட்டது.

33. சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்க வேண்டும்.

34. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவம்.

35. அவருடைய ராஜ்யம் அழியாததாயிருக்கும்.

(3) இரண்டாவது மிருகம் - கரடி - நான்காவது உலகப் பேரரசு - மேதியரும் பெர்சியரும் - *(2:39)*

தானி 7:5 பின்பு, கரடிக்கு ஒப்பாகிய வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன்; அது ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நின்று, தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாஎலும்புகளைக் கவ்விக் கொண்டிருந்தது; எழும்பி, வெகு மாம்சம் தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது.

7 அதிகாரம்

"கரடி" - இது மேதிய பெர்சிய தேசத்திற்கு அடையாளமாகும். இவர்கள் கொடுரமனவர்கள், கொள்ளைக்காரர்கள், இரத்தப்பிரியர்கள், கொள்ளைப் பொருட்களின் மீது ஆசைப் படுகிறவர்கள் (ஏசாயா 13:14-18, எரே 51:48-56). மேதிய தேசத்தின் மலைகளில் பலவிதமான கரடிகள் இருந்தன.

"ஒரு பக்கம்" - இது பெர்சிய தேசத்தின் வலிமையைக் குறிக்கும். மேதியரைவிட பெர்சியர் வலிமையோடு இருப்பார்கள். தானி 8:3வது வசனத்தில் ஆட்டுக்கடாவின் கொம்புகளைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது அதில் ஒரு கொம்பு மற்றதைப் பார்க்கிலும் உயர்ந்திருக்கும். பெர்சியனாகிய கோரேசு என்பவன் மேதியனாகிய தரியு என்பவனை விட உயர்ந்திருப்பான் (தானி 5:31). இவன் பிந்திவந்தவன் (2நாளா 36:20-23; எஸ்றா 1:1-8; எஸ்றா 3:7; எஸ்றா 4:5; ஏசா 44:28; ஏசா 45:1). இந்த இராஜ்ஜியத்தைப் பற்றி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (தானி 5:24-31; தானி 6:1-28; தானி 7:5,17; தானி 8:1-4,20; தானி 10:1-20; தானி 11:1-2; ஏசா 13:17-22; ஏசா 21:2; 2இராஜா 17:6; 2இராஜா 18:11; எஸ் 1:1-9:3).

"தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக் கொண்டிருந்தது" - மேதிய பெர்சிய தேசத்தார் பாபிலோனையும், லீதியாவையும், எகிப்தையும் ஜெயிப்பார்கள். இந்தக் கரடி வெகு மாம்சம் புசிக்கும், மூன்று விலா எலும்புகளை கவ்விக்கொள்ளுதல் என்பது இந்த மூன்று இராஜ்ஜியங்களையும் ஜெயிப்பதற்கு அடையாளமாகும்.

(4) மூன்றாவது மிருகம் - சிவிங்கி - ஐந்தாவது உலகப் பேரரசு - கிரேக்கம் - (2:39; வெளி 13:1-18; 17:3, 8-17)

தானி 7:6 அதின்பின்பு, சிவிங்கியைப் போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன்; அதின் முதுகின்மேல் பட்சியின் செட்டைகள் நாலு இருந்தது; அந்த மிருகத்துக்கு நாலு தலைகளும் உண்டாயிருந்தது; அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது.

"சிவிங்கி" - சிவிங்கி கிரேக்கு தேசத்திற்கு அடையாளமாகும். மகா அலெக்சாண்டர் கிரேக்கு தேசத்தை ஸ்தாபித்தான். சிவிங்கி விரைந்து ஓடக்கூடியது இதற்கு பட்சியின் செட்டைகள் நான்கு இருந்தன. ஆகையினால் இந்த மிருகம் மிகவும் விரைவாக ஓடும். அலெக்சாண்டர் பல தேசங்களை குறுகிய காலத்தில் மிகவும் விரைவாக ஜெயித்தான். இதற்கு முன்பு சிங்கத்திற்கும் இரண்டு சிறகுகள் இருந்ததாக கூறப்பட்டிருக்கிறது. அதுவும் விரைவைக் குறிக்கும். ஆனால் சிவிங்கிக்கோ நான்கு சிறகுகள் உள்ளன. நேபுகாத்நேச்சாரை விட மகா அலெக்சாண்டர் இரண்டு மடங்கு வேகமாக ஜெயம்பெற்றான். மற்ற மிருகங்களின் வெற்றிகள் அலெக்சாண்டரின் வெற்றிகளைப் போல விரைவாக இராது. இந்த சிவிங்கிக்கு நான்கு தலைகள் உள்ளன. அலெக்சாண்டரின் மரணத்திற்குப் பின்பு கிரேக்கப் பேரரசு நான்கு பிரிவுகளாகப் பிரியும். நான்கு கொம்புகள் என்பது இதையே குறிப்பிடுகிறது. (தானி 8:8,22-23) தலைகள் பொதுவாக இராஜ்ஜியங்களைக் குறிக்கும் (தானி 8:20-23; வெளி 17:9-11) இந்த இராஜ்ஜியம் தானி 2:32, 35,39,45; தானி 7:6,17; தானி 8:5-25; தானி 10:20; தானி 11:3-45; சக 8:13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

7 அதிகாரம்

(5) நான்காவது மிருகம் - பெயர் இல்லை - ஆறாவது உலகப் பேரரசு - ரோம் - (2:40)

தானி 7:7 அதற்குப்பின்பு, இராத் தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப் பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது.

"அதற்குப்பின்பு" - நான்காவது இராஜ்ஜியம் அதற்கு முந்தைய இராஜ்ஜியமாகிய கிரேக்கு தேசத்தை தொடர்ந்து வரும். ஆகையினால் இந்த வசனத்தில் "அதற்குப் பின்பு" என்று கூறப்பட்டிருக்கிறது (தானி 7:6,7).

"நாலாம் மிருகம்" - நாலாம் மிருகம் பழைய ரோமப்பேரரசுக்கு அடையாளமாகும். நான்கு இராஜ்ஜியங்களின் வரிசையில் ரோமபேரரசு நான்காவதாக வருகிறது. புதிய ஏற்பாட்டில் மட்டுமே ரோமப்பேரரசின் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. (யோவான் 11:48; அப் 2:10; அப் 16:21) இது கெடியும், பயங்கரமும், மகா பலத்ததுமான மிருகமாகும். பெரிய சிலையில் இதுவே இரும்பாகக் கூறப்பட்டிருக்கிறது (தானி 2:40-43). இந்த மிருகம் மற்ற மிருகங்களைத் தன் கால்களால் மிதித்துப் போடும். பாபிலோன், மேதிய பெர்சிய தேசம், கிரேக்கு தேசம் ஆகிய தேசங்களை ரோமப் பேரரசு கைப்பற்றும். மற்ற மிருகங்களுக்கும் நான்காவது மிருகத்திற்கும் வித்தியாசமுள்ளது. மற்ற பேரரசுகளில் மன்னர் ஆட்சி இருந்தது. ரோமப்பேரசில் மக்களாட்சி இருக்கிறது. அத்துடன் வல்லமை ஆளுகை செய்யும் தேசங்கள், அதிகாரத்தின் கால அளவு ஆகியவற்றிலும், ரோமப்பேரரசிற்கும், மற்ற இராஜ்ஜியங்களுக்கும் வித்தியாசமுள்ளன.

பத்துக் கொம்புகள் என்பது கடைசி நாட்களில் உள்ள பத்து இராஜ்ஜியங்களைக் குறிக்கும். இது பழைய ரோமப்பேரரசின் இறுதி வடிவமாகும் (தானி 7:7-8,23-24; வெளி 13; வெளி 17:8-17). கொம்புகள் பொதுவாக ராஜாக்களைக் குறிக்கும் (தானி 7:7-8,23-24; தானி 8:8-9,20-23; வெளி 17:8-17).

(6) பத்து கொம்புகளும் சின்னக் கொம்பும் - பிந்தைய ரோமும் பிந்தைய கிரேக்கமும் - (வசனம் 24; வெளி 13, 17)

தானி 7:8 அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது; இதோ, அந்தக் கொம்பிலே மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது.

"அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக் கையில்" - தானியேல் தரிசனம் கண்டபோது கடைசியாக கொம்புகளைப் பார்க்கிறார். ஆகையினால் இவை இங்கு கடைசியாக கூறப்பட்டிருக்கிறது (தானி 7:8,23-24; வெளி 17:12-17).

"அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று" - பத்துக்கொம்புகள் எழும்பின. அவை முழுவதுமாக வளர்ந்தன. அதன்பின்பு ஒரு சின்னக் கொம்பு எழும்புகிறது. இந்த சின்னக்கொம்பு முந்தின கொம்புகளில் மூன்று கொம்புகளைப் பிடுங்கிப் போட்டது. சின்னக்கொம்பு அந்திகிறிஸ்துவின் வருகையைக் குறிக்கும். பிந்திய ரோமப்பேரரசில் உள்ள பத்து இராஜ்ஜியங்களில் மூன்று இராஜ்ஜியங்களை அந்திக்கிறிஸ்து கைப்பற்றுவான். மற்ற இராஜ்ஜியங்கள் யுத்தம்பண்ணாமலேயே அந்திக்கிறிஸ்துவின் வசமாகும். (தானி 7:8,23-24; வெளி 17:11-17).

7 அதிகாரம்

"அந்தக் கொம்பிலே மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது" - சின்னக்கொம்பு ஒரு மனுஷனாக கூறப்பட்டிருக்கிறது. இவன் தேவனுக்கு எதிராக தூஷண வார்த்தைகளைப் பேசுகிறான். (தானி 7:8,25; தானி 11:36; வெளி 13:1,5; வெளி 17:3).

(7) நியாயத்தீர்ப்பு

(அ) நியாயாதிபதி

தானி 7:9 நான் பார்த்துக் கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப் போல துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினி ஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது.

"சிங்காசனங்கள் வைக்கப்பட்டது" - இது பாபிலோனின் காலத்திலிருந்து தானி 7:9-10 ஆகிய வசனிங்களில் கூறப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்பு வரையிலும் உள்ள காலமாகும். இதில் அந்திக்கிறிஸ்து தோற்கடிக்கப்படுவதும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் இடம் பெறுகிறது. (தானி 7:11-14). நியாயத் தீர்ப்பின் சிங்காசனங்கள் வைக்கப்படுகிறது. தேசங்கள் மீது நியாயத் தீர்ப்புண்டாகும். (தானி 7:26; மத் 25:31-46).

"நீண்ட ஆயுசுள்ளவர்" **(Ancient of days)** - இந்த வாக்கியம் பிதாவாகிய தேவனைக் குறிக்கும். இது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்காது. ஏனெனில் தானி 7:13-14 ஆகிய வசனங்களில் நீண்ட ஆயுசுள்ளவரைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. இந்த நபர் வேறு. இயேசுகிறிஸ்து வேறு. தானியேல் தன்னுடைய தரிசனத்தில் ஒரே இடத்தில் பிதாவையும் காண்கிறார். குமாரனையும் காண்கிறார்.

தேவனும் நியாயத்தீர்ப்பும்

1. சிங்காசனங்கள் வைக்கப்பட்டது (தானி 7:9).
2. தேவன் இயற்கையான கண்களால் பார்க்கப்படுகிறார்.
3. நீண்ட ஆயுசுள்ளவர் ஒரு நபரைப்போல சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார். (தானி 7:9)
4. ஒரு நபரைப்போல வஸ்திரம் அணிந்திருக்கிறார். (தானி 7:9).
5. அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போல வெண்மையாக இருக்கிறது. (தானி 7:9).
6. அவருக்கு மற்ற நபர்களைப்போல சிரசு இருக்கிறது. (தானி 7:9).
7. அவருடைய சிரசில் மயிர் இருக்கிறது. (தானி 7:9).
8. அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப் போல துப்புரவாகவும் இருக்கிறது. (தானி 7:9).
9. அவருடைய சிங்காசனம் அக்கினி ஜுவாலையாக இருக்கிறது.
10. அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புபோல இருக்கிறது. (தானி 7:9; எசே 1:15-20, 25-28; எசே 10:9-13).
11. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடுகிறது. (தானி 7:10).
12. ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவிக்கிறார்கள். (தானி 7:10).
13. கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நிற்கிறார்கள். (தானி 7:10).
14. நியாயசங்கம் உட்கார்ந்தது.
15. புஸ்தகங்கள் திறக்கப்பட்டது.

7 அதிகாரம்

(ஆ) நியாயத்தீர்ப்பு

தானி 7:10 அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம் பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது.

(இ) சின்னக்கொம்பு அழிக்கப்பட்டது - (8:25; 9:27; 11:45; 2தெச 2:8; ஏசா 11:4; வெளி 19:19-21; 20:10)

தானி 7:11 அப்பொழுது நான் பார்த்தேன்; நான் பார்த்துக் கொண்டிருக்கையில் அந்தக் கொம்பு பெருமையான பேச்சுகளைப் பேசினதினிமித்தம் அந்த மிருகம் கொலைசெய்யப்பட்டது; அதின் உடல் அழிக்கப்பட்டு, எரிகிற அக்கினிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அந்திக்கிறிஸ்துவைப் பற்றிய செய்தி

1. அவன் பெருமையான வார்த்தைகளைப் பேசுவான். (தானி 7:8,11,20,25; தானி 8:23-25; தானி 11:36; வெளி 13:5).

2. அவன் கொலைசெய்யப்படுவான். (தானி 7:11; தானி 8:25; தானி 11:45; ஏசா 11:4; 2தெச 2:8; வெளி 19:20). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அந்திக்கிறிஸ்து கொலைசெய்யப்படுவான். கடைசி நாட்களில் இவன் மரித்துப்போகும் மனுஷனாக இருப்பான். அவனுக்கு நியமிக்கப்பட்ட பிரகாரம் அவன் ஒரே தரமும், கடைசித்தரமும் மரித்துப் போவான். (எபி 9:27).

3. அவனுடைய சரீரம் அழிக்கப்படும். (தானி 7:11; மத் 10:28; லூக்கா 12:5).

4. அவனுடைய உடல் எரிகிற அக்கினிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். (தானி 7:11; வெளி 19:20; வெளி 20:10).

(ஈ) மற்ற மிருகங்களுடைய ஆளுகை

தானி 7:12 மற்ற மிருகங்களுடைய ஆளுகையோவென்றால், அவைகளை விட்டு நீக்கப்பட்டது; ஆனாலும், அவைகளுக்குக் காலமும் சமயமும் ஆகுமட்டும் அவைகள் உயிரோடே இருக்கும்படி கட்டளையிடப்பட்டது.

"மற்ற மிருகங்கள்" - மற்ற மிருகங்கள் என்பது சின்னக்கொம்பு எழும்புவதற்கு முன்பாக வரும் மற்ற மிருகங்களை அல்லது மற்ற இராஜ்ஜியங்களைக் குறிக்கும். ஒவ்வொரு மிருகமும் ஒவ்வொரு காலத்தில் இராஜ்ஜியபாரம் பண்ணி பின்பு அழிந்துபோகும். அதன்பின்பு சின்னக்கொம்பு வரும். இது 8வது இராஜ்ஜியமாகும். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு சின்னக்கொம்பு என்னும் இராஜ்ஜியம் கடைசி இராஜ்ஜியமாகும். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பின்பு பூமியில் பரலோக இராஜ்ஜியம் நித்தியமாக ஸ்தாபிக்கப்படும். (தானி 7:12-14,18,27; தானி 8:20-25; தானி 9:27; தானி 11:35-45; தானி 12; சக 14; மத் 24:15-31; மத் 25:31-46; 2தெச 1:7-10; 2தெச 2:8-12; யூதா 1:14; வெளி 13; வெளி 17:8-17; வெளி 19:11-21).

(8) மேசியாவின் இரண்டாம் வருகை - (ஏசா 9:1; மத் 24:29; 25:31; 2தெச 1:7)

தானி 7:13 இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்.

தானி 7:14 சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்.

7 அதிகாரம்

"மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர்" - இந்த வாக்கியம் இயேசுகிறிஸ்துவைக் குறிப்பிடுகிறது. இவர் தானி 7:9-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும். நீண்ட ஆயுசுள்ளவர் அல்ல. இவர் திரித்துவத்தின் வேறொரு நபர். இவர் வானத்து மேகங்களுடனே வருகிறார் (தானி 7:13). இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி இங்கு கூறப் பட்டிருக்கிறது. (ஏசா 63:1-6; சக. 14:1-5; மத் 24:29-31; மத் 25:31-46; மத் 26:64; 2தெச. 1:7-10; 2தெச. 2:8; யூதா 1:14; வெளி. 1:7; வெளி. 11:15; வெளி. 19:11-21).

"அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இட மட்டும் வந்து" - மனுஷ குமாரன் நீண்ட ஆயுசுள்ளவரிடத்தில் வருகிறார். ஆகையினால் இவர்கள் இருவருமே ஒரே நபரல்ல. இவர்கள் திரித்துவத்தில் வெவ்வேறு நபர்கள்.

"அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்" - இயேசுகிறிஸ்து ஆளுகையையும் மகிமையையும், இராஜ்ஜியத்தையும் பெற்றுக் கொள்கிறார். இயேசுகிறிஸ்துவின் இராஜ்ஜியம் நித்திய இராஜ்ஜியமாகும். இவருடைய கர்த்தத்துவம் நீங்காதது, நித்தியமானது. அவருடைய இராஜ்ஜியம் அழியாதது.

வேதாகமச் சத்தியம்

1. தமது இரண்டாம் வருகையின்போது இயேசு கிறிஸ்து ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக் கொள்வார். (தானி 7:13-14; சக. 14; மத் 24:29-31; மத் 25:25:31-46; யூதா 1:14; வெளி. 11:15; வெளி. 19:11-20:10).

2. அவருடைய ராஜ்யம் நித்தியமானதாக இருக்கும். (தானி 7:13-14,18,27; தானி 2:35,44-45; தானி 4:3; தானி 6:26; சங் 45:6; சங் 145:13; சங் 146:10; ஏசா 9:6-7; ஒப 21; மீகா 4:7; மத் 25:31-46; லூக்கா 1:32-33; எபி 1:8; வெளி. 11:15; வெளி. 22:4-5).

3. அவருடைய ராஜ்யத்தில் உள்ள ஜனங்கள் இயற்கையான ஜனங்களாக இருப்பார்கள். அவர்கள் நித்திய சந்ததிகளாக இருப்பார்கள். (தானி 7:13-14,18,27; தானி 2:44-45; ஆதி 8:22; ஆதி 9:12; ஏசா 9:6-7; ஏசா 59:21; வெளி. 11:15).

2. வியாக்கியானம் - (7:15-28)

(1) தூதனின் வியாக்கியானம்

தானி 7:15 தானியேலாகிய நான் என் தேகத்தினுள் என் ஆவியிலே சஞ்சலப் பட்டேன்; என் தலையில் தோன்றின தரிசனங்கள் என்னைக் கலங்கப் பண்ணினது.

தானி 7:16 சமீபத்தில் நிற்கிறவர்களில் ஒருவனிடத்தில் நான் போய், இதன் பொருள் எல்லாவற்றையும் எனக்குச் சொல்லும்படி அவனை வேண்டிக் கொண்டேன்; அவன் அந்தக் காரியங்களின் அர்த்தத்தை எனக்கு அறிவித்துச் சொன்னது என்னவென்றால்:

"என் தேகத்தினுள் என் ஆவியிலே" - மனுஷனுடைய ஆவியும் அவனுடைய சரீரமும் ஒன்றல்ல வெவ்வேறானவை (மத் 10:28). ஆவி தனியாகவும் சரீரம் தனியாகவும் இருக்கும். (லூக்கா 16:19-31; 2கொரி. 5:8; பிலி. 1:21-24; எபி 12:23; யாக் 2:26; வெளி. 6:9-11) ஆவி மரிக்காது. (1பேதுரு 3:4).

"சமீபத்தில் நிற்கிறவர்களில் ஒருவன்" - கர்த்தருடைய நியாயாசனத்திற்கு முன்பாக கோடாகோடிபேர் நிற்கிறார்கள். அவர்களில் ஒருவனிடம் தானியேல் பேசுகிறார். (தானி 7:10) அந்த நபர் தானியேலுக்கு இந்தத் தரிசனத்தின் வியாக்கியானத்தை அறிவிக்கிறார். (தானி 7:16-27) இந்த நபர் ஒருவேளை காபிரியேலாக இருக்கலாம். மற்ற தரிசனங்களில் காபிரியேல் தானியேலுக்கு உதவி புரிந்திருக்கிறார். (தானி 8:16; தானி 9:21).

தானியேல் – தொகுப்புரை

7 அதிகாரம்

(2) நான்கு மிருகங்கள் - நான்கு இராஜாக்கள் அல்லது இராஜ்ஜியங்கள் - (வசனம் 19,23; 8:21; 2:31-45)

தானி 7:17 அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள்.

தீர்க்கதரிசன எண் - 11

"அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள்......." (தானி 7:17-27) தானி 7:17,19,23 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. தானி 7:18,20-22, 24-27 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நாலு மிருகங்களின் வியாக்கியானம்

1. நான்கு மிருகங்களும் இதற்கடுத்து வரப் போகும் நான்கு ராஜாக்களாகவோ அல்லது நான்கு ராஜ்யங்களாகவோ இருக்கும். (தானி 7:17,23-24; தானி 2:39-43; தானி 8:20-23; வெளி. 17:9-11).
2. பத்து ராஜ்யங்களின் நாட்களிலும், சின்னக் கொம்பின் நாட்களிலும், பரலோகத்தின் தேவன் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். (தானி 7:18,27; தானி 2:44-45; வெளி. 17:8-17).
3. பரலோகத்தின் ராஜ்யமும், தேவனுடைய ராஜ்யமும், உன்னத மானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரிகம் பண்ணுவதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்படும். (தானி 7:13-14,18,27; மத் 13:41-50; மத் 25:31-46; ரோமர் 8:17-18; 1கொரி. 6:2; 2தீமோ. 2:12; வெளி. 1:6; வெளி. 5:10; வெளி. 11:15; வெளி. 20:4-6; வெளி. 22:4-5).
4. கிறிஸ்துவின் ராஜ்யமும், அவருடைய பரிசுத்தவான்களின் ராஜ்யமும் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களுக்கும் இருக்கும். (தானி 7:14).
5. நித்திய ராஜ்யத்தில் ராஜரிகம் பண்ணப்படும் ஜனங்கள் வருங்காலத்தில் எல்லா தேசங்களிலும் இருக்கும் இயற்கையான நித்திய சந்ததியாராக இருப்பார்கள். (தானி 7:14).
6. நான்காம் மிருகம் நான்காம் ராஜ்யமாக இருக்கும். இது முந்திய ரோமப்பேரரசு. முதலாவதாக வந்த மூன்று மிருகங்களின் எல்லைகளை நான்காவது மிருகம் பட்சித்துப்போடும். (தானி 7:7-8,19,23).
7. நான்கு கொம்புகள் என்பது நான்காவது ராஜ்யத்திலிருந்து எழும்பும் பத்து ராஜ்யங்களாகும். நான்காவது ராஜ்யம் முந்திய ரோமப்பேரரசு. இவை இன்னும் ஸ்தாபிக்கப் படவில்லை. (தானி 7:7-8, 20,23-24; வெளி. 17:9-17).
8. சின்னக்கொம்பு என்பவன் அந்திக் கிறிஸ்து. பத்து ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப் பட்ட பின்பு, இவன் அந்த ராஜ்யங்களின் நடுவிலிருந்து வருவான். (தானி 7:7-8, 20,23-24; வெளி. 17:8-17).
9. சின்னக்கொம்பின் அதிகாரமும், பத்துக் கொம்புகளின் அதிகாரமும் ஒன்றுபோல் இராமல், வித்தியாசமாக இருக்கும். (தானி 7:7-8,20,23-24; தானி 8:20-23; தானி 11:35-45; வெளி. 13:1-18; வெளி 17:8-17).
10. பத்துக் கொம்புகளிலுள்ள மூன்று ராஜ்யங்களைச் சின்னக்கொம்பு தனக்குக் கீழ்ப்படுத்துவான். தானி 7:7-8,20, 23-24; தானி 8:20-23; தானி 11:35-45; வெளி 13:1-18; வெளி 17:8-17).
11. சின்னக்கொம்பு அகந்தையான காரியங்களைப் பேசும்.

7 அதிகாரம்

12. சின்னக்கொம்பு பரிசுத்தவான்கள் மீது யுத்தம் பண்ணும். (தானி 7:21,25; தானி 8:23-25; தானி 9:27; தானி 11:35-45; தானி 12:7; வெளி 11:7; வெளி. 13:7; வெளி. 14:9-11; வெளி. 15:2-4; வெளி. 20:4-6). இவன் மூன்று காரியங்கள் நிறைவேறும் வரையிலும் பரிசுத்தவான்களை ஆளுகை செய்வான். நிறைவேற வேண்டிய மூன்று காரியங்களாவன:

(1) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நீண்ட ஆயுசுள்ளவரின் வருகை. இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்து சின்னக் கொம்பை அழிப்பார். (தானி 7:21-22,26-27; தானி 8:23-25; தானி 9:27; தானி 11:40-45; தானி 12:7; வெளி.17:8-17; வெளி. 19:11-21).

(2) பரிசுத்த வான்களுக்கு நியாயம் வழங்கப்படும். (தானி 7:22; 2கொரி. 6:2).

(3) பரிசுத்த வான்கள் ராஜ்யத்தைச் சுதந்தரிப்பார்கள். (தானி 7:18,22, 27; மத் 25:31-46; லூக்கா 22:30; ரோமர் 8:17-18; 2தீமோ 2:12; வெளி. 1:6; வெளி. 5:10; வெளி. 11:15; வெளி. 20:4-6; வெளி. 22:4-5).

13. சின்னக்கொம்பு காலங்களையும், பிரமாணங்களையும் மூன்றரை வருஷங்களுக்கு மாற்றுவான். (தானி 7:25; தானி 12:7; வெளி. 13:5).

14. நீண்ட ஆயுசுள்ளவர் வந்து, நியாயத்தீர்ப்பு செய்யும்போது சின்னக்கொம்பின் காலம் முடிவுக்கு வரும். (தானி 7:26; தானி 8:25; தானி 9:27; தானி 11:40-45; தானி 12:7; வெளி. 19:11-21).

15. சின்னக்கொம்பின் ராஜ்யமும், உலகத்திலுள்ள மற்ற ராஜ்யங்களும் இயேசு கிறிஸ்துவிற்கும், உன்னதமானவரின் பரிசுத்த வான்களுக்கும் கொடுக்கப்படும். அதன் பின்பு, கிறிஸ்துவின் ராஜ்யம் நித்திய ராஜ்யமாக சதாகாலங்களிலும் நிலைத்திருக்கும்.(தானி 7:13-14,18,27; தானி 2:44-45; வெளி. 19:11-21; வெளி. 20:1-10; சக. 14).

இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலம்

1. ராஜா தமது மகிமையிலிருந்து திரும்பி வரும்போது. (மத் 25:31-46; ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14; தானி 8:18-22; சக. 14; 2தெச. 1:7; யூதா 1:14; வெளி. 17:14; வெளி. 19:11-20:7).

2. எருசலேமைச் சத்துருக்கள் முற்றிக்கையிடும்போது. (சக 14)

3. சபை உயிர்த்தெழுந்த பின்பு. (1கொரி 15:51-58; 1தெச 4:13-17) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது சபையும் அவரோடு பூமிக்குத் திரும்ப வரும். தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கும் தேசங்களை ஆளுகை செய்வதற்கும், உன்னதமானவரின் பரிசுத்தவான்கள் இயேசு கிறிஸ்துவிற்கு உதவி புரிவார்கள். (சக 14:1-5; சக 1:14; வெளி 1:4-5; வெளி 5:10; வெளி 17:14; வெளி 19:11-21).

தாவீதின் வம்சத்தைக் கிறிஸ்து மறுபடியும் திரும்பக்கட்டும் சபையின் நாட்களுக்குப் பின்பு. (அப் 15:13-18; ஏசா 9:6-7; ஏசா 11:11; ஓசி 3:4-5; லூக்கா 1:32-35).

அந்திக்கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக சபை எடுத்துக் கொள்ளப்படும். (2தெச 2:7-8) கிறிஸ்து வருவதற்கு முன்பாக அந்திக்கிறிஸ்து தோன்றுவான். (2தெச 2:1-6)

4. வருங்கால உபத்திரவக்காலத்திற்குப் பின்பு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு இந்தப் பூமிக்கு உபத்திரவக்காலத்திற்குப் பின்பு வருவார். (மத் 24:15-31; சக 14:1-21; தானி 12:1-13; மத் 19:11-21).

7 அதிகாரம்

5. விசுவாசத் துரோகமும், அந்திக் கிறிஸ்துவும் வெளிப்பாடும் வெளிப்பட்ட பின்பு. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அந்திக்கிறிஸ்து அழிக்கப்படுவான். ஆகையினால் கிறிஸ்து பூமிக்கு மறுபடியும் வரும்போது அந்திக் கிறிஸ்து பூமியில் இருப்பான். (2தெச 2:1-12; வெளி 19:11-21; தானி 7:18-27; தானி 8:16-27; தானி 9:27; தானி 11:36-12:13).

6. அந்திக்கிறிஸ்து அழிக்கப்பட்டு சாத்தான் ஆயிரம் வருஷங்களுக்குக் கட்டப் பட்டிருக்கும் போது. (வெளி 5:10; வெளி 20:1-7). சபையின் காலத்திலும், சாத்தான் கட்டவிழ்க்கப்பட்ட பின்பு வரும் வருங்கால உபத்திரவக்காலத்தின் போதும் (1பேதுரு 5:8; வெளி 12:12-17; வெளி 13:1-8; வெளி 20:1-7) சாத்தான் இப்போது கட்டவிழ்க்கப் பட்டிருக்கிறான். நம்முடைய காலமாகிய சபைக் காலத்திலும், சாத்தான் கட்டவிழ்க்கப்பட்ட வனாகவே இருப்பான். கிறிஸ்து இந்தப் பூமிக்கு மறுபடியும் வந்து, சாத்தானைக் கட்டிப் போடும் வரையிலும், அவன் கட்டவிழ்க்கப் பட்டவனாகவே இருப்பான்.

7. முதலாவது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு. உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் கிறிஸ்துவோடு இந்தப் பூமியில் ஆயிரம் வருஷங்களுக்கு ஆட்சி புரிவார்கள். (வெளி 5:9-10; வெளி 20:1-6). ஆகையினால் பரிசுத்தவான்கள் முதலாவதாக உயிர்த்தெழுந்திருக்க வேண்டும். விசுவாசிகளுக்கு இக்காலம் கிறிஸ்துவோடு பாடுகளை அனுபவிக்கும் காலமாகும். அவரோடு சேர்ந்து, கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இந்தப் பூமியை ஆளுகை செய்யும் காலம் இனிமேல் வரப்போகிறது. (ரோமர் 8:18; 1கொரி 15:20-58; 2கொரி 5:6; பிலி 1:23; பிலி 3:20-21; கொலோ 1:24; 2தீமோ 2:12; 2தீமோ 3:12) ஆயிரம் வருஷ அரசாட்சி என்பது பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலுக்கும், துன்மார்க்கரின் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலம். (வெளி 20:4-6,11-15).

8. இக்காலத்தில் எசேக்கியேலின் தேவாலயம் கட்டப்படுகிறது. (எசே 40:1-43:7). எருசலேமிலுள்ள எசேக்கியேலின் தேவாலயத்தில் கிறிஸ்துவின் ராஜரிகம் ஸ்தாபிக்கப்படும். (எசே - 43:7) ஆகையினால் இக்காலம் வரையிலும், தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படாது. தமது இரண்டாம் வருகையின்போது இயேசு கிறிஸ்து இந்தத் தேவாலயத்தைக் கட்டுவார். இந்தத் தேவாலயம் கட்டி முடிக்கப்பட்ட பின்பே, தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். (ஏசா 9:6-7; ஏசா 52:1-8; ஏசா 62:6-12; எசே 36:24-36; எசே 41:1; எசே 43:7; சக 6:12-13; சக 14:1-21; லூக்கா 1:32-35; அப் 15:13-18).

9. இஸ்ரவேலர்கள் எல்லோரும் எல்லா தேசங்களிலிருந்து கூட்டி சேர்க்கப்பட்ட பின்பு. (எசே 20:33-36; எசே 36:17-38; எசே 37:1-28; ஓசி 3:4-5; தானி 9:27).

தானியேல் - தொகுப்புரை

7 அதிகாரம்

10. இஸ்ரவேல் மனந்திரும்புகிறபோது. (சக 12:10-14; சக 13:1-9; சக 14:1-21; மத் 23:37-39; மத் 24:15-31; மத் 25:31-46; ரோமர் 11:25-29).

11. தேசங்களின் சேனைகளிடமிருந்து யூதர்கள் விடுவிக்கப்பட்டு, பூமியிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் ஆசீர்வாதமாக ஆகும்போது. (ஆதி 12:1-3; சங் 2:6-8; ஏசா 9:6-7; ஏசா 25:6-9; சக 9:9-11; சக 14:1-21; அப் 15:13-18; லூக்கா 1:32-35).

12. பிந்திய ரோமப்பேரரசின் பத்து ராஜாக்கள், பிந்திய கிரேக்கப்பேரரசு ஆகியோரின் நாட்களில். (தானி 2:40-45; தானி 7:18-28; வெளி 17:8-18).

13. புறஜாதியாரின் காலத்தின் முடிவில். (லூக்கா 21:20-24; ரோமர் 11:25-29; அப் 15:13-17).

14. பூமியிலுள்ள கலகத்தை அடக்குவதற்குத் தேவனுடைய காலம் வரும்போது. (அப் 1:7-11; அப் 3:19-21; 1கொரி 15:24-29).

15. தானியேல், வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவற்றில் கூறப்பட்டிருக்கும் பூமிக்குரிய ராஜ்யங்கள் அழிக்கப்படும் போது. (தானி 2:44-45; தானி 7:13-14; சக 14).

16. வெளி 4-19 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் நிறைவேறிய பின்பு, கிறிஸ்து வெளி 19-20 ஆகிய அதிகாரங்களில் தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்க வருகிறார்.

தேவனுடைய ராஜ்யம் வருங்காலத்தில் இனிமேல் ஸ்தாபிக்கப்படும் என்பதை மேலே கூறப்பட்டுள்ள காரணங்கள் உறுதி பண்ணுகின்றன. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவருடைய ராஜ்யமும் அவரோடுகூடவே வரும். (மத் 16:21-27; மத் 19:28; மத் 20:20-23; மத் 23:37-39; மத் 24:3-31; மத் 25:31-46; மத் 26:29,64; அப் 1:6-7; அப் 3:19-21; யோவான் 14:3; லூக்கா 9:26; லூக்கா 19:11-27; வெளி 5:9-10; வெளி 11:15; வெளி 20:1-7). அப்போஸ்தலர்களும், தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி உபதேசம் பண்ணியிருக்கிறார்கள். வருங்காலத்தில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பது அப்போஸ்தலரின் உபதேசமாகும். (அப் 1:7-11; 1பேதுரு 1:7; 1பேதுரு 5:4; 2பேதுரு 1:16; 2பேதுரு 3:3-4; யாக் 5:7; 1யோவான் 2:28; யூதா 1:14; 1தீமோ 6:14-15).

ஆயிரம் வருஷ அரசாட்சியில் பூமியின் நிலைமை

1. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பூமிக்குரிய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்பதைத் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்திருக்கிறார்கள். (தானி2:44-45; தானி 7:9-14,18-27; ஏசா 32:1; ஏசா 35:1-10; எரே31:27-40; எரே 32:37-44; எசே 37:1-28; யோவே 3; சக 14; லூக்கா 1:32; மத் 24:29-31; மத் 25:31-46; அப் 15:13-18; யூதா 1:14; வெளி11:15; வெளி 19:11-21; வெளி 20:1-15).

7 அதிகாரம்

2. தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படும். உன்னதமானவரின் பரிசுத்தவான்கள் பூமியில் ஆளுகை செய்வார்கள். (தானி 2:35,44-45; தானி 7:13-14,18,26-27; சக 14:1-21; மத் 25:31-46; ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; வெளி 1:6; வெளி 5:10; வெளி 11:15; வெளி 20:1-10).

3. தேவனுடைய ராஜ்யம் என்பது பூமிக்குரிய ராஜ்யத்தைக் குறிக்கிறது என்பதை சீஷர்கள் புரிந்து வைத்திருந்தார்கள். (லூக்கா 19:11; லூக்கா 22:29-30; அப் 1:7; மத் 25:31-46; வெளி 1:5; வெளி 2:26-27; வெளி 3:21; வெளி 5:10; வெளி 11:15; 1கொரி 6:2-3; 2தீமோ 2:12).

4. ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமிக்கு வருவான். (வெளி 20:7-10; சக 14:16-21; ஏசா 2:2-4; தானி 7:14).

(3) ஒன்பதாவதும் கடைசியானதுமான உலகப்பேரரசு - (2:44-45; ஏசா 9:6)

தானி 7:18 ஆனாலும் உன்னதமான வருடைய பரிசுத்தவான்கள் ராஜரிகத்தைப் பெற்று, என்றென்றைக்கு முள்ள சதா காலங்களிலும் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்றான்.

(4) தானியேலின் விசாரிப்பு

தானி 7:19 அப்பொழுது மற்றவைகளை யெல்லாம் பார்க்கிலும் வேற்றுருவும் கெடியுமுள்ளதுமாய், இருப்புப் பற்களும், வெண்கல நகங்களுமுடையதாய் நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப் போட்டதுமாயிருந்த நாலாம் மிருகத்தைக்குறித்தும்,

தானி 7:20 அதின் தலைமேலுள்ள பத்துக் கொம்புகளைக் குறித்தும், தனக்கு முன்பாக மூன்று கொம்புகள் விழுந்துபோக எழும்பினதுமாய், கண்களையும் பெருமை யானவைகளைப் பேசும் வாயையு முடையதுமாய், மற்றவைகளைப் பார்க்கிலும் பருமனாகத் தோன்றினதுமாயிருந்த அந்த வேறே கொம்பைக்குறித்தும், அவற்றின் பொருளை அறிய மனதாயிருந்தேன்.

“இருப்புப் பற்கள்” - இது ரோமப்பேரரசைக் குறிக்கிறது. தானி 2:40-43 ஆகிய வசனங்களில் பாதங்களும், கால்விரல்களும், பாதிக்களிமண்ணும், பாதி இரும்புமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதுவும் ரோமப்பேரரசைக் குறிக்கிறது.

“வெண்கல நகங்கள்” - மிருகத்தைப் பற்றிய தானியேலின் தரிசனத்தில் (தானி 7:7-8) இந்த விவரம் குறிப்பிடப்படவில்லை. தானியேலுக்கு அருகில் நின்று அவருக்குத் தரிசனத்தின் அர்த்தத்தைக் கூறியவர் இதைச் சேர்த்திருக்கிறார். தானி 2:39,45 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உருவத்திலுள்ள கிரேக்கப் பேரரசிற்கு இது அடையாளமாக உள்ளது. பத்து நகங்கள் என்பது தானி 2:40-43 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பத்து கால்விரல்களையும், தானி 7:7-8,23-24; வெளி 17:8-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பத்துக் கொம்புகளையும் குறிக்கும்.

(5) தானியேலின் தரிசனம் - சின்னக் கொம்பு பரிசுத்தவான்களோடு யுத்தம் பண்ணிற்று

தானி 7:21 நீண்ட ஆயுசுள்ளவர் வருமட்டாகவும், நியாயவிசாரிப்பு உன்னதமானவருடைய பரிசுத்தவான் களுக்குக் கொடுக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும் காலம் வருமட்டாகவும்,

தானி 7:22 இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன்.

7 அதிகாரம்

பிதாவாகிய தேவனுடைய முதலாம் வருகையும், இரண்டாம் வருகையும்

வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையையும், இரண்டாம் வருகையையும் பற்றிக்கூறப்பட்டுள்ளது. அதுபோலவே பிதாவாகிய தேவனுடைய இரண்டு வருகைகளைப் பற்றியும், வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது.

1. இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் பூமிக்கு வரும்போது, பிதாவாகிய தேவனுடைய முதலாம் வருகை இருக்கும். (தானி 7:9,13-14,22; சக 14:5; தீத்து 2:13). இக்காலத்தில் அந்திக்கிறிஸ்துவை ஜெயிப்பதற்கும், அவனுடைய ராஜ்யத்தை அழிப்பதற்கும் பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்துவிற்கு உதவிபுரிவார். (தானி 7:21-22). அதன் பின்பு, பிதாவாகிய தேவன் ராஜ்யத்தைக் குமாரனுக்கும் (தானி 7:13-14), பரிசுத்தவான்களுக்கும்(தானி 7:18,27) கொடுப்பார். அப்போது பூமியிலுள்ள எல்லா தேசங்களுக்கும் கிறிஸ்து ராஜாவாகஇருப்பார்.(தானி 7:13-14,27; சக 14:9; மத் 25:31-46; வெளி 11:15; வெளி 20:1-10; வெளி 22:4-5). இந்தச் சம்பவங்களுக்குப்பின்பு பிதாவாகிய தேவன், பரலோகத்திற்குத் திரும்பிச் செல்வார். கிறிஸ்துவின் ஆயிரம் வருஷ அரசாட்சி வரையிலும் மேலும் பூமியிலுள்ள எல்லாக் கலகங்களையும் அவர் ஒழியப் பண்ணும் வரையிலும் பிதாவாகிய தேவன் பரலோகத்தில் இருப்பார். (1கொரி 15:24-28; எபே 1:10).

2. பிதாவாகிய தேவனுடைய இரண்டாம் வருகை ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் இருக்கும். அப்போது கிறிஸ்து பூமியிலுள்ள எல்லாக் கலகங்களையும் ஒழியப் பண்ணியிருப்பார். அப்போது தேவன் பூமியில் சகலத்திலும் சகலமாக இருப்பார். லூசிபரும், ஆதாமும் கலகம் பண்ணுவதற்கு முன்பாகப் பூமி எப்படியிருந்ததோ அப்படியே பூமி மறுபடியும் ஆசீர்வாதமாக இருக்கும். (1கொரி 15:24-28; எபே 1:10). அதன் பின்பு பிதாவாகிய தேவன் தம்முடைய தலைமைச் செயலக நகரத்தைப் பரலோகத்திலிருந்து பூமிக்கு மாற்றி அமைத்து, பூமியில் மனுஷர் மத்தியிலே நித்திய காலமாக இருப்பார். (வெளி 21:1-7,9-10; வெளி 22:1-5).

(6) நான்காவது மிருகம் - (வெளி 17:8-17; 2:40)

தானி 7:23 அவன் சொன்னது: நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாம் ராஜ்யமாம்; அது எல்லா ராஜ்யங்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து, பூமியை எல்லாம் பட்சித்து, அதை மிதித்து, அதை நொறுக்கிப்போடும்.

"அது எல்லா ராஜ்யங்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து" - (தானி 7:7)

"பூமியை எல்லாம் பட்சித்து" - இந்த வாக்கியம் ரோமப்பேரரசைக் குறிப்பிடுகிறது.

(7) பத்து கொம்புகள் - (வெளி 17:8-17; தானி 2:41)

தானி 7:24 அந்தப் பத்துக்கொம்புகள் என்னவென்றால், அந்த ராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்; அவர்களுக்குப் பின்பு வேறொருவன் எழும்புவான்; அவன் முந்தினவர்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து, மூன்றுராஜாக்களைத்தாழ்த்திப்போட்டு,

"பத்துக்கொம்புகள்" - முந்திய ரோமப் பேரரசிற்குள் பத்து ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்படும். பத்துக் கொம்புகள் என்பது இந்தப் பத்து ராஜ்யங்களையும் ஆளுகை செய்யும் பத்து ராஜாக்களைக் குறிக்கும்.

"அந்த ராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்" - ரோமப்பேரரசு திரும்ப உயிர்பெறும் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். அந்த ராஜ்யத்திற்கு ஒரே ஒரு ராஜா மட்டுமே இருக்க முடியும். ஆனால் இங்கோ பத்து ராஜாக்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஆகையினால், ரோமப்பேரரசு திரும்ப உயிர்ப்பிக்கப்படும் **(revived)** என்று கூறுவதற்குப் பதிலாக அது திருத்தி அமைக்கப்படும் **(revised)** என்று கூறுவது சிறப்பாக இருக்கும். இந்த ரோமப்பேரரசை ஒரு ராஜா ஆளுவதற்குப் பதிலாக பத்து ராஜாக்கள் ஆளுகை செய்வார்கள். (தானி 7:23-24). இந்தப் பத்து தேசங்களும் இனிமேல் ஸ்தாபிக்கப்படும்.

7 அதிகாரம்

"அவர்களுக்குப் பின்பு வேறொருவன் எழும்புவான்" - வேறொருவன் என்பது பதினொறாவது கொம்பைக் குறிக்கும். இவன் சின்னக்கொம்பு எனப்படுகிறான். இவன் 11 ஆவது ராஜா. இவன் பத்து ராஜ்யங்களிலிருந்து எழும்பி வருவான். மூன்று ராஜ்யங்களைத் தள்ளிப்போடுவான். (தானி 7:7-8, 20,23-24; தானி 8:20-25; தானி 11:35-45) மற்ற ராஜ்யங்கள் யுத்தமில்லாமலேயே இவனுக்குக் கீழ்ப்படியும். (வெளி 17:8-17).

இந்தச் சின்னக்கொம்பு வருங்காலத்தில் எழும்புவான். (தானி 7:8). இவனும் வெளி 13 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் மிருகமும் ஒரே நபரே. பத்து ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, சின்னக்கொம்பாகிய அந்திக்கிறிஸ்து எழும்புவான். அவர்கள் ஸ்தாபிக்கப்படும் முன்பு, இவன் எழும்புவதில்லை.

சின்னக்கொம்பும், மிருகமும் ஒரே நபர்

1. இவர்கள் இருவரும் பண்ணுகிறவர்கள். (தானி 7:8,20-24; வெளி 6:1-2).

2. இருவரும் தேவதூஷணம் கூறுகிறார்கள். (தானி 7:8,20-26; வெளி 13:5).

3. இருவரும் பரிசுத்தவான்களுக்கு எதிராக ஜெயம் பெறுவார்கள். (தானி 7:21-25; வெளி 13:7).

4. இருவரும் பத்துக் கொம்புகளைக் கட்டுப்படுத்துவார்கள்.(தானி 7:20-25; வெளி 13:1; வெளி 17:12-14).

5. இருவரும் காலங்களையும், பிரமாணங்களையும் மாற்றுவார்கள். (தானி 7:11,21-27; வெளி 13:1-7).

6. இருவரும் கொல்லப்படுவார்கள். அவர்களுடைய சரீரம் எரிகிற அக்கினி ஜுவாலையில் தள்ளப்படும். ஒரே நபரே இதைச் செய்கிறவர். ஒரே காலத்தில் இது நடைபெறுகிறது. (தானி2:44-45;தானி 7:9-11,18,25-27; வெளி 19:11-21).

7. நீண்ட ஆயுசுள்ளவர் வரும் வரையிலும், பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைச் சுதந்தரிக்கும் வரையிலும் இவ்விருவரும் ஆளுகை செய்வார்கள். (தானி2:44-45; தானி 7:8-11, 18,21-22,25-27; வெளி 17:12-14; வெளி 19:11-21).

8. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இருவரும் அழிக்கப் படுகிறார்கள். (தானி 2:44-45; தானி 7:9-14; வெளி 19:11-21).

9. இருவரும் ஒரே கால அளவுகளில் இருக்கிறார்கள். (தானி 7:25; வெளி 11:2-3; வெளி 12:6,14; வெளி 13:5; வெளி 19:11-21).

10. இவர்களுக்குப் பின்பு, பரலோக ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். (தானி 2:44-45; தானி 7:9-14,21-27; லூக்கா 1:32-35; ஏசா 9:6-7; வெளி 19:11-21; வெளி 20:1-6).

11. இருவரும் பத்து ராஜ்யங்களிலிருந்து வருவார்கள். மற்ற மூன்று ராஜ்யங்களை அகற்றிப்போடுவார்கள். (தானி7:7-8,23-24;தானி8:8-9,20-24; வெளி 6:1-2; வெளி 13:1-5; வெளி 17:12-17).

12. இருவரும் பத்துக் கொம்புகளுக்குப் பின்பு வருகிறார்கள். (தானி 7:7-8,23-24; தானி 8:23; வெளி 13:1-7; வெளி 17:12-17).

13. இருவரும் கொடூர முகமுடைய ராஜாக்களாக இருப்பார்கள். (தானி 7:8-25; தானி 8:23; வெளி 13:1-18; வெளி 17:12-17; 2தெச 2:8-12).

14. இருவரும் வளம் பெறுவதற்குச் சூழ்ச்சி பண்ணுவார்கள். (தானி 7:8,20-26; தானி 8:25; 2தெச 2:4-12; வெளி 13:1-18).

15. இருவரும் தங்களைத்தாங்களே உயர்த்துவார்கள். (தானி 7:8,20-26; தானி 8:25; 2தெச 2:4-12; வெளி 13:1-18).

7 அதிகாரம்

16. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இவ்விருவரும் அவருக்கு எதிராகயுத்தம் பண்ணுவார்கள். (தானி 7:20-25; தானி 8:25; வெளி 17:12-17; வெளி 19:11-21; 2தெச 2:8-12).

17. இவ்விருவரும் "கையினால் அல்லாமல்" **"without hand"** அழிக்கப்படுவார்கள். (தானி 2:44,45; தானி 7:9-11,22-27; தானி 8:25; வெளி 19:11-21; 2தெச 2:8-12).

18. இவ்விருவரும் தங்கள் சொந்த சித்தத்தின்பிரகாரம் செயல்படுவார்கள். (தானி 7:25; தானி 8:24; தானி 11:36; 2தெச 2:8-12; வெளி 13:5-7).

19. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இவ்விருவரும் உயிரோடு இருப்பார்கள். (தானி 7:11; தானி 8:22-25; தானி 9:27; தானி 11:40-45; 2தெச 2:8-12; வெளி 19:19-21).

20. மகா உபத்திரவக்காலத்திற்கு இவ்விருவரும் காரணமாக இருப்பார்கள். (தானி7:21-27; தானி8:23-25; தானி 9:27; தானி 11:40-45; தானி 12:1,7; மத் 24:15-31; 2தெச 2:1-12; வெளி 7:14; வெளி 13:1-18; வெளி 14:9-11; வெளி 15:2-4; வெளி 20:4-6).

21. இவ்விருவரும் எருசலேமில் யூதமார்க்கத்துப் பலிகளை விலக்குவார்கள். (தானி7:25; தானி 8:24; தானி9:27; தானி 11:35-45; தானி 12:7; மத் 24:15).

22. எருசலேமிலுள்ள யூதரின் தேவாலயத்திலிருந்து இவ்விருவரும் ஆளுகை செய்வார்கள். (தானி 8:9-14; தானி 9:27; தானி 11:45; தானி 12:7; 2தெச 2:4; வெளி11:1-2; வெளி 13:1-18).

23. இவ்விருவரும் உன்னதமானவருக்கு விரோதமாகப் பேசுவார்கள். (தானி 7:11,19-25; தானி 8:22-25; தானி 9:27; தானி11:37-39; யோவான் 5:43).

24. இவ்விருவரும் சாத்தானை மகிமைப் படுத்தி, அவனிடமிருந்து அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வார்கள். (தானி 8:24; தானி 11:35-45; 2தெச 2:8-12; வெளி 13:1-4).

(8) **அவர்களுக்குப் பின்பு வேறொருவன் எழும்புவான்** - (வெளி 17:8-11; தானி 2:39; 7:11)

(9) **பரிசுத்தவான்களுக்கு எதிரான யுத்தம் - அவனுடைய காலமும் ஆளுகையின் நீளமும்** - (8:23-25; 9:27; 11:35-45; 12:1,17; மத் 24:15-31; 2தெச 2:1-12; வெளி 13:1-18; 14:9-11; 15:2; 19:11-21)

தானி 7:25 உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னத மானவருடைய பரிசுத்த வான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லு மட்டும் அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவார்கள்.

"உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி" - (தானி 7:8,20; தானி 11:36; வெளி 13:5)

ஒடுக்குதல் **(wear out) - בְּלָה - bel-aw' - 1080**

வினைச்சொல் - ஒடுக்கு **(wear out or down, afflict)**

மாற்ற நினைப்பது **(think to change) - סְבַר - seb-ar' - 5452**

வினைச்சொல் - நினைத்திரு **(purpose, hope)** - மூன்றரை வருஷங்களுக்கு காலங்களும், பிரமாணங்களும்அந்திக் கிறிஸ்துவின் கைகளில் கொடுக்கப்படும். அப்போது அவற்றை அவன் மாற்ற நினைப்பான். (தானி 12:7; வெளி 13:5).

7 அதிகாரம்

(10) சின்னக்கொம்பு அல்லது அந்திக் கிறிஸ்துவின் ஆளுகையின் முடிவில் தேசங்கள்மீது நியாயத் தீர்ப்பு உலக இராஜ்யங்களும், மேசியாவின் நித்திய இராஜ்ஜியத்தின் நிறுவனங்களும் - (2:44-45; 7:9-14,18; 8:25; மத் 24:29-31; 25:31-36; ஏசா 9:6; லூக் 1:32-33; வெளி 11:15; 22:5)

தானி 7:26 ஆனாலும் நியாயசங்கம் உட்காரும்; அப்பொழுது முடிவுபரியந்தம் அவனைச் சங்கரிக்கும் படியாகவும் அழிக்கும்படியாகவும் அவனுடைய ஆளுகையை நீக்கிப்போடுவார்கள்.

தானி 7:27 வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரிகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்த வான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான்.

தானி 7:28 அவன் சொன்ன வார்த்தை இத்தோடே முடிந்தது. தானியேலாகிய நான் என்நினைவுகளால் மிகவும் கலங்கினேன்; என் முகம் வேறுபட்டது; இந்தக் காரியத்தை என் மனதிலே வைத்துக் கொண்டேன்.

"முடிவுபரியந்தம்" - இந்தச் சம்பவங்கள் கிருபையினுடைய காலத்தின் முடிவில் நடைபெறும். (தானி 7:26-27; தானி 8:24-26; தானி 9:27; தானி 11:40-45; வெளி 4:1-19:21).

"அவனுடைய ஆளுகையை நீக்கிப் போடுவார்கள்" - முழு உலகத்தையும் தன்னுடைய ஆளுகைக்குள் கொண்டு வரவேண்டுமென்று அந்திக்கிறிஸ்து நினைப்பான். ஆனால் இவனுடைய ஆளுகை நீக்கிப்போடப்படும். (தானி 8:24-25; தானி 11:40-45; வெளி 19:11-21).

"வானத்தின் கீழெங்குமுள்ள" - இந்த வாக்கியத்திற்கு உவமை ரீதியாக வியாக்கியானம் கொடுக்காமல், உண்மை ரீதியாகவே வியாக்கியானம் கொடுக்க வேண்டும். இது பூமியிலுள்ள ராஜ்யங்களைக் குறிக்கும். (தானி 2:38,39,40; தானி 7:23; வெளி 13:8,16). வரப்போகிற தேவனுடைய ராஜ்யத்தின் விஸ்தீரணத்திற்கு அளவேதுமில்லை.

"உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" - அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்குப் பின்பு, ராஜ்யங்களின் ராஜரிகமும், ஆளுகையும், மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும் என்று இந்த அதிகாரத்தில் மூன்றுமுறை கூறப்பட்டுள்ளது. (தானி 7:18,22,27). மேலும் இந்த ராஜ்யம் நித்தியமானது என்றும் மூன்றுமுறை கூறப்பட்டுள்ளது. (தானி 7:13-14,18,27).

"சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்" - பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களும் கர்த்தருக்குக் கீழ்ப்பட்டிருக்கும். லூசிபர், ஆதாம் ஆகியோரின் மீறுதலுக்கு முன்பாக இந்தப் பூமி எப்படியிருந்ததோ அதுபோல மறுபடியும் இந்தப் பூமி சாபமில்லாமல் இருக்கும். (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 21-22).

நினைவுகள்(cogitations) - רַעְיוֹן - rah-yone' - 7476

ஆ.பெ.சொ. - நினைவு, சொப்பனம் (thought, mental conception)

8 அதிகாரம்

VIII. தானியேலின் இரண்டாம் தரிசனம் - ஆட்டுக்கடாவும் வெள்ளாட்டுக் கடாவும் - (8:1-14)

1. தரிசனம்

(1) காலம்

தானி 8:1 தானியேலாகிய எனக்கு முதலில் காண்பிக்கப்பட்ட தரிசனத்துக்குப் பின்பு, ராஜாவாகிய பெல்ஷாத்சார் ராஜ்யபாரம்பண்ணின மூன்றாம் வருஷத்திலே வேறொரு தரிசனம் எனக்குக் காண்பிக்கப் பட்டது.

தானி 8:2 தரிசனத்திலே நான் கண்டது என்னவென்றால்: நான் பார்க்கையில் ஏலாம் தேசத்திலுள்ள சூசான் அரமனையில் இருந்தேன்; அங்கே நான் ஊலாய் என்னும் ஆற்றங்கரையில் இருந்ததாகத் தரிசனத்திலே கண்டேன்.

"பெல்ஷாத்சார் ராஜ்யபாரம் பண்ணின மூன்றாம் வருஷத்திலே வேறொரு தரிசனம் எனக்குக் காண்பிக்கப்பட்டது" - தானி 7 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் தரிசனத்திற்கு இரண்டு வருஷங்களுக்குப் பின்பு, இந்தத் தரிசனம் வருகிறது. ஒருசில கேள்விகளுக்குக் கூடுதல் செய்திகள் இந்தத் தரிசனத்தில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு தரிசனமும் வெவ்வேறானவை. அதே சமயத்தில் வருங் காலத்தின் சத்தியத்தை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு இவ்விரண்டு தரிசனங்களும் உதவி புரியும். இந்தத் தரிசனம் முதன் முதலில் எபிரெய பாஷையில் எழுதப் பட்டிருக்கிறது. இத்துடன் அரமாயிக் பாஷையில் எழுதப்பட்டுள்ள பிரிவு நிறைவு பெறுகிறது. (தானி 2:4-7:28) இந்தத் தரிசனத்தின் காலம் பெல்ஷாத்சார் ராஜாவினுடைய ராஜ்யபாரத்தின் இறுதிக் காலமாகும். தானி 5 ஆவது அதிகாரத்தில் சுவரில் எழுதப்பட்ட கையெழுத்தும், இக்காலத்தில்தான் காணப்படுகிறது. பெல்ஷாத்சார் இரண்டு வருஷங்கள் மட்டுமே ஆட்சி புரிந்தான். இதற்குள் பாபிலோனியப் பேரரசு விழுந்திருக்க வேண்டும். (தானி 8:2).

இப்போது தானியேல் சூசான் அரமனையில் இருக்கிறான். சூசான் பெர்சிய தேசத்தின் தலைநகரமாகும். பாபிலோன் பேரரசு இக்காலத்தில் வீழ்ச்சியடையாமல் இருந்திருந்தால் தானியேல் அரசாங்க வேலையாகசூசானுக்குச்சென்றிருந்திருப்பான்.

"ஏலாம்" **(Elam)** - பாபிலோனுக்குக் கிழக்குப் பகுதியிலுள்ள பிரதேசம் ஏலாம் என்று எபிரெய பாஷையில் அழைக்கப்படுகிறது. இதில் மேதிய தேசத்து மலைப்பகுதியும், பெர்சிய தேசத்து வளைகுடா பகுதியும் அமைந்துள்ளது. இதில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒன்று வடக்கிலுள்ள ஏலாம். மற்றொன்று தெற்கிலுள்ள அன்ஷான் **(Anshan)**. இவ்விரண்டும் பிற்காலத்தில் தனித்தனியே சுதந்தர நாடுகளாக விளங்கிற்று. கி.மு. 600 ஆம் வருஷத்தில் பெர்சியர் இவ்விரண்டு தேசத்தையும் கைப்பற்றினார்கள். கோரேசு ராஜா "அன்ஷானின் பிரபு" **"Prince of Anshan"** என்று அழைக்கப்படுகிறான். ஏலாமின் தலைநகரம் சூசான் **(Shushan)** ஆகும். ஏலாமியர் சேமின் வம்சத்திலிருந்து வந்தவர்கள். (ஆதி 10:22)

ஏலாமிற்கும், பாபிலோனிற்கும் இடையே நீண்ட காலமாக பகை இருந்து வந்தது. அசீரியர் இவ்விரு தேசத்தாருக்கும் பகைஞர்களாக இருந்தார்கள். அசூர்பனிபால் **(Assurbanipal)** கி.மு. 645 ஆம் வருஷத்தில் ஏலாமையும், பாபிலோனையும் பிடித்தான். சூசானைக் கைப்பற்றினான். ஏலாமியரையும், மேலும் அநேகரையும் சமாரியாவிற்கு நாடு கடத்தினான். (எஸ்றா 4:9; 2இராஜா 17:24). பிற்காலத்தில் நேபுகாத்நேச்சார் அசீரியப் பேரரசைக் கைப்பற்றினான். அதன் பின்பு, கி.மு. 606 -இல் மேதியர் அசீரியாவைக் கைப்பற்றினார்கள். அதன் பின்பு, அசீரியப் பேரரசு மேதியருக்கும், லீதியருக்கும், பாபிலோனியருக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது. கி.மு. 553 ஆம் வருஷத்தில் பெர்சிய ராஜாவாகிய கோரேசு மேதிய தேசத்திற்கு எதிராகக் கலகம் பண்ணி, மேதியரின் ராஜாவைப் பிடித்தான். பெர்சியர் லீதியாவையும், பாபிலோனையும், எகிப்தையும் பிடித்தார்கள். கி.மு. 366 ஆம் வருஷத்தில் மகா அலெக்ஸாண்டரின் ஆட்சிக் காலம் வரையிலும் பெர்சியரின் ஆட்சி ஓங்கியிருந்தது.

8 அதிகாரம்

(2) ஆட்டுக்கடா - மேதிய பெர்சியா - (வசனம் 20)

தானி 8:3 நான் என் கண்களை ஏறெடுத்துப் பார்த்தேன்; இதோ, இரண்டு கொம்புகளுள்ள ஒரு ஆட்டுக் கடா ஆற்றிற்கு முன்பாக நின்றது; அதின் இரண்டு கொம்புகளும் உயர்ந்தவை களாயிருந்தது; ஆகிலும் அவைகளில் ஒன்று மற்றதைப்பார்க்கிலும் உயர்ந்திருந்தது; உயர்ந்தகொம்பு பிந்தி முளைத்தெழும்பிற்று.

தானி 8:4 அந்த ஆட்டுக்கடா மேற்கும் வடக்கும் தெற்கும் பாய்கிறதைக் கண்டேன்; ஒரு மிருகமும் அதின் முன்னே நிற்கக்கூடாதிருந்தது; அதின் கைக்குத் தப்புவிப்பாருமில்லை; அது தன் இஷ்டப்படியே செய்து வல்லமைகொண்டது.

தீர்க்கதரிசன எண் - 12

"நான் என் கண்களை ஏறெடுத்துப் பார்த்தேன்;........." (தானி 8:3-14) தானி 8:3-8 ஆகிய வசனங்கள்நிறைவேறிற்று. தானி 8:9-14 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

"இரண்டு கொம்புகள்" - மேதிய தேசத்து ராஜாவாகிய தரியுவும், (தானி 5:31) பெர்சிய தேசத்து ராஜாவாகிய கோரேசும். (2 நாளா 36:22-23).

"உயர்ந்தகொம்பு பிந்தி முளைத் தெழும்பிற்று" - இது பெர்சியனாகிய கோரேசைக் குறிக்கிறது. மேதியனாகிய தரியுவிற்குப் பின்பு கோரேசு மேதியாவிற்கும், பெர்சியாவிற்கும் ராஜாவானான். இவனுடைய ஆட்சியின் கீழும், இவனுக்குப் பின்பும் பெர்சிய தேசம் வலிமை பெற்றது.

ஆட்டுக்கடாவும், வெள்ளாட்டுக்கடாவும் பற்றிய தரிசனம்

1. ஒரு ஆட்டுக்கடா ஊலாய் ஆற்றிற்கு முன்பாக நின்றது.
2. அதற்கு இரண்டு கொம்புகள் இருந்தது.
3. அதின் இரண்டு கொம்புகளும் உயர்ந்தவைகளாயிருந்தது.
4. ஆகிலும் அவைகளில் ஒன்று மற்றதைப்பார்க்கிலும் உயர்ந்திருந்தது.
5. உயர்ந்தகொம்பு பிந்தி முளைத்தெழும்பிற்று (தானி 8:3).
6. அந்த ஆட்டுக்கடா மேற்கும் வடக்கும் தெற்கும் பாய்ந்தது.
7. ஒரு மிருகமும் அதின் முன்னே நிற்கக்கூடாதிருந்தது.
8. அதின் கைக்கு ஒரு மிருகத்தாலும் தப்புவிக்க முடியவில்லை.
9. அது தன் இஷ்டப்படியே செய்தது.
10. வல்லமை கொண்டது. (தானி 8:4).
11. மேற்கேயிருந்து ஒரு வெள்ளாட்டுக்கடா தேசமெங்கும் சென்றது. (தானி 8:5).
12. நிலத்திலே கால் பாவாமல் சென்றது.
13. அந்த வெள்ளாட்டுக்கடாவின் கண்களுக்கு நடுவே விசேஷித்த ஒரு கொம்பு இருந்தது.
14. இரண்டு கொம்புகளுள்ள ஆட்டுக் கடாவினிடமட்டும் அது வந்தது. (தானி 8:6).
15. தன் பலத்தின் உக்கிரத்தோடே தற்கு எதிராகப் பாய்ந்தது.
16. அது ஆட்டுக்கடாவின்மேல் கடுங்கோபங் கொண்டது. (தானி 8:7)
17. அதை முட்டி, அதின் இரண்டு கொம்புகளையும் முறித்துப்போட்டது.
18. அதின்முன் நிற்க ஆட்டுக்கடாவுக்குப் பலமில்லை.

8 அதிகாரம்

19. வெள்ளாட்டுக்கடா அதைத் தரையிலே தள்ளி மிதித்துப்போட்டது.

20. அதின் கைக்கு ஆட்டுக்கடாவைத் தப்புவிப்பார் இல்லை (தானி 8:7).

21. வெள்ளாட்டுக்கடா மிகுதியும் வல்லமைகொண்டது (தானி 8:8)

22. அது பலங்கொண்டிருக்கையில், அந்தப் பெரிய கொம்பு முறிந்துபோயிற்று.

23. அதற்குப் பதிலாக ஆகாயத்தின் நாலு திசைகளுக்கும் எதிராய் விசேஷித்த நாலுகொம்புகள் முளைத்தெழும்பினது. (தானி 8:8).

24. அவைகளில் ஒன்றிலிருந்து சின்னதான ஒரு கொம்பு புறப்பட்டது. (தானி 8:9)

25. சின்னக்கொம்பு தெற்குக்கும், கிழக்குக்கும் எதிராகவும் சிங்காரமான தேசத்துக்கு நேராகவும் மிகவும் பெரியதாயிற்று. (தானி 8:9).

26. அது வானத்தின் சேனைபரியந்தம் வளர்ந்தது. (தானி 8:10)

27. அதின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றை பூமியிலே விழப்பண்ணிற்று.

28. அவைகளை மிதித்தது. (தானி 8:10).

29. சின்னக்கொம்பு சேனையினுடைய அதிபதி பரியந்தமும் தன்னை உயர்த்திற்று. (தானி 8:11)

30. அவரிடத்திலிருந்து அன்றாட பலியை நீக்கிற்று.

31. அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது. (தானி 8:11).

32. பாதகத்தினிமித்தம் அன்றாட பலியோடுங்கூடச் சேனையும் அதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது (தானி 8:12)

33. அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று.

34. அதுகிரியைசெய்து அநுகூலமடைந்தது. (தானி 8:12).

35. பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக்கேட்டேன்; அப்பொழுது வேறொரு பரிசுத்தவான் பேசினவரை நோக்கி: அன்றாட பலியைக்குறித்தும், பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக் குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக்கொடுக்கப்படுவதைக் குறித்தும், உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்டான். (தானி 8:13)

36. அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான். (தானி 8:14).

"மேற்கும் வடக்கும் தெற்கும்" - மேதியரும், பெர்சியரும் வடக்கே லீதியாவையும், மேற்கே பாபிலோனையும், தெற்கே எகிப்தையும் கைப்பற்றினார்கள். அவர்களைக் கைப்பற்றிய பின்பு, தங்களுக்கு இஷ்டானதைச் செய்தார்கள். மிகுந்த வல்லமை பெற்றார்கள்.

(3) வெள்ளாட்டுக்கடா - கிரேக்கு (8:5) - (வசனம் 21)

தானி 8:5 நான் அதைக் கவனித்துக் கொண்டிருக்கையில், இதோ, மேற்கேயிருந்துஒரு வெள்ளாட்டுக்கடா நிலத்திலே கால் பாவாமல் தேசத்தின் மீதெங்கும் சென்றது; அந்த வெள்ளாட்டுக் கடாவின் கண்களுக்கு நடுவே விசேஷித்த ஒரு கொம்பு இருந்தது.

"மேற்கேயிருந்து ஒரு வெள்ளாட்டுக்கடா" - இது கிரேக்கு தேசத்தின் அடையாளமாகும். கிரேக்கு தேசத்தின் முதலாவதுராஜாவாகியகரானஸ் (Caranus) மக்கெதோனியா தேசத்தில் புதிய வாசஸ்தலங்களைத் தேடிச் சென்றான். தன்னுடைய அரண்மனை ஜோசியரின் ஆலோசனைப் பிரகாரம் ஆட்டுக் கடாக்களைத் தனக்கு வழிகாட்டியாக நியமித்தான்.ஆட்டுக்கடா போகுமிடமெல்லாம் ராஜாவும் அதைப் பின்பற்றிச் சென்றான். ஒரு புயல் காற்றிலிருந்து ஆட்டு மந்தை சிதறிப்போவதைப் பார்த்தான். அந்த மந்தையை எடேசா (Edessa) வரையிலும் பின்பற்றிச் சென்றான்.

8 அதிகாரம்

அதன் பின்பு, இந்தப் பகுதி அவனுடைய தேசத்தின் தலைநகரமாயிற்று. இந்த இடத்தை கரானஸ் ராஜா ஏகேயா **Aegea,** என்று அழைத்தான். இதற்கு ஆட்டுக்கடாவின் பட்டணம் **"the goats' town"** என்று பொருள். இங்குள்ள ஜனங்கள் ஏகேடே **(Aegeadae)** என்று அழைக்கப்பட்டார்கள். இவர்களுக்கு "ஆட்டுக்கடாவின் ஜனங்கள்" **"the goats' people"** என்று பெயர். ஏகேயா என்னும் வார்த்தை "ஐகியோஸ்" **(aigeos)** என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. இதற்கு வெள்ளாட்டுக்கடா என்று பொருள். இவனுடைய கொடியில் வெள்ளாட்டுக்கடாவின் சின்னம் இருக்கும். மக்கெதோனியா ராஜாக்களை அடக்கம் பண்ணும் ஸ்தலமாக ஏகேயா விளங்கிற்று. அலெக்ஸாண்டர் தன்னுடைய மகனை ரோக்ஷானா அலெக்ஸாண்டர் ஏகஸ் **(Roxana Alexander Aegus)** என்று அழைத்தான். இதற்கு "வெள்ளாட்டுக்கடாவாகிய அலெக்ஸாண்டர்" **"Alexander the goat"** என்று பொருள்.

"தேசத்தின்மீதெங்கும்" - இது முழு தேசத்தையும் குறிக்கவில்லை. இந்தத் தரிசனத்தில் கூறப்பட்டிருக்கும் தேசங்களை மட்டுமே இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (தானி 2:38-40; தானி 4:11-12,20-22; தானி 7:19,23). அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யம் பூமி முழுவதிலும் விஸ்தாரமாக இல்லை. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் மட்டும் அந்திக்கிறிஸ்து ஆளுகை செய்வான்.

"நிலத்திலே கால் பாவாமல்" - அலெக்ஸாண்டர் விரைவாகப் படையெடுத்து, வெற்றி பெறக்கூடியவன். (தானி 8:5-6). 13 வருஷக்காலத்தில் உலகத்தின் பெரும்பகுதியை அலெக்ஸாண்டர் ஜெயித்து கைப்பற்றினான்.

"கண்களுக்கு நடுவே விசேஷித்த ஒரு கொம்பு" - இந்த வாக்கியம் முதலாம் ராஜாவாகிய மகா அலெக்ஸாண்டரைக் குறிக்கிறது. (தானி 8:21).

(4) யுத்தம் - மேதிய பெர்சியா, கிரேக்கு (8:6-7)

தானி 8:6 நான் ஆற்றின் முன்பாக நிற்கக் கண்ட இரண்டு கொம்புகளுள்ள ஆட்டுக்கடாவினிடமட்டும் அது வந்து, தன் பலத்தின் உக்கிரத்தோடே அதற்கு எதிராகப் பாய்ந்தது.

தானி 8:7 அது ஆட்டுக்கடாவின் கிட்டச் சேரக்கண்டேன்; அது ஆட்டுக்கடாவின் மேல் கடுங்கோபங்கொண்டு, அதை முட்டி, அதின் இரண்டு கொம்புகளையும் முறித்துப்போட்டது; அதின்முன் நிற்க ஆட்டுக்கடாவுக்குப் பலமில்லாமையால், வெள்ளாட்டுக்கடா அதைத் தரையிலே தள்ளி மிதித்துப்போட்டது; அதின் கைக்குஆட்டுக்கடாவைத் தப்புவிப்பார் இல்லை.

கடுங்கோபங்கொள் **(choler) - מָרַר - maw-rar' - 4843**

வினைச்சொல் - விசனமாயிரு, மனக்கிலேசமாகு, துக்கமாயிரு, கசப்பாயிரு, சஞ்சலப்படு, மனமடிவாக்கு, துக்கித்திரு, கடுங்கோபங்கொள், கோபப்படுத்து **(to become bitter)** (தானி 8:7; தானி11:11). கிரேக்கர்கள் மேதிய-பெர்சிய தேசத்தார்மீது கடுங்கோபமாக இருக்கிறார்கள். 144 வருஷங்களுக்கு முன்பு கோரேசு ராஜா கிரேக்கர்மீது படையெடுத்து வந்தான். இதனால் இவ்விரண்டு தேசங்களுக்கும் இடையில் பகை உணர்வு மாறாமல் அதிகரித்து வந்தது.

(5) நான்கு கொம்புகள் (8:8) - (வசனம் 22)

தானி 8:8 அப்பொழுது வெள்ளாட்டுக்கடா மிகுதியும் வல்லமைகொண்டது; அது பலங்கொண்டிருக்கையில், அந்தப் பெரிய கொம்பு முறிந்துபோயிற்று; அதற்குப் பதிலாக ஆகாயத்தின் நாலு திசைகளுக்கும் எதிராய் விசேஷித்த நாலுகொம்புகள் முளைத்தெழும்பினது.

"அந்தப் பெரிய கொம்பு முறிந்து போயிற்று" - மகா அலெக்ஸாண்டர் தன்னுடைய 33 ஆவது வயதில் மரித்தான்.

8 அதிகாரம்

"ஆகாயத்தின் நாலு திசைகளுக்கும் எதிராய் விசேஷித்த நாலுகொம்புகள் முளைத்தெழும்பினது" - அலெக்ஸாண்டரின் ராஜ்யத்திலிருந்து நான்கு ராஜ்யங்கள் உருவாயிற்று. அவை தற்காலத்தில் கிரேக்கு, துருக்கி, சீரியா, எகிப்து என அழைக்கப்படுகிறது.

(6) சின்னக்கொம்பு - அந்திக் கிறிஸ்து (8:9-14)

தானி 8:9 அவைகளில் ஒன்றிலிருந்து சின்னதான ஒரு கொம்பு புறப்பட்டு, தெற்குக்கும், கிழக்குக்கும் எதிராகவும் சிங்காரமான தேசத்துக்கு நேராகவும் மிகவும் பெரியதாயிற்று.

தானி 8:10 அது வானத்தின் சேனைபரியந்தம் வளர்ந்து, அதின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றை பூமியிலே விழப்பண்ணி, அவைகளை மிதித்தது.

தானி 8:11 அது சேனையினுடைய அதிபதி பரியந்தமும் தன்னை உயர்த்தி, அவரிடத்திலிருந்து அன்றாட பலியை நீக்கிற்று; அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது.

தானி 8:12 பாதகத்தினிமித்தம் அன்றாட பலியோடுங்கூடச் சேனையும் அதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது; அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று; அது கிரியைசெய்து அநுகூலமடைந்தது.

தானி 8:13 பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக்கேட்டேன்; அப்பொழுது வேறொரு பரித்தவான் பேசினவரை நோக்கி: அன்றாட பலியைக்குறித்தும், பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக் குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக்கொடுக்கப்படுவதைக் குறித்தும், உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்டான்.

தானி 8:14 அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்.

"அவைகளில் ஒன்றிலிருந்து சின்னதான ஒரு கொம்பு புறப்பட்டு" - கிரேக்கப் பேரரசு நான்கு பிரிவாகப் பிரிந்தது. இந்தப் பிரிவில் ஒன்றிலிருந்து சின்னக்கொம்பாகிய அந்திக் கிறிஸ்து புறப்பட்டு வருவான். இவன் எகிப்து, பாலஸ்தீனம் போன்ற தேசங்களில் பெரியவனாக இருப்பான். (தானி 11:40-45).

"சிங்காரமான தேசம்" - பாலஸ்தீனம். (தானி 11:16,41; எசே 20:6,15; சங் 106:24; எரே 3:19; சக 7:14).

"சேனை" - பூமியிலுள்ள சேனைகளுக்கும், வானத்திலுள்ள சேனைகளுக்கும் சேனை என்னும் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான எபிரெய வார்த்தை "ட்சாபா" tsaba' என்பதாகும். சந்திரன், சூரியன், நட்சந்திரங்கள் ஆகியவற்றிற்கும் (உபா 4:19; உபா 17:3; 2இராஜா 17:16; 2இராஜா 21:3-5; 2இராஜா 23:4-5; 2நாளா 33:3-5); தேவதூதருக்கும், (1இராஜா 22:19; 2நாளா 18:18; நெகே 9:6) பிரதான ஆசாரியருக்கும், ஆசாரியருக்கும், லேவியருக்கும் (தானி 8:24-25; தானி 12:7) "வானத்தின் சேனை" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவாலயத்தின் ஊழியக்காரர்களும் வானத்தின் சேனை என்று அழைக்கப்படுகிறார்கள். (எண் 4:23-43; எண் 8:24-25). கர்த்தரை ஆராதிக்கிறவர்களும் "சேனை" என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். (வெளி 11:1-2). வானத்தின் நட்சத்திரங்களுக்கும் அவர்கள் ஒப்பிடப்பட்டிருக்கிறார்கள். வானத்தின் நட்சத்திரங்களில் சில கீழே விழும் என்பது வானத்திலுள்ள நட்சத்திரங்களைக் குறிக்க வில்லை. அது பூமியிலுள்ள யூத ஜனத்தாரைக் குறிக்கிறது. (தானி 8:10,13).

சேனை (host) - צָבָא - tsaw-baw', tseb-aw-aw' - 6635

ஆண்பால் பெயர்ச்சொல் - சேனை, சேனாதிபதி, அணி, யுத்தம், படை, இராணுவம், சேவகம், போர், பணி விடை, குறிக்கப்பட்ட காலம், போராட்டம், குறிக்கப்பட்ட நாள் **(a mass of persons or things, especially organized for war)**

8 அதிகாரம்

“சேனையினுடைய அதிபதி” - இந்த வாக்கியம் பிரதான ஆசாரியரைக் குறிக்கிறது.

“அவரிடத்திலிருந்து அன்றாட பலியை நீக்கிற்று” - சின்னக்கொம்பு அல்லது அந்திக் கிறிஸ்து அன்றாட பலியை நீக்குவான். (தானி 9:27; தானி 12:11; மத் 24:15; வெளி 13) அவருடைய பரிசுத்த ஸ்தலமும் கீழே தள்ளப்படும். (2தெச 2:4; வெளி 11:1-2). தேவாலயத்தில் பலிகள் செலுத்தப்பட்ட பலிபீடம் அழிக்கப்பட்டு அகற்றப்படும். அந்த இடத்தில் மிருகத்தின் சொரூபம் ஸ்தாபிக்கப்படும். ஜனங்கள் அதை ஆராதிப்பார்கள். (வெளி 13:11-18; வெளி 14:9; வெளி 15:2; வெளி 16:2; வெளி 20:4).

“பாதகத்தினிமித்தம்” - ஜனங்களுடைய பாதகம் அதிகமாக இருக்கும். ஆகையினால் அன்றாட பலிக்கு எதிராகத் திரளான ஜனங்கள் திரண்டு வருவார்கள்.

“அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று” - சின்னக்கொம்பு சத்தியத்தைத் தரையில் தள்ளிப்போடும். சிறிது காலத்திற்கு அது தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றும்.

தரிசனத்தின் விபரம்

1. அன்றாட பலி நீக்கப்பட்டிருக்கிறது. (தானி 8:11-14)
2. அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளப்படும். (தானி 8:11; தானி 9:27; தானி 11:45; 2தெச 2:4; வெளி 11:1-3)
3. பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகம். (தானி 8:13; தானி 9:27; தானி 11:45; மத் 24:15; 2தெச 2:4; வெளி 13)
4. சேனை அதன் பாதபடியில் மிதிக்கப்படும்.(தானி8:13; தானி 8:10)

“அன்றாட பலி” - யூதருடைய தேவாலயத்தில் செலுத்தப்படும் அன்றாட பலிகளையும், மிருகங்களின் பலிகளையும் இந்த வார்த்தை குறிக்கிறது. (தானி 11:31; தானி 12:11; எண் 4:16; எண் 28:24; எண் 29:6; எஸ்றா 3:4; எசே 45:23). இந்த வாக்கியம் நிறைவேறுவதற்கு எருசலேமில் யூதருக்கு ஓர் ஆலயம் கட்டப்பட்டு, அதில் அவர்கள் மறுபடியும் பலிகளைச் செலுத்த வேண்டும். ஆகையினால் இது கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவமல்ல. வருங்காலத்தில் நடைபெறப்போகும் சம்பவமாகும்.(தானி 8:19,23-25; தானி 9:27; தானி 11:40-45; தானி 12; மத் 24:15-31; 2தெச 2:1-12; வெளி 13, வெளி 17)

“பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகம்” - இது பாழாக்குகிற அருவருப்பாகும். (தானி 9:27; தானி 12:11; மத் 24:15; 2தெச 2:4; வெளி 11:1-3; வெளி 13:11-18)

“பரிசுத்த ஸ்தலம்” - இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தை “கோடேஷ்” **(qodesh)** என்பதாகும். வேதாகமத்தில் தேவாலயத்தைக் குறிப்பதற்கு “மிக்டாஷ்” **(miqdash)** என்னும் எபிரெய வார்த்தையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

பரிசுத்தமானது **(sanctuary) - קֹדֶשׁ - ko’-desh - 6944**

ஆண்பால் பெயர்ச்சொல் - பரிசுத்தமானது, பரிசுத்தம், பரிசுத்தமான இடம் **(a sacred place or thing)**

பரிசுத்த ஸ்தலம் **(consecrated place) - מִקְדָּשׁ - mik-dawsh’ - 4720**

ஆண்பால் பெயர்ச்சொல் - ஸ்தலம், பரிசுத்தஸ்தலம், பரிசுத்த ஆலயம், பரிசுத்தஸ்தானம், வாசஸ்தலம் **(a consecrated place or thing)** (தானி 8:11).

“இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல்” - தானி 8:13 ஆவது வசனத்தில் “அன்றாட பலியைக்குறித்தும், பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக் குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக்கொடுக்கப்படுவதைக் குறித்தும், உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும்” என்னும் கேள்வி கேட்கப்படுகிறது. அதற்கு “இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்” என்னும் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்திற்கு வேதபண்டிதர்கள் பலவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள்.

8 அதிகாரம்

2,300 இராப்பகல் என்பது 1,150 மாலைப் பலிகளையும், 1,150 காலைப் பலிகளையும் குறிக்கும். (தானி 8:26) இந்தக் காலம் 3 வருஷங்கள், 2 மாதங்கள், 10 நாட்களாகும். இதன் பின்பு, பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும். (தானி 8:14).

வெளி 11:1-3 ஆகிய வசனங்களில் "பரிசுத்த நகரத்தை புறஜாதியார்கள் 42 மாதமளவும் மிதிப்பார்கள்" என்று கூறப்பட்டிருக்கிறது. 42 மாதங்கள் என்பது 1260 நாட்களாகும். தானியேலின் தரிசனத்தில் கூறப்பட்டிருக்கும் 2,300 இராப்பகல் அதாவது 1150 நாட்களுக்கும், வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டிருக்கும் 1260 நாட்களுக்கும் இடையிலுள்ள காலம் 110 நாட்களாகும். இக்காலத்தில் இரண்டு சாட்சிகளும் இங்கு இருப்பார்கள். அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திற்கு ஓடிப்போவார்கள். (வெளி 12:6,14) அந்திக்கிறிஸ்துவிற்கு தேசங்களின்மீது அதிகாரம் கொடுக்கப்படும். (வெளி 13:5; தானி 7:25; தானி 9:27). இந்தச் சம்பவம் மத் 24:22 ஆவது வசனத்தில் "தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்" என்று எழுதப் பட்டிருக்கும் சம்பவத்தை விளக்குகிறது. 110 நாட்களுக்கு இந்தக் காலம் குறைக்கப்படும்.

இக்காலத்தில் இரண்டு சாட்சிகளின் உதவியினாலும், மற்ற உபாயங்களினாலும் யூதர்கள் மறுபடியும் தங்களுடைய தேவாலயத்தையும் எருசலேமையும் அந்திக் கிறிஸ்து வடதிசையிலிருந்து அர்மெகதோனில் யுத்தம் பண்ண வரும்போது எருசலேம் யூதருடைய வசமாக இருக்கும். (சக 14:1-5).

தானியேல் கூறிய காலங்கள்

இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் சென்ற பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும். அதாவது 3 வருஷங்கள், 2 மாதங்கள், 10 நாட்களுக்குப்பின்பு (தானி 8:11-13,26) பரிசுத்த ஸ்தலத்திலுள்ள பாழாக்குகிற அருவருப்பு சுத்திகரிக்கப்படும். (தானி 8:13-14; தானி 9:27; தானி 11:45; தானி 12:11; மத் 24:15; 2தெச 2:4; வெளி 13:11-18). பரிசுத்த ஸ்தலத்தில் 1260 நாட்களுக்கும் பாழாக்குகிற அருவருப்பு இருக்குமென்று எந்த வேதவசனமும் கூறவில்லை. ஆகையினால் தானி 8:14 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் பரிசுத்த ஸ்தலத்தை 2300 இராப்பகல் காலம் வரைக்கும் அதாவது 1150 நாட்கள் வரைக்கும் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அன்றாடபலி நீக்கப் பட்டிருக்கும். இந்த 1150 நாட்களுடன் 110 நாட்களைச் சேர்க்கும்போது 1260 நாட்கள் ஆகும். இது இக்காலத்தின் மொத்த அளவாகும்.

தானியேலின் தரிசனத்தில் காணப்பட்ட கால அளவுகள்

1. உன்னத மானவனுடைய பரிசுத்தவான்கள் மீது யுத்தமும், காலங்களையும், பிரமாணங்களையும் மாற்றும் அதிகாரமும் அந்திக்கிறிஸ்துவிற்கு மூன்றரை வருஷங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும். (தானி 7:25).

2. பரிசுத்த ஸ்தலத்தில் அன்றாட பலி நீக்கப்படுவதும், பரிசுத்த ஸ்தலத்தில் பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகமும், 1150 நாட்களுக்கு இருக்கும். (தானி 8:14).

3. வாரத்தின் (7 வருஷங்கள்) பாதியில் அந்திக்கிறிஸ்து பலியையும், காணிக்கையையும் ஒழியப் பண்ணுவான். (தானி 9:27). தானியேலின் எழுபதாவது வாரத்தின் மத்தியில் அல்லது 1260 நாட்களின் ஆரம்பத்தில் பலிகள் ஒழிக்கப்படும்.

4. நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும். (தானி 9:27). அந்திக்கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்தைப் பாழாக்குவான். இதற்காக இவன்மீது நியாயத்தீர்ப்பு வரும். அந்தத் தீர்ப்பு 1260 நாட்களுக்கு 110 நாட்கள் முன்பாகவே நிறைவேறும்.

8 அதிகாரம்

5. மூன்றரை வருஷங்களின் முடிவில் அல்லது 1260 நாட்களின் முடிவில் இவை களெல்லாம் நிறைவேறித் தீரும். (தானி 12:7) ஆயினும், பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுவது 110 நாட்களுக்கு முன்பு நடைபெறும். (தானி 8:14).

6. அன்றாடபலி நீக்கப்பட்டு, பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்காலமுதல் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூறு நாட்களும் (தானி 12:11), 1335 நாட்களும் செல்லும். (தானி 12:12) இது 1260 நாட்களுக்கு 30 நாட்களும், 75 நாட்களும் கூடுதலாகும். (தானி 12:7-13). பரிசுத்த ஸ்தலத்தில் அன்றாட பலிகள் 1260 நாட்கள், 1290 நாட்கள் ஆகியவற்றின் காலத்தில் ஆரம்பத்தில் அகற்றப்படும்.

7. "பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லி யிருக்கிறானே". (மத் 24:15; தானி 8:14; தானி 9:27; தானி 12:7-11) நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக் கடவர்கள் (மத் 24:16-21). அவர்கள் 1260 நாட்களுக்கு ஓடிப் போவார்கள். (வெளி 12:6,14). 1260 நாட்களுடைய காலத்தின் ஆரம்பத்தில் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பலிகள் நிறுத்தப்படும். இக்காலத்தின் முடிவில் 1150 நாட்களுக்குப் பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும். (தானி 8:14).

8. ஆலயம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்படும். அவர்கள் பரிசுத்த நகரத்தை 42 மாதமளவும் மிதிப்பார்கள். (வெளி 11:1-2). இந்த 42 மாதக்காலத்தில் ஆலயம் எவ்வளவு காலத்திற்கு அருவருப்பாக இருக்கும் என்று கூறப்பட வில்லை. தானி 8:13-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் பரிசுத்த ஸ்தலத்தில் 2300 இராப்பகலுக்கு அதாவது 1150 நாட்களுக்கு பாழாக்குகிற அருவருப்பு இருக்கும். 42 மாத காலங்களுக்கு எருசலேம் நகரத்தில் புறஜாதியாரின் ஆளுகை இருக்கும். இந்தக் காலத்திற்கு 110 நாட்களுக்கு முன்பாகவே யூதர்கள் இரண்டு சாட்சிகளின் உதவியோடு (வெளி 11) எருசலேமின் ஆளுகையைத் திரும்பக் கைப்பற்றுவார்கள்.

சக 14:1-5,14 ஆகிய வசனங்களின் பிரகாரம் 42 மாதங்களின் இறுதியில் யூதர்கள் எருசலேம் நகரத்திற்குத் திரும்பி வருவார்கள். இக்காலத்தில் அந்திக் கிறிஸ்து வடக்கு தேசங்களின்மீது 42 மாதங்களுக்கு யுத்தம் பண்ணிக் கொண்டிருப்பான். (தானி 11:44). இந்த யுத்தத்தில் பூமியிலுள்ள எல்லாத் தேசத்தாரின் சேனையும் அந்திக் கிறிஸ்துவிற்குத் தேவைப்படும். இதற்காக எருசலேமிலும், பாலஸ்தீனத்திலுமுள்ள புறஜாதியாரின்சேனையை அங்கிருந்து கூட்டிச் சென்று, தன்னுடைய யுத்தத்தில் பஸ்ன் படுத்துவான். இதனால் பாலஸ்தீன தேசத்தில் அந்திக் கிறிஸ்துவின் அதிகாரம் குறையும். இந்தச் சூழ்நிலையில் யூதர்கள் எருசலேமைத் திரும்பவும் கைப்பற்றுவார்கள்.

அந்திக் கிறிஸ்து கிழக்கிலும், வடக்கிலும் உள்ள தேசங்களைக் கைப்பற்றும்போது யூதர்கள் எருசலேமிற்கு வந்து விடுவார்கள். எருசலேமை மறுபடியும் கைப்பற்றுவதற்காகவும்,, யூதர்களை அழிப்பதற்காகவும், அந்திக்கிறிஸ்து தன்னுடைய திரளான சேனையைத் திரட்டிக் கொண்டு, எருசலேமின்மீது யுத்தம் பண்ண வருவான். எருசலேமின் பாதிப்பகுதியை அந்திக்கிறிஸ்து மறுபடியும் பிடித்துக் கொள்வான். அப்போது இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடு வானத்திலிருந்து இறங்கி வருவார். அர்மெகதோனில் நடைபெறும் யுத்தத்தில் புறஜாதியாரின் சேனையோடு இயேசு கிறிஸ்துவும், அவருடைய பரிசுத்தவான்களும் யுத்தம்பண்ணி, எருசலேமையும், யூதர்களையும் மீட்டுக் கொள்வார்கள். (சக14:1-5,14;யோவே3;வெளி 19:11-21). இந்தச் சம்பவம் 1260 நாட்கள் காலத்தில் 110 நாட்கள் குறைவு படுவதைவிளக்குகிறது.(தானி 8:13-14).

8 அதிகாரம்

9. இரண்டு சாட்சிகளும் இஸ்ரவேலைப் பாதுகாப்பதற்காகவும், தேவனிடத்தில் அவர்களை ஆழ்ாயப் படுத்துவதற்காகவும் 1260 நாட்களாக தீர்க்கதரிசனம் உரைத்து அற்புதங்களைச் செய்வார்கள். (வெளி 11:3-11). இவர்களுடைய உதவியுடன் யூதர்கள் 1260 நாட்களுடைய காலத்தின் கடைசி 110 நாட்களில் எருசலேமை மறுபடியும் கைப்பற்றுவார்கள். எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேலரை விடுவித்து, வழிநடத்தியபோது, மோசேயும், ஆரோனும் அவர்களுக்குத் தலைவர்களாக இருந்ததுபோல இவ்விரண்டு சாட்சிகளும் இஸ்ரவேல் புத்திரருக்கு இக்காலத்தில் தலைவர்களாக இருப்பார்கள். (எசே 20:33-38; மல் 4:5-6; வெளி 11).

10. இஸ்ரவேல் தேசத்தார் 1260 நாட்களுக்கு வனாந்தரத்திற்கு ஓடிப்போவார்கள். (வெளி 12:6). ஆயினும் இக்காலத்தில் தேவனுடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி உடையவர்களும் வனாந்தரத்திற்கு ஓடிப் போகாமல் தேசத்தில் இருப்பார்கள். இவர்கள் ஸ்திரீயின் மீதியானவர்கள். (வெளி 12:17) அந்திக்கிறிஸ்து கிழக்கிலும், வடக்கிலும் யுத்தம் பண்ணிக் கொண்டிருக்கும்போது இக்காலத்தின் கடைசி 110 நாட்களில் வனாந்தரத்திற்குப் போன யூதர்கள் எருசலேமிற்குத் திரும்பவும் வருவார்கள். (தானி 11:44).

11. யூதர்கள் யூதேயாவிலிருந்து வனாந்தரத்திற்கு ஓடிப்போவது ஒரு காலமும் (ஒரு வருஷம்), காலங்களும் (2 வருஷங்கள்), அரைக்காலமும் (6 மாதங்கள்) இருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. (தானி 7:25) இக்காலத்தில் யூதர்களுக்கு வனாந்தரத்திலுள்ள அரபியர்கள் உதவி புரிவார்கள். (வெளி 12:14). அந்திக் கிறிஸ்து வடதிசையிலிருந்து எருசலேமிற்கு எதிராக வந்து (எசே 38-39) எருசலேமை மறுபடியும் பிடித்துக் கொள்ள வரும்போது (சக 14:14), அவனுக்கு எதிராக யுத்தம் பண்ணுவதற்கு யூதா தேசத்தாரிடம் எருசலேமில் ஒரு சேனை இருக்கும்.

12. அந்திக்கிறிஸ்துவிற்கு தேசங்களின் மீது 42 மாதங்கள் அதிகாரம் கொடுக்கப்படும். (வெளி 13:5). வெளிப்படுத்தின விசேஷத்திலும், தானியேலின் தீர்க்க தரிசனத்திலும் கடைசி காலத்தில் நடைபெறப்போகும் மூன்றரை வருஷத்தைப் பற்றி அதாவது 1260 நாட்கள் அல்லது 42 மாதங்களைப் பற்றி தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. தானி 8:13-14 ஆகிய வசனங்களில் இக்காலம் மூன்று வருஷங்கள், 2 மாதங்கள், 10 நாட்கள் என்று 1260 நாள் காலத்திலிருந்து 110 நாட்கள் குறைவாகக் கூறப்பட்டிருக்கிறது. 1260 நாட்களுடைய காலத்தின் முடிவுக்கு 110 நாட்களுக்கு முன்பாகவே தேவாலயம் சுத்திகரிக்கப் படும்.

2. வியாக்கியானம் - (8:15-27)

(1) வியாக்கியானம் செய்யும் தேவதூதர்கள்(8:15-16) - (7:15-16)

தானி 8:15 தானியேலாகிய நான் இந்தத் தரிசனத்தைக்கண்டு, அதின் பொருளை அறிய வகைதேடுகையில், இதோ, மனுஷசாயலான ஒருவன் எனக்கு எதிரே நின்றான்.

தானி 8:16 அன்றியும் காபிரியேலே, இவனுக்குத் தரிசனத்தை விளங்கப் பண்ணென்று ஊலாயின் மத்தியிலே கூப்பிட்டுச் சொல்லுகிற ஒரு மனுஷ சத்தத்தையும் கேட்டேன்.

"அதின் பொருளை அறிய வகைதேடுகையில்" - தானியேல் தரிசனத்தைக் கண்டு, அதன் பொருள் தெரியாமல் திகைத்து நிற்கிறான். அப்போது அதன் வியாக்கியானத்தைத் தானியேலுக்குக் கூறுவதற்காகக் காபிரியேல் என்னும் தூதன் அனுப்பப்பட்டிருக்கிறார்.

8 அதிகாரம்

"மனுஷசாயலான ஒருவன் எனக்கு எதிரே நின்றான்" - தேவதூதர்கள் மனுஷசாயலாக இருக்கிறார்கள். தேவனும் மனுஷசாயலாக இருக்கிறார். (எபே 1:26-27) ஏனெனில் தேவன் தம்முடைய சாயலாகவும், தம்முடைய ரூபத்தின் பிரகாரமாகவும் மனுஷனைச் சிருஷ்டித்தார். (ஆதி 1:26-28; ஆதி 9:6; யாக் 3:9).

"காபிரியேல்" - தேவனுடைய தூதர்களின் அதிபதிகளில் காபிரியேல் பிரதானமானவன். (தானி 9:21; லூக்கா 1:19,26).

"ஊலாயின் மத்தியிலே கூப்பிட்டுச் சொல்லுகிற ஒரு மனுஷ சத்தம்" - இது ஒரு விநோதமான இடம். இங்கு கேட்கப்படும் சத்தம் மனுஷனுடைய சத்தத்தைப்போல இருக்கிறது. பரலோகத்தில் ஏனோக்கு, எலியா ஆகிய இரண்டு மனுஷர்கள் இருக்கிறார்கள். தேவன் ஒருவேளை இந்தச் சம்பவத்தைப் பேசுவதற்கு இவ்விருவரையும் பயன்படுத்தியிருக்கலாம். அல்லது தேவனோ அல்லது ஒரு தேவதூதனோ இந்த நிகழ்ச்சியைப் பேசியிருக்கலாம். யோவானுக்குத் தம்முடைய வெளிப்பாட்டை அறிவிப்பதற்குத் தேவன் இரட்சிக்கப்பட்ட ஒரு மனுஷனைப் பயன்படுத்தினார். (வெளி 19:10; வெளி 22:8-9) தானியேலுக்கும், தேவன் இதுபோல ஒரு மனுஷர் மூலமாக செய்தியை அறிவித்திருக்கலாம்.

(2) நிறைவேறும் காலம் (8:17-19) - (2:27-30; 7:26-27; 8:26; 11:35; 12:1-9)

தானி 8:17 அப்பொழுது அவன் நான் நின்ற இடத்துக்கு வந்தான்; அவன் வருகையில் நான் திடுக்கிட்டு முகங்குப்புற விழுந்தேன்; அவன் என்னை நோக்கி: மனுபுத்திரனே கவனி; இந்தத் தரிசனம் முடிவுகாலத்துக்குஅடுத்தது என்றான்.

தானி 8:18 அவன் என்னோடே பேசுகையில், நான் தரையில் முகங்குப்புறக் கிடந்து, அயர்ந்த நித்திரை கொண்டேன்; அவனோ என்னைத் தொட்டு, நான் காலூன்றி நிற்கும்படி செய்து:

தானி 8:19 இதோ, கோபத்தின் முடிவுகாலத்திலே சம்பவிப்பதை உனக்குத் தெரிவிப்பேன்; இது குறிக்கப்பட்ட முடிவு காலத்துக்கு அடுத்தது.

"நான் திடுக்கிட்டு முகங்குப்புற விழுந்தேன்"- தெய்வீக பிரசன்னத்தினாலும், தேவதூதரைக் காண்பதினாலும் மனுஷருக்கு இதுபோன்ற அனுபவம் உண்டாகிறது. (தானி 8:17-18; தானி 10:5-11; ஆதி 15:12; எபே 1:28; மத் 17:6; வெளி 1:17).

தீர்க்கதரிசன எண் - 13

"மனுபுத்திரனே கவனி; இந்தத் தரிசனம் முடிவுகாலத்துக்கு அடுத்தது" (தானி 8:17) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேற வில்லை.

இந்தத் தீர்க்கதரிசனத்தின் பெரும்பகுதி நாம் வாழும் காலத்தின் முடிவிலும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும் அவருடைய நித்திய ஆளுகையின்போதும் நிறைவேறும். (தானி 8:19,23-26; தானி 2:40-45; தானி 7:23-27; தானி 9:27; தானி 11:36-45; தானி 12:7-13; வெளி 4:1-19:21).

அயர்ந்த நித்திரை கொண்டவர்கள்

1. ஆதாம் (ஆதி 2:21)
2. ஆபிரகாம் (ஆதி 15:12)
3. சவுலும், அவனுடைய சேனைகளும் (1சாமு 26:12)
4. இஸ்ரவேலர் (ஏசா 29:10)
5. தானியேல் (தானி 8:18; தானி 10:9)
6. ஐத்திகு (அப் 20:9)

அயர்ந்த நித்திரையைப் பற்றிய வசனங்கள். (யோபு 4:13; யோபு 33:14-16; நீதி 19:15)

"இது குறிக்கப்பட்ட முடிவு காலத்துக்கு அடுத்தது" - இக்காலத்தின் முடிவில், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, இந்தத் தரிசனம் நிறைவேறும் காலம் குறிக்கப்பட்டிருக்கிறது. (தானி 8:19,23-25; தானி 2:44-45; தானி 7:23-27; தானி 9:27; தானி 11:36-45; சக 14; 2தெச 2:8-12; வெளி 19:11-21). முடிவு காலம் தானி 8:25 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. அப்போது சின்னக்கொம்பு அதிபதிகளுக்கு அதிபதியாயிருக்கிற இயேசு கிறிஸ்துவிற்கு விரோதமாக எழும்புவான்.

8 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 14

"கோபத்தின் முடிவுகாலத்திலே சம்பவிப்பதை உனக்குத் தெரிவிப்பேன்........." (தானி 8:19-26) தானி 8:20-22 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. தானி 8:19,23-27 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

தேவனுடைய கோபத்தின் முடிவுகாலம்

இக்காலத்தில் நடைபெறும் சம்பவங்கள்.

1. அந்திக்கிறிஸ்துவினுடைய யுத்தங்கள். (தானி 8:9; தானி 7:23-24; தானி 9:24; தானி 11:36-45; வெளி 19)
2. கர்த்தருடைய பரிசுத்தவான்களை அந்திக்கிறிஸ்து கொன்றுபோடுவது. (தானி 8:10-14,24; தானி 7:21; தானி 9:27; தானி 11:36-45; வெளி 13:11-18)
3. யூதருடைய வருங்கால பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அந்திக்கிறிஸ்து அன்றாட பலிகளை அகற்றிப்போடுவது. (தானி 8:11-14; தானி 9:27; தானி 12:7-11; மத் 24:15; வெளி 13)
4. பரிசுத்த ஸ்தலத்தில் பாழாக்குகிற அருவருப்பை அந்திக்கிறிஸ்து வைப்பது. (தானி 8:11-14; தானி 9:27; தானி 11:45; 2தெச 2:4; வெளி 11:1-2; வெளி 13)
5. பரிசுத்த ஸ்தலத்தையும், பலிபீடத்தையும் அந்திக்கிறிஸ்து தள்ளிப்போடுவது. (தானி 8:11-13)
6. தேவனுக்கு எதிராக அந்திக்கிறிஸ்து பலரைக் கலகம் பண்ண வைப்பது. (தானி 8:12; வெளி 13:11-18; வெளி 16:2, 10-11)
7. மனுஷர் மத்தியிலே அந்திக்கிறிஸ்துவின் பாவங்கள் அதிகரிப்பது. (தானி 8:12,23; 2தெச 2:8-12; வெளி 13; வெளி 16:10-11)
8. அந்திக்கிறிஸ்து சத்தியத்தைத் தரையிலே தள்ளுவது. (தானி 8:12; தானி7:25; 2தெச 2:4,8-12)
9. சேனையை அந்திக்கிறிஸ்து தன் கால்களில் மிதிப்பது. (தானி 8:13,24-25; தானி 7:21; தானி 9:27; தானி 11:40-45; வெளி 13)
10. தேவனுக்கும், மனுஷனுக்கும் விரோதமாக அந்திக்கிறிஸ்து மூர்க்க முகமாக இருப்பது. (தானி 8:23; வெளி 13)
11. அந்திக்கிறிஸ்து தன்னைப் பிசாசுக்கு ஒப்புக்கொடுப்பது. (தானி 8:24; தானி 11:36-39; 2தெச 2:8-12; வெளி 13)
12. அந்திக்கிறிஸ்து பலவான்களையும், பரிசுத்த ஜனங்களையும் அழிப்பது. (தானி 8:24; தானி 11:36-46; வெளி 13)
13. அந்திக்கிறிஸ்துவின் வஞ்சனை. (தானி 8:25; 2தெச 2:8-12; வெளி 13; வெளி 19:20)
14. அந்திக்கிறிஸ்துவின் சுயபெருமை. (தானி 8:25; தானி 7:25; தானி 11:36-45; 2தெச 2:4; வெளி 13)
15. கிறிஸ்துவிற்கு விரோதமாக அந்திக்கிறிஸ்து எழும்புவது. (தானி 8:25; 2தெச 2:8; வெளி 19:19-21).

(3) ஆட்டுக்கடா - மேதிய பெர்சியா (8:20) - (2:39, 7:5)

தானி 8:20 நீ கண்ட இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா மேதியா பெர்சியா தேசங்களின் ராஜாக்கள்;

8 அதிகாரம்

(4) வெள்ளாட்டுக்கடா - கிரேக்கு (8:21) - *(2:39; 7:6,24, 7:25)*

தானி 8:21 ரோமமுள்ள அந்த வெள்ளாட்டுக்கடா கிரேக்கு தேசத்தின் ராஜா; அதின் கண்களுக்கு நடுவே இருந்த பெரிய கொம்பு அதின் முதலாம் ராஜா;

(5) நான்கு கொம்புகள் - கிரேக்கு, துருக்கி, சீரியா, எகிப்து (8:22)

தானி 8:22 அது முறிந்துபோனபின்பு அதற்குப் பதிலாக நாலு கொம்புகள் எழும்பினது என்னவென்றால், அந்த ஜாதியிலே நாலு ராஜ்யங்கள் எழும்பும்; ஆனாலும் அவனுக்கு இருந்த வல்லமை அவைகளுக்கு இராது.

(6) சின்னக்கொம்பு (8:23) - *(7:11,21-22,24,7:25)*

தானி 8:23 அவர்களுடைய ராஜ்யபாரத்தின் கடைசிக்காலத்திலோ வென்றால், பாதகருடைய பாதகம் நிறைவேறும்போது, மூர்க்க முகமும் சூதான பேச்சுமுள்ள சாமர்த்தியமான ஒரு ராஜா எழும்புவான்.

(7) அவனுடைய வல்லமையும் பரிசுத்தவான்களோடு யுத்தமும் (8:24) - *(7:25)*

தானி 8:24 அவனுடைய வல்லமை பெருகும்; ஆனாலும் அவனுடைய சுயபலத்தினால் அல்ல, அவன் அதிசயமானவிதமாக அழிம்புண்டாக்கி, அநுகூலம் பெற்றுக் கிரியைசெய்து, பலவான்களையும் பரிசுத்த ஜனங்களையும் அழிப்பான்.

(8) அவனுடைய பெருமை (8:25) - *(7:25; 2தெச 2:4; வெளி 13:1-7,12,15-18; 17:8-17)*

(9) மேசியாவோடு அவனுடைய யுத்தம் - *(2:44-45; 7:26-27; 2தெச 2:8; வெளி 17:14; 19:11-21; சக 14)*

தானி 8:25 அவன் தன் உபாயத்தினால் வஞ்சகத்தைக் கைகூடிவரப்பண்ணி, தன் இருதயத்தில் பெருமைகொண்டு, நிர்விசாரத்தோடிருக்கிற அநேகரை அழித்து, அதிபதிகளுக்கு அதிபதியாயிருக்கிறவருக்கு விரோதமாய் எழும்புவான்; ஆனாலும் அவன் கையினாலல்ல வேறுவிதமாய் முறித்துப் போடப்படுவான்.

"அதிபதிகளுக்கு அதிபதியாயிருக்கிறவர்" - இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. *(வெளி. 1:5)*.

(10) தரிசனத்தின் காலம் (8:26-27)

தானி 8:26 சொல்லப்பட்ட இராப்பகல்களின் தரிசனம் சத்தியமாயிருக்கிறது; ஆதலால் இந்தத் தரிசனத்தை நீ மறைத்து வை; அதற்கு இன்னும் அநேக நாள் செல்லும் என்றான்.

தானி 8:27 தானியேலாகிய நான் சோர்வடைந்து, சிலநாள் வியாதிப்பட்டிருந்தேன்; பின்பு நான் எழுந்திருந்து, ராஜாவின் வேலையைச் செய்து அந்தத் தரிசனத்தினால் திகைத்துக் கொண்டிருந்தேன்; ஒருவரும் அதை அறியவில்லை.

"இந்தத் தரிசனத்தை நீ மறைத்து வை" - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற நீண்ட காலமாகும் என்பது இங்கு இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. *(தானி 8:9-14, 20-25; மத் 24:15-22; வெளி. 13)*.

"சிலநாள் வியாதிப்பட்டிருந்தேன்" - தான் கண்ட தரிசனத்திற்குப் பதில் பெறுவதற்காகத் தானியேல் நீண்டகாலம் உபவாசம் செய்திருக்க வேண்டும். *(தானி 9:3; தானி 10:2-3)*. தரிசனத்தைக் காண்பதினால் யாரும் வியாதியடைவதில்லை.

"ராஜாவின் வேலை" - தானியேல் சூசான் அரமனையில் இருக்கிறான். பாபிலோன் ராஜாவாகிய பெல்ஷாத்சார் அரமனை வேலை விஷயமாகத் தானியேலை இங்கு அனுப்பியிருக்க வேண்டும். *(தானி 8:1; தானி 1:21; தானி 5:29-31; தானி 6:28)*.

9 அதிகாரம்

IX. தானியேலின் மூன்றாம் தரிசனம் - எழுபது வருஷங்களின் வாரங்கள்

1. காலமும் சூழ்நிலையும்

தானி 9:1 கல்தேயருடைய ராஜ்யத்தின் மேல் ராஜாவாக்கப்பட்ட மேதிய குலத்தானாகிய அகாஸ்வேருவின் புத்திரனான தரியு ராஜ்யபாரம்பண்ணுகிற முதலாம் வருஷத்திலே,

தானி 9:2 தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித் தீர எழுபதுவருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசிகளோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்துகொண்டேன்.

"மேதிய குலத்தான்" - யாப்பேத்தியர் மேதிய குலத்தைச் சேர்ந்தவர்கள். (ஆதி 10:2; 2இராஜா 17:6; 2இராஜா 18:11; 1நாளா. 1:5; எஸ்றா 6:2; எஸ் 1:3-19; எஸ் 10:2; ஏசா 13:17; ஏசா 21:2; எரே 25:25; எரே 51:11,28; தானி 5:28-31; தானி 6:1-16; தானி 8:20; தானி 9:1; தானி 11:1; அப் 2:9).

"அகாஸ்வேருவின் புத்திரனான தரியு" - இது தரியு அல்லது அஸ்திகேசைக் **(Astyages)** குறிக்கும் வார்த்தையாகும். இவன் அகாஸ்வேரு அல்லது கைகோரேஸ் **(Cyaxares)** என்பவனின் குமாரன். மேதிய-பெர்சிய தேசத்தின் நான்கு ராஜாக்களுக்கு அகாஸ்வேரு என்னும் பட்டப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் கிரேக்கப் பெயர் சஷ்டா **(Xerxes)** என்பதாகும். கைகோரேசும், அஸ்திகேசும் அகாஸ்வேரு என்று அழைக்கப்பட்டார்கள். அகாஸ்வேரு என்பதற்கு "வல்லவன்" **"Mighty"** என்று பொருள். (தானி 5:31)

"தரியு ராஜ்யபாரம்பண்ணுகிற முதலாம் வருஷத்திலே" - தானி 8 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் தரிசனத்திற்கு ஒரு வருஷத்திற்குப் பின்பு தானியேல் இந்தத் தரிசனத்தைக் காண்கிறார். (தானி 5:30-31= தானி 8:1).

"புஸ்தகங்கள்" - எரேமியாவின் புஸ்தகச் சுருள்கள். (எரே 25:11, எரே 29:1,10; 2நாளா. 36:21).

"எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித் தீர எழுபதுவருஷம் செல்லும்" - இந்த எழுபது வருஷத்தில் மூன்று காலங்கள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

1. யோயாக்கீமின் நாலாம் வருஷத்தில் யூதருடைய அடிமைத்தனம் ஆரம்பமாகிறது. இது நேபுகாத்நேச்சாரின் முதலாம் வருஷமாகும். இக்காலத்தில் யூதா தேசம் கல்தேயருடைய ஆட்சியின்கீழ் எழுபது வருஷங்களுக்கு ஆளுகை செய்யப்படுகிறது. (எரே 25:1; 2இராஜா 24:1-7). மேதியனாகிய தரியுவின் மூலமாகப் பாபிலோன் பேரரசு வீழ்ச்சியுற்றது. இக்காலத்துடன் இந்த எழுபது வருஷ அடிமைத்தனம் முடிவு பெறுகிறது. (தானி 5:31).

2. எகொனியாவைப் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் சென்றபோது யூதருடைய சிறையிருப்பு ஆரம்பமாயிற்று. இது நேபுகாத்நேச்சரின் எட்டாம் வருஷத்தில் நடைபெற்ற சம்பவம். யூதருடைய அடிமைத்தனம் ஆரம்பமாகிய 7 வருஷங்களுக்குப் பின்பு அவர்களுடைய சிறையிருப்புக்காலம் ஆரம்பமாகிறது. (2இராஜா 24:8-16) இக்காலம் எருசலேம் அழிக்கப்படுவதற்கு 11 வருஷங்களுக்கு முன்பு நடைபெற்றது. (எசே 40:1).

3. "எருசலேமின் பாழ்க்கடிப்புகள்" **"The desolations of Jerusalem"** என்னும் வாக்கியம் எருசலேம் நகரம் முழுவதுமாக அழிக்கப்படுவதையும், சிதேக்கியாவின் 11 ஆம் ராஜ்யபாரத்தின்போது, நேபுகாத்நேச்சார் யூதா தேசத்தாரைச் சிறைப்பிடித்துச் சென்றதையும் குறிப்பிடும். (2இராஜா 24:17-25:2; லேவி 26:32-35) நேபுகாத்நேச்சார் எருசலேம் நகரத்தை முதன் முறையாக முற்றிக்கை போட்டு, 19 வருஷங்களுக்குப் பின்பு, எருசலேமின் பாழ்க்கடிப்புகள் ஆரம்பமாயிற்று. (2இராஜா 24:1-5) இந்தச் சம்பவம் இரண்டாம் முற்றிக்கைக்கு 11 வருஷங்களுக்குப் பின்பும் (2இராஜா 24:8-16), மூன்றாம் முற்றிக்கையின் போதும் நடைபெற்றதாகும். மூன்றாம் முற்றிக்கையே இறுதி முற்றிக்கை. (2இராஜா 24:17-25:4).

9 அதிகாரம்

தானி 9 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் தரிசனத்தின்போதும், தானியேலின் ஜெபத்தின்போதும் யூதருடைய அடிமைத்தனம் முடிவு பெற்று விட்டது. யூதாவின் சிறையிருப்பும், எருசலேமின் பாழ்க்கடிப்புகளும் விரைவில் முடிவடையப்போகிறது.

2. தானியேலின் ஜெபமும் தனக்காகவும் இஸ்ரவேலுக்காகவும் செய்த பாவ அறிக்கையும் - இஸ்ரவேலின் பன்னிரெண்டு பாவங்கள்

தானி 9:3 நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி,

தானி 9:4 என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணி, பாவ அறிக்கை செய்து: ஆ ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே,

தானி 9:5 நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமக்காரராயிருந்து, துன்மார்க்கமாய் நடந்து, கலகம்பண்ணி, உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்றுபோனோம்.

தானி 9:6 உமது நாமத்தினாலே எங்கள் ராஜாக்களோடும் எங்கள் பிரபுக்களோடும் எங்கள் பிதாக்களோடும் தேசத்தினுடைய சகலஜனங்களோடும் பேசின தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்குச் செவிகொடாமற்போனோம்.

தானி 9:7 ஆண்டவரே, நீதி உமக்கே உரியது; உமக்கு விரோதமாகச் செய்த துரோகத்தினிமித்தம் உம்மாலே சமீபமும் தூரமுமான எல்லா தேசங்களிலும் துரத்தப்பட்டிருக்கிற யூதமனுஷரும் எருசலேமின் குடிகளும் சகல இஸ்ரவேலருமாகிய நாங்கள் இந்நாளில் இருக்கிறபடியே, வெட்கம் எங்களுக்கு உரியது.

தானி 9:8 ஆண்டவரே, உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தபடியால், நாங்களும் எங்கள் ராஜாக்களும் எங்கள் பிரபுக்களும் எங்கள் பிதாக்களும் வெட்கத்துக்குரியவர்களானோம்.

தானி 9:9 அவருக்கு விரோதமாக நாங்கள் கலகம்பண்ணி, அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக் கொண்டு எங்களுக்கு முன்பாகவைத்த அவருடைய நியாயப் பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாங்கள் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம்.

தானி 9:10 ஆனாலும் எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு.

தானி 9:11 இஸ்ரவேல் எல்லாரும் உமது நியாயப்பிரமாணத்தை மீறி, உமது சத்தத்துக்குச் செவிகொடாமல் விலகிப் போனார்கள். அவருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம். ஆகையால் தேவனுடைய தாசனாகிய மோசேயின் நியாயப் பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபமும் ஆணையாக்கினையும் எங்கள்மேல் சொரியப்பட்டன.

தானி 9:12 எருசலேமில் சம்பவித்ததுபோல வானத்தின்கீழ் எங்கும் சம்பவியாதிருக்கிற பெரிய தீங்கை எங்கள்மேல் வரப்பண்ணினதினால், அவர் எங்களுக்கும் எங்களை நியாயந்தீர்த்த நியாயாதிபதிகளுக்கும் விரோதமாகச் சொல்லியிருந்த தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றினார்.

9 அதிகாரம்

தானி 9:13 மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே இந்தத் தீங்கெல்லாம் எங்கள்மேல் வந்தது; ஆனாலும் நாங்கள் எங்கள் அக்கிரமங்களை விட்டுத் திரும்புகிறதற்கும், உம்முடைய சத்தியத்தைக் கவனிக்கிறதற்கும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் முகத்தை நோக்கிக் கெஞ்சினதில்லை.

தானி 9:14 ஆதலால் கர்த்தர் கவனமாயிருந்து, அந்தத் தீங்கை எங்கள்மேல் வரப்பண்ணினார்; எங்கள் தேவனாகிய கர்த்தர் தாம் செய்துவருகிற தம்முடைய கிரியைகளில் எல்லாம் நீதியுள்ளவர்; நாங்களோ அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம்.

தானி 9:15 இப்போதும் உமது ஜனத்தைப் பலத்த கையினால் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி, உமக்குக் கீர்த்தியை உண்டாக்கின எங்கள் தேவனாகிய ஆண்டவரே, நாங்கள் பாவஞ்செய்து, துன்மார்க்கராய்நடந்தோம்.

தானி 9:16 ஆண்டவரே, உம்முடைய சர்வ நீதியின்படியே, உமது கோபமும் உமது உக்கிரமும் உம்முடைய பரிசுத்த பர்வதமாகிய எருசலேம் என்னும் உம்முடைய நகரத்தை விட்டுத் திரும்பும் படிசெய்யும்; எங்கள் பாவங்களினாலும் எங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினாலும் எருசலேமும் உம்முடைய ஜனமாகிய நாங்களும் எங்கள் சுற்றுப்புறத்தார் யாவருக்கும் நிந்தையானோம்.

தானி 9:17 இப்போதும் எங்கள் தேவனே, நீர் உமது அடியானுடைய விண்ணப்பத்தையும் அவனுடைய கெஞ்சுதலையும்கேட்டு, பாழாய்க் கிடக்கிற உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தின்மேல் ஆண்டவரினிமித்தம் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்.

தானி 9:18 என் தேவனே, உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும்; உம்முடைய கண்களைத் திறந்து, எங்கள் பாழிடங்களையும், உமது நாமம் தரிக்கப்பட்டிருக்கிற நகரத்தையும் பார்த்தருளும்; நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்.

தானி 9:19 ஆண்டவரே கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும்; என் தேவனே, உம்முடைய நிமித்தமாக அதைத் தாமதியாமல் செய்யும்; உம்முடைய நகரத்துக்கும் உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே என்றேன்.

"என் முகத்தை அவருக்கு நேராக்கி" - கர்த்தரிடத்திலிருந்து ஒரு தெளிவான பதிலைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால், தானியேல் இதுபோல உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேடுவதற்கு அவருடைய முகத்தைத் தேவனுக்கு நேராக்குவது வழக்கம். (தானி 2:18; தானி 6:10; தானி 8:15,27; தானி 10:2-3).

"பாவ அறிக்கைசெய்து" - இந்தப் பாவஅறிக்கையில் தானியேல் தன்னுடைய ஜனத்தாரின் பாவமான கிரியைகளை அறிக்கையிடுகிறார். (தானி 9:5-19; எஸ்றா 9:5-15; நெகே. 1; நெகே. 9:33-38).

தேவனைப் பற்றிய சத்தியங்கள்

1. மகத்துவமுள்ள தேவன். (தானி 9:4).
2. பயங்கரமான தேவன் (தானி 9:4).
3. உம்மில் அன்புகூருகிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற தேவன். (தானி 9:4)
4. உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற தேவன். (தானி 9:4)
5. நீதியுள்ள தேவன். (தானி 9:7,14,16)

9 அதிகாரம்

6. நியாயம் விசாரிக்கிற தேவன் (தானி 9:7, 13-14,16)

7. கிருபையுள்ள தேவன் (தானி 9:9)

பயங்கரமான தேவன் (dreadful God) - **יָרֵא - yaw-ray' - 3372**

வினைச்சொல் - அஞ்சு, பயந்திரு, பயப்படு, பயபக்தியாயிரு, பிரமி, ஐயப்படு, அச்சமுண்டாகு, கெடியாயிரு **(to be feared or reverenced)**

இஸ்ரவேலின் பாவங்கள்

1. நாங்கள் பாவஞ்செய்தோம். (தானி 9:5, 11,15,16).
2. அக்கிரமக்காரராயிருந்தோம். (தானி 9:5)
3. துன்மார்க்கமாய் நடந்தோம்.
4. உம்முடைய கற்பனைகளை விட்டு அகன்றுபோனோம்.
5. உம்முடைய நியாயங்களை விட்டு அகன்றுபோனோம்.
6. உம்முடைய ஊழியக்காரருக்குச் செவிகொடாமற் போனோம். (தானி 9:6).
7. உமக்கு விரோதமாகத் துரோகம் செய்தோம். தானி 9:7).
8. உமக்கு விரோதமாக நாங்கள் கலகம்பண்ணினோம். (தானி 9:9).
9. தேவனுடைய சத்தத்துக்குச் செவி கொடாமற்போனோம். (தானி 9:9).
10. கர்த்தருடைய நியாயப் பிரமாணங்களின்படி நடக்காமல் போனோம். (தானி 9:10).
11. உமது நியாயப்பிரமாணத்தை மீறினோம். (தானி 9:11).
12. உமது சத்தத்துக்குச் செவிகொடாமல் போனோம். (தானி 9:11,14).

"உமது நாமத்தினாலே.......பேசின தீர்க்கதரிசிகள்" - (யோவான் 5:43; எபி 1:1-2)

வெட்கம் (shame) - **בֹּשֶׁת - bo'-sheth - 1322**

பெ.பெ.சொ.- வெட்கம், இலச்சை, அவமானம் **(shame, paleness)** (தானி 9:7-8; 1சாமு 20:30; எஸ்றா 9:7; சங் 109:29; எரே 7:19).

"எல்லா தேசங்களிலும் துரத்தப்பட்டிருக்கிற யூதமனுஷரும் எருசலேமின் குடிகளும்" - இஸ்ரவேல் தேசத்தாரும், யூதாதேசத்தாரும் அசீரியா, பாபிலோன், மேதிய-பெர்சிய தேசம் போன்ற தேசங்களிலும் மேலும் பல தேசங்களிலும் துரத்தப்பட்டிருக்கிறார்கள். (தானி 9:7; எஸ் 8:9-17; எஸ் 9:1-2).

"சகல இஸ்ரவேலருமாகிய நாங்கள்" - தானியேல் யூதா தேசத்தாருக்காகவும், இஸ்ரவேல் தேசத்தாருக்காகவும், சமீபமும் தூரமுமான எல்லா தேசங்களிலும் துரத்தப் பட்டிருக்கிற யூதமனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும் ஜெபிக்கிறார். யூதா சிறையிருப்புக்குப் போவதற்கு முன்பாக எப்பிராயீம் தேசத்திலுள்ள பத்துக் கோத்திரத்தாரும் 133வருஷங்களுக்கு முன்பாகவே அசீரியருடைய சிறையிருப்புக்குப் போனார்கள். (2இராஜா 17).

"தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரர்" - இஸ்ரவேல் தேசத்தில் இருந்த தீர்க்கதரிசிகள் பல காரியங்களை முன்னறிவித்தார்கள். ஆனால் அப்போதிருந்த ஜனங்களும், ராஜாக்களும் தீர்க்கதரிசிகளையும், அவர்களுடைய செய்திகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களுடைய முன்னறிவிப்புகளில் பல நிறைவேறின. இஸ்ரவேல் தேசத்தாரும் பல பாடுகள் வழியாகக் கடந்து சென்றார்கள். ஆகையினால் இப்போது தீர்க்கதரிசிகளை அவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரர் என்று அங்கிகரிக்கிறார்கள். (2இராஜா 17:13; ஏசா 44:26; புல. 2:17; சக. 1:6; எபி 1:1-2).

"சாபமும் ஆணையாக்கினையும் எங்கள்மேல் சொரியப்பட்டன" - இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினால், அவர்கள்மீது கர்த்தருடைய சாபம் வரும் என்று தேவன் ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார். (லேவி 26:14-17, 29-39; உபா. 27:15-26; உபா. 28:15-62; உபா. 29:20; உபா. 31:17).

தானியேல் - தொகுப்புரை

9 அதிகாரம்

"வானத்தின்கீழ் எங்கும் சம்பவியாதிருக்கிற பெரிய தீங்கு" - கர்த்தர் தம்முடைய வார்த்தையின் பிரகாரம் ஆசீர்வாதத்தையும், தீங்கையும் வருவிக்கிறார். பொய்கூறுவதற்குக் கர்த்தர் ஒரு மனுஷரல்ல. இஸ்ரவேல் தேசத்தாருடைய பாவத்திற்குக் கர்த்தர் தண்டனையை அறிவித்து, அதை நிறைவேற்றுகிறார். அதேவேளையில், தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குக் கர்த்தர் ஆசீர்வாதத்தையும் வாக்குப்பண்ணி, நிறைவேற்றுகிறார்.

"தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றினார்" - கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர். *(கலா 6:7-8)*

தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற நிபந்தனைகள்

1. ஜெபமும், பாவஅறிக்கையும் (தானி 9:3, 4-6,17,20)
2. அக்கிரமங்களைவிட்டுத் திரும்புவது. (தானி 9:13; ஏசா 55:7)
3. சத்தியத்தைக் கவனித்து அதற்குக் கீழ்ப்படிவது. (தானி 9:4-10,13; யோவான் 8:32-36; ரோமர் 1:16)

"உமது ஜனம்" - இஸ்ரவேல் புத்திரர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினாலும் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனாலும், புறஜாதி தேசங்களில் சிதறிப்போயிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய ஜனமாகவே இருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்கள். தாங்கள் செய்த பாவங்களுக்கு இஸ்ரவேல் ஜனத்தார் மனந்திரும்புவார்கள். கர்த்தருக்கு நித்தியமாகக் கீழ்ப்படிவார்கள். கர்த்தர் அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கைகளை நிறைவேற்றுவார். *(ஏசா 11:10-12; ஏசா 59:20-21; ஏசா 66:7-8; எசே 37; சக. 12:10-13:1; லூக்கா 1:32-33; ரோமர் 11:25-29).*

"உம்முடைய பரிசுத்த பர்வதம்" - சீயோன் மலை. *(சங் 2:6; சங் 48:2; சங் 87:2).*

"எருசலேம் என்னும் உம்முடைய நகரம்" - கர்த்தர் பூமியின்மீது தம்முடைய நித்திய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது எருசலேம் நகரத்தைத் தம்முடைய தலைநகரமாகத் தெரிந்து கொள்வார். *(சங் 2:6; சங் 48:2; சங் 87:2; சங் 102:16; சங் 132:13; ஏசா 2:2-4; எசே 48; சக. 14).*

"எங்கள் சுற்றுப்புறத்தார் யாவருக்கும் நிந்தையானோம்" - இதனால் இஸ்ரவேல் ஜனத்தார் சுற்றுப்புறத்தார் மத்தியில் பயத்தோடு இருக்கிறார்கள். *(எரே 24:9; எரே 29:18; எரே 42:18; எரே 44:8,12; எசே 5:14-51; எசே 22:4).*

தானியேலின் விண்ணப்பம்

1. உமது கோபமும் உமது உக்கிரமும் உம்முடைய பரிசுத்த பர்வதமாகிய எருசலேம் என்னும் உம்முடைய நகரத்தை விட்டுத் திரும்பும்படி செய்யும் (தானி 9:16).
2. உமது அடியானுடைய விண்ணப்பத்தைக் கேளும். (தானி 9:17,18,19).
3. என்னுடைய கெஞ்சுதலைக் கேளும்.
4. உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தின்மேல் உமது முகத்தைப்பிரகாசிக்கப்பண்ணும். (தானி 9:17).
5. உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும். (தானி 9:18).
6. உம்முடைய கண்களைத் திறந்தருளும். (தானி 9:18)
7. எங்கள் பாழிடங்களைப் பார்த்தருளும். (தானி 9:18).
8. எங்களை மன்னியும். (தானி 9:19).
9. ஆண்டவரே கேளும். செய்யும். (தானி 9:19).
10. உம்முடைய நிமித்தமாக அதைத் தாமதியாமல் செய்யும் (தானி 9:19).

9 அதிகாரம்

3. வியாக்கியானம் செய்த தேவதூதன் - (8:15; 10:12)

தானி 9:20 இப்படி நான் சொல்லி, ஜெபம்பண்ணி, என் பாவத்தையும் என் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு, என் தேவனுடைய பரிசுத்த பர்வதத்துக்காக என் விண்ணப்பத்தை என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகச் செலுத்திக் கொண்டிருந்தேன்.

தானி 9:21 அப்படி நான் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கும் போதே, முதல் தரிசனத்திலே நான் கண்ட புருஷனாகிய காபிரியேல், வேகமாய்ப் பறந்துவந்து, அந்திப்பலியின் நேரமாகிய வேளையிலே என்னைத் தொட்டான்.

தானி 9:22 அவன் எனக்குத் தெளிவுண்டாக்கி, என்னோடே பேசி: தானியேலே, உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டு வந்தேன்.

தானி 9:23 நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்க வந்தேன்; இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள்.

"அந்திப்பலியின் நேரமாகிய வேளை" - அந்திவேளையில் நடைபெறும் மற்ற முக்கியமான சம்பவங்கள். (2சாமு 24:15; 1இராஜா 18:29; எஸ்றா 9:5; யோவான் 19:30).

"அறிவை உணர்த்தும்படி" - இஸ்ரவேலின் வருங்காலத்தைக் குறித்தும், கடைசி நாளில் நடைபெறப்போகும் சம்பவங்களைக் குறித்தும், தானியேலுக்கு அறிவை உணர்த்தும்படி காபிரியேல் புறப்பட்டு வந்திருக்கிறார். இம்முறை காபிரியேல் தானியேலின் தரிசனத்திற்கு வியாக்கியானம் கூறவில்லை. அதற்குப் பதிலாக தானியேலின் நாளிலிருந்து புறஜாதியார் யூதரை ஒடுக்கும் கடைசி காலம் வரையிலும் நடைபெறப்போகும் காரியங்களைக் குறித்து காபிரியேல் தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார்.

4. ஆறு காரியங்கள் நிறைவேறுவதற்கு இஸ்ரவேல்மீதும் எருசலேம்மீதும் வருஷங்களின் எழுபது வாரங்கள்

தானி 9:24 மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின்மேலும் உன்பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப் பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 15

"உன் ஜனத்தின்மேலும் உன்பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது......." (தானி 9:24-27) தானி 9:25-26 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. தானி 9:24, தானி 9:27 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

"எழுபது வாரங்கள்" - இந்தத் தீர்க்கதரிசனத்தில் 14 முக்கியமான பகுதிகள் இடம் பெற்றுள்ளன. அவையாவன:

1. எழுபது வாரங்களின் பொருள்.
2. எழுபது வாரங்களின்பிரிவு
3. எழுபது வாரங்கள் யாருக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது.
4. அவை இஸ்ரவேலுக்கும், எருசலேமிற்கும் எப்போது குறிக்கப்பட்டிருக்கிறது.
5. தானியேலின் எழுபது வாரங்களில் நடைபெறப்போகும் ஆறு சம்பவங்கள்
6. எழுபது வாரம் எப்போது ஆரம்பமாகிறது
7. மேசியா சங்கரிக்கப்படுவது
8. வரப்போகிற பிரபுவின் ஜனங்கள்
9. வரப்போகிற பிரபு
10. சபைக்காலம்

9 அதிகாரம்

11. 69 ஆவது வாரத்திற்கும், 70 ஆவது வாரத்திற்கும் இடையில் நடைபெறும் 12 முக்கியமான சம்பவங்கள்

12. அந்திக்கிறிஸ்துவிற்கும், இஸ்ரவேலுக்கும் இடையே ஏற்படும் உடன்படிக்கை

13. வாரத்தின் பாதி

14. எழுபதாவது வாரத்தின் முடிவு

எழுபது வாரங்களின் பொருள்

எழுபது வாரம் என்பதற்கு எழுபத்தியேழு என்று பொருள்.

வாரம் (week) - שָׁבוּעַ - shaw-boo'-ah, shaw-boo'-ah, shaw-oo-aw' - 7620

ஆண்பால் பெயர்ச்சொல் - ஏழுநாள், வாரம்

எழுபது வாரம் என்பதை எழுபத்தியேழு வருஷங்கள் என்று பொருள்கூற வேண்டும். அதற்கான காரணங்கள்:

1. தானியேலின் ஜெபத்தில் நாட்களைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. வருஷத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (தானி 9:2)

2. கடைசி வாரம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் மூன்றரை வருங்கள் உள்ளன.

3. எழுபதாவது வாரத்தின் கடைசிப் பகுதி மூன்றரை வருஷம் என்று கூறும்போது அதன் முதல் பகுதியும் மூன்றரை வருஷமாகவே இருக்கும். இதனால் தானி 9:27 ஆவது வசனத்தில் ஒரு வாரமளவும் என்பது 7 வருஷங்களைக் குறிக்கும்.

4. கடைசி வாரத்தை 7 வருஷம் என்று கூறும்போது மற்ற வாரங்களும், ஒவ்வொரு வாரமும் 7 வருஷமாகவே இருக்கும். இவ்வாறாக எழுபது வருஷம் என்பது 70 x 7 = 490 வருஷங்களாகும்.

எழுபது வாரங்களின்பிரிவு

எழுபது வாரங்கள் மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. முதலாவது பிரிவு - 7 வாரங்கள் - எருசலேம் திரும்பக் கட்டப்படுவதற்கு 49 வருஷங்கள். (தானி 9:25)

2. இரண்டாவது பிரிபு - 62 வாரங்கள் - 49 வருஷங்களின் முடிவில் எருசலேம் கட்டி முடிக்கப்படும் காலத்திலிருந்து மேசியா சங்கரிக்கப்படும் காலம் வரையிலும் - 434 வருஷங்கள். (தானி 9:25-26)

3. மூன்றாவது பிரிவு - ஒரு வாரம் - 7 வருஷங்கள். இக்காலத்தின் கடைசி ஏழு வருஷங்கள். தானி 9:24 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஆறு நிகழ்ச்சிகளை நிறைவேற்றுவதற்குக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இக்காலத்தில் நடைபெறும்.

எழுபது வாரங்கள் யாருக்குக் குறிக்கப் பட்டிருக்கிறது

490 வருஷங்களும் தானியேலின் ஜனங்களுக்கும், தானியேலின் பரிசுத்த நகரமாகிய எருசலேமிற்கும் குறிக்கப் பட்டிருக்கிறது. தானி 9:24 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஆறு நிகழ்ச்சிகள் நிறைவேறுவதற்காக இக்காலம் குறிக்கப் பட்டிருக்கிறது. இது சபைக்காலத்தைக் குறிக்கவில்லை. தானியேலின் 69 ஆவது வாரம் வரையிலும் சபைக்காலம் ஆரம்பமாகவில்லை. தானியேலின் 70 ஆவது வாரம் ஆரம்பமாகும் முன் சபை எடுத்துக் கொள்ளப்படும். (2தெச 2:7-8; வெளி. 4:1). "குறிக்கப்படுதல்" என்பதற்கான எபிரெய வார்த்தை "காதாக்" (chathak) என்பதாகும்.

குறிக்கப்படு (marked) - חָתַךְ - khaw-thak' - 2852

வினைச்சொல் - குறிக்கப்படு (determined, cut off; marked off; decreed)

9 அதிகாரம்

அவை இஸ்ரவேலுக்கும், எருசலேமிற்கும் எப்போது குறிக்கப்பட்டிருக்கிறது

இஸ்ரவேல் தேசத்தார் தேசங்கள் மத்தியில் சிதறிப்போயிருக்கும் காலத்தில் இவை அவர்களுக்குக் குறிக்கப்படவில்லை. எருசலேமில் இஸ்ரவேல் ஒரு தேசமாக இருக்கும்போது அவர்களுக்கு 70 வாரங்கள் குறிக்கப் பட்டிருக்கிறது. கிபி. 70-ல் இஸ்ரவேல் ஜனத்தார் சிதறிப்போனார்கள். அவர்களுடைய எருசலேம் நகரமும், தேவாலயமும் அழிக்கப் பட்டது. ஆகையினால் தானி 9:24 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஆறு நிகழ்ச்சிகள் அப்போது நிறைவேறவில்லை. 69 ஆவது வாரம் கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதோடு நிறைவு பெறுகிறது. இன்னும் எழுபதாவது வாரத்து சம்பவங்கள் மட்டுமே நிறைவேற வேண்டியுள்ளது. இக்காலத்தில் தானி 9:24 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஆறு சம்பவங்களும் நிறைவேறும். இஸ்ரவேல் ஒரு தேசமாக மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டு, எருசலேமை மறுபடியும் ஆளுகை செய்யும்போது இந்தச் சம்பவம் வருங்காலத்தில் நிறைவேறும்.

தானியேலின் எழுபது வாரங்களில் நடைபெறப்போகும் ஆறு சம்பவங்கள் (தானி 9:24)

1. "மீறுதலைத் தவிர்க்கிறதற்கு". மீறுதல் என்பதற்கானஎபிரெய வார்த்தை "பேஷா" **pesha'** என்பதாகும். இந்த மீறுதல் எருசலேமில் இஸ்ரவேலருடைய பாவத்தைக் குறிக்கும். இஸ்ரவேலர்கள் தங்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மனந்திருந்தி, இரட்சிக்கப்பட்டு தங்களுடைய மேசியாவினிடத்தில் திரும்பி வருவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவார். தேசம் ஒரே நாளில் மனந்திரும்பும். (ரோமர் 11:25-29; ஏசா 66:7-10; எசே 36:24-30).

மீறுதல் **(transgression) - פֶּשַׁע - peh'-shah - 6588**

ஆண்பால் பெயர்ச்சொல் - துரோகம், மீறுதல், பாதகம், துரோகப் பேச்சு, பாவம், பாதகமார்க்கம், குற்றம், வழக்கு, மீறுதல் **(revolt; rebel; sin against lawful authority) "transgression"** (சங் 51:1; ஏசா 43:25)

2. "பாவங்களைத் தொலைக்கிறதற்கு". இவை இஸ்ரவேலருடைய பாவங்களும், எருசலேமின் பாவங்களுமாகும். இது வரையிலும் இந்தப் பாவங்கள் தொலைக்கப் படவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இஸ்ரவேலருடைய பாவங்களும், எருசலேமின் பாவங்களும் தொலைக்கப் படும். (எசே 36:24-30; எசே 37:24-27; எசே 43:7; சக. 14). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக மனந்திரும்புதலின் ஆவி இஸ்ரவேலர்மீது ஊற்றப்படும். அந்நாளிலே பாவத்தையும், அழுக்கையும் நீக்க தாவீதின் குடும்பத்தாருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஓர் ஊற்று உண்டாயிருக்கும். (சக. 12:10-13:1; ரோமர் 11:25-29).

3. "அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கு". நிவிர்த்தி பண்ணுதல் என்பதற்கான எபிரெய வார்த்தை "கபார்" **(kaphar)** என்பதாகும். கல்வாரி சிலுவையில் இஸ்ரவேலருக்கும், எல்லா ஜனத்தாருக்கும் அக்கிரமங்கள் நிவிர்த்தி பண்ணப்பட்டது. (ஏசா 53; கொலோ. 1:20; கொலோ. 2:14-17; 1பேதுரு 2:24) ஆயினும் இஸ்ரவேல் ஒரு தேசமாக இன்னும் இரட்சிக்கப் படவில்லை. அந்தத் தேசத்தாருடைய பாவங்கள் இன்னும் மன்னிக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இஸ்ரவேல் தேசத்தார் அனைவருடைய பாவங்களும் மன்னிக்கப் படும். (ஏசா 1:18-20; ஏசா 66:7-8; சக. 12:10-13:1; மத் 23:37-39; ரோமர் 11:25-29).

பிராயசித்தம் பண்ணு **(make atonement) - כָּפַר - kaw-far' - 3722**

9 அதிகாரம்

வினைச்சொல் - பிராயசித்தம் பண்ணு, பாவநிவிர்த்திசெய், மன்னி, அநுக்கிரகம் பண்ணு. **(atonement; to cover; make atonement, for iniquity)**

4. "நித்திய நீதியை வருவிக்கிறதற்கு". மீறுதல் தவிர்க்கப்படும்போது, பாவங்கள் தொலைக்கப்படும்போது, அக்கிரமங்கள் நிவிர்த்தி பண்ணப்படும்போது, இஸ்ரவேலுக்கும், எருசலேமிற்கும் நித்திய நீதி உண்டாகும். (ஏசா 9:6-7; ஏசா 12:1-6; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; எசே 43:7; சக. 14; லூக்கா 1:32-33; ரோமர் 11:25-29; வெளி. 11:15; வெளி. 19:11-20:10; வெளி. 21:1-22:5).

5. "தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கு". இஸ்ரவேல், எருசலேம் ஆகியோரைப் பற்றிய தீர்க்கதரிசனமும், மேசியாவின்கீழ் அவர்கள் நித்தியமாகத் திரும்பக் கூட்டிச் சேர்க்கப்படுவதும் நிறைவேறும். இந்த வாக்கியத்தில் தீர்க்கதரிசனம் என்பது தீர்க்கதரிசிகள் என்று பொருள்படும். மேசியா வரும்போது எருசலேமிலுள்ள இஸ்ரவேல் ஜனத்தாரைக் கண்டித்து உணர்த்துவதற்கும், மேசியாவினிடத்தில் அவர்களை வழிநடத்துவதற்கும், நீதியினிடத்தில் அவர்களை வழிநடத்துவதற்கும் தீர்க்கதரிசிகள் தேவைப்படமாட்டார்கள். ஏனெனில் அக்காலத்தில் சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். (ஏசா 11:9; ஏசா 66:7-10; எரே 31:31-40; ரோமர் 11:25-29).

6. "மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கு". பாழாக்குகிற அருவருப்பிலிருந்து எருசலேம் நகரத்தையும், தேவாலயத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் சுத்திகரித்தல் என்பது இந்த வாக்கியத்தின் பொருளாகும். மேலும் இந்த வாக்கியம் ஆயிரம் வருஷத்து தேவாலயம் அபிஷேகம் பண்ணப்படுவதையும் குறிக்கிறது. (எசே 40-43; சக. 6:12-13). "மகா பரிசுத்தமுள்ளவர்" **"The most holy"** என்னும் பெயரால் யூதர்கள் மேசியாவை அழைக்கவில்லை. அவர்கள் கர்த்தரை மேசியா என்றே பொதுவாக அழைக்கிறார்கள். மனுஷர் கிறிஸ்துவை அபிஷேகம் பண்ணி, முடிசூட்ட வேண்டியதில்லை. பிதாவாகிய தேவன் குமாரனாகிய கிறிஸ்துவை ஏற்கெனவே அபிஷேகம் பண்ணியிருக்கிறார். (லூக்கா 22:29; அப் 1:7; அப் 2:36; பிலி 2:9-11; எபி 1:1-3; வெளி. 11:15; வெளி. 19:11-21; தானி 7:13-14).

எழுபது வாரம் எப்போது ஆரம்பமாகிறது

எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை தானி 9:25 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கு மூன்று கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. முதலாவது கட்டளை பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷ ஆட்சிக்காலத்தில் கொடுக்கப்பட்டது. (எஸ்றா 1:1-4; எஸ்றா 3:8; ஏசா 44:28; ஏசா 45:1-4; ஏசா 46:11). கோரேசு 9 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். இவனுடைய குமாரனாகிய கம்பைசிஸ் **(Cambyses)** 7 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். கம்பைசிஸின் ஆட்சிக்காலத்தில் தேவாலயத்தைத் திரும்பக் கட்டும் வேலை நின்றுபோயிற்று. (எஸ்றா 4:1-24).

9 அதிகாரம்

2. முதலாம் தரியு 35 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். தன்னுடைய இரண்டாம் வருஷ ஆட்சிக்காலத்தில் தரியு 18 வருஷங்களுக்கு முன்பு தேவாலயத்தைக் கட்டுவது சம்பந்தமான கோரேசின் ஆணையை உறுதிபண்ணினான். இவனுடைய ஆட்சிக் காலத்தின் ஆறாம் வருஷத்தில் தேவாலயம் திரும்பக் கட்டப்படும் வேலை நிறைவு பெற்றது. ஆனாலும் எருசலேம் நகரம் இன்னும் திரும்ப எடுப்பித்துக் கட்டப்படவில்லை. சஷ்டா (Xerxes) 21 வருஷம் ஆட்சி புரிந்தான். (தானி 11:1-3) இக்காலத்தில் எருசலேம் நகரம் இன்னும் திரும்ப எடுப்பித்துக் கட்டப்படாமலேயே இருந்தது.

3. அர்தசஷ்டா (Artaxerxes) 40 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். தன்னுடைய 20 ஆவது வருஷ ஆட்சிக் காலத்தில் கி.மு. 444 ஆம் வருஷத்தில் பிரபுவாகிய மேசியாவிற்கு எருசலேமைத் திரும்பக் கட்டும் வேலைக்கு அர்தசஷ்டா நெகேமியாவிற்கு மூன்றாவது ஆணையைப் பிறப்பித்தான். (தானி 9:25-26; நெகே. 2:1-6:19) இக்காலத்திலிருந்து 70 வாரங்கள் அல்லது 490 வருஷங்கள் கணக்கிடப் படுகிறது. இக்காலத்திலிருந்து 490 வருஷங்களின் முதலாவது பிரிவு ஆரம்பமாகிறது. எருசலேமில் வீதிகளும், அலங்கங்களும் திரும்பவும் கட்டப்படும் 7 வாரங்கள் அல்லது 49 வருஷங்கள் இந்த முதலாவது காலப்பிரிவில் வருகிறது. (தானி 9:25) நெகேமியா எருசலேமிற்கு வந்து சேர்ந்தபின்பு, 52 நாட்களில் அவர் அலங்கங்களைத் திரும்பக் கட்டினார். ஆனால் இது முழுமையாகப் புதுப்பித்துக் கட்டப்படுவது ஆகாது. அடுத்த 49 வருஷங்களாக எருசலேம் மறுபடியும் கட்டப்படும் வேலை தொடர்ந்து நடைபெறும். எருசலேமை மறுபடியும் கட்டும் மூன்றாவது ஆணை கோரேசு ராஜா கொடுத்த முதலாவது ஆணைக்கு 92 வருஷங்களுக்குப் பின்பு கொடுக்கப் படுகிறது.

மேசியா சங்கரிக்கப்படுவது

இது 62 வாரங்கள் அல்லது 434 வருஷங்களுக்குப் பின்பு நடைபெற்ற சம்பவம். எருசலேம் மறுபடியும் கட்டப்பட்ட ஏழு வாரங்கள் அல்லது 49 வருஷங்களைத் தொடர்ந்து மேசியா சங்கரிக்கப்படும் சம்பவம் நடைபெற்றது. (தானி 9:25-26). இயேசு கிறிஸ்து 69 ஆவது வாரத்தின் இறுதியில் சிலுவையில் அறையப் பட்டார். 70 ஆவது வாரத்தின் நடுவில் அவர் சிலுவையில் அறையப்படவில்லை. ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்ட போது, 70 ஆவது வாரம் முடிவடையவில்லை. ஏனெனில் 70 ஆவது வாரத்தில் நிறைவேற வேண்டிய சம்பவங்கள் இன்னும் பல உள்ளன. சபை எடுத்துக் கொள்ளப் பட்ட பின்பு, வருங்காலத்தில் அந்திக்கிறிஸ்து வெளிப்படும்போது இஸ்ரவேலிலும், எருசலேமிலும் ஒருசில சம்பவங்கள் 70 ஆவது வாரத்தில் நடைபெறும். (2தெச. 2:7-8; வெளி. 4:1).

வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் (தானி 9:26)

எருசலேம் நகரம் அழிக்கப்படுவதும், பரிசுத்த ஸ்தலம் அழிக்கப்படுவதும் ரோமப்பேரரசு மூலமாக நிறைவேறிற்று. (தானி 9:26) இந்த நிகழ்ச்சி கி.பி. 70 ஆம் வருஷத்தில் நடைபெற்றது. (லூக்கா 19:41-44; லூக்கா 21:20).

வரப்போகிற பிரபு (தானி 9:26).

இது வரப்போகிற அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கும் வார்த்தையாகும். கி.பி. 70 ஆம் வருஷத்தில் எருசலேமையும், தேவாலயத்தையும் அழித்த ஜனங்களிடத்திலிருந்து அந்திக்கிறிஸ்து வருவான் என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். (தானி 9:26; லூக்கா 21:20-24). பழைய ரோமப்பேரரசிற்குள் ஸ்தாபிக்கப்படப்போகும் பத்து ராஜ்யங்களிலிருந்து அந்திக்கிறிஸ்து இனிமேல் வருவான். (தானி 7:23-24).

9 அதிகாரம்

சபைக்காலம்

இது 69 ஆவது வாரத்திற்கும், 70 ஆவது வாரத்திற்கும் இடைப்பட்ட காலமாகும். (தானி 9:26-27). இதைத் தீர்க்கதரிசிகள் காண வில்லை. மேசியா சிலுவையில் அறையப் படுவதற்கும், அந்திக்கிறிஸ்து கடைசி நாட்களில் இஸ்ரவேலோடு ஏழு வருஷங்கள் உடன்படிக்கை பண்ணுவதற்கும் இடையில் ஒருசில சம்பவங்கள் நடைபெறும். (தானி 9:26-27).

தானியேலின் 69 ஆவது வாரத்திற்கும், 70 ஆவது வாரத்திற்கும் இடையில் நடைபெறும் 12 முக்கியமான சம்பவங்கள்

1. 69 ஆவது வாரத்தின் முடிவில் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். (தானி 9:26).

2. ரோமப்பேரரசார் எருசலேமையும், தேவாலயத்தையும் அழித்துப் போட்டார்கள். இது 69 ஆவது வாரத்தின் இறுதியில் கிறிஸ்து சிலுவையில் அறையப் படுவதற்கும், 70 ஆவது வாரத்திற்கும் இடையில் நடைபெற்றச் சம்பவம். (தானி 9:26-27).

3. ரோமாபுரியாருக்கும், இஸ்ரவேலுக்கும் இந்த வாரங்களுக்கு நடுவில் யுத்தம் நடைபெற்றது. (தானி 9:26-27).

4. இந்த வாரங்களுக்கு நடுவில் நடைபெற்ற யுத்தத்தில் இஸ்ரவேல் தோல்வியுற்றது. இதனால் அவர்களுடைய நகரமும், தேவாலயமும் அழிக்கப்பட்டது. (தானி 9:26-27).

5. இந்த வாரங்களின் நடுவில் இஸ்ரவேல் தேசத்தார் தேசங்கள் நடுவில் சிதறிப் போனார்கள். (தானி 9:26-27; லூக்கா 21:20-24).

6. இஸ்ரவேலுக்கும், ரோமாபுரியாருக்கும் நடைபெற்ற யுத்தத்தின் நடுவில் இஸ்ரவேல் தேசமும், அவர்களுடைய நகரமும், தேவாலயமும் பாழாக்கப்பட்டது. (தானி 9:26; லூக்கா 21:20-24). அந்திக் கிறிஸ்துவிடமிருந்து இஸ்ரவேலைக் காப்பதற்காக இயேசு கிறிஸ்து வருவார். அப்போது தேவாலயமும், எருசலேமும் திரும்பக் கட்டப்படும். அழிக்கப்படமாட்டாது. (சக. 6:12-13; சக. 14:1-21; மத் 25:31-46; வெளி. 11:15; வெளி. 19:11-21).

மேலே கூறப்பட்டிருக்கும் சம்பவங்கள் ரோமாபுரியார் மூலமாக நிறைவேறிற்று. அவர்கள் கிபி. 31 ஆம் வருஷத்தில் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தார்கள். கிபி. 70 ஆம் வருஷத்தில் எருசலேமை அழித்தார்கள். இந்தச் சம்பவங்கள் 69 ஆவது வாரத்திலோ அல்லது 70 ஆவது வாரத்திலோ நடைபெறவில்லை. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு 39 வருஷங்களுக்குப் பின்பு எருசலேம் அழிக்கப் பட்டது. இத்துடன் 69 ஆவது வாரம் முடிவடைகிறது.

7. எருசலேம் அழிக்கப்பட்டு, பாழாக்கப்பட்ட பின்பு, "வரப்போகிற பிரபு" வருவான். (தானி 9:26-27). கிபி. 70 ஆம் வருஷத்தில் யூதர்கள் தேசங்கள் மத்தியில் சிதறிப்போனார்கள். வரப்போகிற பிரபு யூதரோடு உடன்படிக்கையை உறுதிபண்ண வேண்டும். (தானி 9:27) அது இன்னும் நடைபெறவில்லை. ஆகையினால் இது வருங்காலத்தில் நிறைவேறப்போகும் சம்பவமாகும்.

8. இஸ்ரவேலின் தலைநகரமாக எருசலேம் திரும்பக் கட்டப்படும். அந்திக்கிறிஸ்து வருவதற்கு முன்பாகத் தேவாலயம் திரும்பக் கட்டப்படும். இவை கட்டப்பட்ட பின்பு, அந்திக்கிறிஸ்து அநேக யூதரோடு ஏழு வருஷ உடன்படிக்கையை உறுதி பண்ணுவான். (தானி 9:27)

தானியேல் - தொகுப்புரை

9 அதிகாரம்

9. எருசலேம் நகரமும், பரிசுத்த ஸ்தலமும் ரோமப்பேரரசால் அழிக்கப்பட்டது. (தானி 9:26) இவை இரண்டும் தானி 9:27 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் உடன்படிக்கையை உறுதிபண்ணுவதற்கு முன்பு திரும்பக் கட்டப்பட வேண்டும். ஏனெனில் ஏழு வருஷங்களின் பாதியில் தேவாலயம் மறுபடியும் பாழாக்கப்படும். ஆகையினால் கிபி. 70 ஆம் வருஷத்திலிருந்து இன்று வரையிலும் தேவாலயமும், எருசலேமும் இன்னும் மறுபடியும் கட்டப்படவில்லை. தானி 9:27 ஆவது வசனம் வருங்காலத்தில் நிறைவேறும்.

10. இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறையும்போது யூதர்கள் அவரை மேசியா என்று நம்பவில்லை. இதற்காக அவர்கள் தேசங்கள் மத்தியில் சிதறடிக்கப் பட்டார்கள். கடைசி காலத்திற்கு முன்பாக சிதறடிக்கப்பட்ட யூதர்கள் மறுபடியும் தங்கள் சொந்த தேசத்திற்குக் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக எருசலேமைப் பார்த்து, இவ்வாறு கூறுகிறார். "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப் பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள்" (மத் 21:43; மத் 23:37-39; மத் 24:2; லூக்கா 21:20-24). இஸ்ரவேல் தேசத்தார் இயேசு கிறிஸ்துவை அங்கிகரிக்கவில்லை. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் யூதர்கள் இயேசு கிறிஸ்துவை அங்கிகரிக்க மாட்டார்கள். ஆகையினால் கர்த்தர் 70 ஆவது வாரத்தைத் தாம் சிலுவையில் அறையப்பட்டவுடன் நிறைவேற்றவில்லை. இந்த 70 ஆவது வாரம் தேவன் இஸ்ரவேல் தேசத்தாரோடு கிரியை நடப்பிக்கும்போது நிறைவேறுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. (எசே 37). தானியேலின் 70 ஆவது வாரம் இஸ்ரவேலையும், எருசலேமையும் பற்றியது. இந்தக் காலத்தில் கூறப்பட்டிருக்கும் சம்பவங்கள் நிறைவேறுவதற்கு இஸ்ரவேல் தேசத்தார் எருசலேமை மறுபடியும் ஆளுகை செய்ய வேண்டும். (தானி 9:24) மேலும் 70 ஆவது வாரம் நிறைவேறுவதற்கு எருசலேமில் தேவாலயமும் மறுபடியும்கட்டப்பட்டிருக்க வேண்டும். (தானி 9:26-27).

11. வரப்போகிற பிரபு ரோமப்பேரரசின் எல்லைக்குள்ளிருந்து வருவான். (தானி 9:27) இவன் அநேக யூதரோடு ஒரு வாரமளவும் அல்லது 7 வருஷங்கள் அளவும் உடன் படிக்கையை உறுதி பண்ணுவான். பழைய ரோமப்பேரரசில் வருங்காலத்தில் பத்து ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்படும். அதன் பின்பே, வரப்போகிற பிரபு வருவான். (தானி 7:23-24) சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு, இந்தச் சம்பவம் நடைபெறும். இவ்விரண்டு சம்பவங்களுக்குப்பின்பே தானியேலின் எழுபதாவது வாரத்தில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் நடைபெறும்.

70 ஆவது வாரம் என்பது இக்காலத்தின் கடைசி 7 வருஷங்களாகும். இது சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்கும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலம். (தானி 9:27) இது வருங்கால உபத்திரவக்காலத்தைக் குறிக்கும். இதன் முடிவில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும். (மத் 24-25; வெளி. 4-19; வெளி. 21; தானி 7:19-27; தானி 8:9-14, 22-25; தானி 9:27; தானி 11:36-45; தானி 12:1-17) இந்த 7 வருஷங்களில் மேலும் பல சம்பவங்கள் நிறைவேறும்.

9 அதிகாரம்

கடைசி மூன்றரை வருஷங்களில் மகா உபத்திரவக்காலம் இருக்கும். (எரே 30:4-9; தானி 12:1; மத் 24:15-24; வெளி. 11:1-19:21). முதலாவது மூன்றரை வருஷங்களில் உபத்திரவம் குறைவாக இருக்கும். இக்காலத்தில் அந்திக் கிறிஸ்து தன்னுடைய அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் கவனம் செலுத்திக் கொண்டிருப்பதினால் இஸ்ரவேலுக்கு உபத்திரவம் குறைந்திருக்கும். (தானி 7:23-24; மத் 24:4-14; வெளி 6:1-9:21).

12. தற்காலத்து சபைக் காலம் 69 ஆவது வாரத்திற்கும், 70 ஆவது வாரத்திற்கும் நடுவில் வருகிறது. இக்காலத்தில் கர்த்தர் இஸ்ரவேலைப் புறக்கணித்து, அவர்களைத் தேசங்கள் மத்தியில் சிதறிப்போகப் பண்ணியிருக்கிறார். கர்த்தர் அவர்களைத் தமது இரண்டாம் வருகையின் போது மறுபடியும் கூட்டிச் சேர்த்து, ஒரு ராஜ்யமாக ஸ்தாபிப்பார். அதுவரையிலும் 70 ஆவது வாரம் நிறைவேறாமல் தாமதிக்கும். "கர்த்தர் சீயோனைக்கட்டி தமது மகிமையில் வெளிப்படுவார்" (சங் 102:15).

அந்திக்கிறிஸ்துவிற்கும், இஸ்ரவேலுக்கும் இடையே ஏற்படும் உடன்படிக்கை

இந்த உடன்படிக்கையில் (தானி 9:27) என்னென்ன காரியங்களெல்லாம் இடம் பெற்றிருக்கும் என்று கூறப்படவில்லை. ஒருவேளை அந்திக்கிறிஸ்து யூதர்களைத் துன்புறுத்துவதில்லை என்னும் சமாதான உடன்படிக்கையும், இராணுவ உடன்படிக்கையும் ஏற்பட்டிருக்கலாம். 70 ஆவது வாரத்தின் முதல் மூன்றரை வருஷங்களில் அந்திக்கிறிஸ்து பத்து ராஜ்யங்களைக் கைப்பற்ற முயற்சி பண்ணுவான். இதற்காக அவன் தேசங்களோடு இராணுவ உடன்படிக்கை செய்து கொள்வான். இந்த முயற்சியில் அவன் இஸ்ரவேலோடும் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கலாம். (தானி 7:23-24; தானி 8:23-25; வெளி. 17:8-17). இஸ்ரவேல் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்பட்டு, மறுபடியும் கட்டப்படும்போது அவர்களுக்கு பாதுகாப்பு உடன்படிக்கை இதில் கூறப்பட்டிருக்கலாம். தற்காலிகமாகச் சமாதானமும், இந்த உடன்படிக்கையில் உறுதிபண்ணப் பட்டிருக்கலாம். (தானி 8:25; தானி 9:27; தானி 11:36-45) இந்த உடன்படிக்கையின் காலம் 7 வருஷங்களாகும். (தானி 9:27).

வாரத்தின் பாதி (தானி 9:27)

கடைசி ஏழு வருஷத்தின் முதல் மூன்றரை வருஷத்தில் அந்திக்கிறிஸ்து பத்து ராஜ்யங்களில் தன் அதிகாரத்தைக் கைப்பற்றுவான். (தானி 7:23-24; வெளி. 17:8-17). அதன் பின்பு, அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலோடு உடன்படிக்கையை முறித்துப்போடுவான். பாலஸ்தீன தேசத்திற்குள் நுழைந்து, அதைக் கைப்பற்றி, யூதருடைய தேவாலயத்தைத் தலைநகரமாக்கிக் கொள்வான். (தானி 7:21-25; தானி 8:9-14,22-25; தானி 9:27; தானி 11:36-45; மத் 24:15-24; 2தெச. 2:3-4; வெளி 13:1-18; வெளி. 17:8-17). அதன்பின்பு, தேவாலயத்தில் செலுத்தப்படும் எல்லாப் பலிகளையும் அகற்றிப்போடுவான். அந்திக்கிறிஸ்து தேவாலயத்தில் தன்னுடைய சிலையை நிறுவி, தன்னையே தேவனாக ஆராதிக்குமாறு வலியுறுத்துவான். இது 2,300 பகல், இரவுகளுக்கு நடைபெறும். அதாவது 3 வருஷங்கள், 2 மாதங்கள், 10 நாட்களுக்கு நடைபெறும். இது 1,260 நாட்களாகும். இது தானியேலின் 70 ஆவது வாரத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் நடைபெறும் சம்பவம். (தானி 8:9-14; தானி 9:27;11:45; மத் 24:15-22; 2தெச. 2:3-4; வெளி. 13:1-18).

எழுபதாவது வாரத்தின் முடிவு (தானி 9:27).

70 ஆவது வாரத்தின் பாதியிலிருந்து தேவாலயத்தைப் பாழாக்குகிறவன்மேல் நிர்மூலம் சொரியுமட்டும் மிருகத்தை ஆராதிப்பதும், பாழாக்குகிற அருவருப்பும் தேவாலயத்தில் தொடரும். (தானி 9:27). பாழாக்குகிறவன்மீது வரும் நியாயத்தீர்ப்பு இரண்டு சாட்சிகள் மூலமாக வரும் வாதைகளாகவும், (வெளி. 11:3-11) கலசத்தின் நியாயத் தீர்ப்புகளாகவும் (வெளி. 15-16) இருக்கும். அர்மெகதோன் யுத்தத்தில் அந்திக்கிறிஸ்து தோல்வியுற்று அழிக்கப்படும்போது அவன்மீது நிர்ணயிக்கப் பட்டிருக்கும் நியாயத்தீர்ப்பு நிறைவு பெறும். (வெளி. 16:13-16; வெளி. 19:11-21; சக. 14).

தானியேல் - தொகுப்புரை

9 அதிகாரம்

இக்காலத்தை முடிவுபெறச் செய்யும் சம்பவங்கள்

1. ஏழாம் கலசம் (வெளி. 16:17-21)
2. பாபிலோனின் அழிவு. (வெளி. 16:19; வெளி. 18:1-24)
3. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை. (வெளி. 19:11-21)
4. அர்மெகதோன் யுத்தம். (வெளி 19:11-21)
5. தேசங்களின்மீது நியாயத்தீர்ப்பு (மத் 25:31-46)
6. கோதுமையிலிருந்து களைகள் பிரிக்கப்படுவது. (மத் 13)
7. இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவது. (மத் 24:29-31; ஏசா 11:10-12; எசே 37)
8. இஸ்ரவேல் மனந்திருந்துதல். (ரோமர் 11:25-29)
9. எருசலேமின் விடுதலை (சக. 14)

இக்காலத்தில் நிறைவு பெறும் காரியங்கள்

1. தானியேலின் எழுபதாவது வாரம் (தானி 9:27)
2. கிரேக்கருடைய காலம் (மத் 3)
3. உபத்திரவக்காலம் (தானி 9:27; தானி 12:1; மத் 24:15-22; வெளி. 6:1-19:21)
4. ஆயிரம் வருஷ காலத்தில் பூமியின்மீது சாத்தானுடைய கிரியைகள் (வெளி. 20:1-10)
5. புறஜாதியாரின் காலங்கள்
6. தேவனுடைய கோபம் (வெளி. 6:17; வெளி. 15:1-16:21)
7. இஸ்ரவேலின் கலகம் (சக. 12:10-13:1; மத் 23:37-39; ரோமர் 11:25-29)
8. எருசலேமின் பாழ்க்கடிப்புகள் (சக 14:1-21; லூக்கா 21:20-24)
9. புறஜாதி ராஜ்யங்கள் (தானி 2:44-45; தானி 7:13-14,23-27; வெளி. 17:8-17; வெளி. 19:11-21)
10. கிறிஸ்தவர்களின் உபத்திரவம் (சக. 14:9; மத் 13:40-43; மத் 25:31-46; வெளி. 20)
11. அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை (வெளி. 19:19-21)
12. மிருகத்தை ஆராதிப்பது. (வெளி. 13:1-18; வெளி. 14:9-11; வெளி. 15:2-4; வெளி. 20:4-6)
13. கிரேக்கப் பேரரசு மறுபடியும் உயிர்ப்பிக்கப் படுவது. (தானி 8:22-25; தானி 11:36-45; வெளி. 13:5; வெளி. 19:19-21)
14. பிசாசுகள், விழுந்த தூதர்கள் ஆகியவற்றின் விடுதலை (ஏசா 24:21-22; வெளி. 12:7-12; வெளி. 20:1-3)
15. சாத்தானின் அற்புதங்கள் (2தெச. 2:8-12; வெளி. 13:1-5,12-17; வெளி. 16:13-14; வெளி. 19:20)
16. முதலாவது உயிர்த்தெழுதல்
17. இஸ்ரவேல் சிதறிப்போதல் (மத் 24:29-31; ஏசா 11:10-12;எசே 37)
18. இரண்டு சாட்சிகளின் ஊழியம் (வெளி. 11:7-12)
19. பூமியில் மனுஷனுடைய சுயாதீன ஆட்சி (சக. 14:9; வெளி. 5:10; வெளி. 11:15; வெளி. 20:1-10; வெளி. 22:4-5)
20. இஸ்ரவேலின் குருட்டுத்தன்மை (ரோமர் 11:25-29)
21. பூமியின்மேல் சாத்தானுடைய ஆளுகை (வெளி. 12:7-12; வெளி. 20:1-10)

9 அதிகாரம்

22. ஏழுபது வாரங்கள் அல்லது 490 வருஷங்கள். (தானி 9:24)

23. காலமும், காலங்களும், அரைக்காலமும் (தானி 7:25; தானி 12:7; வெளி. 12:14)

24. நாற்பத்தி இரண்டு மாதங்கள் (வெளி. 11:2; வெளி. . 13:5)

25. ஆயிரத்து இருநூற்றி அறுபது நாட்கள். (வெளி. 11:3; வெளி. 12:6)

5. ஏழு வாரங்களின் முதலாவது காலத்தின் ஆரம்பம் - சிறையிருப்பிற்குப் பின்பு எருசலேம் கட்டப்படுகிறது - இதன் பின்பு அறுபத்திரண்டு வாரங்களின் இரண்டாம் காலம் துவங்குகிறது - எருசலேம் மறுபடியும் கட்டப் படுவதிலிருந்து மேசியா சிலுவையில் அறையப்படும் காலம் வரையிலும் - 483 வருஷங்கள் கொண்ட காலம் - (நெகே 2; யோவா 19:30-31)

தானி 9:25 இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக்கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழுவாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும்.

தானி 9:26 அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள்; அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும்; முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது.

"அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்" - எருசலேம் மறுபடியும் கட்டப்படுவது நிறைவு பெறும் என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது. எருசலேமில் வாசஸ்தலங்களும், அவற்றிற்குச் செல்லும் பெரும்பாதைகளும் கட்டி முடிக்கப்பட்டிருக்கும்.

6. ஒரு வாரத்தின் மூன்றாவது காலம் - இக்காலத்தில் அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலோடு உடன் படிக்கையை ஏற்படுத்தி அதை முறித்துப் போடுகிறான் - மேசியாவின் இரண்டாம் வருகையோடு இக்காலம் முடிவு பெறுகிறது - (வெளி 4:1-19:21; மத் 24:15-31)

தானி 9:27 அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப் படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப் பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்.

"பாழாக்குகிறவன்" - தேவாலயத்தைப் பாழாக்குகிறவன். (தானி 8:9-14; தானி 11:45; மத் 24:15; 2தெச. 2:4; வெளி. 13).

"நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும்" - எழுபதாவது வாரத்தின் முடிவு வரையிலும் நிர்மூலம் சொரியும்.

நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது (determined) - חָרַץ - khaw-rats' - 2782

விணைச்சொல் - முடமாக்கு, முடம் to (point sharply; to decide) "to decree" (தானி 9:26-27; யோபு 14:5; ஏசா 10:23; ஏசா 28:22). அந்திக் கிறிஸ்துவிற்கு அழிவு நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. (தானி 7:11,25,26; தானி 8:25; தானி 11:45; ஏசா 11:4; எசே 38:17-21; 2தெச. 2:8; வெளி. 19:20; வெளி. 20:10).

10 அதிகாரம்

X. தானியேலின் நான்காம் தரிசனம் - கடைசி நாட்களில் அந்திக் கிறிஸ்துவிற்குக் கீழ் இஸ்ரேல்

1. காலம், இடம், சூழ்நிலை

தானி 10:1 பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே பெல்தெஷாத்சார் என்று பெயரிடப்பட்ட தானியேலுக்கு ஒரு காரியம் வெளியாக்கப்பட்டது; அந்தக் காரியம் சத்தியமும் நீடிய யுத்தத்துக்கு அடுத்ததுமாயிருக்கிறது; அந்தக் காரியத்தை அவன் கவனித்து, தரிசனத்தின் பொருளை அறிந்து கொண்டான்.

தானி 10:2 அந்த நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வார முழுவதும் துக்கித்துக் கொண்டிருந்தேன்.

தானி 10:3 அந்த மூன்று வாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை, இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை, நான் பரிமளதைலம் பூசிக்கொள்ளவுமில்லை.

தானி 10:4 முதலாம் மாதம் இருபத்துநாலாந்தேதியிலே நான் இதெக்கேல் என்னும் பெரிய ஆற்றங் கரையில் இருந்து,

"பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ்" - இவன் தானி 5:31; தானி 6:1; தானி 9:1 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மேதியனாகிய தரியு அல்ல. இவன் பெர்சியாவின் ராஜா. தரியு மேதிய-பெர்சிய தேசத்தில் இரண்டு வருஷங்களுக்கு ஆட்சி புரிந்தான். கோரேசு இவனுக்குப் பின்பு மேதிய-பெர்சிய தேசத்திற்கு ராஜாவானான். ஏசாயாவின் தீர்க்க தரிசனங்களில் கோரேசைப் பற்றி அதிகமாகக் கூறப்பட்டிருக்கிறது. பாபிலோனிலிருந்து இஸ்ரவேலை மீட்பது, எருசலேம் திரும்பக் கட்டப்படுவது, சிறையிருப்புக்குப் பின்பு யூதருடைய தேவாலயம் கட்டப்படுவது ஆகிய காரியங்களோடு தொடர்பு படுத்தி ஏசாயா கோரேசைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். (ஏசா 44:28-45:1) இவன் பிறப்பதற்கு 175 வருஷங்களுக்கு முன்பாகவே வேதாகமத்தில் இவனுடைய பெயர் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. யூதர்களை விடுவிப்பது, எருசலேமைத் திரும்பக் கட்டுவது ஆகியவை பற்றிய கோரேசுவின் ஆணையும், வேதாகமத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. (2 நாளா. 36:22-23; எஸ்றா 1:1-8; எஸ்றா 3:7; எஸ்றா 4:3-5; எஸ்றா 5:13-17; எஸ்றா 6:3,14; ஏசா 44:28; ஏசா 45:1).

"மூன்றாம் வருஷத்திலே" - தானியேலுக்கு வெளியாக்கப்பட்ட இந்தத் தரிசனம் தானி 9 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் 70 வாரங்களின் தரிசனத்திற்கு 5 வருஷங்களுக்குப் பின்பு வெளியாக்கப்பட்டிருக்கிறது. (தானி 10:1=தானி 9:1).

"தானியேலுக்கு ஒரு காரியம் வெளியாக்கப் பட்டது" - தானியேலுக்கு இந்தத் தரிசனம் வெளிப்பட்ட விதமும், இதனால் தானியேலுக்கு ஏற்பட்ட விளைவுகளும் தானி 10:2-12:13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. தெய்வீக வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொள்கிறவர்கள் மீது தெய்வீக விளைவுகள் உண்டாகும். (தானி 2,4,5,7-12; ஏசா 6; வெளி 1; ஆதி 15).

"அந்தக்காரியம் சத்தியமும் நீடிய யுத்தத்துக்கு அடுத்ததுமாயிருக்கிறது" - இந்தத் தரிசனம் உடனடியாக நிறைவேறாது. இது நிறைவேறுவதற்கு நீண்ட காலமாகும். (தானி 10:14,35) தானி 11:35-12:13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சம்பவங்கள் இனிமேல் நிறைவேறும். இந்தச் சம்பவங்க ளெல்லாம் நிறைவேறுவதற்கு முன்பாக நீடிய யுத்தங்கள் நடைபெறும்.

நீடிய யுத்தம் (long warfare) - צָבָא - tsaw-baw', tseb-aw-aw' - 6635

ஆண்பால் பெயர்ச்சொல் - சேனை, சேனாதிபதி, அணி, யுத்தம், படை, இராணுவம், சேவகம், போர், பணி விடை, குறிக்கப்பட்ட காலம், போராட்டம், குறிக்கப்பட்ட நாள் **(long warfare)**

தானியேல் - தொகுப்புரை

10 அதிகாரம்

நீடிய (long) - גָּדוֹל - gaw-dole', gaw-dole' - 1419

பெயரடை - பெரிய, மகா, மகத்தான, மூத்த, மிகுந்த, வெகு, பிரதான, திரளான, மிகவும், வல்லமையான, ஏராளமான, உரத்த

யுத்தங்களைப் பற்றிய தரிசனம்

1. காபிரியேலுக்கும், பெர்சிய ராஜ்யத்தின் அதிபதிக்கும் இடையே யுத்தம். பெர்சியாவின் அதிபதி சாத்தானின் அதிபதியாக இருக்கிறான். தானியேலுக்கு யுத்தங்களைப் பற்றிய இந்தத் தரிசனங்களை வெளிப்படுத்துவதற்காகக் காபிரியேல் வருகிறான். அவனை பெர்சிய ராஜ்யத்தின் அதிபதி தடைபண்ணுகிறான். (தானி 10:12-13,20)
2. பெர்சியருக்கும், கிரேக்கருக்கும் இடையில் நடைபெறும் யுத்தம். (தானி 10:20-21, 11:2-3; தானி 8:20-21)
3. மேதிய-பெர்சிய தேசத்தாருக்கும், பாபிலோனியருக்கும் இடையில் நடைபெறும் யுத்தம். (தானி 11:1; தானி5:25-31)
4. மகா அலெக்ஸாண்டரின் சேனைத் தலைவர்கள் அவனோடு யுத்தம் செய்து, அவனுடைய ராஜ்யத்தைக் கைப்பற்றி, அதை 4 பிரிவாகப் பிரிக்கிறார்கள். (தானி 11:4; தானி 8:8,22).
5. சீரியருக்கும், எகிப்தியருக்கும் இடையில் நடைபெறும் முதலாவது யுத்தம். அலெக்ஸாண்டருடைய ராஜ்யம் 4 பகுதிகளாகப் பிரிக்கப்படும்போது எகிப்து அதில் இரண்டாவது பகுதியாக இருக்கும். (தானி 11:5)
6. சீரியருக்கும், எகிப்தியருக்கும் இடையில் நடைபெறும் இரண்டாவது யுத்தம். (தானி 11:7-9)
7. சீரியருக்கும், எகிப்தியருக்கும் இடையில் நடைபெறும் மூன்றாவது யுத்தம் (தானி 11:10-12)
8. சீரியருக்கும், எகிப்தியருக்கும் இடையில் நடைபெறும் நான்காவது யுத்தம் (தானி 11:13-16)
9. சீரியருக்கும், எகிப்தியருக்கும் இடையில் நடைபெறும் ஐந்தாவது யுத்தம் (தானி 11:17)
10. சீரியருக்கும், கிரேக்கருக்கும், ரோமருக்கும் இடையில் நடைபெறும் யுத்தம் (தானி 11:18-19)
11. சீரியருக்கும், இஸ்ரவேலருக்கும் இடையில் நடைபெறும் முதலாவது யுத்தம். (தானி 11:20)
12. சீரியருக்கும், இஸ்ரவேலருக்கும் இடையில் நடைபெறும் இரண்டாவது யுத்தம். (தானி 11:21-24)
13. சீரியருக்கும், எகிப்தியருக்கும் இடையில் நடைபெறும் ஆறாவது யுத்தம் (தானி 11:25-27)
14. சீரியருக்கும், இஸ்ரவேலருக்கும் இடையில் நடைபெறும் மூன்றாவது யுத்தம் (தானி 11:28)
15. சீரியருக்கும், எகிப்தியருக்கும் இடையில் நடைபெறும் ஏழாவது யுத்தம் (தானி 11:29-31)
16. சீரியருக்கும், இஸ்ரவேலருக்கும் இடையில் நடைபெறும் நான்காவது யுத்தம் (தானி 11:32-34)
17. சீரியருக்கும், தேவனுக்கும் இடையில் நடைபெறும் யுத்தம். (தானி 11:36-39)
18. சீரியருக்கும், எகிப்தியருக்கும் இடையில் நடைபெறும் எட்டாவது யுத்தம். (தானி 11:40-42)
19. சீரியருக்கும், இஸ்ரவேலருக்கும் இடையில் நடைபெறும் ஐந்தாவது யுத்தம் (தானி 11:41)
20. சீரியருக்கும், மற்ற தேசங்களுக்கும் இடையில் நடைபெறும் யுத்தம். (தானி 11:41)

10 அதிகாரம்

21. லீபியரோடும், எத்தியோப்பியரோடும் சீரியரின் யுத்தம். (தானி 11:43)

22. சீரியருக்கும், அதற்குக் கீழுள்ள பத்து ராஜ்யங்களும் இடையில் நடைபெறும் யுத்தம். (தானி 11:44)

23. சீரியருக்கும், இஸ்ரவேலருக்கும் இடையில் நடைபெறும் ஆறாவது யுத்தம் (தானி 11:45; சக. 14:1-5,14)

24. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது கிறிஸ்துவிற்கும், சீரியாவிற்கும் இடையில் நடைபெறும் யுத்தம். (தானி 11:45; தானி 7:21-22, 25-27; தானி 8:23-25; தானி 9:27)

25. பரலோகத்தில் மிகாவேல், அவன் தூதர் ஆகியோருக்கும், சாத்தான், அவன் தூதர் ஆகியோருக்கும் இடையில் நடைபெறும் யுத்தம் (தானி 12:1; வெளி. 12:7-12)

"இதெக்கேல்" (Hiddekel) - வேதாகமத்தில் இந்த இடத்தைப் பற்றி இரண்டு இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (தானி 10:4; ஆதி 14) இது டைகிரீஸ் ஆற்றங்கரையாக இருக்கலாம்.

2. மேசியாவின் தரிசனம் - (வெளி 1:13)

தானி 10:5 என் கண்களை ஏறெடுக்கையில், சணல் வஸ்திரந்தரித்து, தமது அரையில் ஊப்பாசின் தங்கக் கச்சையைக் கட்டிக்கொண்டிருக்கிற ஒரு புருஷனைக் கண்டேன்.

தானி 10:6 அவருடைய சரீரம் படிகப் பச்சையைப்போலவும், அவருடைய முகம் மின்னலின் பிரகாசத்தைப்போலவும், அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப் போலவும், அவருடைய புயங்களும் அவருடைய கால்களும் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப்போலவும், அவருடைய வார்த்தைகளின் சத்தம் ஜனக்கூட்டத்தின் ஆரவாரத்தைப் போலவும் இருந்தது.

மேசியாவைப் பத்திய வர்ணனை

1. சணல் வஸ்திரந்தரித்திருக்கிறவர். (தானி 10:5; தானி 12:6-7; வெளி. 1:13; வெளி 19:8; யாத் 28:4-12).

2. தமது அரையில் ஊப்பாசின் தங்கக் கச்சையைக் கட்டிக் கொண்டிருக்கிறவர். (தானி 10:5; வெளி. 1:13).

3. அவருடைய சரீரம் படிகப்பச்சையைப்போல இருக்கிறது. (தானி 10:6; வெளி. 4:3).

4. அவருடைய முகம் மின்னலின் பிரகாசத்தைப்போல இருக்கிறது. (தானி 10:6; வெளி. 1:16; வெளி. 10:1).

5. அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப்போல இருக்கிறது. (தானி 10:6; வெளி. 1:15; வெளி 19:12).

6. அவருடைய புயங்கள் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப்போல இருக்கிறது. (தானி 10:6; வெளி. 1:15; வெளி. 10:1).

7. அவருடைய கால்கள் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப்போல இருக்கிறது. (தானி 10:6; வெளி. 1:15; வெளி. 10:1).

8. அவருடைய வார்த்தைகளின் சத்தம் ஜனக்கூட்டத்தின் ஆரவாரத்தைப்போல இருக்கிறது. (தானி 10:6; வெளி. 1:15; வெளி. 8:5; வெளி. 10:2-4; வெளி. 11:15; வெளி. 14:2; வெளி. 16:17-18; வெளி. 19:6; சங் 29)

3. இதன் விளைவு - (ஏசா 6; எசே 1; வெளி 1)

தானி 10:7 தானியேலாகிய நான்மாத்திரம் அந்தத் தரிசனத்தைக் கண்டேன்; என்னோடே இருந்த மனுஷரோ அந்தத்தரிசனத்தைக் காணவில்லை; அவர்கள் மிகவும் நடுநடுங்கி, ஓடி ஒளித்துக்கொண்டார்கள்.

10 அதிகாரம்

தானி 10:8 நான் தனித்துவிடப்பட்டு அந்தப்பெரிய தரிசனத்தைக் கண்டேன்; என் பெலனெல்லாம் போயிற்று; என் உருவம் மாறி வாடிப்போயிற்று; திடனற்றுப்போனேன்.

தானி 10:9 அவருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டேன்; அவருடைய வார்த்தைகளின் சத்தத்தை நான் கேட்கும்போது, நான் முகங்கவிழ்ந்து, நித்திரை போகிறவனாய்த் தரையிலே முகங்குப்புற விழுந்துகிடந்தேன்.

தானி 10:10 இதோ, ஒருவன் கை என்னைத்தொட்டு, என் முழங்கால்களும் என் உள்ளங்கைகளும் தரையை ஊன்றியிருக்க என்னைத் தூக்கி வைத்தது.

தானி 10:11 அவன் என்னை நோக்கி: பிரியமான புருஷனாகிய தானியேலே, நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன்; ஆதலால், நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளின் பேரில் நீ கவனமாயிருந்து, கால் ஊன்றி நில் என்றான்; இந்த வார்த்தையை அவன் என்னிடத்தில் சொல்லுகையில் நடுக்கத்தோடே எழுந்து நின்றேன்.

"நான்மாத்திரம் அந்தத் தரிசனத்தைக் கண்டேன்" - ஒருவர் தரிசனம் காணும்போது அவரோடு இருக்கும் மற்றவர்கள் அந்தத் தரிசனத்தைக் காணாமல் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. (அப் 9:7; அப் 22:9).

தானியேலோடு இருந்த மனுஷருக்கு தரிசனத்தினால் ஏற்பட்ட விளைவு

1. அவர்கள் மிகவும் நடுநடுங்கினார்கள்.
2. ஓடி ஒளித்துக்கொண்டார்கள்.

தரிசனத்தினால் தானியேலுக்கு ஏற்பட்ட விளைவு

1. தானியேலின் பெலனெல்லாம் போயிற்று. (தானி 10:8).
2. அவருடைய உருவம் மாறி வாடிப்போயிற்று. திடனற்றுப்போனார்.
3. அவர் முகங்கவிழ்ந்து, நித்திரை போகிறவராய்த் தரையிலே முகங்குப்புற விழுந்துகிடந்தார். (தானி 10:9).
4. ஒருவன் கை தானியேலைத்தொட்டு, அவர் முழங்கால்களும், அவர் உள்ளங்கைகளும் தரையை ஊன்றியிருக்க அவரைத் தூக்கி வைத்தது. (தானி 10:10).
5. தானியேல் நடுக்கத்தோடே எழுந்து நின்றார். (தானி 10:11).
6. அவருக்கு மிகுந்த பயம் உண்டாயிற்று. (தானி 10:12).
7. அவர் தலைகவிழ்ந்து, தரையை நோக்கினார். (தானி 10:15)
8. பேச்சற்றுப்போனார் (தானி 10:15).
9. மனுபுத்திரரின் சாயலாகிய ஒருவன் தானியேலின் உதடுகளைத் தொட்டான். (தானி 10:16-17).
10. தானியேல் மறுபடியும் பலப்படுத்தப்பட்டு தரிசனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமானார். (தானி 10:18-12:13).

உருவம் **(comeliness) - הוֹד - hode - 1935**

ஆண்பால் பெயர்ச்சொல் - கனம், மகிமை, மகத்துவம், மேன்மை, சிறப்பு, செருக்கு **(beauty)**

வாடிப்போதல் **(destruction) - מַשְׁחִית - mash-kheeth' - 4889**

பெண்பால் பெயர்ச்சொல் - அழித்தல், நாசம், கண்ணி, கேடு, வாடிப்போதல், கொன்று போடுதல், அழிக்கிறவர் **(destruction; marred; made ugly)** (தானி 10:8).

10 அதிகாரம்

"நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப் பட்டு வந்தேன்" - தானி 10:5-6 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் நபர் காபிரியேலாக இருக்க வேண்டும். இந்தத் தரிசனம் வெளி 1:12-17 ஆகிய வசனங்களில் காணப்படும் மனுஷ குமாரனுடைய தரிசனத்தைப் போல விரிவாக உள்ளது. இவ்விரண்டு தரிசனங்களும் ஒரே நபரைப் பற்றியே குறிப்பிடுகிறது. தானி 8:13-19 ஆகிய வசனங்களில் ஒரு நபர் காபிரியேலிடம் தரிசனத்தைத் தானியேலுக்கு அறிவிக்குமாறு கூறுகிறார். அதே நபரே இங்கும் கூறப்பட்டிருக்கிறார். தானி 10:5-6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நபர் காபிரியேலிடம் இந்தத் தரிசனத்தைத் தானியேலுக்கு அறிவிக்குமாறு கூறுகிறார். யாரோ ஒருவர் தானியேலிடம் இவரை அனுப்பியிருப்பது தானி 10:11-12 ஆகிய வசனங்கள் மூலமாகத் தெரியவருகிறது. இவர் தானியேலிடத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறார். தானியேலின் புஸ்தகத்தில் தேவதூதர்களின் தோற்றங்களைப் பற்றி பல வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (தானி 3:25; தானி 4:13,17,23; தானி 6:22; தானி 7:16; தானி 8:13,14,16-26; தானி 9:21; தானி 10:4-12,16,18,20; தானி 12:1,5-6).

4. தேவதூதனின் வியாக்கியானம் - (8:15; 9:20-23)

தானி 10:12 அப்பொழுது அவன் என்னை நோக்கி: தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்.

"உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி" - தானியேலின் ஜெபத்திற்கு உடனடியாகப் பதில் கிடைக்காமல் காலதாமதமாகப் பதில் கிடைக்கிறது. (தானி 10:12-13). காலதாமதம் விசுவாசத்தைத் தடைபண்ணக் கூடாது. கர்த்தர் வாக்குப் பண்ணியிருப்பதை விசுவாசத்தோடு காத்திருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் வரையிலும் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். (லூக்கா 18:1-8).

"உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது" - தானியேலின் ஜெபத்திற்குப் பதில் கொடுப்பதற்காகத் தேவதூதன் வந்திருக்கிறார். தானியேல் தன் ஜெபத்தில் எந்தெந்த வார்த்தைகளையெல்லாம் கூறினாரோ அந்த வார்த்தைகள் எல்லாமே கர்த்தருடைய சமுகத்தில் கேட்கப்படுகிறது. (மத் 7:7-11). கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு நன்மையான எல்லா ஈவுகளையும் கொடுக்கிறார். ஜெபத்தில் நாம் கேட்பதற்கும், வேண்டிக் கொள்வதற்கும், நினைப்பதற்கும் அதிகமானவற்றைக் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கிறார். (மத் 7:7-11; மத் 17:20; மத் 21:21-22; மாற்கு 11:22-24; யோவான் 15:7).

5. பெர்சியாவில், சாத்தானின் தூதர்கள் காபிரியேலைப் பிடித்து வைத்தார்கள்

தானி 10:13 பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள்மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான்; ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான்; ஆதலால் நான் அங்கே பெர்சியாவின் ராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன்.

"பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி" - இவன் சாத்தானுடைய குணமுடையவன். சாத்தானுக்காக இவன் பெர்சியா ராஜ்யத்தை ஆளுகை செய்கிறான். இவன் இந்த உலகத்தின் அதிபதியாக வேதாகமத்தில் கூறப் பட்டிருக்கிறான். (மத் 4:8-9; மத் 12:24-30; யோவான் 8:44; யோவான் 12:31; 2கொரி 4:4; எபே 2:2; எபே 6:10-18; 1யோவான் 3:8; வெளி 12:7-12; வெளி 16:13-16; வெளி 20:1-10).

10 அதிகாரம்

இந்த உலகத்தில் பல ராஜ்யங்கள் உள்ளன. இந்த ராஜ்யங்களிலெல்லாம் சாத்தான் தன்னுடைய தூதர்களை வைத்திருக்கிறான். இவர்கள் தேவனுடைய திட்டம் நிறைவேறுவதைத் தடைபண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தரிடத்திலும் தூதர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள். இந்த உலகத்தில் என்னென்ன சம்பவங்களெல்லாம் நடைபெறும் என்று கர்த்தர் முன்னறிவித்திருக்கிறாரோ அந்தச் சம்பவங்களெல்லாம் கர்த்தருடைய தூதர்கள் நிறைவேற்றுகிறார்கள். (தானி 10:11-21; தானி 11:1; தானி 12:1). இதனால் பரலோகத்தில் கர்த்தருடைய தூதர்களுக்கும், சாத்தானின் தூதர்களுக்கும் யுத்தம் நடைபெறுகிறது. (தானி 10:13,20-21; தானி 11:1; தானி 12:1; யூதா 1:9; வெளி 12:7-12). உலகத்தில் நடைபெறும் யுத்தங்களின் வெற்றி தோல்விகள் பரலோகத்தில் நடைபெறும் தூதர்களுடைய யுத்தங்களின் முடிவைப் பொறுத்தே அமைந்திருக்கும்.

தூதர்கள் ராஜ்யங்களை ஆளுகை செய்வது போல தனி மனுஷர்களையும் ஆளுகை செய்கிறார்கள். (மத் 18:10; 2கொரி 10:4-6; எபே 2:2; எபே 6:10-18; எபி 1:14; யூதா 1:9). தேவனுடைய பிள்ளைகளின் ஜீவியங்களில் கர்த்தருடைய சித்தம் நிறைவேறுவதைத் தடுப்பதற்குச் சாத்தான் எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறான். (1நாளா 21:1; யோபு 1:6; யோபு 2:1; சக 3:1; மத் 4:1-11; 2கொரி 4:4; எபே 2:2; எபே 6:10-18; 1யோவான் 3:8; வெளி 12:12). மிகாவேல் இஸ்ரவேலின் அதிபதி (தானி 10:21; தானி 12:1) கிரேக்கு தேசத்தின் அதிபதியைப் பற்றி தானி 10:20 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அதிபதி (prince) - שַׂר - sar - 8269

ஆண்பால் பெயர்ச்சொல் - பிரபு, சேனாபதி, அதிகாரி, அதிபதி, தலைவன், விசாரணைக் காரர், தலைமை, சேர்வைக்காரர், தலைமையானவன், பிரதானமானவர். **(a chief ruler) “prince”** (தானி 1:7-11,18; தானி 8:11,25; தானி 9:6,8; தானி 10:13, 20,21; தானி 11:5; தானி 12:1).

தேவதூதர்களின் பெயர்கள்

1. லூசிபர் (ஏசா 14:12; எசே 28:11-17)
2. மிகாவேல் (தானி 10:13,21; தானி 12:1; யூதா 1:9; வெளி 12:7)
3. காபிரியேல் (தானி 8:16; தானி 9:21; லூக்கா 1:19,26)
4. அபெத்தோன் அல்லது அப்பொல்லியோன் (வெளி 9:11)

“பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல்” - தேவதூதர்கள் அவர்களுடைய அந்தஸ்துகளின் பிரகாரம் வரிசைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். (1தெச 4:16; யூதா 1:9).

“பெர்சியாவின் ராஜாக்கள்” - இவர்கள் மேதிய-பெர்சிய தேசத்தின் ராஜாக்கள். இவர்கள் சாத்தானால் இயக்கப்படும் பிரபுக்கள்.

6. தரிசனத்திலுள்ள நபர்களும் பாகுட்களும் - (8:17-19)

> தானி 10:14 இப்போதும் கடைசிநாட்களில் உன் ஜனங்களுக்குச் சம்பவிப்பதை உனக்குத் தெரியப்பண்ணும்படிக்கு வந்தேன்; இந்தத் தரிசனம் நிறைவேற இன்னும் நாள் செல்லும் என்றான்.

தீர்க்கதரிசன எண் - 16

“இப்போதும் கடைசிநாட்களில் உன் ஜனங்களுக்குச் சம்பவிப்பதை உனக்குத் தெரியப் பண்ணும்படிக்கு வந்தேன்” (தானி 10:14). இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேற வில்லை.

“உன் ஜனங்கள்” - தானியேலின் ஜனங்கள் - யூதர்கள். (தானி 9:24; தானி 12:1).

10 அதிகாரம்

"கடைசிநாட்கள்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முந்திய நாட்கள்.

"இந்தத் தரிசனம் நிறைவேற இன்னும் நாள் செல்லும்" - இந்தத் தரிசனத்தில் கூறப் பட்டிருக்கும் அநேக சம்பவங்கள் கடைசி காலத்தில் இஸ்ரவேல் தேசத்தாருக்கு நிறைவேறும். அப்போது புறஜாதியார் அவர்களை ஒடுக்கியிருப்பார்கள்.

7. தானியேல்மீது ஏற்பட்ட விளைவு

தானி 10:15 அவன் இந்த வார்த்தைகளை என்னோடே சொல்லுகையில், நான் தலைகவிழ்ந்து, தரையை நோக்கி, பேச்சற்றுப்போனேன்.

தானி 10:16 அப்பொழுது மனுபுத்திரரின் சாயலாகிய ஒருவன் என் உதடுகளைத் தொட்டான்; உடனே நான் என் வாயைத் திறந்து பேசி, எனக்கு எதிரே நின்றவனை நோக்கி: என் ஆண்டவனே, தரிசனத்தினால் என் மூட்டுகள் புரண்டன, பெலனற்றுப்போனேன்.

தானி 10:17 ஆகையால் என் ஆண்டவனுடைய அடியேன் என் ஆண்டவனோடே பேசக்கூடுவதெப்படி? இனி என்னில்பெலனில்லை, என்னில் மூச்சுமில்லை என்றேன்.

தானி 10:18 அப்பொழுது மனுஷ ரூபமான ஒருவன் திரும்ப என்னைத் தொட்டு, என்னைத் திடப்படுத்தி,

தானி 10:19 பிரியமான புருஷனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக, திடங்கொள், திடங்கொள் என்றான்; இப்படி அவன் என்னோடே பேசுகையில் நான் திடன்கொண்டு அவனைநோக்கி: என் ஆண்டவன் பேசுவாராக; என்னைத் திடப்படுத்தினீரே என்றேன்.

"மனுபுத்திரரின் சாயலாகிய ஒருவன்" - இவர் தானியேலுக்குத் தரிசனத்தைக் கொடுப்பதற்கு அனுப்பப்பட்ட அதே நபராக இருக்கலாம். (தானி 10:11-12).

சாயல் (similitude) - דְּמוּת - **dem-ooth' - 1823**

பெண்பால் பெயர்ச்சொல் - சாயல், ரூபம், ஒப்பு, உருவம் **(likeness, referring to outward, physical form, for that is all he saw)** (ஆதி 1:26, ஆதி 5:1).

"மனுஷ ரூபமான ஒருவன் திரும்ப என்னைத் தொட்டு" - தானியேல் மூன்றாம் முறையாகத் தொடப்படுகிறார். (தானி 10:10,16,18).

8. கிரேக்கு தேசத்தின் அதிபதி

தானி 10:20 அப்பொழுது அவன்: நான் உன்னிடத்திற்கு வந்த காரணம் இன்னதென்று உனக்குத் தெரியுமா? இப்போது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம்பண்ணத் திரும்பிப் போகிறேன்; நான் போனபின்பு, கிரேக்குதேசத்தின் அதிபதி வருவான்.

"நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம்பண்ணத் திரும்பிப்போகிறேன்" - இவன் ஏற்கெனவே பெர்சியாவின் பிரபுவோடு யுத்தம் பண்ணிவிட்டு வந்திருக்கிறான். இனிமேல் மறுபடியும் அவனோடு யுத்தம்பண்ணப் போகிறான். தானி 10:13-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் யுத்த சம்பவங்கள் தொடருகிறது.

"நான் போனபின்பு, கிரேக்குதேசத்தின் அதிபதி வருவான்." - இவனும் சாத்தான் மூலமாக ஆளுகை செய்கிறான். கிரேக்கு தேசத்தின் இந்த அதிபதி இப்போது பாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கிறான். கடைசி நாட்களில் அவன் பாதாளத்திலிருந்து வெளியே வந்து, அந்திக்கிறிஸ்து பழைய கிரேக்கப் பேரரசைத் திரும்பவும் உயிர்ப்பிப்பதற்கு அவனுக்கு உதவிபுரிவான். இவர்களெல்லோரும் அர்மெகதோனில் இயேசு கிறிஸ்துவை எதிர்ப்பார்கள்.

11 அதிகாரம்

10. தரியுவின் காலத்திலிருந்து வருங்கால அந்திக்கிறிஸ்து வரையிலும் வரலாறு - (11:1-34)

(1) காபிரியேல் மிகாவேலுக்கு உதவி புரிந்ததற்கு ஐந்து வருஷங்களுக்கு முன்பு - பெர்சியாவின் அதிபதி வருவதற்காக பாபிலோன்மீது இருந்த சாத்தானின் அதிகாரங்களை அகற்றிப் போட்டான்

தானி 11:1 மேதியனாகிய தரியு அரசாண்ட முதலாம் வருஷத்திலே நான் அவனைத்திடப்படுத்தவும் பலப்படுத்தவும் அவனுக்குத் துணை நின்றேன்.

(2) மகா அலெக்ஸாண்டரின் ஆட்சிக்கு முன்பாக பெர்சியாவில் ஆட்சி புரிந்த நான்கு இராஜாக்கள்

தானி 11:2 இப்போது நான் மெய்யான செய்தியை உனக்கு அறிவிப்பேன்; இதோ, இன்னும் மூன்று ராஜாக்கள் பெர்சியாவில் எழும்புவார்கள்; அதின் பின்பு நாலாம் ராஜாவாயிருப்பவன் எல்லாரிலும் மகா ஐசுவரிய சம்பன்னனாகி, தன் ஐசுவரியத்தினால் பலங்கொண்டு, கிரேக்கு ராஜ்யத்துக்கு விரோதமாகச் சகலரையும் எழுப்பிவிடுவான்.

தீர்க்கதரிசன எண் - 17

"இதோ, இன்னும் மூன்று ராஜாக்கள் பெர்சியாவில் எழும்புவார்கள்......." (தானி 11:2-12:13) தானி 11:2-34 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. தானி 11:35-12:13 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

பெர்சிய ராஜாக்கள்

1. கோரேசு - இவன் இரண்டு வருஷம் ஆட்சி புரிந்தான். மேதியனாகிய தரியு அல்லது அஸ்திகேசசிற்குப் பின்பு இவன் ஆட்சிப் பொறுப்பேற்கிறான். (தானி 10:1).

2. கம்பைசஸ் - இவன் கோரேசின் குமாரன். பெர்சியாவில் இவன் கி.மு. 527 - 520 ஆகிய ஏழு வருஷங்களுக்கு ஆட்சி புரிந்தான்.

3. முதலாம் தரியு - இவன் 35 வருஷங்களுக்கு ஆட்சி புரிந்தான். ஆட்சிக் காலம் கி.மு. 520-485. இவன் கிரேக்கு தேசத்தின்மீது படையெடுத்த முதலாவது பெர்சிய தேசத்து ராஜாவாவான். கி.மு. 490 ஆம் வருஷத்தில் மாரத்தோன் (Marathon) என்னும் இடத்தில் நடைபெற்ற யுத்தத்தில் முதலாம் தரியு தோற்றுப்போனான்.

4. சஷ்டா - இவன் 21 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். ஆட்சிக்காலம் கி.மு. 485-464. இவன் பெர்சிய தேசத்து ராஜா. கிரேக்க தேசத்திற்கு எதிராக எல்லா தேசங்களையும் எழுப்பிவிட்டான். தானி 11:2 ஆவது வசனம் இவன் மூலமாக நிறைவேறிற்று. கிரேக்கரோடு நடைபெற்ற யுத்தத்தில் கி.மு. 480-479 ஆவது வருஷத்தில் சஷ்டா தோல்வியுற்றான்.

சஷ்டாவிற்குப் பின்பு ஆட்சி புரிந்த பெர்சியாவின் ராஜாக்கள்

1. முதலாம் அர்தசஷ்டா - 40 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். ஆட்சிக்காலம் கி.மு. 464-424.

2. இரண்டாம் சஷ்டா - ஒரு வருஷம் ஆட்சி புரிந்தான். ஆட்சிக்காலம் கி.மு. 423

3. இரண்டாம் தரியு - 19 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். ஆட்சிக்காலம் கி.மு. 423-404.

11 அதிகாரம்

4. இரண்டாம் அர்தசஷ்டா - 46 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். ஆட்சிக்காலம் கி.மு. 404-358.

5. மூன்றாம் அர்தசஷ்டா - 20 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். ஆட்சிக் காலம் கி.மு. 358-338.

6. மூன்றாம் தரியு - 8 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். ஆட்சிக்காலம் கி.மு. 338-330.

மகா அலெக்ஸாண்டர் மூன்றாம் தரியுவை யுத்தத்தில் ஜெயித்தான். மேதிய-பெர்சிய பேரரசு கிரேக்கப் பேரரசிற்குக் கீழ் வந்தது. புறஜாதியாரின் காலத்தில் இவர்கள் இஸ்ரவேலை ஒடுக்கிய ஐந்தாவது உலகப்பேரரசாக இருக்கிறார்கள். தானி 2:37-45; தானி 7:3-8; தானி 8:3-8,20-21 ஆகிய வசனங்களில் கிரேக்கு தேசம் மூன்றாவது உலகப் பேரரசாகக் கூறப்பட்டுள்ளது.

(3) பராக்கிரமமுள்ள இராஜா - (8:21)

தானி 11:3 ஆனாலும் பராக்கிரமமுள்ள ஒரு ராஜா எழும்பி, பிரபலமாய் ஆண்டு, தனக்கு இஷ்டமானபடி செய்வான்.

"பராக்கிரமமுள்ள ஒரு ராஜா எழும்பி" - இது மகா அலெக்ஸாண்டரைக் குறிக்கும். இவன் தன்னுடைய தந்தை பிலிப்புவின் திட்டங்களை நிறைவேற்றினான். பெர்சிய பேரரசின்மீது யுத்தம் பண்ணினான். கி.மு. 336 ஆம் வருஷத்தில் யுத்தம் ஆரம்பமாயிற்று. இக்காலத்தில் அலெக்ஸாண்டர் கிரேக்கு தேசத்தின் ஆட்சி பொறுப்பை ஏற்றான். 13 வருஷங்களில் அலெக்ஸாண்டர் பெர்சிய தேசம் முழுவதையும், மேலும் பல தேசங்களையும் தன்னுடைய ஆளுகையின்கீழ் கொண்டு வந்தான். "தனக்கு இஷ்டமானபடி செய்வான்" (தானி 11:3) என்று கூறப்பட்டிருக்கிற பிரகாரம் அலெக்ஸாண்டர் நடந்து கொண்டான்.

(4) கிரேக்கு தேசம் நான்கு இராஜ்ஜியங்களாக உடைந்து போயிற்று - (8:22)

தானி 11:4 அவன் எழும்பினபின்பு, அவனுடைய ராஜ்யம் உடைந்துபோய், வானத்தின் நாலு திசைகளிலும் பகுக்கப்படும்; ஆனாலும் அது அவனுடைய சந்ததியாருக்கு அல்ல, அவன் செய்த ஆளுகையின் படியும் அல்ல; அவனுடைய ராஜ்யம் பிடுங்கப்பட்டு, அவனுடையவர்களல்லாத வேறே பேர்களிடமாய்த் தாண்டிப்போம்.

"அவனுடைய ராஜ்யம் உடைந்துபோய், வானத்தின் நாலு திசைகளிலும் பகுக்கப்படும்" - மகா அலெக்ஸாண்டரின் மரணத்திற்குப் பின்பு கிரேக்கு பேரரசு 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அலெக்ஸாண்டரின் காலத்திலிருந்து ரோமர்கள் கிரேக்க தேசத்தின் நான்கு பகுதிகளையும் கைப்பற்றிய காலம் வரையிலும் ஹெலனிஸ்டிக் (Hellenistic) காலம் அல்லது அலெக்ஸாண்டரின் காலம் என்று அழைக்கப்படுகிறது.

"அவனுடைய ராஜ்யம் பிடுங்கப்பட்டு, அவனுடையவர்களல்லாத வேறே பேர்களிடமாய்த் தாண்டிப்போம்." - அலெக்ஸாண்டரின் ராஜ்யம் பிரிக்கப்படுகிறது. அலெக்ஸாண்டரின் சந்ததியில் வராதவர்கள் ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்கள். 15 வருஷக்காலத்திற்குப் பின்பு அலெக்ஸாண்டரின் குடும்பத்தில் யாரும் ஆட்சிப் பொறுப்பில் இல்லை.

(5) தென்திசை இராஜா வடதிசை இராஜா

தானி 11:5 தென்றிசை ராஜா பலவானாயிருப்பான்; ஆனாலும் அவனுடைய பிரபுக்களில் ஒருவன் அவனைப்பார்க்கிலும் பலவானாகி ஆளுவான்; இவனுடைய ஆளுகை பலத்த ஆளுகையாயிருக்கும்.

11 அதிகாரம்

தானி 11:6 அவர்கள் சில வருஷங்களுக்குப் பின்பு, ஒருவரோடொருவர் சம்பந்தம் பண்ணும்படிக்குத் தென்றிசை ராஜாவின் குமாரத்தி வடதிசை ராஜாவினிடத்தில் வருவாள்; ஆனாலும் அவளுக்குப் புயபலம் இராமற்போம்; அவனும் அவனுடைய புயமும் நிலைநிற்பதில்லை; அவளும் அவளை அழைத்துவந்தவர்களும், அவளைப் பெற்றவனும், அவளை அக்காலங்களில் பலப்படுத்தினவனும் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.

"தென்றிசை ராஜா" - இது முதலாம் தால்மியைக் குறிக்கும். இவன் கிரேக்கப் பேரரசில் எகிப்திய பிரிவை ஸ்தாபித்தவன். எகிப்து மாகாணம் கி.மு. 323-30வரையிலும் ஆட்சி பொறுப்பில் இருந்தது. அதன் பின்பு எகிப்து தேசம் ரோமப் பேரரசின் ஆளுகைக்குள் வந்தது. தென்தேசம் என்பது யூதேயா தேசத்திற்குத் தென்பகுதியிலுள்ள தேசம் என்று பொருள்.

"பலவான்" - முதலாம் தால்மி பலவானாக இருக்கிறான். எகிப்து தேசத்தோடு கொரிந்து, காரியா, போனிஷியா, சைப்பிரஸ் ஆகிய பிரதேசங்களைச் சேர்த்துக் கொண்டான்.

"அவனுடைய பிரபுக்களில் ஒருவன்" - இது முதலாம் செலூக்கசைக் **(Seleucus I)** குறிக்கும். இவன் செலூக்கப் பேரரசை ஸ்தாபித்தவன். ஆட்சிக்காலம் கி.மு. 312-280. அந்திகோனசோடு **(Antigonus)** நடைபெற்ற யுத்தத்தில் முதலாம் செலூக்கஸ் தோற்றுப் போனான். அதன் பின்பு செலூக்கஸ் எகிப்திற்கு ஓடிப்போனான். முதலாம் தால்மியின் படைத் தளபதிகளில் ஒருவனாக படையாற்றினான். ஆகையினால் இவன் தால்மியின் பிரபுக்களில் ஒருவன் என்று அழைக்கப்படுகிறான். (தானி 11:5). கி.மு. 312 ஆம் வருஷத்தில் காசாவில் நடைபெற்ற யுத்தத்தில் தால்மி ஜெயம் பெற்றான். இதனால் செலூக்கஸ் பாபிலோனுக்குத் திரும்பி வருவதற்கு ஒரு வாய்ப்பு உண்டாயிற்று. அலெக்ஸாண்டருடைய பேரரசின் கிழக்குப் பகுதி முழுவதையும் செலூக்காஸ் 9 வருஷங்களில் கைப்பற்றினான். கி.மு. 301 ஆம் வருஷத்தில் சீரியாவையும், சின்ன ஆசியாவின் ஒரு பகுதியையும் தன்னுடைய ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டான். செலூக்கப் பேரரசின் ஆட்சிக்காலம் கி.மு. 312-65 ஆகும். இக்காலத்தில் பேரரசாக விளங்கிய சீரிய தேசம் ரோமப்பேரரசில் ஒரு சிறிய மாகாணமாயிற்று.

"சில வருஷங்களுக்குப் பின்பு" - 65 வருஷங்களுக்குப்பின்பு என்று பொருள். இக்காலத்தில் பல வரலாற்று நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. (2 நாளா 18:2).

"ஒருவரோடொருவர் சம்பந்தம் பண்ணும் படிக்குத் தென்றிசை ராஜாவின் குமாரத்தி வடதிசை ராஜாவினிடத்தில் வருவாள்" - வடதிசை என்பது சீரிய தேசத்தையும், தென்திசை என்பது எகிப்து தேசத்தையும் குறிக்கும். இவர்கள் உடன்படிக்கை பண்ணிக் கொள்வார்கள். இவர்களுக்கு இடையே பல வருஷங்கள் யுத்தம் நடைபெற்றது. கி.மு. 250 ஆம் வருஷத்தில் இவ்விரு தேசங்களும் இனிமேல் யுத்தம் பண்ணுவதில்லை என்று ஒப்பந்தம் பண்ணிக் கொண்டன. எகிப்து தேசத்தின் ராஜாவாகிய இரண்டாம் தால்மியின் குமாரத்தியாகிய பெரேனீஸ் **(Berenice)** சீரியாவின் ராஜாவாகிய இரண்டாம் அந்தியோக்கஸிற்கு மனைவியாகிறாள்.

"அவளுக்குப் புயபலம் இராமற்போம்" - சீரிய தேசத்தின் சிங்காசனத்தில் பெரேனீசின் வாரிசுகள் அமர்ந்து ஆட்சி புரியவில்லை. இரண்டாம் அந்தியோக்கஸ் பெரேனீசைத் தள்ளி வைத்துவிட்டு தன் முதல் மனைவியோடு சேர்ந்து கொள்கிறான். (தானி 11:6).

11 அதிகாரம்

"அவனும் அவனுடைய புயமும் நிலை நிற்பதில்லை" - இரண்டாம் அந்தியோக்கசின் முதல் மனைவியின் பெயர் லாவோடீஸ். Laodice இவள் இரண்டாம் அந்தியோக்கசை விஷம் வைத்துக் கொன்றுவிட்டு, தன்னுடைய மகனைச் சிங்காசனத்தில் அமர்த்தியதாக வரலாறு கூறுகிறது. (தானி 11:6). "ஒப்புக் கொடுக்கப்படுவார்கள்" என்பதற்கு பெரேனீசை இரண்டாம் அந்தியோக்கஸ் தள்ளிவைத்து விடுவான் என்று பொருள். "அவளை அழைத்து வந்தவர்கள்" என்பது பெரேனீசோடு எகிப்து தேசத்திலிருந்து வந்த ஸ்திரீகள் என்று பொருள். பெரேனீஸ் கொல்லப்பட்டபோது எகிப்து தேசத்து ஸ்திரீகள் பெரேனீசைப் பாதுகாக்க முயற்சி பண்ணினார்கள். ஆனால் பெரேனீசோடு இவர்களும் கொல்லப்பட்டார்கள். "அவளைப் பெற்றவன்" என்பதற்கு அவளால் அழைத்து வரப்பட்டவன் என்று பொருள். இது பெரேனீசின் குமாரனைக் குறிக்கும். பெரேனீசோடு அவனுடைய குமாரனும் கொல்லப்பட்டான். (தானி 11:6). "அவளை அக்காலங்களில் பலப்படுத்தினவன்" என்பது பெரேனீசின் தகப்பனைக் குறிக்கும். இவன் அந்தியோக்கசிற்குப் பெரேனீசை மனைவியாகக் கொடுத்தவன். (தானி 11:6).

(7) வேர்களின் கிளை

தானி 11:7 ஆனாலும் அவளுடைய வேர்களின் கிளையாகிய ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்பி, இராணுவத்தோடே வந்து, வடதிசை ராஜாவின் அரணிப்புக்குள் பிரவேசித்து, அவர்களை விரோதித்து,

தானி 11:8 அவர்களுடைய அதிபதிகளையும், அவர்களுடைய விலையேறப்பெற்ற வெள்ளியும் பொன்னுமாகிய பாத்திரங்களையும், அவர்களுடைய தெய்வங்களையுங்கூட எகிப்துக்குக் கொண்டுபோய், சில வருஷங்கள்மட்டும் வடதிசை ராஜாவைப்பார்க்கிலும் நிலையாய் நிற்பான்.

தானி 11:9 தென்றிசை ராஜா அவன் ராஜ்யத்துக்கு விரோதமாக வந்து, தன் தேசத்துக்குத் திரும்பிப்போவான்.

"அவளுடைய வேர்களின் கிளையாகிய ஒருவன்" - இது பெரேனீசின் சகோதரனைக் குறிக்கும். இவன் மூன்றாம் தால்மி என்று அழைக்கப்படுகிறான். எகிப்தின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறான். எகிப்து தேசத்தின் கிழக்குப் பிரதேசங்களைத் தன் தேசத்தோடு சேர்த்துக் கொண்டான். தன்னுடைய கடற்படைப் பலத்தினால் சின்ன ஆசியாவிலுள்ள கடற்கரைப் பிரதேசங்களை கி.மு. 246 ஆம் வருஷத்தில் கைப்பற்றினான். (தானி 11:7-9).

"வடதிசை ராஜா" - இது இரண்டாம் செலூக்கசைக் குறிக்கும். இவன் மூன்றாம் தால்மியிடம் தோற்றுப்போனான். மூன்றாம் தால்மி வடக்கு தேசத்திற்குள் புகுந்து, அதிலுள்ள அனைத்தையும் கொள்ளையிட்டான். ஆயினும் தன்னுடைய தேசத்தில் ஏற்பட்ட பிரச்சனைகளினால் யுத்தத்தின் வெற்றிகளை மூன்றாம் தால்மியினால் அனுபவிக்க முடியவில்லை. (தானி 11:9). அவர்களுடைய அதிபதிகளையும், அவர்களுடைய தெய்வங்களையும், எகிப்துக்குக் கொண்டு வந்தான். (தானி 11:8)

"சில வருஷங்கள் மட்டும் வடதிசை ராஜாவைப்பார்க்கிலும் நிலையாய் நிற்பான்" - இரண்டாம் செலூக்கஸ் குதிரையிலிருந்து தவறிகீழே விழுந்ததினால் மரித்துப்போனான் என்று வரலாறு கூறுகிறது. மூன்றாம் தால்மி அவனைவிட 5 வருஷங்கள் அதிகமாக உயிரோடு இருந்தான்.

(8) அவனுடைய குமாரர்கள் யுத்தம் செய்ய எத்தனிப்பார்கள்

தானி 11:10 ஆனாலும் அவனுடைய குமாரர் யுத்தஞ்செய்ய எத்தனித்து, திரளான சேனைகளைக் கூட்டுவார்கள்; இவர்களில் ஒருவன் நிச்சயமாய் வந்து, வெள்ளம்போலக் கடந்து, திரும்பவும் தன்னுடைய அரண்மட்டும் யுத்தங்கலந்து சேருவான்.

11 அதிகாரம்

தானி 11:11 அப்பொழுது தென்திசை ராஜா கடுங்கோபங்கொண்டு புறப்பட்டுப்போய், வடதிசை ராஜாவோடே யுத்தம் பண்ணுவான்; இவன் பெரிய சேனையை ஏகமாய் நிறுத்துவான்; ஆனாலும் இந்தச் சேனை அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படும்.

தானி 11:12 அவன் இந்தச் சேனையை நீக்கினபின்பு, அவனுடைய இருதயம் கர்வங்கொள்ளும்; அவன் அநேகமாயிரம் பேரை மடிவிப்பான்; ஆனாலும் பலங்கொள்ளமாட்டான்.

"தென்றிசை ராஜா" - இது தால்மி பைலோபேட்டரைக் (Ptolemy Philopater) குறிக்கும். இவனுடைய ஆட்சிக்காலம் கி.மு. 221-204. சீரியாவின் ராஜாவாகிய அந்தியோக்கஸ் கி.மு. 219 ஆம் வருஷத்தில் இவன்மீது யுத்தம் பண்ண வந்தான். கி.மு. 217 ஆம் வருஷத்தில் அந்தியோக்கஸ் யுத்தத்தில் தோற்றுப்போனான். இதனால் தால்மி பைலோபேட்டர் அதிகமாக உயர்த்தப்பட்டான். யூதர்களை அதிகமாக ஒடுக்கினான். (தானி 11:12) இவனுடைய இருதயம் பல வெற்றிகளினால் கர்வங்கொண்டது. ஆயினும் இவன் தன் தேசத்தில் பலங்கொள்ளவில்லை. (தானி 11:12).

(9) சில வருஷங்கள் சென்றபின்பு மறுபடியும் யுத்தம்

தானி 11:13 சில வருஷங்கள் சென்றபின்பு வடதிசை ராஜா திரும்ப முந்தின சேனையிலும் பெரிதான சேனையைச் சேர்த்து, மகா பெரிய சேனையோடும் வெகு சம்பத்தோடும் நிச்சயமாய் வருவான்.

தானி 11:14 அக்காலங்களில் தென்றிசை ராஜாவுக்கு விரோதமாக அநேகர் எழும்புவார்கள்; அப்பொழுது உன்ஜனத்திலுள்ள துண்டரிக்காரரின் புத்திரர் தரிசனத்தை நிறைவேற்றத் தங்களை உயர்த்துவார்கள்.

தானி 11:15 வடதிசை ராஜா வந்து, கொத்தளம் போட்டு, அரணான நகரங்களைப்பிடிப்பான்; தென்றிசை ராஜாவின் புயபலங்களும் அவன் தெரிந்துகொண்ட ஜனமும் நில்லாமற் போம்;எதிர்க்கிறதற்குப் பெலன் இராது.

தானி 11:16 ஆகையால் அவனுக்கு விரோதமாக வருகிறவன் தன் இஷ்டப் படிச்செய்வான்; அவனுக்கு முன்பாக நிலைநிற்பவன் ஒருவனும் இல்லை; அவன் சிங்காரமான தேசத்தில் தங்குவான்; எல்லாம் அவன் கைவசமாகும்.

"வடதிசை ராஜா" - இது மூன்றாம் அந்தியோக்கசைக் குறிக்கும். இவனுடைய ஆட்சிக்காலம் கி.மு. 223-187. இவன் எகிப்தியரோடு ஒருமுறை யுத்தம்பண்ணி தோற்றுப்போனான். ஆயினும் 14 வருஷங் களுக்குப் பின்பு மறுபடியும் எகிப்தியரோடு யுத்தம்பண்ணி, தன்னுடைய ராஜ்யத்தின் கிழக்குப் பகுதியை எகிப்தியரிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டான்.

"தென்றிசை ராஜாவுக்கு விரோதமாக அநேகர்எழும்புவார்கள்" - எகிப்து தேசத்தின் மீதுயுத்தம் பண்ணுவதற்கு அந்தியோக்கசும், மக்கதோனியாவின் பிலிப்புவும் ஒன்று சேர்ந்தார்கள். கி.மு. 198 ஆம்வருஷத்தில் எகிப்து தோல்வியுற்றது. பாலஸ்தீன தேசம் மறுபடியும் செலூக்கியரின் வசமாயிற்று.

"தென்றிசை ராஜா" - இது ஐந்தாம் தால்மியைக் குறிக்கும். இவன் எப்பிபேனஸ் (Epiphanes) என்று அழைக்கப்பட்டான். லூபலோபேட்டர் மரித்தபோது,எப்பிபேனசிற்கு 5 வயது மட்டுமே ஆயிற்று.

"உன் ஜனத்திலுள்ள துண்டரிக்காரரின் புத்திரர் தரிசனத்தை நிறைவேற்றத் தங்களை உயர்த்துவார்கள்" - யூதர்கள் தங்கள் மார்க்கத்தை மறுதலித்து விட்டு தால்மியோடு சேர்ந்துகொள்வார்கள். அந்தியோக்கஸ் எகிப்தின் படைத்தளபதியை கி.மு. 198 ஆம் வருஷத்தில் ஜெயித்தான். யூதர்கள் சீரியரோடு சேர்ந்து, யூதாவை விடுவிக்க முயற்சி பண்ணினார்கள். இதனால் எகிப்தியருக்கு யூதர்கள்மீது கோபம் அதிகமாயிற்று. அந்தியோக்கஸ் மற்ற பகுதிகளில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தபோது பாலஸ்தீன தேசம் தோற்கடிக்கப்பட்டது. அதிலிருந்து திரளான கொள்ளைப்பொருட்கள் எகிப்து தேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

11 அதிகாரம்

"வடதிசை ராஜா வந்து" - இது அந்தியோக்கசை குறிக்கும் இவன் யூதாவை மீட்பதற்காக வருவான். பல அரணான பட்டணங்களை கைப்பற்றுவான். எகிப்தின் தளபதிகளில் யாராலும் இவனை எதிர்த்து நிற்க முடியாது. (தானி 11:15-16).

"அவனுக்கு விரோதமாக வருகிறவன் தன் இஷ்டப்படிச்செய்வான்" - இது தால்மிக்கு எதிராக வரும் அந்தியோகசை குறிக்கும். இவன் வெற்றி பெற்று தனக்கு இஷ்டமானதை யெல்லாம் செய்வான்.

"அவன் சிங்காரமான தேசத்தில் தங்குவான்" - அந்தியோக்கசிற்கு யூதர்கள் உதவி புரிவார்கள். இதனால் அந்தியோகஸ் யூதர்களுக்கு பல சகாயங்களைச் செய்வான். ஆசாரியர்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிப்பான். பாலஸ்தீன தேசத்தில் பல வருஷங்கள் யுத்தம் நடைபெற்றதினால் அங்கு பஞ்சம் நிலவும்.

(10) செம்மை மார்க்கத்தார்

தானி 11:17 தன் ராஜ்யத்தின் வல்லமையோடெல்லாம் தானும் தன்னோடே கூடச் செம்மை மார்க்கத்தாரும் வர, இவன் தன் முகத்தைத் திருப்புவான்; இப்படிச் செய்து கெடுதியுண்டாகும்படி அவனுக்கு ஒரு கன்னிப்பெண்ணைக் கொடுப்பான், ஆனாலும் அவளாலே ஸ்திரம்பெறான்; அவள் அவன் பட்சத்தில் நில்லாள்.

"தன்னோடே கூடச் செம்மை மார்க்கத்தாரும்" - அந்தியோக்கஸ் எகிப்திற்கு நேராக யுத்தம் பண்ணுவதற்கு ஆயத்தமாவான். ஆயினும் தால்மியோடு யுத்தம்பண்ணாமல் சமாதான உடன்படிக்கை செய்துகொள்வான். அந்தியோக்கசின் மகளுடைய பெயர் கிளியோபட்ரா. இவள் தால்மியை ஒரு கண்ணியில் விழ வைப்பாள் என்று அந்தியோக்கஸ் எதிர்பார்த்தான். ஆனால் கிளியோபட்ராவோ தன் தகப்பனுக்கு உதவி புரியாமல் தன் கணவனைக் காப்பாற்றுகிறாள்.

(11) தீவுகளுக்கு நேராக முகத்தை திருப்புவான்

தானி 11:18 பின்பு இவன் தன் முகத்தைத் தீவுகளுக்கு நேராகத் திருப்பி, அநேகந் தீவுகளைப் பிடிப்பான்; ஆனாலும் ஒரு சேனாபதி இவன் செய்கிற நிந்தையை ஒழியப்பண்ணுவதுமல்லாமல், இவன் செய்த நிந்தையினிமித்தம் இவனுக்குச் சரிக்குச் சரிக்கட்டுவான்.

தானி 11:19 ஆகையால் தன் முகத்தைத் தன் தேசத்தின் அரண்களுக்கு நேராகத்திருப்புவான்; அங்கே இடறிவிழுந்து காணப்படாமற்போவான்.

"பின்பு இவன் தன் முகத்தைத் தீவுகளுக்கு நேராகத் திருப்பி, அநேகந் தீவுகளைப் பிடிப்பான்" - எகிப்து தேசத்தோடு உடன்படிக்கை செய்து கொண்ட பின்பு அந்தியோகஸ் பல கப்பல்களைக் கட்டினான். மத்தியதரைக் கடலிலுள்ள பல தீவுகளைக் கைப்பற்றினான். ரோதே, காமோல், கோலோபோன் ஆகிய தீவுகள் அந்தியோகசின் கைவசமாயிற்று.

"ஆனாலும் ஒரு சேனாபதி........இவன் செய்த நிந்தையினிமித்தம் இவனுக்குச் சரிக்குச் சரிக்கட்டுவான்." - இது ரோமாபுரியின் சேனாபதியைக் குறிக்கும். இவன் அந்தியோகசை ஜெயிப்பான். ரோமபேரரசார் சின்ன ஆசியாவில் அந்தியோகிசை ஜெயிப்பார்கள். ரோமாபுரியின் மீது நிந்தை உண்டாக்க வேண்டுமென்று அந்தியோகஸ் நினைத்தான். ஆனால் அந்த நிந்தை அவன் மீதே திரும்பிற்று.

"அங்கே இடறிவிழுந்து காணப்படாமற் போவான்" - அந்தியோக்கஸ் யுத்தத்தில் தோல்வியுற்று திரும்பவும் அந்தியோகியாவிற்கு திரும்பி வருகிறான். கி. மு. 187 ஆவது வருஷத்தில் நடைபெற்ற யுத்தத்தில் அந்தியோக்கஸ் தோல்வியுற்று அழிந்து போனான்.

11 அதிகாரம்

(12) தண்டல்காரனைத் திரியப் பண்ணுகிற ஒருவன் எழும்புவான்

தானி 11:20 செழிப்பான ராஜ்யத்தில் தண்டல்காரனைத் திரியப்பண்ணுகிற ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்புவான்; ஆகிலும் சில நாளைக்குள் கோபமில்லாமலும் யுத்தமில்லாமலும் நாசமடைவான்.

"தண்டல்காரனைத் திரியப்பண்ணுகிற ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்புவான்" - அந்தியோக்கசிற்குப் பின்பு அவனுடைய குமாரன் நான்காம் செலூக்கஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். இவன் தண்டல்காரனாக இருந்தான். இவனுடைய ஆட்சிக் காலம் கி.மு. 187-176. இவனுடைய இராஜ்ஜியத்தில் சீரியா, சிலிசியா, பாலஸ்தீனம், மெசெபத்தோமியா, பாபிலோனியா, மேதியா, பெர்சியா, ஆகிய தேசங்கள் அடங்கியிருந்தன.

"தண்டல்காரன்" - அந்தியோக்கஸ் ரோமப்பேரரசின் மீது நடத்திய யுத்தத்தில் தோல்வியுற்றான். இதற்காக அவன் ரோமபேரரசிற்கு வரி செலுத்த வேண்டும். இந்நிலையில் அந்தியோகஸ் மரித்துப்போனான். அவனுடைய மகன் நான்காம் செலூகஸ் தன் தந்தை கட்டவேண்டிய வரியை கட்டுவதற்கு ஆவன செய்கிறான். பல புதிய உபாயங்கள் மூலமாக வரியைத் தண்டல்பண்ணுகிறான். எருசலேமிலுள்ள தேவாலயத்தை கொள்ளையிடவும் தன்னுடைய அதிகாரியை அனுப்புகிறான்.

"ஆகிலும் சில நாளைக்குள்" - "சில நாளைக்குள்" என்பது எத்தனை நாட்களுக்குள் என்று தெரியவில்லை. நான்காம் செலூகஸ் பதினொரு வருஷம் ஆட்சிபுரிந்தான். எருசலேமிலுள்ள தேவாலயத்தை கொள்ளையிட்ட சில நாளைக்குள் இவன் மரித்துப்போனான். எருசலேமின் தேவாலயம் "இராஜ்ஜியத்தின் மேன்மை" "the glory of the kingdom" என்று அழைக்கப்படுகிறது.

"கோபமில்லாமலும் யுத்தமில்லாமலும் நாசமடைவான்" - நான்காம் செலூக்கஸ் யுத்தத்தில் மரித்துப் போகவில்லை. இவனுடைய நம்பிக்கை துரோகி ஒருவன் இவனுக்கு விஷம் வைத்து இவனைக் கொன்று போட்டான்.

(13) அவமதிக்கப்பட்டவன் ஒருவன் எழும்புவான் - (11:21-34)

(அ) இவன் இச்சகம் பேசி இராஜ்ஜியத்தைக் கட்டிக் கொள்கிறான்

தானி 11:21 அவன் ஸ்தானத்தில் அவமதிக்கப்பட்டவன் ஒருவன் எழும்புவான்; இவனுக்கு ராஜ்யபாரத்தின் மேன்மையைக் கொடாதிருப்பார்கள்; ஆனாலும் இவன் சமாதானமாய் நுழைந்து, இச்சகம்பேசி, ராஜ்யத்தைக் கட்டிக்கொள்ளுவான்.

"அவன் ஸ்தானத்தில் அவமதிக்கப்பட்டவன் ஒருவன் எழும்புவான்" - இது நான்காம் அந்தியோகசைக் குறிக்கும். இவனுடைய மறுபெயர் எப்பிபேனஸ். இவனுடைய ஆட்சிக் காலம் கி.மு. 175-163. தானி 11:21-34 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் இவனைப் பற்றியது ஆகும். சீரியாவின் கடைசி ராஜாவாகிய அந்திக் கிறிஸ்துவைப் பற்றியும் இந்த வசனப்பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும் அந்தியோக்கஸ் எப்பிபேனஸ் என்பவன் அந்திகிறிஸ்து அல்ல.

(ஆ) வஞ்சகமாய் காரியங்களை நடப்பித்து பலப்படுகிறான்

தானி 11:22 பிரவாகமாய் வருகிற சேனைகள் இவனாலே பிரவாகமாய் முறிக்கப்படும்; உடன்படிக்கையின் தலைவனும் முறிக்கப்படுவான்.

தானி 11:23 ஏனென்றால் அவனோடே சம்பந்தம்பண்ணின நாட்கள்முதல் அவன் சூதாய் நடந்து, கொஞ்சம் ஜனங்களோடே புறப்பட்டுவந்து பெலங்கொள்ளுவான்.

11 அதிகாரம்

தானி 11:24 தேசம் சுகவாழ்வோடும் சம்பூரணத்தோடும் இருக்கையில், அவன் உட்பிரவேசித்து, தன் பிதாக்களும் தன் பிதாக்களின் பிதாக்களும் செய்யாததைச் செய்வான், கொள்ளையிட்டுச் சூறையாடி, பொருளை அவர்களுக்கு இறைத்துப் பங்கிட்டு, அரண்களுக்கு விரோதமாகத் தனக்குள் உபாயங்களை யோசிப்பான்; சிலகாலமட்டும் இப்படியிருக்கும்.

"அவனோடே சம்பந்தம்பண்ணின நாட்கள் முதல் அவன் சூதாய் நடந்து" - அந்தியோக்கஸ் எப்பிபேனசிற்கும் யாசேனுக்கும் இடையிலுள்ள ஒப்பந்தம் முடிந்துபோயிற்று. (தானி 11:22).

"கொஞ்சம் ஜனங்களோடே புறப்பட்டுவந்து பெலங்கொள்ளுவான்" - அந்தியோக்கஸ் எப்பிபேனஸ் தன் தந்தையின் மூலமாக ரோமப்பேரரசுக்கு கட்ட வேண்டிய வரிப்பணத்தை கட்டமுடியாமல் போனதற்காக சிறைப்பிடிக்கப்படுகிறான். சிறையிருப்பிற்குப் பின்பு அவன் தன் தேசத்திற்கு திரும்பி வரும்போது தேசத்தில் பலவிதமான குழப்பங்கள் நிலவிற்று. இவனுக்கு கொஞ்சம் ஜனங்களே ஆதரவாக இருந்தார்கள். ஆயினும் தன் சகோதரன், தன் ஆதரவாளர்கள் ஆகியோருடைய துணையுடன் மறுபடியும் ஆட்சிப்பெறுப்பை பெற்றுக்கொள்கிறான்.

"தேசம் சுகவாழ்வோடும் சம்பூரணத்தோடும் இருக்கையில், அவன் உட்பிரவேசித்து" - அந்தியோக்கஸ் எப்பிபேனஸ் ராஜாவான பின்பு பாலஸ்தீனமும் பொனீசியாவும் தனக்கு உரியது என்று அறிவித்தான். இதனால் சீரியாவிற்கும் எகிப்திற்கும் இடையில் யுத்தம் உண்டாயிற்று. (தானி 11:23).

"தன் பிதாக்களும் தன் பிதாக்களின் பிதாக்களும் செய்யாததைச் செய்வான்" - யுத்தத்தில் கிடைத்த கொள்ளைப் பொருட்களை அந்தியோகஸ் தன்னுடைய நண்பர்களுக்கும் படை வீரர்களுக்கும் தாராளமாக பிரித்துக் கொடுத்தான். இவனுடைய முன்னோர்கள் இதுபோன்று செய்யவில்லை. இவன் வீதிகளுக்குச் சென்று பொன், வெள்ளி ஆகியவற்றை ஜனங்கள் மத்தியில்எறிவான்என்று வரலாறு கூறுகிறது.

"அரண்களுக்கு விரோதமாகத் தனக்குள் உபாயங்களை யோசிப்பான்" - அந்தியோக்கசின் ஆட்சிக் காலத்தில் எகிப்து தேசம் இவன் மீது யுத்தம் பண்ண முயற்சிபண்ணிற்று. இவன் பலவிதமான உபாயங்களை யோசித்து எகிப்தின் மீது யுத்தத்தைத் தவிர்த்தான். தன்னுடைய எல்லைகளைப் பலப்படுத்தி எகிப்தின் மீது யுத்தம்பண்ண ஆயத்தமானான்.

(இ) தென்திசை இராஜாவுக்கு விரோதமாக போர் செய்ய எழும்புவான்

தானி 11:25 பின்னும் தென்திசை ராஜாவுக்கு விரோதமாகப் பெரிய சேனையோடே போர்செய்யத் தன் வல்லமையையும் தன் வஸ்திரத்தையும் எழுப்புவன்; அப்பொழுது தென்திசை ராஜா மிகவும் பலத்த பெரிய இராணுவத்தோடே போய் யுத்தங்கலப்பான்; ஆனாலும் அவர்கள் அவனுக்கு விரோதமாகத் துராலோசனை பண்ணியிருந்தபடியால், அவன் நிற்கமாட்டான்.

தானி 11:26 அவனுடைய போஜனங்களைச் சாப்பிடுகிறவர்கள் அவனை நாசப்படுத்துவார்கள்; ஆகையால் அவனுடைய இராணுவம் பிரவாகமாய்வரும்; அநேகர் கொலையுண்டு விழுவார்கள்.

தானி 11:27 இந்த இரண்டு ராஜாக்களின் இருதயமும் தீமை செய்ய நினைக்கும்; ஒரே பந்தியிலி ருந்து பொய்பேசுவார்கள்; ஆனாலும் அது வாய்ப்பதில்லை; குறித்த காலத்துக்கு முடிவு இன்னும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும்.

"பின்னும் தென்திசை ராஜாவுக்கு விரோதமாக" - அந்தியோகஸ் எப்பிபேனஸ் பல வருஷங்கள் ஆயத்தம் செய்து இறுதியில் எகிப்து தேசத்தின் மீது யுத்தம்பண்ணி அதை ஜெயித்தான். தால்மியை கைது பண்ணினான். அந்தியோகஸ் எகிப்து தேசத்தின் ராஜாவானான். இவனுடைய ஆட்சிக்காலம் கி.மு. 171-167.

11 அதிகாரம்

"அவர்கள் அவனுக்கு விரோதமாகத் துராலோசனை பண்ணியிருந்தபடியால், அவன் நிற்கமாட்டான்" - தால்மியின் அதிகாரிகள் சிலரை அந்தியோகஸ் எப்பிபேனஸ் தந்திரமாகத் தன் வசப்படுத்திக் கொண்டான். இவர்கள் தால்மியைத் தோற்க வைப்பதற்கு எப்பிபேனசிற்கு உதவி புரிந்தார்கள். இவர்களுடைய உதவியினால் எகிப்து விழுந்தது. (தானி 1)

"இந்த இரண்டு ராஜாக்களின் இருதயமும் தீமை செய்ய நினைக்கும்" - சீரியாவின் ராஜாவாகிய அந்தியோகஸ் எப்பிபேனசின் இருதயமும் எகிப்தின் ராஜாவாகிய தால்மியின் இருதயமும் தீங்கு செய்ய நினைத்தது. இருவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பதாக நடித்தார்கள். ஆயினும் இவர்கள் ஒருவருக் கொருவர் தீங்கு செய்து கொண்டார்கள். ஒருவருக்கொருவர் பொய் பேசிக் கொண்டார்கள். எகிப்து தங்களிடம் சரணடைய வேண்டுமென்று ரோமப்பேரரசார் கோரிக்கை விடுத்தார்கள். இதனால் தால்மி வளம்பெறவில்லை. (தானி 11:27)

(ஈ) பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாயிருப்பான்

தானி 11:28 அவன் மகா சம்பத்தோடே தன் தேசத்துக்குத் திரும்பி, தன் இருதயத்தைப் பரிசுத்த உடன்படிக்கைக்குவிரோதமாகவைத்து, அதற்கானதைச் செய்து, தன் தேசத்துக்குத் திரும்பிப் போவான்.

"தன் இருதயத்தைப் பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாக வைத்து" - எகிப்து தேசத்தைக் கைப்பற்றி விட்டு அந்தியோகஸ் அந்தியோகியாவிற்கு திரும்பி வருகிறான். யுத்தத்தில் அந்தியோகஸ் மரித்துப் போனான் என்று நினைத்து எருசலேமிலுள்ள ஜனங்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். இதைக்கண்ட அந்தியோகசிற்கு யூதர்கள் மீது மிகுந்த கோபமுண்டாயிற்று. அதன்பின்பு அந்தியோகஸ் யூதர்களுக்கு விரோதமாக செயல்படுகிறான்.

(உ) பின் நடபடியும் முன் நடபடியும்

தானி 11:29 குறித்தகாலத்திலே திரும்பவும் தென்தேசத்திற்கு வருவான்; ஆனாலும் அவனுடைய பின்நடபடி முன்நடபடியைப் போல இராது.

தானி 11:30 அவனுக்கு விரோதமாகக் கித்தீமின் கப்பல்கள் வரும்; அதினால் அவன் மனநோவடைந்து, திரும்பிப்போய், பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாகக் குரோதங்கொண்டு, அதற்கானதைச் செய்து, பரிசுத்த உடன்படிக்கையைத் தள்ளினவர்களை அநுசரிப்பான்.

தானி 11:31 ஆனாலும் அவனிடத்திலிருந்து புறப்பட்ட சேனைகள் எழும்பி, அரணான பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, அன்றாடபலியை நீக்கி, பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள்.

"குறித்தகாலத்திலே திரும்பவும் தென்தேசத்திற்கு வருவான்" - அந்தியோக்கஸ் எப்பிபேனஸ் மறுபடியும் எகிப்து தேசத்தின் மீது யுத்தம்பண்ணுவான். முதலாவது யுத்தத்தில் அந்தியோகஸ் ஜெயம் பெற்றான். ஆனால் இரண்டாவது யுத்தத்தில் அந்தியோகஸ் எகிப்தை ஜெயிக்கமாட்டான்.

"அவனுக்கு விரோதமாகக் கித்தீமின் கப்பல்கள் வரும்" - அந்தியோக்கசால் எகிப்தின் மீது தொடர்ந்து யுத்தம்பண்ண முடியவில்லை. ரோமபேரரசுடைய கித்தீமின் கப்பல்கள் அந்தியோகசிற்கு விரோதமாக வந்தன. அந்தியோகஸ் ரோமபேரரசுக்கு பணிந்து எகிப்தின் மீது யுத்தம்பண்ணுவதை நிறுத்தி விட்டு தன் தேசத்திற்கு திரும்பிப் போனான்.

11 அதிகாரம்

"பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாகக் குரோதங் கொண்டு" - அந்தியோக்கஸ் எருசலேமுக்கு விரோதமாக வந்து ஆயிரக்கணக்கான யூதர்களைக் கொன்று போட்டான். பலரை அடிமையாக விற்றான். யூதர்களுடைய தேவாலயத்தை அருவருப்பாக்கினான். பரிசுத்த பணிமுட்டுக்களை எடுத்துச்சென்றான். யூதமார்க்கத்தின் ஆராதனையைத் தடை பண்ணினான். தன்னுடைய தெய்வத்தின் ஆராதனையை யூதருடைய தேவாலயத்தில் ஆரம்பித்து வைத்தான். யூதர்கள் அந்தியோகசிற்கு எதிராக நான்கு வருஷங்களாக கலகம் பண்ணினார்கள். (தானி 11:32-34). பெர்சியாவில் நடைபெற்ற யுத்தத்தில் அந்தியோகஸ் மரித்துப்போனான். இத்துடன் தானியேலின் தரிசனத்தில் வரலாற்றுப் பகுதி முடிவு பெறுகிறது (தானி 11:2-34). சீரியா தேசத்திலும் எகிப்து தேசத்திலும் மேலும் பல ராஜாக்கள் ஆட்சிபுரிந்தார்கள். கி.மு. 30 ஆவது வருஷத்தில் ரோமபேரரசார் இவ்விரு தேசங்களையும் கைப்பற்றினார்கள்.

"அரணான பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, அன்றாடபலியை நீக்கி, பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள்" - வருங்காலத்தில் அந்திக்கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்த குலைச்சலாக்குவான். அங்கு அன்றாட பலியை நீக்குவான். பாழாக்கும் அருவருப்பை தேவாலயத்தில் வைப்பான். அந்த சம்பவம் வேறு. இந்த சம்பவம் வேறு (தானி 8:9-14). அந்தியோகஸ் தேவாலயத்தில் பாழாக்குகிற அருவருப்பை வைத்து 2100 வருஷங்களுக்கு மேலாயிற்று.

(ஊ) உடன்படிக்கைக்கு துரோகிகள்

> தானி 11:32 உடன்படிக்கைக்குத் துரோகி களாயிருக்கிறவர்களை இச்சகப் பேச்சுகளினால் கள்ளமார்க்கத் தாராக்குவான்; தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள்.

> தானி 11:33 ஜனங்களில் அறிவாளிகள் அநேகருக்கு அறிவை உணர்த்துவார்கள்; அநேகநாள் மட்டும் பட்டயத்தினாலும் அக்கினியினாலும் சிறையிருப்பினாலும் கொள்ளையினாலும் விழுவார்கள்.

> தானி 11:34 இப்படி அவர்கள் விழுகையில் கொஞ்சம் ஒத்தாசையால் சகாயமடைவார்கள்; அப்பொழுது அநேகர் இச்சக வார்த்தைகளோடே அவர்களை ஒட்டிக்கொள்வார்கள்.

"தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள்" - யூதர்களில் பக்தி மார்க்கத்தாராக இருக்கிறவர்களைப் பற்றி தானி 11:32-33 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

"அநேகநாள்மட்டும் பட்டயத்தினாலும்....... விழுவார்கள்" - (தானி 11:30)

"இப்படி அவர்கள் விழுகையில் கொஞ்சம் ஒத்தாசையால் சகாயமடைவார்கள்" - அந்தியோகஸ் எப்பிபேனசிஸ்கு எதிராக யூதர்கள் கலகம்பண்ணுவார்கள். அவர்களுக்கு சிறிது ஒத்தாசையே கிடைக்கும்.

11. அறிவாளிகள் விழுவார்கள்

(1) தரிசனத்தின் காலம்

> தானி 11:35 அறிவாளிகளைப் புடமிடுகிறதற்கும், சுத்திகரிக் கிறதற்கும், வெண்மையாக்குகிறதற்கும் அவர்களில் சிலர் விழுவார்கள்; முடிவுகாலபரியந்தம் இப்படியிருக்கும்; குறித்தகாலம் வர இன்னும் நாள் செல்லும்.

"முடிவுகாலபரியந்தம் இப்படியிருக்கும்; குறித்தகாலம் வர இன்னும் நாள் செல்லும்" - கடைசி நாட்களில் இஸ்ரவேலின் மீது நடைபெறப்போகும் சம்பவங்களைக் காண்பிப்பதே இந்த தரிசனத்தின் முக்கியமான நோக்கமாகும் (தானி 10:14).

11 அதிகாரம்

(2) வடக்கு இராஜாவின் சுபாவம் - (7:25, 8:25)

தானி 11:36 ராஜா தனக்கு இஷ்டமான படிசெய்து, தன்னை உயர்த்தி, எந்த தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி, தேவாதிதேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான்; கோபம் தீருமட்டும் அவனுக்குக் கைகூடிவரும்; நிர்ணயிக்கப்பட்டது நடந்தேறும்.

தானி 11:37 அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாமலும், ஸ்திரீகளின் சிநேகத்தையும், எந்த தேவனையும் மதியாமலும், எல்லாவற்றிற்கும் தன்னைப் பெரியவனாக்கி,

தானி 11:38 அரண்களின் தேவனைத் தன் ஸ்தானத்திலே கனம் பண்ணி, தன் பிதாக்கள் அறியாத ஒரு தேவனைப் பொன்னினாலும், வெள்ளியினாலும், இரத்தினங்களினாலும், உச்சிதமான வஸ்துக்களினாலும் கனம் பண்ணுவான்.

தானி 11:39 அவன் அரணிப்பான கோட்டைகளுக்காகவும், அந்நிய தேவனுக்காகவும் செய்வது என்னவென்றால், அவைகளை மதிக்கிறவர்களுக்கு மகா கனமுண்டாக்கி, அவர்கள் அநேகரை ஆளும்படிச் செய்து, அவர்களுக்கு தேசத்தைக் கிரயத்துக்காகப் பங்கிடுவான்.

"ராஜா தனக்கு இஷ்டமானபடிசெய்து" - இந்த வசனத்திலிருந்து தானியேலின் புஸ்தகம் கடைசி வரையிலும் வருங்காலத்து அந்திக் கிறிஸ்துவைப் பற்றியும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு சீரியாவின் கடைசி ராஜாவோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

இயேசு கிறிஸ்து இரண்டாம் வருகை வரையிலும் அந்திக்கிறிஸ்து தனக்கு இஷ்டமானபடி செய்வான். அதன் பின்பு, அவனால் தனக்கு இஷ்டமானதைச் செய்ய முடியாது. (தானி 7:11; தானி 8:25; தானி 9:27; தானி 11:45; 2தெச 2:8; வெளி 19:20; வெளி 20:10).

"தன்னை உயர்த்தி, எந்த தேவனிலும் தன்னைப்பெரியவனாக்குவான்"-(தானி 7:25; தானி 8:25; 1தெச 2:4; வெளி 13).

"தேவாதிதேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான்" - (தானி 7:8,11,20,25; 2தெச 2:4; வெளி 13)

"கோபம் தீருமட்டும் அவனுக்குக் கைகூடிவரும்" - இந்த வாக்கியம் கர்த்தருடைய கோபத்தைக் குறிப்பிடுகிறது. முத்திரைகள், எக்காளங்கள், கலசங்கள், ஐயோக்கள் ஆகியவை மனுஷர்மீது வரும். தானியேலின் எழுபதாவது வாரத்தில் மனுஷருடைய பாவங்களின் நிமித்தமாகக் கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வரும். (வெளி 6:17; வெளி 15:1). இந்தக் காலத்தில் இஸ்ரவேல் தேசத்தார் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்புவார்கள். பூமியில் பாவத்தையும், கலகத்தையும் அழிப்பதற்காக இயேசு கிறிஸ்து மறுபடியும் வருவார். அப்போது இஸ்ரவேல் ஜனத்தாரோடு மற்ற ஜனத்தாரும் மனந்திரும்புவார்கள். (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 21:3-7). இந்த வசனங்களெல்லாம் இங்கு கூறப்பட்டிருக்கும் ராஜா இனிமேல் வரப்போகிறவன் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. கர்த்தர் பூமியில் பாவத்தை ஒழிக்கும்போது இந்தப் பூமியை ஆளுகை செய்யும் கடைசி ராஜா இவனாகவே இருப்பான். இவன் 2தெச 2:8; வெளி 13:18;வெளி 17:12-17; வெளி 19:11-21; தானி 7:25-27; தானி 8:25; தானி 9:27; தானி 11:36-45 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மிருகமாக இருப்பான். கர்த்தருடைய கோபத்தைப் பற்றி தானி 8:19; தானி 9:16; ஏசா 10:23,25 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளது.

கோபங்கொள்ளுதல் **(indignation) - זַעַם - zaw-am' - 2194**

வினைச்சொல் - வெறு, குரோதங்கொள், சினம்வை, கோபங் கொண்டிரு, சபி, சினங்கொள், அருவருக்கப்படு, வெறுத்துவிடு **(froth at the mouth; rage; fury)**

11 அதிகாரம்

தானி 10-12 ஆகிய அதிகாரங்களின் நோக்கம்

1. கடைசி நாட்களில் இஸ்ரவேலில் நடைபெறப் போகும் சம்பவங்களை விவரிப்பது (தானி 10:14)
2. அந்திக்கிறிஸ்து எங்கிருந்து வருவான் என்பதை வெளிப்படுத்துவது (தானி 11:2-45)
3. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக இஸ்ரவேல் தேசத்தை ஒடுக்கும் புறஜாதி தேசங்களைப் பற்றி முழுவதுமாக வெளிப்படுத்துவது (தானி 2:37-45; தானி 7:17-27; தானி 8:20-25)
4. சின்னக்கொம்பு அல்லது அந்திக் கிறிஸ்துவைப் பற்றி அதிகமான செய்தியை அறிவிப்பது (தானி 11:36-12:7)
5. வடதிசையின் ராஜாவே அந்திக்கிறிஸ்து என்பதை அறிவிப்பது (தானி 11:36-45).
6. திருத்தப்பட்ட ரோமப்பேரரசையும் திருத்தப்பட்ட கிரேக்க பேரரசையும் பற்றி முழுவதுமாக வெளிப்படுத்துவது (தானி 2:40-43; தானி 7:23-24)
7. அந்திக்கிறிஸ்து எங்கிருந்து வருவான் என்பதைக் குறிப்பிட்டு அறிவிப்பது. அவன் சீரியா தேசத்திலிருந்து வருவான் (தானி 7:23-24; தானி 8:9-14,20-25; தானி 11:36-45)
8. அந்திக்கிறிஸ்து எப்பொழுது வருவான். ஏன் வருவான் எப்படி வருவான் என்பதை விவரிப்பது (தானி 7:23-24; தானி 8:9-14, 20-25; தானி 9:27; தானி 11:36-45)
9. கடைசி நாளின் யுத்தங்களைப் பற்றி முழுவதுமாக வெளிப்படுத்துவது (தானி 2:40-45; தானி 7:23-24; தானி 8:9-14,20-25; தானி 11:40-45)
10. இக்காலத்து உலகிலுள்ள இராஜ்யங்களில் சாத்தானின் அதிகாரங்கள் செயல்படுவதைக் காண்பிப்பது (தானி 10:12-21; தானி 11:1; தானி 12:1)

அந்திக்கிறிஸ்து - வடதிசை ராஜா

தானி 11:36-12:13 ஆகிய வசனங்களில் அந்திக்கிறிஸ்து கடைசி நாட்களில் வடதிசை ராஜாவாக இருப்பான் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. இது சீரிய தேசத்தைக் குறிக்கும். தானியேலின் தரிசனத்தினுடைய நோக்கம் கடைசி நாட்களில் யூத ஜனங்களுக்கு சம்பவிப்பதை தானியேலுக்குத் தெரியப் பண்ணுவதாகும் (தானி 10:14). சீரியாவின் ராஜாவாகிய அந்தியோகஸ் எப்பிபேனஸ் அந்திக்கிறிஸ்துவைப் போல செயல்பட்டான். ஆயினும் அவன் அந்திக்கிறிஸ்து அல்ல (தானி 11:21-34). அந்திக்கிறிஸ்து கிரேக்கு தேசத்தின் நான்கு பிரிவுகளில் ஒரு பிரிவான சீரிய தேசத்திலிருந்து வருவான்.

தானி 2, தானி 7 ஆகிய அதிகாரங்களில் பழைய ரோமப்பேரரசிற்குள் பத்து இராஜ்ஜியங்கள் ஸ்தாபிக்கப்படப் போவதைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இந்த பத்து இராஜ்யங்களில் ஒன்றிலிருந்து அந்திக்கிறிஸ்து வருவான். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அந்திக்கிறிஸ்து இந்த தேசங்களை கிறிஸ்துவிற்கு எதிராக எழுப்புவான். தானி 8ஆவது அதிகாரத்தில் தானி 2, தானி 7 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் செய்திகளோடு கூடுதலான செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. தானியேலின் கடைசி தரிசனத்தில் (தானி 10:1-12:13). அந்திக்கிறிஸ்து சீரிய தேசத்திலிருந்து வருவான் என்று குறிப்பிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சீரிய தேசம் வருங்கால கிரேக்கப் பேரரசில் ஏற்படும் நான்கு பிரிவுகளில் ஒரு பிரிவாக இருக்கும். தானியேலின் தரிசனத்தில் கடைசி நாட்களைப் பற்றியும், மேசியாவின் ஆளுகையைப்பற்றியும் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. தானி 11:35-12:13 ஆகிய வசனங்களில் அந்திக்கிறிஸ்துவைப் பற்றிய கடைசி விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

11 அதிகாரம்

வருங்கால அந்திக்கிறிஸ்து

வருங்கால அந்திக் கிறிஸ்துவின் மறுபெயர்கள் - சின்னக்கொம்பு, வடதிசை ராஜா, பாவத்தின் மனுஷன், வெளிப்படுத்தின விசேஷத்தின் மிருகம். அந்திக்கிறிஸ்துவைப் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் செய்திகளின் விவரம் வருமாறு:

1. இவன் தனக்கு இஷ்டமானபடியெல்லாம் செய்வான். (தானி 11:36=தானி 7:25;தானி 8:24; 2தெச 2:10-12; வெளி 13:5-7).

2. எந்தத் தேவனிலும் தன்னை பெரியவனாக்கி, தன்னை உயர்த்துவான். (தானி 11:36,37= தானி 7:25; தானி 8:25; 2தெச 2:4; வெளி 13).

3. தேவாதிதேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான். (தானி 11:36= தானி 7:8,11,20,25; வெளி 13:1-7; 2தெச 2:4).

4. கோபம் தீருமட்டும் அவனுக்குக் கைகூடிவரும்; நிர்ணயிக்கப்பட்டது நடந்தேறும். (தானி 8:19; வெளி 6:19, தானி11:36=தானி 8:9-11,21,22,25-27; 2தெச 2:8; வெளி 19:11-21).

5. அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதிக்கமாட்டான். (தானி 11:37= தானி 7:25;தானி8:25; வெளி 13:1-7; 2தெச 2:4; யோவான் 5:43).

6. தன் பிதாக்கள் அறியாத ஒரு தேவனைக் கனம்பண்ணுவான். (தானி 11:38-39= தானி 8:24; 2தெச 2:8; வெளி 13:1-4).

7. முடிவுகாலத்தில் அவன் தேசங்களுக்குள் பிரவேசித்து, அவைகளைப் பிரவாகித்துக் கடந்து போவான். (தானி 11:40-42= தானி7:8,11-12,20-26;தானி 11:23-25; 2தெச 2:8; வெளி 13:1-10; வெளி 17:8-17).

8. சமுத்திரங்களுக்கு இடையிலுள்ள சிங்காரமான பரிசுத்த பர்வதத்தண்டையிலே தன் அரமனையாகிய கூடாரங்களைப் போடுவான் (தானி 11:45= தானி 9:27; 2தெச 2:4; வெளி 11:1-2; வெளி 12:1-17; வெளி 13:1-18).

9. இவனால் யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும் (தானி 12:1 = தானி 7:21-27; தானி 8:19, 24-25; தானி 9:27; மத் 24:15-23; 2தெச 2:8-12; வெளி 13:1-18; வெளி 15:2-4; வெளி 20:1-6).

10. ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமளவும் எல்லோரும் இஸ்ரவேல்மீது யுத்தம் பண்ணுவார்கள். (தானி 12:7= தானி 7:21-22,25-26; தானி 8:24; வெளி 13; மத் 24:15-23).

11. இவன் அன்றாடபலியை நீக்கிப்போட்டு பாழாக்கும் அருவருப்பை ஸ்தாபிப்பான். (தானி 12:11 = தானி 7:25; தானி 8:24-25; மத் 24:15; 2தெச 2:4; வெளி 13).

12. அவன் முடிவடைவான். (தானி 11:45= தானி7:8-11,21-22,25-27; தானி 8:25; 2தெச 2:8; வெளி 19:11-21; வெளி 20:10).

கிரேக்கப் பேரரசின் நான்கு பிரிவுகளில் ஒன்றிலிருந்து சின்னக்கொம்பு வருவதைத் தானியேல்காண்கிறான். (தானி 8:8-9,21-23). இது அவர்களுடைய ராஜ்யபாரத்தின் கடைசி காலத்தில் நடைபெறும். இந்த ராஜ்யங்கள் இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை. (தானி 8:23). கிரேக்கு தேசத்தின் இந்த நான்கு பிரிவுகள் தற்காலத்தில் கிரேக்கு, துருக்கி, சீரியா, எகிப்து என்று அழைக்கப்படுகிறது. தானி 7 ஆவது அதிகாரத்தில் அந்திக்கிறிஸ்துவின் வருகையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ரோமப்பேரரசிற்குள்ள பத்து ராஜ்யங்களிலிருந்து அந்திக்கிறிஸ்து வருவான். தானி 8 ஆவது அதிகாரத்தில் நான்கு ராஜ்யங்களில் ஒன்றிலிருந்து அந்திக்கிறிஸ்து வருவான் என்று கூறப்பட்டுள்ளது.

11 அதிகாரம்

அந்திக்கிறிஸ்துவும், தேவர்களும்

1. அந்திக்கிறிஸ்து தன் பிதாக்களின் தேவர்களை மதிக்கமாட்டான். (தானி 11:37; யோவான் 5:43).
2. ஸ்திரீகள் சிநேகிக்கும் தேவர்களையும் மதிக்கமாட்டான்.
3. எந்த விக்கிரக தேவனையும் மதிக்க மாட்டான். (தானி 11:37).
4. எல்லா தெய்வங்களுக்கும் (மெய்யான தேவனுக்கும், விக்கிரகங்களுக்கும்) தன்னைப் பெரியவனாக்குவான். (தானி 11:36-37; 2தெச 2:4; வெளி 13).
5. அரண்களின் தேவனைத் தன் ஸ்தானத்திலே கனம்பண்ணுவான். (தானி 11:38).
6. தன் பிதாக்கள் அறியாத ஒரு தேவனைக் கனம்பண்ணுவான். (தானி 11:38).
7. அந்நிய தேவனைக் கனம் பண்ணுவான். (தானி 11:38-39; 2தெச 2:4; வெளி 13:1-18).

"அரண்களின் தேவனைத் தன் ஸ்தானத்திலே கனம்பண்ணி" - தன்னுடைய பிதாக்களின் தேவனைக் கனம் பண்ணுவதற்குப் பதிலாக இவன் பொன்னினாலும், வெள்ளியினாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களைக் கனம்பண்ணுவான். தன்னுடைய அரண்களில் காணப்படும் பொக்கிஷங்களைக் கனம்பண்ணுவான். (தானி 11:38-39).

"அவர்கள் அநேகரை ஆளும்படிச் செய்து" - இந்த வாக்கியம் இவன் ஆராதிக்கும் அரண்களின் தேவனையும், அந்நிய தேவனையும் குறிக்கும். (தானி 11:38).

"அவர்களுக்கு தேசத்தைக் கிரயத்துக்காகப் பங்கிடுவான்" - மற்ற தேசங்களிலிருந்து கிடைத்த கொள்ளைப்பொருட்களைத் தாராளமாகப் பங்கிடுவான். இக்காரியத்தில் இவன் அந்தியோக்கஸ் எப்பிபேனசைப்போல செயல்படுகிறான். (தானி 11:24).

(3) **கடைசி காலத்தில் சீரியாவிற்கும் (வடக்கு) எகிப்திற்கும் (தெற்கு) இடையில் யுத்தம் - அந்திக்கிறிஸ்து (சீரியா, வடக்கு) எகிப்தின்மீது (தெற்கு) வெற்றி கொள்வான் - தானியேலின் எழுபதாவது வாரத்தின் நடுப்பாகம் வரையிலும் பல தேசங்களை வெற்றி கொள்வான் - அப்போது எட்டாவது அல்லது பிந்தைய கிரேக்க சாம்ராஜ்ஜியம் உருவாகும்** - (7:24; 8:23-25; வெளி 11:7; 13:1-18; 16:10; 17:3,8-14,16-17; 19:19-21)

தானி 11:40 முடிவு காலத்திலோ வென்றால், தென்றிசை ராஜா அவனோடே முட்டுக்கு நிற்பான்; வடதிசை ராஜாவும் இரதங்களோடும் குதிரைவீரர்களோடும் அநேகம் கப்பல்களோடும் சூறைக்காற்று போல் அவனுக்கு விரோதமாய் வருவான்; அவன் தேசங்களுக்குள் பிரவேசித்து, அவைகளைப் பிரவாகித்துக் கடந்துபோவான்.

தானி 11:41 அவன் சிங்காரமான தேசத்திலும் வருவான்; அப்பொழுது அநேக தேசங்கள் கவிழ்க்கப்படும்; ஆனாலும் ஏதோமும், மோவாபும், அம்மோன் புத்திரரில் பிரதானமானவர்களும் அவன் கைக்குத் தப்பிப்போவார்கள்.

தானி 11:42 அவன் தேசங்களின்மேல் தன் கையை நீட்டுவான்; எகிப்துதேசம் தப்புவதில்லை.

தானி 11:43 எகிப்தினுடைய பொன்னும் வெள்ளியுமான ஐசுவரியங்களையும் உச்சிதமான எல்லா வஸ்துக்களையும் ஆண்டுகொள்ளுவான்; லீபியரும் எத்தியோப்பியரும் அவனுக்குப் பின்செல்லுவார்கள்.

தானியேல் - தொகுப்புரை

11 அதிகாரம்

"முடிவுகாலத்திலோவென்றால், தென்றிசை ராஜா அவனோடே முட்டுக்கு நிற்பான்" - இந்த வாக்கியம் இந்தத் தரிசனம் நிறைவேறும் காலத்தைக் குறிப்பிடுகிறது. புறஜாதி தேசங்களின் ஆளுகைக்காலத்தின் முடிவில் இந்தச் சம்பவம் நடைபெறும். (தானி 11:40; தானி 8:19; தானி 9:27; தானி 11:35,45; தானி 12:1,7-13). புறஜாதி தேசங்களின் ராஜாக்களைப் பற்றி தானி 2 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் சிலையும், தானி 7, தானி 8; வெளி 13; வெளி 17:8-17 ஆகிய அதிகாரங்களிலும், வசனங்களிலும் கூறப்பட்டிருக்கும் மிருகங்களும் விளக்குகின்றன. முடிவு காலத்தில் தென்றிசை ராஜா (எகிப்து) அவனோடே (வடதிசை ராஜா - சீரியா) முட்டுக்கு நிற்பான். வடதிசை ராஜா தன் சேனைகளோடு வந்து பல தேசங்களைக் கைப்பற்றுவான். (தானி 11:40). இந்த வசனத்தில் "தேசங்கள்" என்பது பழைய கிரேக்கப் பேரரசின் பிரிவுகளைக் குறிக்கும். இந்தத் தேசங்களைப் பற்றி தானி 11 ஆவது அதிகாரத்திலும், தானி 8:8-9,20-23 ஆகிய வசனங்களிலும் கூறப்பட்டுள்ளது.

"வடதிசை ராஜா" - இது சின்னக்கொம்பு அல்லது அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கும். புதிய ரோமப்பேரரசின் பத்துக் கொம்பு களிலிருந்து அந்திக்கிறிஸ்து வெளி வருவான். தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதல் பாதியான மூன்றரை வருஷங்களில் அந்திக்கிறிஸ்து மற்ற தேசங்கள்மீது அதிகாரம் செலுத்துவான். அவற்றில் மூன்று ராஜ்யங்களைக் கைப்பற்றுவான். (தானி 7:23,24). மற்ற ராஜ்யங்கள் யுத்தமில்லாமல் அந்திக் கிறிஸ்துவிற்குக்கட்டுப்படும்.(வெளி 17:12-17). அந்திக்கிறிஸ்து சீரியா தேசத்திலிருந்து வருவான். கிரேக்கப் பேரரசின் நான்கு பிரிவுகளில் சீரிய தேசமும் ஒன்றாக இருக்கும். (தானி 8:9,23; தானி 11:36-45) மற்ற மூன்று பிரிவுகளான கிரேக்கு, துருக்கி, எகிப்து ஆகிய ராஜ்யங்களை அந்திக் கிறிஸ்து அகற்றிப் போடுவான். இவ்வாறாக அவன் பழைய கிரேக்கப் பேரரசைப் புதுப்பிப்பான். இது தானி 7:6 ஆவது வசனத்தில் சிவிங்கி என்று அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது. (வெளி 13:1-2).

பழைய ரோமப்பேரரசின் மற்ற ஆறு ராஜ்யங்களும் அந்திக்கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படியும். இந்தத் தேசங்களெல்லாம் வடக்கிலும், கிழக்கிலும் யுத்தம் பண்ணுவதற்கு அந்திக்கிறிஸ்துவைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொள்ளும்.(தானி 11:44; வெளி 17:12-17).

"அவன் சிங்காரமான தேசத்திலும் வருவான்" - அந்திக்கிறிஸ்து சீரியாவிலிருந்து வந்து, கிரேக்கு, துருக்கி, எகிப்து ஆகிய தேசங்களைக் கைப்பற்றிய பின்பு, அவன் யூதரோடு உறுதிபண்ணியிருந்த உடன்படிக்கையை முறித்துப் போடுவான். (தானி 9:27) பாலஸ்தீன தேசத்தையும், பிந்திய ரோமப்பேரரசின் மற்ற ஆறு ராஜ்யங்களையும் அந்திக்கிறிஸ்து பிடித்துக் கொள்வான்.

"அவன் கைக்குத் தப்பிப்போவார்கள்" - அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யம் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டது. மூன்று ராஜ்யங்கள் அந்திக்கிறிஸ்துவின் கைக்குத் தப்பிப்போகும். இவை அந்திக்கிறிஸ்துவின் எல்லைப் பகுதியில் இருக்கிறபோதிலும் அவன் கையிலிருந்து தப்பிப் போய்விடும்.

"அவன் தேசங்களின்மேல் தன் கையை நீட்டுவான்" - இங்கு கூறப்பட்டிருக்கும் தேசங்கள் அவன் அடிமைப்படுத்தும் மூன்று ராஜ்யங்களாக இருக்கலாம். (தானி 7:24) இவை தவிர, இவை அந்திக்கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படியும், பிந்திய ரோமப்பேரரசின் பத்து ராஜ்யங்களாகவும் இருக்கலாம். (வெளி 17:12-17) இவை லிபியாவாகவும், எத்தியோப்பியாவாகவும் இருக்கலாம். (தானி 11:43).

"எகிப்துதேசம் தப்புவதில்லை" - தானி 11:5-34 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கும் யுத்தம் சீரியாவிற்கும், எகிப்திற்கும் இடையே நடைபெறுகிறது. தானி 11:40-43 ஆகிய வசனங்களில் கடைசி நாட்களில் நடைபெறும் யுத்தம், சீரியாவிற்கும், எகிப்திற்கும் இடையே நடைபெறுகிறது. எகிப்து என்பது தென்றிசை தேசத்தையும், சீரியா என்பது வடதிசை தேசத்தையும் குறிக்கும். இதனால் அந்திக்கிறிஸ்து சீரியாவிலிருந்து வருவான் என்பது உறுதியாகிறது. (தானி 7:8,19-27; தானி 8:9-14,22-25; தானி 9:27; தானி 11:40-45; தானி 12:1-7; வெளி 6:1-8; வெளி 13:1-18; வெளி 16:13-16; வெளி 17:8-17; வெளி 19:19-21)

11 அதிகாரம்

(4) பிந்தைய ரோம சாம்ராஜ்ஜியத்தின் பத்து இராஜ்ஜியங்களை வெற்றி பெற்று அடிமைப்படுத்திய பின்பு வடக்கிலும் கிழக்கிலும் புதிய துயரங்கள் உண்டாகும் - மூன்றரை வருஷங்களின் இறுதியில் அந்திக்கிறிஸ்து வெற்றி பெறுவான் - இஸ்ரவேலர்களை அழிப்பதற்கு அவர்களைப் பாலஸ்தீன தேசத்திற்கு அழைத்து வருவான் - அவர்களோடு தன் உடன்படிக்கையை முறித்துக் கொண்டபின்பு இதுவே அந்திக் கிறிஸ்துவின் நோக்கமாகும் - சிங்காரமான பரிசுத்த பர்வதத் தண்டையிலே தன் அரமனையாகிய கூடாரங்களைப் போடுவான் - (வசனம் 45; 2தெச 2:3-4; மத் 24:15)

தானி 11:44 ஆனாலும் கிழக்கிலும் வடக்கிலும் இருந்துவரும் செய்திகள் அவனைக் கலங்கப் பண்ணும்; அப்பொழுது அவன் அநேகரை அழிக்கவும் சங்காரம் பண்ணவும் மகா உக்கிரத்தோடே புறப்பட்டுப்போய்,

வருங்கால யுத்தங்கள்

1. முதலாவது யுத்தம் பழைய ரோமப் பேரரசிற்குள் நடைபெறும். இதன் மூலமாக இந்தப் பேரரசிற்குள் பத்து ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்படும். (தானி 7:23-24) இந்தப் பத்து ராஜ்யங்களும், பிந்திய ரோமப்பேரரசாக இருக்கும். இவை தானி 2 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் பத்துக் கால்விரல்களாகவும், தானி 7, வெளி 12, வெளி 13, வெளி 17 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் சின்னக் கொம்பாகவும் இருக்கும்.

2. இரண்டாவது யுத்தம் பத்து ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, பிந்திய ரோமப்பேரரசு சிறிது காலம் தொடர்ந்த பின்பு நடைபெறும். (வெளி 17:10). சின்னக்கொம்பு அல்லது வருங்கால அந்திக்கிறிஸ்து இந்தப் பத்து ராஜ்யங்களில் ஒன்றிலிருந்து வருவான். இவற்றிலிருந்து வெளி 17:8-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் எட்டாவது ராஜ்யத்தை ஸ்தாபிப்பான். இரண்டாவது யுத்தத்தில் பத்து ராஜ்யங்களில் மூன்று ராஜ்யங்களை அகற்றுவான். அதன் பின்பு மற்ற ராஜ்யங்கள் அந்திக்கிறிஸ்துவிற்குத் தானாகவே, யுத்தமில்லாமல் கீழ்ப்படியும். (தானி 7:23-24; வெளி 17:12-17).

3. மூன்றாவது யுத்தம் அந்திக்கிறிஸ்து பத்து ராஜ்யங்களின் அதிகாரங்களைக் கைப்பற்றிய பின்பு நடைபெறும். இது தானியேலின் எழுபதாவது வாரத்தின் பாதியில் நடைபெறும். இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு மூன்றரை வருஷங்களுக்கு முன்பு நடைபெறும். (வெளி 13:5). அந்திக்கிறிஸ்துவின் கீழுள்ள பத்து ராஜ்யங்களும் இந்த யுத்தத்தில் பங்கு பெறும். இவர்கள் அந்திக் கிறிஸ்துவோடு சேர்ந்து, பழைய ரோமப்பேரரசின் வட திசையிலுள்ள தேசங்கள் மீதும், கீழ்திசையிலுள்ள தேசங்கள் மீதும் யுத்தம் பண்ணுவார்கள். (தானி 11:44). அந்திக்கிறிஸ்து இந்த தேசங்களை ஜெயித்த பின்பு, அவன் எருசலேமிற்கு நேராக யுத்தம் பண்ணப் புறப்படுவான். அப்போது இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்து அந்திக் கிறிஸ்துவையும், அவனுடைய சேனையையும் தோற்கடிப்பார். (எசே 38-39; சக 14, வெளி 19:11-21).

கலங்கப்பண்ணுதல் **(trouble) - בָּהַל - baw-hal' - 926**

வினைச்சொல் - பயமுறுத்து **(to tremble inwardly; palpitate; be alarmed; agitated) to hasten** (தானி 11:44; ஆதி 45:3; 1சாமு 28:21; 2சாமு 4:1; 2நாளா 32:18; யோபு 4:5; யோபு 23:15; சங் 30:7; சங் 48:5; சங் 83:17; சங் 90:7; சங் 104:29).

11 அதிகாரம்

உக்கிரகோபம் (fury) - חֵמָה - khem-aw', kham-aw' - 2528

பெ.பெ.சொ. - கடுங்கோபம், உக்கிரகோபம் (heat; fury)

அநேகர் (utterly) - כָּלִיל - kaw-leel' - 3632

பெயரடை - முழுவதுமான, முற்றிலுமான, சர்வாங்கமான, பூரண, குறைவற்ற (complete; wholly consume)

(5) **எருசலேமிலுள்ள யூதர்களின் தேவாலயத்தில் தன் சிங்காசனத்தை வைப்பான்** - *(2தெச 2:4; 7:25; 8:25)*

தானி 11:45 சமுத்திரங்களுக்கு இடையிலுள்ள சிங்காரமான பரிசுத்த பர்வதத்தண்டையிலே தன் அரமனையாகிய கூடாரங்களைப் போடுவான்; ஆனாலும் அவனுக்கு ஒத்தாசை பண்ணுவாரில்லாமல், அவன் முடிவடைவான்.

"சமுத்திரங்களுக்கு இடையிலுள்ள சிங்காரமான பரிசுத்த பர்வதத்தண்டையிலே தன் அரமனையாகிய கூடாரங்களைப் போடுவான்" - அந்திக்கிறிஸ்து அல்லது வடதிசையின் (சீரியா) ராஜா தன்னுடைய தலைநகரத்தை எருசலேமிலுள்ள யூதருடைய தேவாலயத்தில் ஸ்தாபிப்பான். இது சவக்கடலுக்கும், மத்திய தரைக்கடலுக்கும் நடுவிலுள்ள சிங்காரமான பரிசுத்த பர்வதமாகிய மோரியா மலையில் அமைந்திருக்கிறது. ஆயினும் அந்திக் கிறிஸ்துவின் ஆளுகை அர்மெகதோனில் முடிவுபெறும். (தானி 7:11,26-27; தானி 8:25; தானி 9:27; 2தெச 2:8; வெளி 19:19-21).

"அவனுக்கு ஒத்தாசை பண்ணுவாரில்லாமல், அவன் முடிவடைவான்" - அந்திக்கிறிஸ்து எரிகிற அக்கினிக்கடலில் தள்ளப்படுவான். (தானி 7:11; ஏசா 11:4; வெளி 19:20; வெளி 20:10). அந்திக்கிறிஸ்துவின் சேனையில் ஆறில் ஒரு பகுதியைத் தவிர, மற்றவர்கள் அழிக்கப் படுவார்கள். (எசே 39:2). அந்திக் கிறிஸ்துவிற்கு உதவி புரிந்த சாத்தானும், அவனுடைய தூதர்களும், பிசாசுகளும் பாதாளத்தில் தள்ளப்படுவார்கள். (வெளி 20:1-3; ஏசா 24:21-22) அந்திக் கிறிஸ்துவிற்கு யாரும் உதவிபண்ணுவதற்கு ஆளில்லாமல் தனித்து விடப்பட்டிருப்பான். சாதாரண மனுஷனைப் போல மரித்துப் போவான். (வெளி 19:20).

12 அதிகாரம்

(6) எழுபது வாரத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் மகா உபத்திரவம் - 1,44,000 பேர்கள் விடுவிக்கப் படுவார்கள் - (வெளி 7:1-8; 12:5; 14:1-5)

தானி 12:1 உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான் யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர் களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்.

"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதி" - மிகாவேல் இஸ்ரவேலின் பெரிய அதிபதியாக இங்கு கூறப்பட்டிருக்கிறான். (தானி 12:1; தானி 10:21; வெளி 12:7-12).

"யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" - மத் 24:21 ஆவது வசனத்தில் கூறப் பட்டிருக்கும் காலமும், இக்காலமும் ஒன்றாகும்.

"அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்" - 1,44,000 யூதர்களும் ஆண்பிள்ளையாக **(the man-child)** மாற்றப்படுவார்கள். (வெளி 12:5) இதன் பின்பு இவர்கள் பரலோகத்தில் காணப்படுகிறார்கள்.

"மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்" - அக்காலத்தில் நடைபெறும் முக்கியமான சம்பவங்களின் விவரம்:

1. அக்காலத்தில் அந்திக்கிறிஸ்து சமுத்திரங்களுக்கு இடையிலுள்ள சிங்காரமான பரிசுத்த பர்வதத்தண்டையிலே தன் அரமனையாகிய கூடாரங்களைப் போடுவான் (தானி 11:45; 2தெச 2:4; வெளி 13).

2. பெரிய அதிபதி எழும்புவான். சாத்தானையும், அவனுடைய தூதர்களையும் பூமியில் மனுஷர் மத்தியில் தள்ளிவிடுவான். (தானி 12:1; வெளி 12:7-12).

3. தானியேலின் எழுபதாவது வாரத்தின் நடுவில் மகா உபத்திரவக்காலம் ஆரம்பமாகும். இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு மூன்றரை வருஷங்களுக்கு முன்பு நடைபெறும். (தானி 12:1; தானி 8:24-25; தானி 9:27; எரே 30:6-7; மத் 24:15-22; வெளி 10:1-19:21).

4. அக்காலத்தில் தானியேலின் ஜனங்கள் அனைவரும் (1,44,000 பேர்) விடுவிக்கப் படுவார்கள் (மாற்றப்படுவார்கள் - **translated**). இவர்களுடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கும். (தானி 12:1; ஏசா 66:7-8; வெளி 7:1-8; வெளி14:1-5) ஜீவபுஸ்தகத்தைப் பற்றிய விவரம் தானி 12:1; யாத் 32:32-33; சங் 56:8; சங் 69:28; லூக்கா 10:20; வெளி 3:5; வெளி 13:8; வெளி 20:12,15; வெளி 22:18-19 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது.

"ஆபத்துக்காலம்" - இது உபத்திரவக்காலம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்தக் காலத்தைப் பற்றிய விவரம் வருமாறு:

1. உபத்திரவம் வரும் காலமும், அதன் கால அளவும்

2. உபத்திரவக்காலத்தின் பிரிவுகள்

3. உபத்திரவக்காலத்தின் நோக்கம்

12 அதிகாரம்

4. உபத்திரவக்காலத்தின் தன்மை

5. உபத்திரவக்காலம் உலகம் முழுவதும் இருக்குமா

உபத்திரவம் வரும் காலமும், அதன் கால அளவும்

தானியேலின் எழுபதாவது வாரம் ஆரம்பமாகும் முன்பு இஸ்ரவேலுக்கு உபத்திரவக்காலம் வரும். எவ்வளவு காலத்திற்கு முன்பு என்று உறுதியாகத் தெரியவில்லை. இந்த வாரத்தின் ஆரம்பத்தில் அந்திக்கிறிஸ்து எழும்புவான். இஸ்ரவேல் தேசம் பிந்திய ரோமப்பேரரசின் பத்து ராஜ்யங்கள் மூலமாக உபத்திரவங்களை அனுபவிக்கும். அந்திக்கிறிஸ்து வரும்போது, அவன் இஸ்ரவேலோடு ஏழு வருஷ உடன்படிக்கையை உறுதிபண்ணுவான். அவர்கள் ஒரு தேசமாகத் தொடர்ந்து ஸ்தாபிக்கப் படுவதற்குப் பாதுகாப்பு தருவதாக அந்திக்கிறிஸ்து உறுதிகூறுவான். (தானி 9:27). யூதர்கள் இரகசிய பாபிலோனுக்கு (Mystery Babylon) கீழ்ப்படியமாட்டார்கள். இதனால் யூதர்களுக்கு உபத்திரவம் உண்டாகும். இக்காலத்தில் யூதர்கள் எல்லா தேசத்தாராலும் வெறுக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். இது வருத்தங்களின் ஆரம்பகாலம். இக்காலத்தில் அந்திக்கிறிஸ்து எல்லா தேசங்களையும் கைப்பற்ற முயற்சி பண்ணுவான். (மத் 24:4-12). தேசங்களைக் கைப்பற்றுவதற்கு அந்திக் கிறிஸ்துவிற்கு யூதருடைய பொருளாதார உதவி தேவைப்படும். இதற்காக அவன் யூதரோடு ஏழு வருஷ உடன்படிக்கை செய்து கொள்வான். ஆகையினால் உபத்திரவக்காலம் என்பது தானியேலின் எழுபதாவது வாரம் முழுவதுமே உபத்திரவமாக இருக்கும். (தானி 9:27). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது உபத்திரவக்காலம் முடிவு பெறும். (மத் 24:29-31; வெளி 19:11-21).

உபத்திரவக்காலத்தின் பிரிவுகள்

உபத்திரவக்காலத்தில் இரண்டு பிரிவுகள் உள்ளன. அவையாவன:

1. தானியேலின் எழுபதாவது வாரத்தில் முதல் மூன்றரை வருஷங்களில் முதலாவது பிரிவு வருகிறது. இக்காலத்தில் உபத்திரவம் குறைவாக இருக்கும். இரண்டாவது மூன்றரை வருஷத்தின் போது உபத்திரவம் மிகவும் அதிகமாக இருக்கும். முதலாவது காலத்தில் அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலுக்குப் பாதுகாப்பாக இருப்பான். முதல் மூன்றரை வருஷங்களில் இஸ்ரவேல் தேசத்தாரை இரகசிய பாபிலோனும், பத்து தேசத்தாரும்உபத்திரவப்படுத்துவார்கள். இந்தப் பிரிவின் மூலமாக வெளி 6:1-9:21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் நிறைவேறுகிறது. ஆறாவது முத்திரையின் நியாயத்தீர்ப்புகளும், முதல் ஆறு எக்காளங்களின் நியாயத் தீர்ப்புகளும்இக்காலத்தில் நடைபெறும்.

2. தானியேலின் எழுபதாவது வாரத்தின் கடைசி மூன்றரை வருஷத்தில் உபத்திரவக் காலத்தின் இரண்டாவது பிரிவு வருகிறது. இது மகா உபத்திரவக்காலம் என அழைக்கப் படுகிறது. ஏனெனில் முதல் மூன்றரை வருஷங்களில் இருந்த உபத்திரவங்களை விட இந்த மூன்றரை வருஷங்களில் இஸ்ரவேல் மீது உபத்திரவம் அதிகமாக இருக்கும். முதல் மூன்றரை வருஷங்களுக்கு அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலுக்குப் பாதுகாப்பாக இருப்பான். இந்த வாரத்தின் நடுவில் அவன் இஸ்ரவேலோடு செய்து கொண்ட உடன்படிக்கையை முறித்துப் போடுவான். அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலுக்குச் சத்துருவாக மாறுவான். இஸ்ரவேலை அழிக்க முயற்சி பண்ணுவான். அந்திக் கிறிஸ்துவின் இந்தச் செய்கையினால் ஏழு கலசங்களின் நியாயத்தீர்ப்புகள் கடைசி மூன்றரை வருஷங்களில் உண்டாகும். இந்த உபத்திரவக் காலத்தில் வெளி 10:1-19:21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் நிறைவேறும். இயேசு, தானியேல், எரேமியா ஆகியோர் இஸ்ரவேலுக்கு வரும் இந்த உபத்திரவத்தைப் பற்றிக் குறிப் பிட்டிருக்கிறார்கள். (தானி 12:1; எரே 30:4-11; மத் 24:21,22; வெளி 11:1,2; வெளி 12:14-17; வெளி 13:5-7).

12 அதிகாரம்

உபத்திரவக்காலத்தின் நோக்கம்

1. இஸ்ரவேல் தேசத்தாரைச் சுத்திகரிப்பதற்கு. இஸ்ரவேல் கோத்திரத்தாரின் முற்பிதாக்களோடு கர்த்தர் செய்து கொண்ட நித்திய உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக. இஸ்ரவேல் தேசத்தாரை அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அழைத்து வருவதற்காக. (ஏசா 2:5-22; ஏசா 16:1-5; ஏசா 24:1-25:12; ஏசா 26:20,21; எசே 20:33,34; எசே 22:17-22; ரோமர் 11:25-29).

2. இஸ்ரவேல் புத்திரரின் எல்லாக் கலகங்களையும் ஒடுக்கி, அவர்களைச் சுத்திகரிப்பதற்காக. (எசே 20:33,4; எசே 22:17:22; சக 13:8,9; மல் 3:3,4).

3. புதிய உடன்படிக்கைக்கு இஸ்ரவேல் புத்திரரை அழைத்து வருவதற்காக. (எசே 20:33,34; எசே 36:24-28; எரே 30:3-11; சக 12:10-13:9; மல் 4:3,4).

4. மேசியாவை மறுதலித்ததற்காக இஸ்ரவேல் புத்திரரை நியாயம் தீர்த்து, அவர்களைத் தண்டிப்பதற்காக. இயேசு கிறிஸ்து இரண்டாம் முறை இந்தப் பூமிக்கு வரும்போது இஸ்ரவேல் புத்திரர் அவரை மனப்பூர்வமாக அங்கிகரிப்பதற்காக. (எசே 20:33,34; சக 12:10-13:9; சக 14:1-15; மத் 24:15-31).

5. இஸ்ரவேல் தேசத்தை உபத்திரவப் படுத்திய தேசங்களை நியாயந் தீர்ப்பதற்காக. (ஏசா 63:1-6; யோவே 3; வெளி 6:1-19:21).

6. இஸ்ரவேல் தேசத்தாரை முழுமையாக மனந்திருந்த வைப்பதற்காக. (சக 12:10-13:9; ரோமர் 11:26-29; மத் 23:39).

7. தானி 9:24-27; வெளி 6:1-19:21; மத் 24:15,29 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றுவதற்காக.

8. இஸ்ரவேல் தேசத்தாரை ஏதோம், மோவாப் ஆகியவற்றின் வனாந்தரங் களுக்குத் தப்பியோடச் செய்வதற்காக. இஸ்ரவேல் தேசத்தாருக்கு உபத்திரவம் அதிகரிப்பதினால் அவர்கள் உதவிக்காகக் கர்த்தரிடத்திற்குத் திரும்பி வருவார்கள். (ஏசா 16:1-5; எசே 20:33-35; தானி 11:40-12:7; ஓசி2:14-17,மத்24:15-31; வெளி 12).

உபத்திரவக்காலத்தின் தன்மை

மனுஷருடைய துன்மார்க்கத்திற்காகவும், நியாயக்கேட்டிற்காகவும் கர்த்தருடைய கோபம் மனுக்குலத்தின்மீது ஊற்றப்படுகிறது. நோவா, லோத்து ஆகியோரின் காலங்களை விட ஜனங்கள் அதிகமாகப் பாவம் செய்கிறார்கள். (ஆதி 6; மத் 24:37-39; லூக்கா 17:22-37; 2தீமோ 3:1-12). தேவனுக்கும், பிசாசுக்கும் இடையில் நடைபெறும் கடைசி யுத்தத்தின்போது மனுஷருடைய துன்மார்க்கம் அதிகமாக இருக்கும். (வெளி 11:15; வெளி 12:7-12; வெளி 19:11-21; வெளி 20:1-3). ஜனங்கள் சத்தியத்தை மறுதலிப்பார்கள். ஆகையினால் கர்த்தர் அந்திக்கிறிஸ்துவின் கொடிய வஞ்சகத்திற்கு ஜனங்களை ஒப்புக் கொடுப்பார். அந்திக்கிறிஸ்து ஜனங்களை மோசம் போக்குவான். அவர்கள் பொய்யை நம்புவார்கள்.(2தெச 2:8-12; 2பேதுரு 3:1-9). கர்த்தர் மனுஷர்மீது தமது நியாயத்தீர்ப்புகளை அனுப்பிய பின்பும் அவர்கள் கர்த்தரை மறுதலிப்பார்கள். (வெளி 9:20,21; வெளி 6:2-11; வெளி 17:1-18; வெளி 18:1-24).

உபத்திரவக்காலம் உலகம் முழுவதும் இருக்குமா

அந்திக்கிறிஸ்து இந்த முழு உலகத்தையும் ஆளுகை செய்யமாட்டான். பழைய ரோமப் பேரரசின் சாம்ராஜ்யத்திற்குள் அடங்கியுள்ள பத்து ராஜ்யங்களை மட்டுமே ஆளுகை செய்வான். வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டிருக்கும் எக்காளங்களின் நியாயத் தீர்ப்புகளும், கலசங்களின் நியாயத்தீர்ப்புகளும் பூமியில் நான்கில் ஒரு பங்கின் மீதி மட்டுமே வரும். (வெளி 8:7-12; வெளி 9:12-21) மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்கள்மீதும், மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மீதும், அவனுடைய ராஜ்யத்தின்மீதும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். (வெளி 16:2,10,12). பிசாசு தள்ளப்படும்போது அவனுடைய கோபம் எதுவரையிலும் பரவியிருக்கும் என்று வேதத்தில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. (வெளி 9:1-11; வெளி 12:7-12).

தானியேல் - தொகுப்புரை

12 அதிகாரம்

உபத்திரவம் என்பது பொதுவாக தேவனுடைய ஜனமாகிய யூதஜனங்களுடைய உபத்திரவத்தையே குறிக்கும். தானியேலின் எழுபதாவது வாரம் இஸ்ரவேல் தேசத்தையும், அவர்களுடைய நகரமாகிய எருசலேமையும் மட்டுமே குறிப்பிடுகிறது. இந்த வாரத்தின் கடைசிப் பகுதி யாக்கோபின் உபத்திரவக் காலமாக இருக்கும். ஆகையினால் இந்த உபத்திரவம் உலகம் முழுவதும் இராது.

12. உயிர்த் தெழுதல்கள் - (யோவா5:28-29; வெளி 20:4-6; 1கொரி 15)

தானி 12:2 பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்துஎழுந்திருப்பார்கள்.

"பூமியின் தூள்" - மனுஷன் மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டிருக்கிறான். ஆகையினால் அவன் மரித்த பின்பு அவனுடைய சரீரம் மண்ணுக்குத் திரும்பிப் போகிறது. (ஆதி 2:7; ஆதி 3:19; பிர 3:19-21).

"சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்." - இந்த வாக்கியத்தின் பிரகாரமாக இரண்டு உயிர்த்தெழுதல்கள் இருக்கும் என்பது தெரியவருகிறது. இவ்விரண்டு உயிர்த்தெழுதல்களுக்கும் இடையில் ஆயிரம் வருஷ இடைவெளி இருக்கும்.

உயிர்த்தெழுதல்கள்

உயிர்த்தெழுதல்கள் இரு வகைப்படும். அவையாவன: 1. ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் 2. சரீரத்திற்குரிய உயிர்த்தெழுதல்.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்த மனுஷன் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டு புதிய ஜீவனைப் பெறுவது ஆவிக்குரிய உயிர்த்தெழுதலாகும். (1கொரி 11:7; எபே 4:21-24; கொலோ 3:10; 1யோவான் 3:9). இந்தச் சத்தியம் எபே 2:1-6; எபே 5:14; ரோமர் 6:11 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் இந்த ஜீவனில் மட்டுமே நடைபெற முடியும். சரீரம் மரித்தபின்பு ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் உண்டாகாது. ஒருவருக்குச் சரீர மரணம் வரும்போது, அதன் பின்பு அவருக்கு ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் உண்டாவதற்கு வாய்ப்பில்லை.(பிர11:1;எபி 9:27; வெளி 22:11). சரீரத்திற்குரிய உயிர்த்தெழுதல் என்பது மனுஷருடைய சரீரத்திற்குரியது.

சரீரத்திற்குரிய உயிர்த்தெழுதல்

இந்த உயிர்த்தெழுதல் இரண்டு வகைப்படும். 1. நீதிமானின் உயிர்த்தெழுதல் 2. துன்மார்க்கரின் உயிர்த்தெழுதல். நீதிமானின் உயிர்த்தெழுதல் ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு முன்பு நடைபெறும். துன்மார்க்கரின் உயிர்த்தெழுதல் ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு நடைபெறும். (தானி 12:3; யோவான் 5:28-29; வெளி 10:4-6,11-15). இவ்விரண்டு உயிர்த்தெழுதல்களுக்கும் இடையில் ஆயிரம் வருஷம் இடைவெளி இருக்கும். (வெளி 20:4-6).

உயிர்த்தெழுதலைப் பற்றி வேதாகமத்தில் பலர் உபதேசம் பண்ணியிருக்கிறார்கள். அவற்றின் விவரம் வருமாறு: யோபு (யோபு 19:25-27), ஏசாயா (ஏசா 26:14-19), தானியேல் (தானி 12:2), தாவீது (சங் 16:10; சங் 17:15; அப் 2:31), பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் (எபி 11:35), புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் (மத் 28; மாற்கு 16; லூக்கா 24; யோவான் 20-21; அப் 2; அப் 4) இயேசு கிறிஸ்து (மத் 16:21; மத் 22:23-31; லூக்கா 14:14; லூக்கா 20:27-36; லூக்கா 24:13-45), மத்தேயு (மத் 28:1-20) மாற்கு(மாற்கு 16:1-18), லூக்கா (லூக்கா 24:1-49), யோவான் (யோவான் 19-21; வெளி 20:4-6), மரியாள் (யோவான் 11:24), ஏரோது (மத் 14:2), பேதுரு (1பேதுரு 1:3; 1பேதுரு 3:21), பவுல் (அப் 17:18,32; அப் 23:6; அப் 24:15,21; ரோமர் 1:4; ரோமர் 6:5; ரோமர் 8:34; 1கொரி 15; பிலி 3:10-11; எபி 6:2; எபி 11:35).

தானியேல் – தொகுப்புரை

12 அதிகாரம்

உயிர்த்தெழுதலைப் பற்றி வேதாகமத்தின் பல வசனங்களில் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. (ஏசா 26:14-19; தானி 12:2; சங் 16:10; மத் 12:41-42; மத் 20:19; மத் 27:63; 1தெச 4:14-17; 1கொரி 15; வெளி 20:4-6; யோவான் 5:28-29).

உயிர்த்தெழுதலுக்கு எடுத்துக்காட்டுகள்

1. தற்காலிக உயிர்த்தெழுதல் (மத் 9:25)

வேதாகமத்தில் பத்து இடங்களில் மரித்தோர் உயிரோடு எழுப்பப்பட்ட அற்புதங்களை நாம் வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து மரித்துப்போன மூவரை உயிரோடு எழுப்பினார். (மத் 9:25; லூக்கா 7:14; யோவான் 11) மற்றவர்கள் மரித்துப்போன மேலும் ஏழு பேரை உயிரோடு எழுப்பினார்கள். (1இராஜா 17:21; 2இராஜா 4:34; 2இராஜா 13:20-21; யோனா 2:1-10-மத் 12:40; அப் 9:40; அப் 14:20; அப் 20:10).

2. நிரந்தர உயிர்த்தெழுதல்

தங்கள் சரீரங்களில் உயிர்த்தெழுந்து நித்திய காலமாக ஜீவிக்கிறவர்கள். நித்திய உயிர்த்தெழுதலுக்கு இயேசு கிறிஸ்து முதற்பலனானவராக "the firstfruits" இருக்கிறார். (1கொரி 15:1-23) இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் உயிரோடு எழும்பினார்கள். (மத் 27:53).

முதலாவது உயிர்த்தெழுதலில் எடுத்துக் கொள்ளப்படுகிறவர்கள்

1. கிறிஸ்துவும், அநேக பரிசுத்தவான்களும் - கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர்கள் உயிர்த்தெழுவார்கள். (1கொரி 15:20,23; மத் 27:52-53; எபே 4:8-10).
2. அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1கொரி15:23,51-54; யோவான் 14:1-3; லூக்கா 21:34-36; 2கொரி 5:1-8; எபே 5:27; பிலி 3:11,20-21; 1தெச 2:19; 1தெச 3:13; 1தெச 4:13-17; 1தெச 5:9,23; 2தெச 2:1,7, கொலோ 3:4; யாக் 5:7-8; 1யோவான் 2:28; 1யோவான் 3:2; 1பேதுரு 5:4) கிறிஸ்துவில் இருக்கிறவர்கள் மரித்தவர்களாக இருந்தாலும் ஜீவனுள்ளவர்களாக இருந்தாலும் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். கிறிஸ்துவில் இருக்கிற யாரும் இந்தப் பூமியில் கைவிடப்பட மாட்டார்கள். (1தெச 4:16-17).
3. தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதலாவது மூன்றரை வருஷத்தில் இரட்சிக்கப்பட்ட 144,000 யூதர்கள். (வெளி 7:1-8) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு மூன்றரை வருஷத்தில் இது நிறைவேறும். (வெளி 12:5; வெளி 14:1-5; ஏசா 66:7-8; தானி 12:1).
4. சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு உபத்திரவக்காலத்தில் இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்கள். தானியேலின் எழுபதாவது வாரகாலம் முழுவதிலும் இரட்சிக்கப்பட்டவர்கள். (வெளி 6:1-19:21). இரத்தச்சாட்சியாக முதலாவது மரித்தவர்கள். (வெளி 6:9-11) சபை எடுத்துக் கொள்ளப்படும்போது தேவன் தம்முடைய பரிசுத்தவான்களை மத்திய ஆகாயத்திற்கு அழைத்துச் சென்று, ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்தில் பங்குபெறச் செய்வார். (வெளி 7:9-17; வெளி 15: 2-4; வெளி 19:1-21, வெளி 20:4-6; யூதா 1:14; சக 14:5).

சபை எடுத்துக் கொள்ளப்படுவதில் பங்கு பெறுவதற்கு நிபந்தனைகள்

1. இயேசுகிறிஸ்துவிற்குள் இருக்க வேண்டும். (1தெச 4:14,16; 2கொரி 5:17-18).

12 அதிகாரம்

2. கிறிஸ்துவினுடையவர்களாக இருக்க வேண்டும். (1கொரி 15:23; கலா 5:24).

3. ஆசீர்வதிக்கப்பட்டவர் களாகவும், பரிசுத்தமானவர்களாகவும் இருக்க வேண்டும். (வெளி 20:4-6; எபி 12:14)

4. நன்மை செய்கிறவர்களாக இருக்க வேண்டும். (யோவான் 5:28-29).

5. பாத்திரராக இருக்க வேண்டும். (லூக்கா 21:36).

6. சபையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். (1கொரி 12:13; எபே 1:20-23; எபே 4:4-6; எபே 5:27; கொலோ 1:18,24)

7. சுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். (1யோவான் 3:2-3).

8. கறைதிரையற்றவர்களாக இருக்க வேண்டும். (எபே 5:27)

9. ஆவியில் ஜீவித்து நடக்க வேண்டும். (கலா 5:19-21).

10. வெளிச்சத்தில் நடக்க வேண்டும். (1யோவான் 1:7; கொலோ 2:6).

உயிர்த்தெழும் விதத்தைப் பற்றி அப்போஸ்தலர் பவுல் 1கொரி 15:35-50 ஆகிய வசனங்களில் விவரித்துக் கூறியிருக்கிறார். விதைக்கப்படும் விதை செத்து அதன் பின்பு முளைத்து மேனியைக் கொடுப்பதுபோல உயிர்த்தெழுதல் இருக்கும். மனுஷர் மரித்துப் போன பின்பு மறுபடியும் உயிரோடு எழும்புவார்கள்.

முதலாம் உயிர்த்தெழுதல் (வெளி 20:4-6; தானி 12:2; யோவான் 5:28-29)

ஆதாமின் காலத்திலிருந்து ஆயிரம் வருஷ அரசாட்சியின் காலம் வரையிலும் நீதிமான்கள், ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், பரிசுத்தவான்கள் ஆகியோர் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நாளிலிருந்து உபத்திரவக் காலத்து பரிசுத்தவான்கள் உயிர்த்தெழும் காலம்வரையிலும் முதலாம் உயிர்த்தெழுதலின் காலமாகும். இந்த உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிறவர்கள் அனைவரும் கிறிஸ்துவோடு ஆளுகை செய்வார்கள். (வெளி 20:4-6). கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் இந்த உயிர்த்தெழுதலில் பங்குபெறுவார்கள். (லூக்கா 14:14; லூக்கா 20:35-36; பிலி 3:11-14; 1தெச 4:14-17; 1கொரி 15:51-58; எபி 11:35; வெளி 20:4-6). கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுததுபோல கிறிஸ்துவிற்குள் மரித்தவர்களும் உயிர்த்தெழுவார்கள். கிறிஸ்துவிற்குள் மரித்த எல்லோருமே உயிர்த்தெழுவார்கள். (மத் 17:9; மாற்கு 9:10; லூக்கா 24:46; அப் 3:15; அப் 4:10; அப் 10:41; அப் 13:30; அப் 17:31; ரோமர் 1:4; ரோமர் 4:24; ரோமர் 6:4-9; ரோமர் 8:11; 1கொரி 15:12,20-23) ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு துன்மார்க்கர்கள் உயிர்த்தெழுவார்கள். அவர்கள் நியாயந் தீர்க்கப்படுவார்கள். எரியும் அக்கினியில் தள்ளப்படுவார்கள். (வெளி 20:4-6,11-15).

நீதிமானின் உயிர்த்தெழுதல்

1. முதலாம் உயிர்த்தெழுதல் (வெளி 20:4-6)

2. நீதிமானின் உயிர்த்தெழுதல் (லூக்கா 14:14)

3. ஜீவனை அடையும்படி உயிர்த்தெழுதல் (யோவான் 5:29)

12 அதிகாரம்

4. மேன்மையான உயிர்த்தெழுதல் (எபி 11:35)

5. மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் (பிலி 3:10-15)

இரண்டாம் உயிர்த்தெழுதல் (தானி 12:3; யோவான் 5:28-29; வெளி 20:4-6)

இதுதுன்மார்க்கரின் உயிர்த்தெழுதலாகும். ஆதாமின் காலத்திலிருந்து ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவு வரையிலுமுள்ள துன்மார்க்கர் இந்த உயிர்த்தெழுதலில் பங்குபெறுவார்கள். ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு இரண்டாம் உயிர்த்தெழுதல் நடைபெறும். ஆயிரம் வருஷ அரசாட்சியில் மரித்துப்போன துன்மார்க்கரும், இந்த உயிர்த்தெழுதலில் பங்குபெறுவார்கள். (வெளி 20:4-6,11-15). தங்கள் அழியாத சரீரத்தோடு எழுந்திருந்து இவர்கள் நரகத்தில் நித்திய ஆக்கினையை அனுபவிப்பார்கள். (மத் 10:28; லூக்கா 12:5, யோவான் 5:28-29; யோவான் 12:24; யோவான் 12:2; அப் 24:15; 1கொரி 15:21,34-50; வெளி 14:9-12; வெளி 19:20; வெளி 20:4-6,11-15).

13. ஞானவான்களுக்கு வெகுமதிகள்

தானி 12:3 ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள்.

"ஞானவான்கள்....... அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள்" - இந்த வாக்கியம் ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களைக் குறிக்கிறது. (2தீமோ 3:15-17).

14. முடிவுகாலமட்டும் முத்திரை போடப் பட்ட புஸ்தகம்

தானி 12:4 தானியேலாகிய நீயோ வென்றால்,முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து,இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்.

"முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு" - இந்தச் சம்பவங்களெல்லாம் கடைசி காலத்தில் நடைபெறும் என்பதை இந்த வாக்கியம் விவரிக்கிறது. (தானி 2:28-29, 43-45; தானி 7:17-27; தானி 8:17,19,23; தானி 9:27; தானி 10:14; தானி 11:35,45).

"அறிவும் பெருகிப்போம்" - மனுஷர் மத்தியிலே அறிவு பெருகியிருக்கிறது. இன்னும் தொடர்ந்து பெருகிக் கொண்டு வருகிறது. மனுஷன் புதிய புதிய காரியங்களையெல்லாம் கண்டுபிடித்துக் கொண்டு வருகிறான்.

15. தூதனின் கேள்வி

தானி 12:5 அப்பொழுது, தானியேலாகிய நான் ஆற்றுக்கு இக்கரையில் ஒருவனும் ஆற்றுக்கு அக்கரையில் ஒருவனுமாகிய வேறே இரண்டுபேர் நிற்கக்கண்டேன்.

தானி 12:6 சணல்வஸ்திரம் தரித்தவரும், ஆற்றின் தண்ணீர்களின் மேல் நிற்கிறவருமாகிய புருஷனை ஒருவன் நோக்கி: இந்த ஆச்சரியமானவைகளின் முடிவுவர எவ்வளவுகாலம் செல்லும் என்று கேட்டான்.

"ஆறு" - இது "இதெக்கேல்" **"Hiddekel"** ஆற்றைக் குறிக்கும். (டைகிரீஸ் - தானி 10:4).

"வேறே இரண்டுபேர் நிற்கக்கண்டேன்" - இது தானியேலின் மற்றொரு தெய்வீக தரிசனமாகும். (தானி 10:11)

"சணல்வஸ்திரம் தரித்தவர்" - தானி 10:5-6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற அதே தெய்வீக நபர்.

தானியேல் - தொகுப்புரை

12 அதிகாரம்

16. பதில்வுரை - மூன்றரை வருஷங்கள் உபத்திரவம் - (மத் 24:15-21; வெளி 13)

தானி 12:7 அப்பொழுது சணல்வஸ்திரம் தரித்தவரும் ஆற்றின் தண்ணீர்களின் மேல் நிற்கிற வருமாகிய புருஷன் தம்முடைய வலதுகரத்தையும் தம்முடைய இடது கரத்தையும் வானத்துக்கு நேராக ஏறெடுத்து, ஒரு காலமும், காலங்களும்,அரைக்காலமும் செல்லும் என்றும்; பரிசுத்த ஜனங்களின் வல்லமையைச் சிதறடித்தல் முடிவு பெறும்போதே இவைகளெல்லாம் நிறைவேறித் தீருமென்றும் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் பேரில் ஆணையிடக் கேட்டேன்.

"தம்முடைய வலதுகரத்தையும் தம்முடைய இடதுகரத்தையும் வானத்துக்கு நேராக ஏறெடுத்து" - இந்தச் செய்கை வெளி 10:1-6 ஆகிய வசனங்களில் தூதருடைய (கிறிஸ்து) செய்கை போன்றுள்ளது. இது தானியேலின் எழுபதாவது வாரத்தின் கடைசி மூன்றரை வருஷத்தோடு தொடர்புடையது. (தானி 12:7; தானி 7:25; வெளி 11:1-3; வெளி 12:6,14; வெளி 13:5). இக்காலத்தில் தரிசனம் நிறைவு பெறும். காலத்தின் முடிவு வரும்.

"பரிசுத்த ஜனங்களின் வல்லமையைச் சிதறடித்தல் முடிவுபெறும்போதே இவைகளெல்லாம் நிறைவேறித் தீரும்" - அந்திக்கிறிஸ்து யூதருடைய ராஜ்யத்தை அழிக்கமாட்டான். அவன் யூதர்களைச் சிதறடிப்பான். அவர்களுடைய வல்லமையை முறித்துப்போடுவான். இதன் பின்பு, யூதர்கள் நித்தியமாகக் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (தானி 9:24; எசே 37; ரோமர் 11:25).

தானி 12 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் காலங்கள்

1. ஒரு காலமும், காலங்களும், அரைக் காலமும்- மூன்றரை வருஷங்கள். (தானி 12:7) இஸ்ரவேல்மீது அந்திக் கிறிஸ்து யுத்தம் பண்ணும் 42 மாதங்களை இக்காலம் குறிப்பிடுகிறது. தேசத்தில் எல்லாக் கலகங்களையும் அடக்குவதற்கு முன், இந்த யுத்தம் நடைபெறும். (எசே 20:33-38; சக 13:9; மல் 3:3).

குறுகிய காலத்தில் அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலை எளிதாக அழித்துப் போடுவான். அவர்களோடு தான் உறுதிபண்ணிய உடன்படிக்கையை அந்திக் கிறிஸ்து முறித்துப் போடுவான். கர்த்தர் இந்தச் சமயத்தில் இடைப்படா விட்டால் அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலை முழுமையாக அழித்துப் போடுவான். கர்த்தர் அற்புதமாக இந்தச் சமயத்தில் கிரியை நடப்பிப்பார்.

இஸ்ரவேல் தேசத்தார் அந்திக் கிறிஸ்துவின் கைகளிலிருந்து தப்பி, மோவாபின் வனாந்தரத்திற்கும், ஏதோமின்வனாந்தரத்திற்கும்ஓடிப்போய் விடுவார்கள். அந்திக்கிறிஸ்துவின் சேனை அவர்களைத் துரத்திச் செல்லுவார்கள். கர்த்தர் பூமியைப் பிளக்கச் செய்வார். அந்தப் பாதாளத்திற்குள் அந்திக் கிறிஸ்துவின்சேனைகள்விழுங்கப்படும். (தானி 11:41; ஏசா 16:1-5; மத் 24:16; வெளி 12:14-17)

வனாந்தரத்திற்கு ஓடிப்போகாத ஸ்திரீயின் மீதியானவர்களைக் கர்த்தர் பாதுகாப்பார். அந்திக் கிறிஸ்துவிற்கு எதிராக வடக்கிலும், கிழக்கிலுமுள்ள தேசங்களைக் கர்த்தர் எழுப்பி விடுவார்.

கடைசி மூன்றரை வருஷங்களில் அந்திக் கிறிஸ்து ஸ்திரீயின் மீதியானவர்களை விட்டுவிட்டு, வடக்கிலும்,கிழக்கிலுமுள்ள தேசங்கள் மீது யுத்தம் பண்ணுவதற்காகப் புறப்பட்டுப்போவான். இக்காலத்தில் இந்தயுத்தம் முழுமையாக நடைபெறும். அந்திக்கிறிஸ்து இந்தத் தேசங்களை ஜெயிப்பான். அதன் பின்பு, எருசலேமை அழிப்பதற்காகப் பல தேசங்களைக் கூட்டிச் சேர்த்து, எருசலேமிற்கு விரோதமாக வருவான். இந்தச் சமயத்தில் கர்த்தர் வருவார். புறஜாதி ராஜ்யத்தின் ஆளுகையை முடிவுக்குக்கொண்டுவந்து,இஸ்ரவேலை விடுவிப்பார். (சக 14; வெளி 19). அந்திக்கிறிஸ்துவிற்கும், வடக்கு, கிழக்குதிசைகளிலுள்ளதேசங்களுக்கும் யுத்தம் நடைபெறுவதினால் இஸ்ரவேல் தேசத்தார்மீது நியமிக்கப்பட்டிருக்கும் உபத்திரவம் குறைந்துபோகும். (மத் 24:22)

தானியேல் - தொகுப்புரை

12 அதிகாரம்

2. இந்தக் காலத்தில் மேலே கூறப்பட்டிருக்கும் காலமாகிய 1,260 (தானி 12:11) நாட்களோடு கூடுதலாக 30 நாட்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது.

3. கடைசிக் காலம் 1,335 நாட்களாகும். இதில் இரண்டாவது காலத்தோடு 45 நாட்கள் கூட்டப்பட்டிருக்கிறது. தானி 12:7-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் 1335 நாட்கள் இக்காலத்தில் நிறைவு பெறுகிறது. தானி 12:11 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் 1260 நாட்களோடு 30 நாட்களும், மேலும் 45 நாட்களும் சேர்ந்து இக்காலத்தில் மொத்தம் 1335 நாட்கள் ஆகின்றன. 1,335 நாட்களுடைய காலத்தின் கடைசி நாளில் ராஜ்யத்தைப் பற்றி அறிவிக்கப்படும் உபத்திரவக்காலத்தின் வழியாக ஜீவித்த மனுஷர் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அப்போது இயேசு கிறிஸ்து "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" (மத் 25:34). என்று ஆட்டுக்குட்டியின் தேசங்களிடத்தில் கூறுவார்.

1260 நாட்களோடு கூடுதலாகச் சேர்க்கப்படும் 75 நாட்களில் பல முக்கியமான சம்பவங்கள் நடைபெறும். ராஜ்யத்தை அறிவிப்பதற்கு இந்தச் சம்பவங்களெல்லாம் நடைபெற வேண்டும்.

75 நாட்களில் நடைபெறும் சம்பவங்கள்

1. அர்மெகதோன் யுத்தம் (யோவே 3; சக 14; வெளி 19:11-21)

2. மரித்தவர்களை அடக்கம் பண்ணுவது ஆரம்பம். (எசே 39:8-22)

3. மகா பூமியதிர்ச்சியும், ஒலிவமலை பிளந்து போவதும். (சக 14:1-5)

4. அந்திக்கிறிஸ்துவின் சேனை சுற்றி வளைக்கப்பட்டு அழிக்கப்படுவது. (எசே 39:2)

5. சாத்தானும், பிசாசுகளும், விழுந்த தூதர்களும் சுற்றி வளைக்கப்பட்டு பாதாளத்தில் தள்ளப்படுவது. (ஏசா 24:21-22; வெளி 20:1-3)

6. தேவதூதர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரைக் கூட்டிச்சேர்ப்பது. (ஏசா 11:10-12; மத் 24:31)

7. நியாயத்தீர்ப்பிற்குத் தேசங்களைக் கூட்டிச் சேர்ப்பது. (மத் 25:31-46)

8. களைகளையும், கோதுமையையும் வேறுபிரிப்பது. (மத் 13:39-50)

9. எருசலேமைச் சுத்திகரிப்பதும், நித்திய ராஜ்யத்திற்காக மறுபடியும் கட்டுவதை ஆரம்பிப்பதும். (எசே 48)

10. மிருகங்களை ஆராதிப்பவர்களையும், மிருகத்தின் அடையாளத்தைத் தரித்திருப்பவர்களையும் நரகத்திற்கு அனுப்புவதற்காகக் கூட்டிச் சேர்ப்பது. (வெளி 14:9-11)

11. ஆயிரம் வருஷத்து தேவாலயம் ஸ்தாபிக்கப்படுவது. (எசே 40-46; சக 6:12-13)

12. பூமியை ஆளுகை செய்வதற்காக உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களைப் புதிய பூமிக்கு அனுப்பி பூமியைச் சுதந்தரிக்கப் பண்ணுவது. (தானி 7:18,27; 1கொரி 6:2; வெளி 5:10; வெளி 11:15; வெளி 22:4-5)

13. தேசங்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக எருசலேமிலிருந்து மிஷினெரிகளை அனுப்புவது. (ஏசா 2:2-4; ஏசா 11:9; ஏசா 52:7; சக 8:23)

14. பூமியின் எல்லாப் பாகத்திலும் அலுவலகங்களை ஸ்தாபித்து, பூமியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பரலோக ராஜ்யத்தில் புதிய பிரமாணங்களை அறிவிப்பது. (ஏசா 2:2-4)

12 அதிகாரம்

15. வாக்குத்தத்த தேசத்தை 12 பிரிவுகளாகப் பிரித்து 12 கோத்திரத்தாரையும் அவர்களுடைய பங்குவீதங்களில் குடியிருக்கச் செய்வது. (எசே 48)

16. பூமியிலுள்ள அவர்களுடைய சொந்த பங்கு வீதங்களில் தேசங்களைக் குடியமர்த்துவது. (உபா 32:8; அப் 17:26)

17. பூமியைத் திறந்து, ஆயிரம் வருஷத்து நதியைப் பாயச்செய்வது. (எசே 47)

18. ஆயிரம் வருஷத்து அரசாட்சியில் காணப்படும் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் செய்ய வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்வது.

17. தானியேலின் கேள்வி

தானி 12:8 நான் அதைக் கேட்டும், அதின் பொருளை அறியவில்லை; ஆகையால்: என் ஆண்டவனே, இவைகளின் முடிவு என்னமாயிருக்கும் என்று கேட்டேன்.

தானியேலுக்குக் கூறப்பட்டிருக்கும் பதிலுரை

1. நீயோவென்றால் முடிவுவருமட்டும் போயிரு (தானி 12:13).

2. முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வை. (தானி 12:4).

3. அநேகர் சுத்தமாக விளங்குவார்கள்.

4. அநேகர் வெண்மையாக்கப்பட்டு விளங்குவார்கள்.

5. அநேகர் புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்.

6. துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்;.

7. துன்மார்க்கரில் ஒருவனும் இந்தத் தரிசனத்தை உணரான், ஞானவான்களோ உணர்ந்து கொள்ளுவார்கள். (தானி 12:10).

8. இவ்வேளையிலிருந்து அன்றாடபலி நீக்கப்படும். (தானி 12:11; தானி 8:9-14; தானி 9:27) பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படும் மூன்றுகாலங்கள்.

    (1) 1,260 நாட்கள் (தானி 12:7)

    (2) 1,290 நாட்கள் (தானி 12:11)

    (3) 1,335 நாட்கள் (தானி 12:12).

9. ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான். (தானி 12:12).

10. நீயோவென்றால் முடிவுவருமட்டும் போயிரு; நீ இளைப்பாறிக் கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே (1,335 நாட்கள்) உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய் (தானி 12:13).

18. பதிலுரை - மூன்றரை வருஷங்களுக்குப் பின்பு இரண்டு காலங்கள்

தானி 12:9 அதற்கு அவன்: தானியேலே, போகலாம்; இந்த வார்த்தைகள் முடிவுகாலமட்டும் புதைபொருளாக வைக்கப்பட்டும் முத்திரிக்கப்பட்டும் இருக்கும்.

தானி 12:10 அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்; துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்து கொள்ளுவார்கள்.

தானி 12:11 அன்றாடபலி நீக்கப்பட்டு, பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்காலமுதல் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூறுநாள் செல்லும்.

தானியேல் - தொகுப்புரை

12 அதிகாரம்

தானி 12:12 ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்.

தானி 12:13 நீயோவென்றால் முடிவுவரு மட்டும் போயிரு; நீ இளைப்பாறிக் கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய் என்றான்.

"நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய்" - தானியேல் உயிர்த்தெழுந்த பின்பு, அவனுக்கும் இந்தச் சிலாக்கியங்களில் பங்கு இருக்கும். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இந்த உலகத்தை நியாயந்தீர்த்து, கிறிஸ்துவோடு நித்திய காலமாக இந்தப் பூமியை ஆளுகை செய்வார்கள். (தானி 2:44-45; தானி 7:13-14,18,27; லூக்கா 22:30; 1கொரி 6:2-4; 2தீமோ 2:12; வெளி 2:27; வெளி 5:10; வெளி 12:5; வெளி 20:4-6; வெளி 22:4-5).

சிறிய தீர்க்கதரிசிகள்

ஓசியா முதல் மல்கியா வரையிலும் உள்ள பன்னிரெண்டு தீர்க்க தரிசிகள் சிறிய தீர்க்கதரிசிகள் (Minor Prophets) என அழைக்கப்படுகிறார்கள். சிறிய தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுவதினால் இவர்கள் கூறியுள்ள தீர்க்கதரிசனங்கள் முக்கியத்துவம் குறைந்தவை என்றோ அல்லது பரிசுத்த ஆவியானவரால் முழுவதுமாக ஏவப்படவில்லை என்றோ பொருள்படாது. இந்தத் தீர்க்கதரிசிகளுடைய புஸ்தகங்கள் அளவில் சிறியவையாக இருப்பதினால் இவை சிறிய தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. மற்ற தீர்க்க தரிசிகளெல்லாம் பெரிய தீர்க்க தரிசிகள் (Major Prophets) என்று அழைக்கப்படுகிறார்கள்.

எபிரெய வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். அவையாவன:

1. முந்திய தீர்க்கதரிசிகள் (Former Prophets) - யோசுவா முதல் 2இராஜாக்கள் புஸ்தகம் வரையிலும் உள்ள ஆகமங்களில் தீர்க்கதரிசனம் கூறியுள்ள தீர்க்கதரிசிகள் இந்தப் பிரிவில் வருகிறார்கள். (சக 1:4; 7:7,12)

2. பிந்திய தீர்க்கதரிசிகள் (Latter Prophets) - ஏசாயா முதல் மல்கியா வரையிலும் உள்ள தீர்க்கதரிசன ஆகமங்களின் ஆசிரியர்கள் இந்தப் பிரிவில் வருகிறார்கள்.

ஆயினும் யூதமார்க்கத்து ரபிமார்கள் தானியேலை இந்தப் பிரிவில் சேர்க்கவில்லை. தானியேலின் புஸ்தகத்தை "ஹாகியோகிராஃபா" (Hagiographa) என்னும் பிரிவில் சேர்க்கிறார்கள்.